# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஜூன் 2022

www.tnpscthervupettagam.com
















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ..... 12
தமிழ்நாடு செய்திகள் ..... 20
தமிழகத்தில் அன்னிய நேரடி முதலீடு ..... 20
ஓய்வூதியதாரர்களுக்கான டிஜிட்டல் வாழ்க்கைச் சான்றிதழ் ..... 20
நெகிழிக் குடுவைகளின் தனித்துவமான பயன்பாடு ..... 21
சொகுசுப் பயணியர் கப்பல் எம்பிரஸ் ..... 21
அதிகப்படியான காவிரி நீர் ..... 21
கந்துவட்டி நடவடிக்கை ..... 22
S2G கொள்முதல் நாள் முயற்சி ..... 22
ஜெயங்கொண்டம் திட்டம் ..... 23
44வது செஸ் ஒலிம்பியாட் சின்னம் ..... 23
HomoSEP ..... 23
அலங்கார மீன்களில் வைரஸ் பாதிப்பு ..... 24
எண்ணும் எழுத்தும் திட்டம் ..... 24
11வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ..... 25
எழுத்தாளர் சின்னப்ப பாரதி ..... 25
மதுக் குடுவைகளைத் திரும்ப வாங்கும் திட்டம் ..... 26
"பாரத் கௌரவ்" விரைவு இரயில் ..... 26
முதல் பெண் தபேதார் ..... 26
சிறந்த துறைசார் முதலீடு ..... 26
தொழிலணங்கு ..... 27
நாளைய திறன் திட்டம் ..... 27
தமிழ்நாடு பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆகியப் பிரிவினருக்கான தொடக்க நிறுவன நிதி ..... 27
தமிழ்நாட்டில் புதிய டைடல் பூங்காக்கள் ..... 28
தேசியச் செய்திகள் ..... 29
நம்கீன் நடவடிக்கை ..... 29
ஐஎன்எஸ் நிர்தேசக் ..... 29
இந்தியாவின் முதல் 'லாவெண்டர் திருவிழா' ..... 29
நெச்சிபு சுரங்கப்பாதை ..... 29
வட இந்தியாவின் முதல் தொழில்துறை உயிரித் தொழில்நுட்பப் பூங்கா ..... 30
இந்தியாவில் சாலை விபத்துக்கள் - 2020 ..... 30
ஐஎன்எஸ் கோமதி கப்பல் கடற்படையிலிருந்து ஓய்வு ..... 31
குழந்தைகளுக்கான PM CARES திட்டம் ..... 32
லோக்பால் தலைவர் பொறுப்பு ..... 33
ஜெனரல் நெக்ஸ்ட் மக்களாட்சிக் கட்டமைப்பு ..... 33

பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டம் நீட்டிப்பு ........ 33
சர்க்கரை உற்பத்தியில் முன்னணியிலுள்ள மாநிலங்கள் ........ 33
ஜல் ஜீவன் திட்டத்தின் பரவல் ........ 34
தேசியக் கல்வி அமைச்சர்கள் மாநாடு ........ 35
காப்பீட்டுத் திட்டங்களின் தவணைத் தொகையில் திருத்தம் ........ 35
ஹர் கர் தஸ்தக் 2.0 பிரச்சாரம் ........ 35
வீரதீர விருதுகள் பட்டியல் 2022 ........ 36
மிதாலி இரயில் சேவை ........ 36
புதிய விண்கலத் தயாரிப்புப் பிரிவு ........ 36
இந்தியாவின் முதல் சுயச் சார்பு திருமணம் ........ 37
மகிளா சுரக்சா நடவடிக்கை ........ 37
இரண்டுக் கப்பல்களுக்குப் பிரியாவிடை ........ 38
முதல் திரவ கண்ணாடி தொலைநோக்கி ........ 38
அகமதாபாத் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் வேளாண் நில விலைக் குறியீடு ........ 39
ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டத்துடன் இ-சஞ்சீவனி திட்டம் ஒருங்கிணைப்பு ........ 39
இந்திய விமானப்படைப் பாரம்பரிய மையம் ........ 40
புனீத் சாகர் அபியான் ........ 40
சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்கள் குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ........ 40
ஜன் சமர்த் தளம் ........ 41
புதிய நாணயங்கள் ........ 41
mRube ........ 42
தேசிய உணவு ஆய்வகம் ........ 42
சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை (LiFE) இயக்கம் ........ 42
ஹார்பிங்கர் 2021 ........ 42
சம்ப்ரிதி-எக்ஸ் போர்ப் பயிற்சி ........ 43
My Pad My Right திட்டம் ........ 43
4வது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீடு 2021-2022 ........ 44
புகையிலைக் கட்டுப்பாட்டுக்கான ஆதார மையம் ........ 44
ஆயுர்வேத ஆஹார் ........ 45
காரீஃப் பயிர்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை ........ 45
தேசியப் பழங்குடி ஆராய்ச்சி நிறுவனம் ........ 46
அக்னி-4 ஏவுகணை ........ 46
16வது குடியரசுத் தலைவர் தேர்தல் ........ 46
தேசிய வான்வழி விளையாட்டுத் துறைக் கொள்கை 2022 ........ 47
பாலிவர்சிட்டி ........ 48
ரக்த் சந்திரன் நடவடிக்கை ........ 48
முதலாவது மையப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட இரயில்வே முனையம் ........ 48
சுற்றுலா இரயில் மூலம் நாடுகளை இணைத்தல் ........ 49
ஊடுருவலைக் கண்டறிவதற்கான அமைப்பு ........ 49

சாகர்மாலா இளம் நிபுணத்துவத் திட்டம் ........ 49
புவியிடச் சுய-சான்றளிப்புத் தளம் ........ 50
இராஷ்ட்ரிய புருஸ்கார் தளம் ........ 50
எல்லைகளுக்கிடையேயானப் பேருந்து சேவை ........ 51
தேசிய சுங்க வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி அருங்காட்சியகம் ........ 51
இந்திய மக்களின் ஆயுட்காலம் ........ 51
திரைக் கட்டுருவாக்க அலகு ........ 52
அக்னிபாத் திட்டம் ........ 53
கிராந்தி கதா ........ 53
ஒற்றைச் சாளர அனுமதி வழங்கீட்டு வசதி ........ 54
தொல்லியல் துறைக்கான மத்திய ஆலோசனைக் குழு கூட்டம் ........ 54
நிர்வாக எல்லைகள் முடக்கம் ........ 54
தேசிய மின் ஆளுமை சேவை வழங்கல் மதிப்பீடு 2021 ........ 54
உலகின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் சூழலமைவு ........ 55
முதல் பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் நிலையம் ........ 55
இந்தியப் புலம்பெயர்வு அறிக்கை 2020-21 ........ 56
உடான் திட்டத்தின் 5வது ஆண்டுவிழா ........ 56
தொழில்துறையில் முதல் கடன் வரிச் சேவை ........ 56
தொழில்துறை கார்பன் நீக்க உச்சிமாநாடு 2022 ........ 57
மிட்டிகூல் குளிர்சாதனப் பெட்டிக்கான சான்றிதழ் ........ 57
அக்னி வீரர்களுக்கு 10% ஒதுக்கீடு ........ 57
தேசிய யோகா போட்டிகள் 2022 ........ 58
மன்னர் ஹமத் பின் இசா அல்-கலிஃபா பரிசு ........ 58
சங்கல்ப் நடவடிக்கை ........ 59
கடற்கரையைத் தூய்மைப்படுத்துவதற்கான இயக்கம் ........ 59
முக்கியத் தகவல் உள்கட்டமைப்பு ........ 59
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் NIPUN முன்னெடுப்பு ........ 60
111 அரசியல் கட்சிகள் நீக்கம் ........ 60
ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டை ........ 61
பிரதம மந்திரி யோகா விருது ........ 61
திரௌபதி முர்மு ........ 62
யஷ்வந்த் சின்ஹா ........ 62
டெல்லி விமான நிலையம் ........ 62
தேசியப் புலனாய்வு அமைப்பு ........ 63
பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு 2022 ........ 63
தேசிய தினைகள் மாநாடு ........ 64
தேசிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் விருது 2022 ........ 64
எல்லைச் சாலை அமைப்பின் சிற்றுண்டியகம் ........ 64

போதை மருந்துகள் மற்றும் மனநோய் சார்ந்தப் பொருள்கள் சட்டத்திற்கான அதிகார வரம்பு இடமாற்றம் ..... 65
சூர்யா நூதன் ..... 65
வணிஜ்யா பவன் மற்றும் நிர்யாட் இணையதளம் ..... 65
ஒடிசாவின் மோ பேருந்து ..... 66
நிதி ஆயோக் அமைப்பின் புதிய தலைமை நிர்வாக அதிகாரி ..... 66
சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு வீத வரி நீட்டிப்பு ..... 66
இந்தியப் பொதுத் துறை நிறுவனங்களின் தந்தை ..... 67
ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவின் புதிய தலைவர் ..... 68
வரைவுப் பொதுச் சட்ட விதிகள் (GSR) அறிவிப்பு ..... 68
மின்சார வாகனங்களின் மின்கலன்களுக்கானத் தரநிலைகள் ..... 68
சர்வதேசச் செய்திகள் ..... 69
பிரெஞ்சு ரிவியரா திரைப்பட விருது விழா ..... 69
உலகின் மிகப்பெரிய பெட்ரோலிய ஆராய்ச்சி மையம் ..... 69
முதலாவது அரேபிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ..... 69
அதிக நபர்களுக்கு கோவிட் தடுப்பூசிகளை வழங்கிய நாடு ..... 69
பிட்காயினை அதிகாரப்பூர்வ நாணயமாக ஏற்றுக் கொண்ட நாடு ..... 70
இந்திய துரம் ரக கோதுமை நிராகரிப்பு ..... 70
ஈராக்கின் பழமையான நகரம் ..... 70
ஏமனில் இருந்து எகிப்துக்கு வணிக விமானம் ..... 71
துருக்கியின் பெயர் மாற்றம் ..... 71
இரண்டாம் எலிசபெத் மகாராணியின் 70 ஆம் ஆண்டுகால ஆட்சி நிறைவு விழா ..... 72
விண்வெளி நிலையத்திற்கு மனிதர்களை அனுப்புவதற்கான 3வது விண்கலம் ..... 72
ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் பட்டியல் 2022 ..... 73
சர்வதேச நெகிழிக் கண்ணோட்டம் : 2060 ஆம் ஆண்டிற்கான கொள்கை நிலைகள் ..... 73
பிம்ஸ்டெக் அமைப்பின் 25வது ஆண்டு விழா ..... 74
கலாச்சாரப் பருவம் ..... 74
QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2023 ..... 74
இலங்கைக்கு மனிதாபிமான உதவி ..... 75
ஆஸ்திரேலியா-இந்தியா நீர்வளப் பாதுகாப்பு முன்னெடுப்பு ..... 75
அமெரிக்க உச்சி மாநாடு 2022 ..... 76
குடியரசு அமைச்சர் ..... 76
பன்மொழித் தன்மை மீதான தீர்மானம் ..... 76
உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மாநாடு ..... 77
ஷங்ரி-லா பேச்சு வார்த்தை ..... 77
பால்டிக் கடலில் கடற்படைப் பயிற்சிகள் ..... 77
எக்ஸ் கான் குவெஸ்ட் 2022 ..... 78
கஞ்சா உபயோகத்தினைச் சட்டப்பூர்வமாக்குதல் ..... 78
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்கள் ..... 78

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான குறை தீர்ப்பாளர் .................... 79
இந்திய-இந்தோனேசிய ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சி .................... 79
இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான முதல் பாதுகாப்பு ஆலோசனைகள் .................... 79
BIMSTEC தொழில்நுட்பப் பரிமாற்ற மையம் .................... 79
மேற்கு ஆசிய நாற்கர (குவாட்) பேச்சுவார்த்தை .................... 80
12வது உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மாநாடு – ஜெனீவா .................... 81
ஆண்டின் சிறந்த நாடு .................... 81
இந்திய நொய் அரிசியை இறக்குமதி செய்யும் நாடு .................... 81
2021 ஆம் ஆண்டில் மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சேர்க்கை .................... 82
மிகப்பெரிய விமானந் தாங்கிக் கப்பல் .................... 83
ஒற்றுமை - 2023 .................... 84
அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையத்தின் உலகப் போக்குகள் அறிக்கை .................... 84
ஹான்ஸ் தீவு & நரேஸ் ஜலசந்தி .................... 84
ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர் அந்தஸ்து .................... 85
நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் 'சாம்பல் நிறப் பட்டியல்' .................... 85
இலங்கை அரசியலமைப்புத் திருத்தம் .................... 86
மாம்பழத் திருவிழா – பெல்ஜியம் .................... 86
ஆப்கானிஸ்தான் நிலநடுக்கம் 2022 .................... 86
டைம்ஸ் உயர் கல்வி என்ற இதழின் ஆசியப் பல்கலைக்கழக தரவரிசை 2022 .................... 87
ஆற்றல் மற்றும் பருவநிலை பற்றிய மாபெரும் பொருளாதார மன்றம் .................... 88
ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பினுடைய 8வது சந்திப்பு .................... 88
G20 மற்றும் இந்தியா .................... 88
பாரத் கௌரவ் சுற்றுலா இரயில் .................... 88
14வது பிரிக்ஸ் உச்சிமாநாடு 2022 .................... 89
காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மாநாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர்களின் முழுநீளக் கூட்டம் 2022 .................... 89
உலகளாவிய வாழத் தகுந்த நகரங்கள் குறியீடு 2022 .................... 89
கருக்கலைப்பிற்கான சட்டமுறைப் பாதுகாப்பு ரத்து – அமெரிக்கா .................... 90
SS-26 ஸ்டோன் .................... 90
பத்மா பாலம் .................... 90
உலகளாவிய உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டிற்கான கூட்டாண்மை (PGII) திட்டம் .................... 91
பொருளாதாரச் செய்திகள் .................... 91
இந்தியாவின் முன்னணி வர்த்தகப் பங்குதாரர் .................... 91
நுகர்வோர் மத்தியில் பணத்தாள் மதிப்பீடு குறித்த கணக்கெடுப்பு .................... 92
இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை 2021-22 .................... 92
100 யூனிகார்ன் நிறுவனங்கள் .................... 93
உள்நாட்டு கச்சா எண்ணெய் உற்பத்தி – இந்தியா .................... 93
2021-22 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி .................... 94
சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு நிலுவை .................... 94

ஊழியர் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதம் ........ 95
இந்தியாவில் டிஜிட்டல் பணவழங்கீடுகள் ........ 95
இந்தியாவின் முதல் வங்கி மெட்டாவேர்ஸ் கியாவர்ஸ் ........ 96
RBI வழங்கும் வட்டி விகிதம் ........ 96
உலக முதலீட்டு அறிக்கை ........ 97
கிரிப்டோ ரூபாய் குறியீடு ........ 98
உயிரித் தொழில்நுட்ப தொடக்க நிறுவனக் கண்காட்சி 2022 ........ 98
ஆம்னிகார்டு ........ 99
ஏர் ஏசியா இந்தியா நிறுவனக் கையகப்படுத்துதல் ........ 99
இந்திய திவால்நிலை மற்றும் நொடித்தல் நிலை வாரியத்தின் விதிமுறைகளில் திருத்தங்கள் ........ 99
மொத்த விலைப் பணவீக்கம் ........ 99
இரண்டாவது பெரிய எண்ணெய் வழங்கீட்டு நாடு ........ 100
அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதம் ........ 100
'பசுமைக் கடன்' குறியீடு ........ 101
பெண்களுக்கான தொழில் தொடக்க ஊக்குவிப்புத் திட்டம் ........ 101
சுவிஸ் வங்கிகளில் இந்திய நிதிகள் ........ 101
பணவழங்கீட்டுக் கொள்கை 2025 ........ 102
உலக வர்த்தக அமைப்பு - உலகளாவிய வர்த்தக ஒப்பந்தங்கள் ........ 102
வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் உச்சி மாநாட்டில் ஜப்பான் பங்கேற்பு ........ 102
பரிவர்த்தனைகளுக்கான இணைய வழி ஆணைகளின் வரம்பு ........ 103
மிகவும் மதிப்புமிக்க உலகளாவியத் தயாரிப்புகள் ........ 103
இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதார நாடு ........ 103
வங்கி நோட்டுகளின் விற்பனை விலை ........ 103
பிளாக் ஷ்வான் நிகழ்வு ........ 104
உலகளவில் தங்க மறுசுழற்சிச் செயல்முறை ........ 105
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 105
காசநோய்த் தொற்றிற்கான தோல்வழிப் பரிசோதனை ........ 105
முதலாவது மூவர்ஸ் கூட்டணி ........ 105
பூசா மென்மை ரக கோதுமை 1 ........ 106
முதல் மித அதிவேக சரக்கு ரயில் ........ 106
பரம் அனந்தா மீத்திறன் கணினி ........ 106
கோள்களின் அணிவகுப்பு ........ 106
உலகின் மிகவும் சக்தி வாய்ந்த மீத்திறன் கணினி ........ 107
அஸ்திரா Mk-1 ........ 107
வேகமான ரேடியோ அலை வெடிப்பு ........ 108
டாவின்சி திட்டம் ........ 108
நிலவின் விரிவான விளக்க வரைபடம் ........ 108
சுற்றுப்பாதையில் உள்ள 10 தகவல் தொடர்பு செயற்கைக் கோள்கள் ........ 109
விண்வெளியில் சூரியசக்தி ஆலை ........ 109

விலங்குகளுக்கான COVID-19 தடுப்பூசி ........ 110
புற்றுநோய் மருந்திற்கான சோதனை – தோஸ்தர்லிமாப் ........ 110
புதிய தொலைநோக்கியைத் தாக்கிய நுண்ணிய விண்கல் ........ 111
ஸ்ட்ராபெரி சூப்பர்மூன் 2022 ........ 111
பிருத்வி-II ஏவுகணை சோதனை ........ 112
டரான்டுலா நெபுலா ........ 112
கையா விண்வெளி ஆய்வுத் திட்டம் ........ 113
இந்தியாவின் முதல் புவியீர்ப்பு எதிர்விசை கொண்ட கவச உடை ........ 114
ஜிசாட்-24 ........ 114
ஒக்லா நிறுவனத்தின் உலகளாவிய செயல்வேகச் சோதனைக் குறியீடு ........ 114
VL-SRSAM ஏவுகணைச் சோதனை ........ 114
குரங்கு அம்மை நோய்ப் பரவல் ........ 115
பூச்சி உண்ணும் தாவரம் ........ 115
ஒரே நேர்கோட்டில் 5 கோள்கள் ........ 116
**சுற்றுச்சூழல் செய்திகள் ........ 117**
சமூக வன வள உரிமைகளை அங்கீகரித்தல் ........ 117
தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு சிறுத்தைகள் இடமாற்றம் ........ 117
ஸ்டாக்ஹோம் மாநாட்டின் 50வது ஆண்டு நிறைவு ........ 118
உலகின் முதல் மீன்பிடிப் பூனைக் கணக்கெடுப்பு ........ 119
சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு ........ 119
எத்தனால் கலப்பதில் இந்தியாவின் சாதனை ........ 120
புதிய வளங்காப்பகங்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் ........ 121
யாங்க்டி குடி பள்ளத்தாக்கு ........ 121
பசுமை ஆற்றல் தடையற்ற அணுகல் விதிகள் 2022 ........ 122
இராட்சத ஆமை இனம் ........ 122
கனடா கார்பன் உமிழ்வுச் சந்தை ........ 123
போகேஸ்வரா யானை ........ 123
மூழ்கும் நகரம் - மும்பை ........ 123
ஹாப்லோப்டிச்சியஸ் சஹ்யாட்ரியென்சிஸ் ........ 124
அசாமில் காண்டாமிருகம் மீண்டும் அறிமுகம் ........ 125
உலகின் மிகப்பெரிய தாவரம் ........ 125
குவ்ஸ்குல் ஏரி தேசியப் பூங்கா ........ 125
கிளிஸ்ரோபஸ் மேகலாயனஸ் ........ 126
புவியில் உள்ள மிகவும் ஈரமான இடம் ........ 126
'ஒருமுறை மட்டுமே பயன்படும் நெகிழிக்குத்' தடை ........ 127
நான்கு புதிய பவளப்பாறைகள் ........ 127
தியோமார்கரிட்டா மாக்னிஃபிகா ........ 127
2030 பருவநிலை இலக்குகள் ........ 128
உதய்ப்பூரின் 'பறவைகள் கிராமம்' ........ 129

கேரளாவில் உள்ள பறவைகளின் சிவப்புநிற பட்டியல் ........ 129
கம்பளித் தோல் கொண்ட இராட்சத யானை ........ 130
யானை எச்சரிக்கை ஒலிக் கருவி திட்டம் - ஒடிசா ........ 130
ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிக்குத் தடை ........ 131
மாநிலச் செய்திகள் ........ 132
தபால் விநியோகத்திற்கான ஆளில்லா விமானச் சேவை ........ 132
புகையிலைக் கட்டுப்பாட்டிற்கான உலக சுகாதார அமைப்பின் விருது ........ 132
கிராமப்புற பழங்குடியினருக்கான முதல் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டம் ........ 133
ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது – ராஜஸ்தான் ........ 133
சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பு – பீகார் ........ 133
ACB 14400 செயலி ........ 134
இணையப் பத்திரங்கள் வசதி ........ 134
உலகின் முதல் திரவ நுண் யூரியா ஆலை ........ 134
நேரடித் தொடர்பற்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் ........ 135
சிக்கிம் மாநில வண்ணத்துப்பூச்சி ........ 135
பைகோ திருவிழா ........ 136
மாநிலத்தின் முதல் ஆளில்லா விமானக் கொள்கை ........ 136
பீகார் மகாத்மா காந்தி பாலம் ........ 137
சுரக்சா-மித்ரா திட்டம் ........ 137
புற்றுநோய் ஆராய்ச்சி மையம் ........ 137
FRUITS’ மென்பொருள் ........ 138
துக்காராம் கோவில் ........ 138
பாலிகா பஞ்சாயத்து முன்னெடுப்பு ........ 138
சர்வதேச இலக்கிய விழா ........ 139
கேரள இடம்பெயர்வு கணக்கெடுப்பு ........ 139
ஸ்பைனி ஹார்ன்டெயில் ........ 139
கடன் நிலைகளை நிலைப்படுத்துவதற்கான செயற்முறைகள் ........ 140
கெம்பேகவுடா சர்வதேச விருது ........ 140
ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பைகளைத் திருப்பி வாங்கும் திட்டம் ........ 140
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 141
இந்திப் புனைவுக் கதைக்குப் புக்கர் பரிசு ........ 141
நோய்த்தடுப்பு சாம்பியன் விருது ........ 141
கப்பல் மனிதர் ஹேமச்சந்திர ராவ் ........ 141
சிறந்தத் திட்டத்திற்கான விருது ........ 142
மண்வளப் பாதுகாப்பிற்கான ஒப்பந்தம் ........ 142
சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை பொன்னுசாமி ........ 142
சிதாரா-இ-பாகிஸ்தான் விருது ........ 142
டைம்ஸ் இதழின் வணிக விருது 2022 ........ 143
மும்பை சர்வதேசத் திரைப்பட விழா (MIFF) ........ 143

சர்வதேச இந்தியத் திரைப்பட அகாடமி விருதுகள் (IIFA) ........ 143
மிதாலி ராஜ் ........ 144
ராமகிருஷ்ணா முக்கவில்லி ........ 145
மாவட்டத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் விருதுகள் ........ 145
மார்ட்டின் என்னல்ஸ் விருது 2022 ........ 146
நீண்ட காலம் ஆட்சி செய்த 2வது அரசி ........ 146
அதிபரின் அறிவியல் ஆலோசகர் ........ 147
இந்தியப் பத்திரிக்கைச் சபையின் தலைவர் ........ 147
இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உலக மாநாடு ........ 147
ஸ்கல்சாங் ரிக்சின் ........ 148
புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசு ........ 148
விளையாட்டுச் செய்திகள் ........ 149
சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி ........ 149
மாற்றுத் திறனாளிகளுக்கான படகுப் பந்தய உலகக் கோப்பைப் போட்டி - மகளிருக்கான 200 மீட்டர் படகுப் பந்தயம் ........ 149
IBSA ஜூடோ கிராண்ட் பிரிக்ஸ் போட்டி ........ 149
ISSF உலகக் கோப்பைப் போட்டி 2022 ........ 150
பிரெஞ்சு ஓபன் போட்டி 2022 ........ 150
FIFA கோப்பை 2022 ........ 150
போலட் டர்லிகானோவ் கோப்பை ........ 151
அயர்ன்மேன் டிரையத்லான் ........ 151
ஒரு நாள் போட்டியில் 3 தொடர் சதங்கள் ........ 151
கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2021 ........ 152
அதிக கோல் அடித்த ஐந்தாவது வீரர் ........ 152
ஈட்டி எறிதலில் தேசியச் சாதனை ........ 152
FIFA உலகக் கோப்பை 2026 ........ 152
44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டி ........ 153
17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய சாம்பியன்ஷிப் போட்டி ........ 153
20வது நாட்டுப்புறக் கண்காட்சி ........ 153
இந்திய மகளிர் ஹாக்கி அணித்தலைவர் ........ 153
41வது ஆசியத் தடகள சைக்கிள் ஓட்ட சாம்பியன்ஷிப் போட்டி ........ 154
ரஞ்சிக் கோப்பை 2022 ........ 154
முக்கிய தினங்கள் ........ 155
உலக பால் தினம் – ஜூன் 01 ........ 155
உலகப் பெற்றோர் தினம் - ஜூன் 01 ........ 155
தெலுங்கானா மாநில உருவாக்கத் தினம் - ஜூன் 02 ........ 155
உலக மிதிவண்டி தினம் – ஜூன் 03 ........ 156
வன்முறையால் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - ஜூன் 04 ........ 156
உலக சுற்றுச்சூழல் தினம் (WED) - ஜூன் 05 ........ 156

சட்டவிரோத, புகாரளிக்கப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பிற்கு எதிரான போராட்டத்திற்கான சர்வதேச தினம் - ஜூன் 05 .......... 157
ஐக்கிய நாடுகள் ரஷ்ய மொழி தினம் - ஜூன் 06 .......... 157
உலக உணவுப் பாதுகாப்புத் தினம் – ஜூன் 07 .......... 157
உலக மூளைக் கட்டி நோய் தினம் – ஜூன் 08 .......... 158
உலகப் பெருங்கடல் தினம் - ஜூன் 08 .......... 158
உலக அங்கீகார தினம் – ஜூன் 09 .......... 159
சர்வதேச இருப்புப் பாதை கடவு விழிப்புணர்வு தினம்- ஜூன் 09 .......... 159
குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக தினம் - ஜூன் 12 .......... 159
சர்வதேச அல்பினிசம் நோய் விழிப்புணர்வு தினம் - ஜூன் 13 .......... 159
உலக இரத்தத் தான தினம் – ஜூன் 14 .......... 160
உலக காற்று தினம் - ஜூன் 15 .......... 160
உலக முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு தினம் – ஜூன் 15 .......... 160
குடும்ப உறுப்பினர்களுக்குப் பணம் அனுப்புதலுக்கான சர்வதேச தினம் - ஜூன் 16 .......... 160
சர்வதேச ஆப்பிரிக்கக் குழந்தைகள் தினம் - ஜூன் 16 .......... 161
உலகப் பாலைவனமாதல் மற்றும் வறட்சிக்கு எதிரான நடவடிக்கை தினம் – ஜூன் 17 .......... 161
உலகக் கடல் ஆமை தினம் - ஜூன் 16 .......... 161
நிலையான அறுசுவை உணவியல் தினம் - ஜூன் 18 .......... 161
வெறுக்கத்தக்க பேச்சை எதிர்ப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 18 .......... 162
மன இறுக்க நோய் நினைவு தினம் - ஜூன் 18 .......... 162
உலக அரிவாள் வடிவ செல் விழிப்புணர்வு தினம் – ஜூன் 19 .......... 162
உலக மெது ஓட்டப் பயிற்சி தினம் - ஜூன் 19 .......... 163
மோதலின் போது நிகழும் பாலியல் வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 19 .......... 163
தந்தையர் தினம் - ஜூன் 19 .......... 163
தேசிய வாசிப்பு தினம் - ஜூன் 19 .......... 163
உலக அகதிகள் தினம் – ஜூன் 20 .......... 163
உலக இசை தினம் - ஜூன் 21 .......... 164
உலக நீர்நிலையியல் தினம் - ஜூன் 21 .......... 164
8வது சர்வதேச யோகா தினம் - ஜூன் 21 .......... 164
சர்வதேச சங்கிராந்திக் கொண்டாட்டத் தினம் - ஜூன் 21 .......... 164
உலக மழைக்காடுகள் தினம் - ஜூன் 22 .......... 165
சர்வதேச விதவைகள் தினம் - ஜூன் 23 .......... 165
சர்வதேச ஒலிம்பிக் தினம் - ஜூன் 23 .......... 165
ஐக்கிய நாடுகளின் பொதுச் சேவை தினம் - ஜூன் 23 .......... 166
சர்வதேச மாலுமிகள் தினம் - ஜூன் 25 .......... 166
போதைப் பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோதமான கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் - ஜூன் 26 .......... 166
சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஐக்கிய நாடுகளின் சர்வதேச தினம் - ஜூன் 26 .......... 167
குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) தினம் – ஜூன் 27 .......... 167

உலக தோல் நிறமி இழத்தல் நோய் தினம் - ஜூன் 25 ........ 168
சர்வதேச வெப்ப மண்டலத் தினம் - ஜூன் 29 ........ 168
தேசிய புள்ளியியல் நாள் - ஜூன் 29 ........ 168
சர்வதேச குறுங்கோள் தினம் - ஜூன் 30 ........ 169
சர்வதேசப் பாராளுமன்ற முறை தினம் - ஜூன் 30 ........ 169
இதரச் செய்திகள் ........ 170
எடைக்குறைப்பு வகை நீரிழிவு நோய் ........ 170
இந்தியாவின் முதல் காற்று - சூரியசக்தி கலப்பு மின் நிலையம் ........ 170
30 வயதுக்குட்பட்ட 30 ஆசிய நபர்கள் பட்டியல் ........ 171
டைம்ஸ் உயர் கல்வி இதழின் ஆசிய பல்கலைக்கழகத் தரவரிசை 2022 ........ 171
அசாதாரணமான டைனோசர் முட்டை ........ 172
ஆற்றல் முன்னேற்ற அறிக்கை 2022 ........ 172
பாராலிதெரிசினோசொரஸ் ஜபோனிகஸ் ........ 173
Web5 இயங்குதளம் ........ 174
மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் ........ 174
வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு ........ 174
உலகளாவியத் தொடக்க நிறுவனச் சூழலமைவு தரவரிசை ........ 175
உலகப் போட்டித்திறன் குறியீடு 2022 ........ 176
உலகளாவியத் திறன் அறிக்கை 2022 ........ 177
வீட்டுப் பணியாளர்கள் பற்றிய அறிக்கை ........ 177
கொள்ளை நோய் ........ 177
பூமியின் கண்டத் தட்டுகளின் புதிய வரைபடம் ........ 178
உலகின் சிறந்த விமான நிலையம் 2022 ........ 179
உலகின் மிகப்பெரிய நன்னீர்வாழ் மீன் ........ 179
மனிதக் காதுகளின் மத்தியப் பகுதி ........ 179
அரிதான பண்டைய கால மகுதி ........ 180

# TNPSC துளிகள்

- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பீமல் ஜலான் 'The India Story' என்ற புதியப் புத்தகத்தை எழுதியுள்ளார்.
  - இந்தப் புத்தகமானது, இந்தியாவின் பொருளாதார வரலாறு பற்றி கூறுவதோடு, இந்தியாவின் அரசியல் பொருளாதாரத்தின் எதிர்காலத்திற்கானத் தகவல்களை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து நரிந்தர் பத்ரா ராஜினாமா செய்தார்.
- இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் ஜப்பானின் பங்களிப்பைக் கொண்டாடும் விதமாக இந்தியப் பிரதமர் 'ஜப்பான் வாரத்தை' கொண்டாடுவது குறித்த ஒரு முன் மொழிதலை அறிவித்தார்.
- K.V. ரகுபதி தனது 'The Mountain is Calling' என்றப் புத்தகத்திற்காக சர்வதேசப் பனோரமா கோல்டன் விருதை வென்றுள்ளார்.
- குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரின் நாரன்புரா பகுதியில் அமைக்கப்பட உள்ள ஒரு புதிய சர்வதேச விளையாட்டு வளாகத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் சா அடிக்கல் நாட்டினார்.
- அறிமுக இயக்குனரான சைம் சாதிக் இயக்கிய பாகிஸ்தான் நாட்டுத் திரைப்படமான 'Joyland' 75வது கேன்ஸ் திரைப்பட விருது விழாவின் வரையறை இல்லாத சாதனைப் பிரிவில் ஜூரி பரிசை வென்றது.
- ஸ்பெயின் நாட்டின் கால்பந்து அணியான ரியல் மாட்ரிட், 2022 ஆம் ஆண்டின் UEFA சாம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியில் லிவர்பூல் என்ற அணியை வீழ்த்தி, 14வது ஐரோப்பியச் சாம்பியன் பட்டத்தை வென்றது.
- சர்வதேசப் பாலியல் தொழிலாளர்கள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 2 அன்று அனுசரிக்கப் படுகிறது.
  - இந்தத் தினமானது பாலியல் தொழிலாளர்களைக் கௌரவிக்கச் செய்வதோடு, அடிக்கடிச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படும் அவர்களின் வேலை நிலைக்கு ஒரு அங்கீகாரத்தினை அளிக்கிறது.
- 15வது இந்தியப் பிரீமியர் லீக் போட்டியின் நிறைவு விழாவின் போது மாபெரும் ஜெர்சியை (66 x 44 மீட்டர் அளவுள்ள மேலங்கியை) காட்சிப்படுத்தியதற்காக, இந்தப் போட்டி கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது.
- 17வது ஆவணப்படம், குறும்படம் மற்றும் இயங்குப் படங்கள் ஆகியப் படங்களுக்கான மும்பை சர்வதேசத் திரைப்பட விழாவானது (MIFF-2022) மும்பையில் தொடங்கியது.
- பார்ச்சூன் 500 என்ற குறியீட்டின் படி, எலான் மஸ்க் 2021 ஆம் ஆண்டில் அதிக ஊதியம் பெறும் தலைமை நிர்வாக அதிகாரி ஆக இடம் பெற்றுள்ளார்.
- 2022 ஆம் ஆண்டு மே மாதத்திற்கான சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ரூ.1.41 லட்சம் கோடியாக பதிவாகியுள்ளது.
  - இது ஏப்ரல் மாத வசூலை விட 16% குறைவாகும்.
- அடுத்த நான்கு ஆண்டுகளில் குறைந்தபட்சம் நிலக்கரியில் இருந்து செய்யப்படும் 81 மின் உற்பத்தி நிலையங்களைக் குறைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

- சனந்த் நகரில் உள்ள ஃபோர்டு பயணியர் வாகன உற்பத்தி அலகினைக் கையகப் படுத்துவதற்காக ஃபோர்டு இந்தியா மற்றும் குஜராத் அரசுடன் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் ஒரு முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம், ஹங்கேரி அரசு சர்வதேச சூரியசக்தி கூட்டணியில் உறுப்பினரானது.
- ஜூன் 21 ஆம் தேதியன்று இந்தியாவிலும் உலகெங்கிலும் அனுசரிக்கப்படும் எட்டாவது சர்வதேச யோகா தினத்தின் கருத்துருவாக 'மனித குலத்திற்காக யோகா' என்பது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- KK என்று அழைக்கப்படும் பாலிவுட் பாடகர் கிருஷ்ணகுமார் குன்னத் சமீபத்தில் கொல்கத்தாவில் காலமானார்.
- கனடா அரசானது, பல தசாப்தங்களாக இல்லாத வகையில், நாட்டின் கைத்துப்பாக்கி கொள்முதல் மற்றும் அதன் விற்பனையினை "முடக்குதல்" உள்ளிட்ட "சில கடுமையான துப்பாக்கி உபயோகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை" செயல் படுத்துகின்ற ஒரு புதியச் சட்டத்தை நிறைவேற்றியது.
- நார்வே செஸ் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்த் சீனாவின் வாங் என்பவரை வீழ்த்தி தரவரிசைப் பட்டியலில் தனது முன்னிலையிடத்தைத் தக்க வைத்துக் கொண்டார்
- தி குளோபல் மெர்சி எனப்படும் உலகின் மிகப்பெரிய பொது மருத்துவமனைக் கப்பல் செனகலில் உள்ள டக்கார் துறைமுகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.
- ஜகார்த்தா நகரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு ஆசியக் கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்திய அணி ஜப்பான் அணியினை வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை வென்றது.
  - இதன் இறுதி ஆட்டத்தில் மலேசியாவைத் தோற்கடித்து தென் கொரிய நாடானது தனது 5வது பட்டத்தை வென்றது.
- மெட்டா நிறுவனத்தில் 14 ஆண்டுகளாக இரண்டாவது உயர் தரவரிசை நிர்வாகியாக விளங்கி வந்த அதன் தலைமை நிர்வாக அதிகாரி ஷெரில் சாண்ட்பெர்க் அந்தப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.
- இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவரும், முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரருமான சவுரவ் கங்குலி உலகளாவிய அளவில் கல்விக்கானச் செயலி ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் மொயீன் அலி, கிரிக்கெட்டில் அவர் ஆற்றியச் சேவைகளுக்காக குயின்ஸ் பிளாட்டினம் ஜூபிலி என்ற விருதுகள் பட்டியலில் இடம் பெற்றதையடுத்து, ஆர்டர் ஆப் தி பிரிட்டிஷ் எம்பயர் என்ற விருதினைப் பெற்றார்.
- ஐரோப்பிய ஆணையம் மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கி ஆகியவை குரோஷியா யூரோவை அந்நாட்டின் நாணயமாகப் பயன்படுத்துவதற்குத் தங்களது ஒப்புதலை அளித்துள்ளன.
  - இது 2023 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் யூரோவைப் பயன்படுத்தும்.
- 75வது லோகார்னோ திரைப்பட விருது விழாவின் போது இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளரான கீதாஞ்சலி ராவ் என்பவருக்கு விருது வழங்கப்பட உள்ளது.

- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், மத்தியப் பிரதேசத்தின் உஜ்ஜைன் நகரில் அகிலப் பாரதிய ஆயுர்வேத மகா சம்மேளனத்தின் 59வது மகா அதிவேஷன் என்ற நிகழ்வினைத் தொடங்கி வைத்தார்.
- சச்சின் டெண்டுல்கர் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியத்தின் (UNICEF) 'நல்லெண்ணத் தூதராக' 20வது ஆண்டாகத் தொடர்ந்துச் செயல்பட உள்ளார்.
- 14 வயது இந்திய அமெரிக்கரான ஹரிணி லோகன் 2022 ஆம் ஆண்டு ஸ்கிரிப்ஸ் தேசிய எழுத்துக் கூறு போட்டியில் வென்றார்.
- ஜேவியர் ஒலிவன், மெட்டா நிறுவனத்தின் (பேஸ்புக்) புதிய தலைமைச் செயல்பாட்டு அதிகாரியாக நியமிக்கப் பட்டுள்ளார் .
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள கிரேட்டர் நொய்டாவின் ஜெவார் என்ற நகரில் நிறுவப்பட உள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்தைக் கட்டமைப்பதற்கான ஒப்பந்தத்தை டாடா புராஜெக்ட்ஸ் நிறுவனம் பெற்றுள்ளது.
- மத்திய இளையோர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், உலக சைக்கிள் தினத்தன்று நாடு தழுவிய 'ஃபிட் இந்தியா ஃப்ரீடம் ரைடர் சைக்கிள் பேரணியை' தொடங்கி வைத்தார்.
- ஒடிசாவின் ரூர்கேலாவைச் சேர்ந்த ஸ்ரேயா லென்கா என்ற 18 வயது சிறுமி, தென் கொரியாவின் ஒரு பிரபல பாப் இசைக்குழுவான பிளாக்ஸ்வானின் ஐந்தாவது உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ராஜஸ்தானின் கரௌலி மாவட்டத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்காக 'அஞ்சல்' எனப் படும் ஒரு சிறப்புச் சுகாதாரப் பாதுகாப்பு அபியான் திட்டமானது தொடங்கப் பட்டு உள்ளது.
  - இதன் மூலம் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டப் பெண்கள் பயனடைந்துள்ளனர்.
- ரஃபேல் நடால் தனது 14வது பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் பட்டத்தை வென்றதன் மூலம் 22வது கிராண்ட்ஸ்லாம் கோப்பையைக் கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளார்.
- இந்திய இரயில்வே நிர்வாகத்திற்கு, ஜெர்மனியின் பெர்லின் நகரில் "சூழியக் கார்பன் உமிழ்வுத் தொழில்நுட்பத்தினைச் சிறப்பான முறையில் பயன்படுத்துதல்" என்ற ஒரு பிரிவில் UIC சர்வதேச நிலையான இரயில்வே விருதுகள் (ISRA) வழங்கப்பட்டுள்ளது.
  - இந்த விருதானது, 25 KV திறனுள்ள மாற்று மின்னோட்ட இழுவை அமைப்பிற்கு நேரடியாக சூரியச் சக்தியை வழங்கும் கட்டமைப்பிற்காக வழங்கப்பட்டது.
- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், சந்த் கபீருக்கு ஒரு புகழஞ்சலியினைச் செலுத்தி விட்டு, சந்த் கபீர் அகாடமி & ஆராய்ச்சி மையம் மற்றும் ஸ்வதேஷ் தர்ஷன் யோஜனா ஆகியவற்றை உத்தரப் பிரதேச மாநிலத்தின், மகர் என்ற இடத்தில் உள்ள கபீர் சௌரா தாம் என்ற பகுதியில் திறந்து வைத்தார்.
- சர்வதேசக் கிரிக்கெட்டில் 17,000 ரன்களைக் கடந்த முதல் இங்கிலாந்து வீரர் என்ற ஒரு பெருமையை இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் பெற்றார்.
  - டெஸ்ட் கிரிக்கெட்டில் 10,000 ரன் அல்லது அதற்கு மேல் அடித்த மற்ற இங்கிலாந்து வீரர் முன்னாள் இங்கிலாந்து அணியின் தலைவர் அலைஸ்டர் குக் ஆவார்.
- ஆவின் நிறுவனம், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான எந்த ஒரு ஊட்டச் சத்துக் கலவையையும் தயாரிக்கவில்லை என்று பால்வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் நாசர் தெளிவுபடுத்தி உள்ளார்.

- சத்துமாவு போன்ற ஒரு கலவையைப் பொதுப் பயன்பாட்டிற்காகத் தயாரிக்க மட்டுமே திட்டமிட்டுள்ளது.

❖ உலகப் பூச்சிகள் தினம் ஆண்டுதோறும் ஜூன் 6 அன்று கொண்டாடப்படுகிறது.

- முதல் உலகப் பூச்சி தினம் 2017 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

❖ டிஜிட்டல் மின்னணுவியல் தொடர்பான உலகின் முதல் 'பழுது பார்க்கும் உரிமை' சட்டம் நியூயார்க் சட்டமன்றத்தால் நிறைவேற்றப் பட்டது.

❖ பிரான்ஸின் சாட்டௌரோக்ஸில் நடைபெற்ற பாரா ஷூட்டிங் உலகக் கோப்பைத் தொடரில் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் போட்டியில் இந்திய வீராங்கனை அவானி லெகாரா உலகச் சாதனையுடன் தங்கம் வென்றார்.

❖ மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் "Loktantra ke Swar' & 'The Republican Ethic என்ற புத்தகங்களை வெளியிட்டார்.

- இதில் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் உரைகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

❖ புதிய பெட்ரோல் மற்றும் டீசல் கார்களை 2035 ஆம் ஆண்டிற்குப் பிறகு விற்பனை செய்வதைத் தடை செய்ய ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்து உள்ளனர்.

- மின்சார வாகனங்களின் ஒரு விரைவான வளர்ச்சியின் மூலம் காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தை முடுக்கி விடுவதை இந்த நடவடிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ 2023 ஆம் ஆண்டில் முதல் மனித விண்வெளிப் பயணமான 'ககன்யான்' மற்றும் முதல் மனிதப் பெருங்கடல் பயணத்தைத் தொடங்கும் தனித்துவமான சிறப்பை இந்தியா அடையும்.

❖ இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் NH53 என்ற நெடுஞ்சாலையில் 105 மணி நேரம் 33 நிமிடங்களில் ஒரே பாதையில் 75 கிலோமீட்டர் பிட்மினஸ் சாலையை அமைத்து ஒரு புதிய கின்னஸ் சாதனையினைப் படைத்துள்ளது.

- NH 53 சாலையானது குஜராத்தில் உள்ள ஹஜிராவையும் ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுகத்தையும் இணைக்கிறது.

❖ மரண தண்டனையை ரத்து செய்ய மலேசிய அரசு முடிவு செய்துள்ளது.

- 2022 ஆம் ஆண்டு மே மாதத்தில், சாம்பியா நாடும் மரண தண்டனையை ரத்து செய்யும் திட்டத்தை அறிவித்தது.

❖ ஆசிய மற்றும் பசிபிக் துறையின் இயக்குநராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கிருஷ்ணா சீனிவாசன் நியமிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்து உள்ளது.

❖ பாரத ஸ்டேட் வங்கியின் புதிய நிர்வாக இயக்குநராக அலோக் குமார் சவுத்ரி என்பவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

- சவுத்ரியின் நியமனத்தைத் தொடர்ந்து, பாரத ஸ்டேட் வங்கியில் தற்போது நான்கு நிர்வாக இயக்குநர்கள் உள்ளனர்.

❖ இந்துக்களின் ஒரு புனிதமான பண்டிகையான சிதல் சஸ்தி ஒடிசாவில் கொண்டாடப் படுகிறது.

 - இந்த ஒரு வார காலச் சிறப்புத் திருவிழாவானது சிவன் மற்றும் பார்வதி தேவியின் திருமணத்தைச் சிறப்பித்துக் காட்டுகிறது.

❖ உலகளாவிய முதன்மை அலுமினியத் தொழில்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே அமைப்பான சர்வதேச அலுமினிய நிறுவனமானது, அதன் புதிய தலைவராக சதீஷ் பை என்பவரை நியமிப்பதாக அறிவித்துள்ளது.

 - இவர் தற்போது, உலகின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த அலுமினிய உற்பத்தியாளர் நிறுவனங்களுள் ஒன்றான ஹிண்டால்கோ இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக உள்ளார்.

❖ பீகாரின் மேற்கு சம்பரன் மாவட்டத்தில் உள்ள வால்மீகி புலிகள் காப்பகத்தில் யானைகள் மீட்பு மையத்தினை பீகார் வனத்துறை நிறுவியுள்ளது.

❖ மாநிலத்தில் உள்ள வளமான நிலங்களை பாலைவனமாக்கும் சில நடவடிக்கைகளை நிறுத்தி, அவற்றை மாற்றியமைப்பதன் மூலம் மண்ணைக் காப்பாற்றுவதற்காக ராஜஸ்தான் அரசானது ஈஷா அவுட்ரீச் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.

 - குஜராத்தை அடுத்து, இந்த அறக்கட்டளையுடன் இத்தகையப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இரண்டாவது இந்திய மாநிலமாக ராஜஸ்தான் மாறியுள்ளது.

❖ இன்ஸ்டாகிராம் ஊடகத்தில் 200 மில்லியன் பின்தொடர்பவர்களைக் கொண்ட முதல் இந்தியர் என்றப் பெருமையை இந்தியக் கிரிக்கெட் வீரர் விராட் கோலி பெற்றார்.

❖ வாட்ஸப் நிறுவனமானது, வாட்ஸப் வணிக செயலி போன்ற டிஜிட்டல் ஊடகங்களைப் பயன்படுத்த உதவுவதன் மூலம் சிறு வணிகங்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள SMBSaathi Utsav என்ற ஒரு முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியது.

❖ நிர்மலா சீதாராமன் அவர்கள் பொதுத்துறை வங்கிகளுக்கான EASE 5.0 (மேம்படுத்தப் பட்ட அணுகல் மற்றும் சிறப்புச் சேவை) 'பொதுச் சீர்திருத்தச் செயல்பாட்டு நிரலை' வெளியிட்டார்.

❖ மும்பையில் உள்ள சர்வதேச விளையாட்டு மற்றும் மேலாண்மை நிறுவனமானது (IISM), வினித் கர்னிக் எழுதிய "Business of Sports: The Winning Formula for Success" என்ற தலைப்பிலான விளையாட்டுத் துறையில் சந்தைப்படுத்துதல் குறித்த இந்தியாவின் முதல் புத்தகத்தை வெளியிட்டது.

❖ மாருதி சுஸுகி இந்தியா ஹரியானாவில் உள்ள மனேசரில் அமைந்துள்ள தனது உற்பத்தி அலகில் 20 மெகாவாட் திறன் கொண்ட சூரியசக்தியினால் இயங்கும் கார் நிறுத்தத்தினை நிறுவியுள்ளது.

 - பிசினஸ் இதழின் ஒரு அறிக்கையின்படி, இது ஆசியாவின் மிகப்பெரிய சூரிய சக்தியினால் இயங்கும் ஒரு கார் நிறுத்தம் ஆகும்.

❖ 2021 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய BPM (வணிக செயல்முறை மேலாண்மை) சேவை வழங்கீட்டு நிறுவனங்கள் பட்டியலில் TCS நிறுவனம் தனது பத்தாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

❖ இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்புத் துறை மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) அகமதாபாத் நகரில் நிறுவப்பட்டது.

- ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர், மூத்த இந்திய அரசுமுறை அதிகாரியான அமந்தீப் சிங் கில் என்பவரைத் தனது தொழில்நுட்பத் தூதராக நியமித்துள்ளார்.
- நார்வே செஸ் குரூப் ஏ ஓபன் சதுரங்கப் போட்டியில் இளம் இந்தியக் கிராண்ட்மாஸ்டர் R. பிரக்ஞானந்தா வெற்றி பெற்றார்.
- தெலங்கானாவைச் சேர்ந்த ராகுல் ஸ்ரீவத்சவ் இந்தியாவின் 74வது கிராண்ட்மாஸ்டர் ஆனார்.
- தொழிலதிபர் ரத்தன் டாடாவிற்கு மகாராஷ்டிராவின் ஆளுநர் பகத்சிங் கோஷியாரி இலக்கியத்திற்கான கௌரவ டாக்டர் பட்டத்தினை வழங்கினார்.
- குருநாயுடு சனாபதி மெக்சிகோவில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு IWF இளையோர் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா சார்பாக தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியத்தில் ஆனந்த் மஹிந்திரா, வேணு சீனிவாசன், பங்கஜ் படேல் மற்றும் ரவீந்திர தோலாக்கியா ஆகியோர் பகுதி நேர இயக்குநர்களாக நியமிக்கப் பட்டனர்.
- தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியானது, புதியப் பங்கு வெளியீடு மூலம் நிதியினைத் திரட்டுவதற்கு, மூலதனச் சந்தை ஒழுங்குமுறை அமைப்பான இந்தியப் பத்திர மற்றும் பரிமாற்ற வாரியத்தின் அனுமதியைப் பெற்றுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு விவா டெக்னாலஜி நிகழ்வில், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்தியா முழுவதும் முழு அளவிலான 5ஜி சேவைகள் வழங்கப்படும் என்று மத்தியத் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அறிவித்தார்.
- திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் ஒவ்வொரு மாதமும் பிரதான் மந்திரி தேசியத் தொழிற்பயிற்சி மேளாவை ஏற்பாடு செய்து நடத்த முடிவு செய்துள்ளது.
- பருவநிலை மாற்றத்தில் நடவடிக்கை எடுக்காமல் இழுபறி செய்வதை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஆஸ்திரேலிய நாடானது உயர் லட்சிய உமிழ்வு இலக்குகளை ஐக்கிய நாடுகள் சபையிடம் சமர்ப்பித்தது.
- தொழில்துறை அமைப்பான இந்தியச் செல்லிடப் பேசி இயக்குநரகச் சங்கத்தின் 2022-23 ஆம் ஆண்டிற்கான புதியத் தலைவராக ரிலையன்ஸ் ஜியோ இன்ஃபோகாம் என்ற நிறுவனத்தின் தலைவர் பிரமோத் கே மிட்டல் நியமிக்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்காவின் பாதுகாப்புத் துறையில் கையகப்படுத்துதல் மற்றும் நிலை நிறுத்தலுக்கான துணை உள் செயலாளர் பதவிக்கு ஓர் இந்திய-அமெரிக்கரான ராதா ஐயங்கார் பிளம்ப் என்பவர் பரிந்துரைக்கப் பட்டுள்ளார்.
- ஆசியான்-இந்தியா ஆகியவற்றுக்கு இடையேயானப் பேச்சுவார்த்தை உறவுகளின் 30 ஆம் ஆண்டு நிறைவை நினைவு கூரும் வகையில் ஒரு சிறப்பு ஆசியான்-இந்திய வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பினை (SAIFMM) இந்தியா நடத்தியது.
- உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகள், பணவியல் கொள்கைகளை 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து இதுவரை இல்லாத வகையில் மிகவும் வியத்தகு முறையில் கடுமையாக்கி வருகின்றன.
  - பணவீக்கத்தில் ஏற்படும் எதிர்பாராத உயர்வினைச் சமாளிப்பதற்கான ஒரு முயற்சியில் பொருளாதார மந்தநிலை மற்றும் நிதிச் சந்தைகளை சீர்குலைக்கச் செய்கின்ற வகையில் இந்த முடிவுகள் இருக்கின்றன.

- சர்வதேசத் தொழிலாளர் மாநாட்டின் 110வது அமர்வில் பிரதிநிதிகள் ஜெனீவா நகரில் நேரடியான முறையிலும் மற்றும் மெய்நிகர் முறையிலும் கலந்து கொண்ட வகையில் நடந்தது.
- நெதர்லாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து அணி 498-4 என்ற உலக அளவிலானச் சாதனை ஓட்ட அளவை எட்டியது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் ஒரு இடைக்காலத் தலைவராக இந்திய ஆட்சிப் பணி அதிகாரி C. முனியநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவில் முதல்முறையாக, ஒரு நாளைக்கு 100 மில்லியன் லிட்டர் கொள்ளளவு வரையில் உப்புநீரை நன்னீராக்கும் ஆலையானது குஜராத்தின் பருச் மாவட்டத்தில் திறக்கப் பட்டுள்ளது.
- பாரதிய ஏர்டெல் நிறுவனமானது பார்ட்டிநைட் மெட்டாவர்ஸ் தளத்தில் இந்தியாவின் முதல் பன்மைய ஒளிபரப்பை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ராம் பகதூர் ராய் எழுதிய ‘பார்த்திய சம்விதான்: அங்கஹி கஹானி’ என்ற புத்தகத்தை பிரதமர் அவர்கள் வெளியிட்டார்.
- இங்கிலாந்தின் மாட் ஃபிட்ஸ்பேட்ரிக் அமெரிக்க கோல்ப் ஓபன் போட்டியினை வென்று தனது முதல் உயரியப் பட்டத்தைக் கைப்பற்றினார்.
- நடைபெற உள்ள காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் 37 பேர் கொண்ட இந்தியத் தடகள வீரர்களின் அணிக்கு தடகள வீரர் நீரஜ் சோப்ரா தலைமை தாங்க உள்ளார்.
- உலகம் முழுவதும் சர்வதேச சுற்றுலா தினமானது ஆண்டுதோறும் ஜூன் 18 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
- குஜராத்தின் பஞ்ச மஹால் மாவட்டத்தில் உள்ள பாவகாத் மலையில் அமைந்துள்ள, புதுப்பிக்கப் பட்ட ஸ்ரீ காளிகா மாதா கோயிலைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- ஹரியானா மாநில முதல்வர் மனோகர் லால் கட்டார் 8வது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு டாக்டர் சோனு போகட் எழுதிய அஷ்டாங்க யோகா என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
- உள்துறை அமைச்சகமானது இணையவெளிப் பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு (சைபர் அப்ராத் சே ஆசாதி, ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்) குறித்த ஒரு தேசிய மாநாட்டினை ஏற்பாடு செய்ய உள்ளது.
- பிரதமர் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தில் அமைக்கப் பட்டுள்ள மூளை ஆராய்ச்சி மையத்தைத் திறந்து வைத்து, அங்கு அமைக்கப்பட உள்ள பாக்சி பார்த்தசாரதி பல்நோக்குச் சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்.
- பெங்களூருவில் டாக்டர் B.R. அம்பேத்கர் பொருளியல் பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- சபாஷ் மித்து என்பது இந்திய தேசிய மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னாள் டெஸ்ட் போட்டி மற்றும் ஒருநாள் போட்டிகளின் அணித் தலைவரான மித்தாலி ராஜின் சொந்த வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு திரைப்படம் ஆகும்.
- இந்தியாவில் முதல் முறையாக பெண்களுக்காக நடத்தப்பட்டத் தேசிய இராணுவ அகாடமி தேர்வில் ஷனன் டாக்கா என்பவர் முதல் மதிப்பெண் பெற்றுள்ளார்.
- ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் அடுத்த நிரந்தரப் பிரதிநிதியாக ருச்சிரா கம்போஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ஆஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீராங்கனையான லிசா ஸ்தலேகர் சர்வதேசக் கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் முதல் பெண் தலைவராகப் பொறுப்பேற்று உள்ளார்.
- பெங்களூருவில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கியா என்ற நிறுவனத்தின் நாகச்சந்திரா காணகத்தினை (ஷோரூம்) கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை திறந்து வைத்தார்.
  - ஹைதராபாத் மற்றும் மும்பைக்கு அடுத்தபடியாக பெங்களூருவில் அமைக்கப் பட்டுள்ள இந்தக் கடையானது இந்தியாவில் அமைந்துள்ள ஐக்கியா நிறுவனத்தின் மூன்றாவது விற்பனை நிலையமாகும்.
- ONGC விதேஷ் லிமிடெட் நிறுவனமானது, கொலம்பியாவில் உள்ள உர்ராக்கா என்ற துளையிடப்பட்ட கிணற்றில் எண்ணெய் இருப்பதைச் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளது.
- மத்தியப் புலனாய்வு வாரியத்தின் புதிய தலைவராக தபன் டேகா நியமிக்கப் பட்டு உள்ளார்.
  - இவரது நியமனமானது அமைச்சரவையின் நியமனக் குழுவால் அங்கீகரிக்கப் பட்டது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் S.S.முந்த்ராவைப் பங்குச் சந்தை நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவின் தலைவராக நியமிப்பதற்குப் பங்குச் சந்தை ஒழுங்குமுறை அமைப்பான இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் (IOA) தற்காலிகத் தலைவராக அனில் கண்ணா என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார்.
- கர்நாடக மாநிலத்தின் கப்பன் பூங்காவிலுள்ள ஜவஹர்லால் பால் பவனில் அமைக்கப் பட்டுள்ள ஊனமுற்றோருக்கு ஏற்ற வகையிலான முதல் பூங்காவானது சமீபத்தில் திறக்கப் பட்டது.
- ஹெர்மிட் என்பது ஆண்ட்ராய்ட் மற்றும் ஐஓஎஸ் செயல்பாட்டு மென்பொருளைக் கொண்ட சாதனங்களைப் பாதிக்கும் திறன் கொண்ட ஒரு புதிய ஸ்பைவேர் (ஒற்றியறி மென்பொருள்) ஆகும்.
- ஈரான் சமீபத்தில் "சுல்ஜானா" என்ற திட எரிபொருள் ராக்கெட்டை விண்ணில் ஏவியது.
  - இது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட கலப்பின எரிபொருள் கொண்டு இயக்கப் படும் ஒரு செயற்கைக் கோள் ஏவுகலன் ஆகும்.
- டாடா பவர் சோலார் சிஸ்டம்ஸ் நிறுவனமானது, கேரளாவின் காயம்குளத்தின் காயல் (உப்பங்கழி) பகுதியில் இந்தியாவின் மிகப்பெரிய 101.6 மெகாவாட் அளவு பீக் திறன் கொண்ட மிதக்கும் சூரிய மின்சக்தித் ஆலையினை அமைக்க உள்ளது.
  - மின் கொள்முதல் ஒப்பந்தம் என்ற வகையின் மூலம் ஒரு மிதக்கும் சூரிய ஒளி மின்னழுத்த ஆலையை நிறுவுதல் முதல் முறையாக மேற்கொள்ளப்படுகிறது.
- சென்னை தரமணியில் டைடல் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்திக்கானச் சிறப்பு மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
  - இது இந்தியாவின் இம்மதிரியிலான முதல் சிறப்பு மையமாகும்.


# தமிழ்நாடு செய்திகள்

## தமிழகத்தில் அன்னிய நேரடி முதலீடு

- தமிழகத்தில் 2021-22 ஆம் நிதியாண்டில் 22,396 கோடி ரூபாய் அந்நிய நேரடி முதலீடு பதிவாகியுள்ளது.
- இது 2020-21 ஆம் நிதியாண்டில் பதிவான 17,208 கோடி ரூபாயை விட 30.1% அதிகமாகும்.
- 22 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீட்டுடன் கர்நாடகா முதலிடத்திலும், 15.4 பில்லியன் டாலர்களுடன் மகாராஷ்டிரா இரண்டாவது இடத்திலும் உள்ளது.
- டெல்லியில் சுமார் 8.2 பில்லியன் டாலர்களும், தமிழகத்தில் 3 பில்லியன் டாலர்களும் மற்றும் குஜராத்தில் 2.7 பில்லியன் டாலர்களும் அந்நிய நேரடி முதலீடு பதிவாகி உள்ளது.

## ஓய்வூதியதாரர்களுக்கான டிஜிட்டல் வாழ்க்கைச் சான்றிதழ்

- அஞ்சல் துறையின் வீடு தேடி சேவைகள் வழங்கும் வசதி மூலம் ஓய்வூதியம் பெறுவோரிடமிருந்து வாழ்க்கைச் சான்றிதழைப் பெறுவதற்காக இந்திய அஞ்சல் பண வழங்கீட்டு வங்கியுடன் (IPPB) தமிழ்நாடு அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற் கொண்டுள்ளது.
- இந்த வங்கி ஒரு டிஜிட்டல் வாழ்க்கைச் சான்றிதழுக்கு ரூ. 70 என்ற கட்டணத்தில் வீடு தேடி சேவைகள் வழங்கும் ஒரு வசதியை வழங்கும்.



## நெகிழிக் குடுவைகளின் தனித்துவமான பயன்பாடு

- ❖ அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவானது, உலக சுற்றுச்சூழல் தினத்தன்று ஒரு புதிய முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது
- ❖ அது பூங்காவில் நெகிழிக் குடுவை கழிவுகளைத் தூக்கி எறிதல் மற்றும் மாசுபடுத்துதல் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்காக ஒரு புதிய முறையை அறிமுகப்படுத்தியது.
- ❖ உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, "மஞ்சப்பை" எனப்படும் பாரம்பரியத் துணிப் பைகள் விநியோகிக்கப்பட்டன.
- ❖ அது மிருகக்காட்சிச் சாலைக்கு வருகை தரும் பார்வையாளர்களிடமிருந்து, ஒவ்வொரு நெகிழித் தண்ணீர் குடுவைக்கும் 10 ரூபாய் வசூலிக்கத் தொடங்கியுள்ளது.
- ❖ பார்வையாளர்கள் காலியானக் குடுவையை மிருகக்காட்சி சாலையில் உள்ள விற்பனையாளரிடம் திருப்பிக் கொடுத்து அந்தப் பணத்தைத் திரும்பப் பெறலாம்.
- ❖ அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவானது, வண்டலூர் உயிரியல் பூங்கா என்றும் அழைக்கப் படுகிறது.
- ❖ 1855 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தியாவின் முதல் பொது உயிரியல் பூங்கா இது ஆகும்.

## சொகுசுப் பயணியர் கப்பல் எம்பிரஸ்

- ❖ "எம்பிரஸ்" என்ற சொகுசுப் பயணியர் கப்பலினைத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னைத் துறைமுகத்தில் இருந்து கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- ❖ தமிழக மாநிலத்தில் இருந்து இயக்கப்படும் முதல் சொகுசுக் கப்பல் இதுவாகக் கருதப் படுகிறது.
- ❖ இது புதுச்சேரி மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலும் நங்கூரமிட்டு நிறுத்தப் படும்.

## அதிகப்படியான காவிரி நீர்

- ❖ தொடர்ந்து நான்காவது ஆண்டாக, முடிவடைந்த 2021-22 நீர் ஆண்டில் காவிரி நீரின் அதிக அளவைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.
- ❖ மாதாந்திர மீள் நிரப்பும் அடிப்படையில், நவம்பர் மாதம் 71.57 டிஎம்சியுடன் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- ❖ 2021 ஜூன் முதல் 2022 மே வரை மாநிலம் சுமார் 281 டிஎம்சி தண்ணீரைப் பெற்றுள்ளது.
- ❖ 2018-19 ஆம் ஆண்டில், பெற்ற நீரின் அதிகப் படியான அளவு 228.18 டிஎம்சி ஆகும்.
- ❖ இது கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகமாக உள்ளது.
- ❖ உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் நிர்ணயித்த 177.25 டிஎம்சி அளவை விடக் கூடுதலாக 103.8 டிஎம்சி அளவு நீர் கிடைத்துள்ளது.
- ❖ 12.76 டிஎம்சிக்குப் பதிலாக 44 டிஎம்சியைப் பெற்ற ஒரு நிலையில் தமிழகம் 2022 ஆம் ஆண்டின் ஜனவரி - மே மாதங்களில் எதிர்பாராத "வரவை" பெற்றது.
- ❖ 2022 மே மாதம் மாநிலத்தின் நிகர அளவு இருப்பாக 22.96 டிஎம்சியாக நீரைப் பெற்றது.

**Tracking inflow**

TREND OF CAUVERY RIVER WATER REALISATION OVER THE YEARS

| Water Year | Realisation+ (in tmc ft.) | Surplus/Deficit (in tmc ft.) |
|---|---|---|
| 2018-19 | 405.43 | 228.18 |
| 2019-20 | 275.16 | 97.91 |
| 2020-21 | 211.3275 | 34.0775 |
| 2021-22 | 281.0739 | 103.8239 |

HOW LAST YEAR FARED?

| Month | Quantity prescribed (in tmc ft.) | Realisation (in tmc ft.) |
|---|---|---|
| June 2021 | 9.19 | 7.6978 |
| July | 31.24 | 27.989 |
| August | 45.95 | 22.6417 |
| September | 36.76 | 33.1394 |
| October | 20.22 | 48.2763 |
| November | 13.78 | 71.5651 |
| December | 7.35 | 26.1825 |
| January 2022 | 2.76 | 6.4331 |
| February | 2.5 | 3.1125 |
| March | 2.5 | 5.2149 |
| April | 2.5 | 5.8642 |
| May | 2.5 | 22.9573 |
| Total | **177.25** | **281.0739** |

*tmc ft. - thousand million cubic feet*

Note: The tables are based on readings taken by the Central Water Commission in Biligundlu on the inter-State (Karnataka-Tamil Nadu) border

## கந்துவட்டி நடவடிக்கை

- கந்துவட்டி கொடுமையைத் தடுக்க தமிழகம் முழுவதும் 'ஆபரேஷன் கந்துவட்டி' என்ற நடவடிக்கையைத் தொடங்க காவல்துறைத் தலைமை இயக்குநர் சி. சைலேந்திர பாபு உத்தரவிட்டார்.
- அனைத்துக் காவல் நிலையங்களிலும் நிலுவையில் உள்ள கந்துவட்டி வழக்குகளைத் திரும்ப எடுத்து, தமிழ்நாட்டின் அதிக வட்டி வசூலிக்கத் தடை விதிக்கும் சட்டம், 2003 என்பதின் கீழ் நடவடிக்கை எடுக்கக் காவல்துறைக்கு உத்தரவிடப்பட்டது.

## S2G கொள்முதல் நாள் முயற்சி

- தமிழ்நாடு தொழில் தொடக்கம் மற்றும் புத்தாக்கத் திட்டம், தொழில்முனைவோர் மத்தியில் டான்சிம் என்று பிரபலமாக அறியப் படுகிறது.
- இது தொழில் தொடக்கங்களையும் அரசாங்கத்தையும் இணைக்க 'S2G Buy Day' என்ற ஒரு முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- இதன்படி, அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மாநிலத்தில் உள்ள தொழில் தொடக்க நிறுவனங்களிடமிருந்து ரூ.50 லட்சம் வரையிலான புத்தாக்கத் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை நேரடியாக வாங்க அனுமதிக்கப்படும்.

## ஜெயங்கொண்டம் திட்டம்

- ❖ தமிழக அரசு, வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை வசூலிக்காமல் நிலத்தை அதன் முன்னாள் உரிமையாளர்களுக்குத் திரும்ப ஒப்படைக்க முடிவு செய்துள்ளது.
- ❖ திட்டத்தைக் கைவிடுவதற்கான ஒரு முக்கியக் காரணம் என்பது வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை கடுமையாக உயர்ந்துள்ளதே ஆகும்.
- ❖ அரியலூர் மாவட்டத்தில் 1,600 மெகாவாட் திறன் கொண்ட ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த லிக்னைட் சுரங்கம் மற்றும் மின் உற்பத்தித் திட்டத்திற்காக சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு 3,390 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டது.

## 44வது செஸ் ஒலிம்பியாட் சின்னம்

- ❖ 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான முத்திரை மற்றும் சின்னத்தை மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.
- ❖ இது 2022 ஆம் ஆண்டில் ஜூலையில் மாமல்லபுரத்தில் நடைபெறும்.
- ❖ இந்தச் சின்னம் தம்பி என்று அழைக்கப் படும்.
- ❖ அதன் சட்டையில் சதுரங்க நம்பிக்கை என்ற வார்த்தை தென்படும்.
- ❖ சென்னை மாநகராட்சியின் தலைமையகமான ரிப்பன் கட்டிடத்தில் ஒலிம்பியாட் போட்டிக்கான நேரக் கணிப்பு கடிகாரத்தையும் அவர் வெளியிட்டார்.
- ❖ 2013 ஆம் ஆண்டில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் மேக்னஸ் கார்ல்சன் இடையேயான உலக சாம்பியன்ஷிப் போட்டிக்குப் பிறகு, இது சென்னையின் இரண்டாவது பெரிய சர்வதேச செஸ் போட்டியாகும்.




## HomoSEP

- ❖ இது இந்தியாவில் கையினால் மேற்கொள்ளப்படும் துப்புரவுத் தொழில்முறையை ஒழிப்பதற்காக சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழக ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்ட ஒரு எந்திரமாகும்.
- ❖ இது இந்தியாவில் கையினால் மேற்கொள்ளப்படும் துப்புரவுத் தொழில்முறையை ஒழிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட சஃபாய் கரம்சாரி அந்தோலன் (SKA) என்ற ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் ஆதரவு வழங்கப்படுகிறது.

- தற்போது, துப்புரவுப் பணியின் போது தனது கணவரை இழந்த நாகம்மாள் மற்றும் திருமதி ரூத் மேரி ஆகியோர் தலைமையிலான சுய உதவிக் குழுக்களுக்கு முதல் இரண்டு HomoSEP அலகுகள் வழங்கப் பட்டுள்ளன.



## அலங்கார மீன்களில் வைரஸ் பாதிப்பு

- கோய் கார்ப் என்ற ஒரு அலங்கார மீன் வகையைப் பாதிக்கும் வைரஸ் ஆனது, இந்தியாவில் முதன்முறையாகப் பதிவாகியுள்ளது.
- இந்தியாவில் அலங்கார மீன் வர்த்தகத்தின் மையமான சென்னை கொளத்தூரின் பல்வேறு இடங்களில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.
- இது கடுமையான இறப்பு விகிதம் மற்றும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது,
- கோய் ஹெர்பெஸ் வைரஸ் (KHV) அல்லது சைப்ரினிட் ஹெர்பெஸ் வைரஸ்-3 (CyHV-3) என்பது முதன்முதலாக 1998 ஆம் ஆண்டில் இஸ்ரேல் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் பதிவாகியது.
- சைப்ரினஷ் கார்பியோ கோய், பொதுவாக "கோய் அல்லது கோய் கார்ப்" என்று அழைக்கப் படுகிறது.
- இது அதன் வண்ணங்கள், வடிவம் மற்றும் செதில் வடிவமைப்பு காரணமாக உலகம் முழுவதும் வர்த்தகம் செய்யப்படும் ஓர் அலங்கார மீன் வகை ஆகும்.

## எண்ணும் எழுத்தும் திட்டம்

- திருவள்ளூரில் ‘எண்ணும் எழுத்தும்’ திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இது 2025 ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டில் உள்ள எட்டு வயதுக்குட்பட்ட அனைத்து மாணவர்களும் புரிந்து கொண்டு படிக்கும் திறன் மற்றும் அடிப்படை எண்கணிதத் திறன்களைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதை இலக்காகக் கொண்ட திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது, இந்தக் கல்வியாண்டில் தொடங்கி மூன்று ஆண்டுகளுக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்படும்.
- இத்திட்டம் கற்றலில் உள்ள இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.




## 11வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

- ❖ 11வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடானது 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜா நகரில் நடைபெறவுள்ளது.
- ❖ தமிழ் ஆய்வுகள் குறித்த இந்தக் கருத்தரங்கானது இணைய யுகத்தில் தமிழ் மொழி எதிர் கொள்ளும் சவால்களை மையப்படுத்துகிறது.

## எழுத்தாளர் சின்னப்ப பாரதி

- ❖ முற்போக்குத் தமிழ் எழுத்தாளர் K .சின்னப்ப பாரதி சமீபத்தில் காலமானார்.
- ❖ இவர் தாகம், சங்கம், சர்க்கரை, பாவளாயி, தலைமுறை மாற்றம், சுரங்கம் மற்றும் பாலை நில ரோஜா ஆகிய ஏழு புதினங்களை எழுதியுள்ளார்.
- ❖ மேற்கு வங்கம் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய பகுதிகளில் உள்ள நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டங்களைப் பற்றிய ‘சுரங்கம் (தி மைன்)’ என்ற புத்தகமானது அவருக்குப் புகழைப் பெற்று தந்தது.
- ❖ தாகம் என்ற புத்தகமானது விவசாயத் தொழிலாளர்களின், குறிப்பாக தலித்துகளின் துயரங்களை விவரிக்கிறது.



## மதுக் குடுவைகளைத் திரும்ப வாங்கும் திட்டம்

- நீலகிரி மாவட்டம் முழுவதும் உள்ள டாஸ்மாக் கடைகளில் ஏற்கனவே பயன்படுத்திய மதுக் குடுவைகளைத் திரும்ப வாங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது, பயன்படுத்தப்பட்ட மதுக் குடுவைகளை வனப் பகுதிகளில் உள்ள படியே கொட்டுவதையும், அதன் மூலம் வனவிலங்குகளுக்கு அவை ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

## "பாரத் கௌரவ்" விரைவு இரயில்

- கோவையில் இருந்து ஷீரடி வரை இயக்கப்படும் 'பாரத் கௌரவ்' என்ற இரயில் சேவையானது, கோவை வடக்கு இரயில் நிலையத்தில் இருந்து துவக்கப்பட்டது.
- சுற்றுலா வணிகத்தை ஊக்குவிக்கவும் ஈர்க்கவும் நோக்கமாகக் கொண்டு, இந்திய ரயில்வே பாரத் கௌரவ் இரயில்களை அறிமுகப்படுத்தியது.
- இது நாட்டின் முதல் தனியார் ரயில் சேவையாகும்.
- இது ஒரு கருத்துரு அடிப்படையிலான சுற்றுப்பாதைகளில் தனியார் நிறுவனங்களால் இயக்கப்படும்.

## முதல் பெண் தபேதார்

- சென்னை உயர்நீதிமன்றமானது முதன்முறையாக ஒரு பெண் தபேதாரை நியமித்து உள்ளது.
- நீதிபதி R .N.மஞ்சுளா, உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தபேதார் சேவையை முதலில் பயன்படுத்தியவராவார்.
- தண்டம் தாங்குபவர்/சோப்தார் என்ற ஒரு பதவியானது பாரம்பரியமாக ஆண்கள் வகிக்கும் ஒரு பதவியாகும்.
- இவர் உயரதிகாரியின் அதிகாரத்தைக் குறிக்கும் வகையில் ஒரு உயரதிகாரிக்கு முன்னால் தண்டத்தினை ஏந்திச் செல்லும் ஓர் பணியாளர் ஆவார்.
- நீதிமன்றங்களில், நீதிமன்ற அரங்குகளுக்கு இடையே நீதிபதிகள் தங்கு தடையின்றிச் செல்வதற்கு இவர் உதவுகிறார்.
- தாளாளர்/சோப்தர்கள் உயர்நீதிமன்றத்தினால் நேரடி ஆட்சேர்ப்பு மூலம் நியமிக்கப் படுகிறார்கள்.

## சிறந்த துறைசார் முதலீடு

- மேற்கு வங்காளத்தைத் பின்னுக்குத் தள்ளி, சிறுநிதி கடன்களின் மீதான துறைசார் முதலீட்டுப் பிரிவில் பெரிய மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.
- இதில் மேற்கு வங்காளத்தைத் தொடர்ந்து கர்நாடகா, உத்தரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## தொழிலணங்கு

- இது தமிழ்நாடு தொடக்க நிறுவனங்கள் மற்றும் புத்தாக்கத் திட்டத்தின் (டான்சிம்) ஒரு முன்னெடுப்பாகும்.
- பெருநகரங்கள் அல்லாத பகுதியில் உள்ள பொருளாதார ரீதியில் நலிந்த பிரிவைச் சேர்ந்தப் பெண்களிடையே வெகுஜனத் தொழில்முனைவை மேம்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தொடக்க நிறுவனங்களின் சூழலமைவில் உள்ள முன்னோடிகளையும், வெற்றிகரமான தொழில்முனைவோரையும், நிறுவனங்களையும் இணைத்து, சுய உதவிக் குழுக்களைத் திறன்மிகு சுய உதவிக் குழுக்களாகவும், சிறு நிறுவனங்களாகவும் மற்றும் தொடக்க நிறுவனங்களாகவும் படிப்படியாக உயர்த்தச் செய்கிறது.

## நாளைய திறன் திட்டம்

- தமிழக அரசானது நான் முதல்வன் என்ற திட்டத்தினைச் சமீபத்தில் தொடங்கியது.
- இத்திட்டத்தின் கீழ், தமிழக அரசு தற்போது நாளைய திறன் என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தில் 50,000 கல்லூரி மாணவர்கள் கணினி அறிவியல், மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் ஒரு அறிவுசார் பயிற்சியினைப் பெற உள்ளார்கள்.
- இந்தப் பல்முனையத் திட்டம் ஆனது நாஸ்காம், தகவல் தொழில்நுட்ப அகாடமி மற்றும் திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆகியப் பிரிவினருக்கான தொடக்க நிறுவன நிதி

- தமிழ்நாடு தொடக்க நிறுவனங்கள் மற்றும் புத்தாக்கத் திட்டமானது பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆகிய சமுதாயப் பிரிவுகளைச் சேர்ந்த தொழில் முனைவோரிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.
- இது தொடர்பாக, இந்த நிதியானது அமைக்கப்பட்டது.
- இது பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆகிய சமுதாயப் பிரிவுகளைச் சேர்ந்த தொழில்முனைவு நிறுவனர்களால் உருவாக்கப்பட்ட தொடக்க நிறுவனங்களுக்கான ஒரு பிரத்தியேக நிதியாகும்.
- இது முதலீட்டுக் குழுவின் ஒரு மதிப்பீடு மற்றும் பரிந்துரையின் அடிப்படையில் பங்கு அல்லது கடன் வடிவில் வழங்கப்படும்.
- இந்த நிதியுதவியைப் பெறுவதற்கு, ஒரு நிறுவனத்தில் 50 சதவீதத்திற்கும் அதிகமான பங்குகளைப் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆகியப் பிரிவைச் சேர்ந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் வைத்திருக்க வேண்டும்.
- ஒரு தொழில்முனைவோர் தமிழ்நாட்டைப் பூர்வீகமாக கொண்டவராகவோ அல்லது தமிழின வம்சாவளியைச் சேர்ந்தவர்களாகவோ இருக்க வேண்டும்.
- மேலும் தங்களது முதன்மையானச் செயல்பாட்டுத் தளத்தைத் தமிழ்நாட்டிற்குள் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.




## தமிழ்நாட்டில் புதிய டைடல் பூங்காக்கள்

- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி மையத்தைத் திறந்து வைத்தார்.
- இது டசால்ட் சிஸ்டம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து நிறுவப்பட்டது.
- இது மாநிலத்தினால் திட்டமிடப்பட்ட மூன்று சிறப்பு மையங்களில் ஒன்றாகும்.
- சீமென்ஸ் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு திறன்மிகு மற்றும் மேம்பட்ட உற்பத்தி மையம் மற்றும் தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி மையம் ஆகியவை மற்ற இரண்டுப் பூங்காக்களாகும்.
- மேற்கொண்ட நிறுவனங்கள் GE Aviation நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது.
- மேலும் அவர் ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஓசூரில் இரண்டு தொழில்துறைப் புத்தாக்க மையங்களை (IICs) நிறுவினார்.
- இது நான்காவது தொழில்புரட்சியை ஏற்படுத்துவதையும், தமிழ்நாட்டின் உற்பத்திச் சூழல் அமைப்பை மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விழுப்புரம் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் டைடல் நியோ பூங்காக்களை நிறுவச் செய்வதற்கும் முதல்வர் அடிக்கல் நாட்டினார்.
- இன்ஃபோசிஸ், சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் நாட்டிங்ஹாம் பல்கலைக் கழகத்துடன் இணைந்துத் தொழில்துறை 4.0 முதிர்வுக் குறியீட்டு ஆய்வையும் முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

# தேசியச் செய்திகள்

## நம்கீன் நடவடிக்கை

- நம்கீன் நடவடிக்கை என்பது போதை மருந்துகளைத் தடுப்பதற்காக வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகத்தினால் தொடங்கப் பட்டதாகும்.
- வருவாய்ப் புலனாய்வு இயக்குனரகமானது, ஈரான் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கொள்கலனிலிருந்து 52 கிலோ கோக்கையினை மீட்டுள்ளது.
- இந்திய உளவு நிறுவனமான வருவாய்ப் புலனாய்வு இயக்குனரகம் என்பது, கடத்தல் தடுப்பு உளவுத்துறை, விசாரணைகள் மற்றும் நடவடிக்கைக்கான அமைப்பு ஆகும்.

## ஐஎன்எஸ் நிர்தேசக்

- இந்தியக் கடற்படைக்காக உருவாக்கப்படும் நான்கு ஆய்வுக் கப்பல்களுள் (பெரிய) இரண்டாவதாக உருவாக்கப்பட்டுள்ள கப்பலான நிர்தேசக், சென்னையிலுள்ள காட்டுப் பள்ளியில் படையில் இணைக்கப்பட்டது.
- இந்தக் கப்பலுக்கு நிர்தேசக் எனும் பழைய கப்பல் ஒன்றின் நினைவாக அதே பெயர் இடப் பட்டது.
- இது ஓர் இந்தியக் கடற்படை ஆய்வுக் கப்பலாகும்.
- 32 ஆண்டுகால மகத்தான சேவைக்குப் பிறகு 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிர்தேசக் படையிலிருந்து நீக்கப்பட்டது.

## இந்தியாவின் முதல் 'லாவெண்டர் திருவிழா'

- இந்திய நாட்டின் முதல் 'லாவெண்டர் திருவிழா' ஜம்முவின் பதேர்வா நகரில் தொடங்கப் பட்டது.
- லாவெண்டர் சாகுபடியானது, இந்த மலைப்பாங்கானப் பகுதியின் பொருளாதாரத்தை மாற்றியமைத்துள்ளது.
- தோடா மாவட்டத்தில் உள்ள பதேர்வா நகரானது இந்தியாவில் ஊதா புரட்சித் தொடங்கப் பட்ட பிறப்பிடமாகும்.
- 'நறுமணப் பொருட்கள் திட்டம் அல்லது ஊதாப் புரட்சியின்' கீழான லாவெண்டர் சாகுபடி ஜம்மு காஷ்மீரில் உள்ள விவசாயிகளின் வாழ்க்கையையே மாற்றியுள்ளது.
- இந்த ஒன்றியப் பிரதேசத்தின் விவசாயிகள் சமூகத்தின் வாழ்க்கையை மாற்றும் நோக்கில் இது மத்திய அரசினால் தொடங்கப்பட்ட முன்னெடுப்பாகும்.

## நெச்சிபு சுரங்கப்பாதை

- எல்லைச் சாலைகள் அமைப்பானது, அருணாச்சலப் பிரதேசத்தில் அமைக்கப்பட உள்ள நெச்சிபு சுரங்கப் பாதையினைத் தோண்டும் பணியை 2022 ஆம் ஆண்டு மே 20 ஆம் தேதியன்று நிறைவு செய்துள்ளது.
- இந்தச் சுரங்கப்பாதையானது வர்தாக் என்ற திட்டத்தின் கீழ் எல்லைச் சாலைகள்

அமைப்பினால் கட்டமைக்கப்படுகிறது.

- ❖ இந்தச் சுரங்கப்பாதை கட்டமைப்புப் பணிக்கான அடிக்கல்லானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதியன்று ராஜ்நாத் சிங் அவர்களால் நடப் பட்டது.
- ❖ நெச்சிபு சுரங்கப் பாதை 5,700 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- ❖ எல்லைச் சாலைகள் அமைப்பானது இந்தச் சுரங்கப்பாதை கட்டமைப்புப் பணிகளை வேகமாக நிறைவு செய்வதற்கு புதிய ஆஸ்திரிய சுரங்கப் பாதை முறையை (NATM) பயன்படுத்தியது.





## வட இந்தியாவின் முதல் தொழில்துறை உயிரித் தொழில்நுட்பப் பூங்கா

- ❖ வட இந்தியாவின் முதல் தொழில்துறை உயிரித் தொழில்நுட்பப் பூங்காவானது, ஜம்மு காஷ்மீரின் கதுவா அருகே உள்ள காட்டி எனுமிடத்தில் திறக்கப்பட்டது.
- ❖ கதுவாவில் அமைக்கப்பட்டுள்ள இந்தத் தொழில்துறை உயிரித் தொழில்நுட்பப் பூங்கா பொருளாதாரத்தை மாற்றியமைத்து, பருவநிலை மாற்றத்தின் சவால்களைச் சமாளிப்பதில் அறிவியலாளர்களுக்கு உதவும்.
- ❖ இந்தச் செயல்திறன் மிக்க உள்கட்டமைப்பானது, புதுமையின் புதிய பிரவேசத்திற்குத் தூண்டுதலாக இருப்பதோடு, சுகாதாரம் & விவசாயம் முதல் அழகு சாதனப் பொருட்கள் மற்றும் இதரப் பொருட்கள் வரையிலான பல்வேறு துறைகளில் மிகுந்தத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## இந்தியாவில் சாலை விபத்துக்கள் - 2020

- ❖ 2019 ஆம் ஆண்டை விட 2020 ஆம் ஆண்டில் சாலை விபத்துகள் பெருமளவு குறைந்து உள்ளது குறிப்பிடத்தக்கது.
- ❖ 2020 ஆம் ஆண்டில், சாலை விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கையானது 2019 ஆம் ஆண்டினை விட 12.6 சதவிகிதம் குறைந்துள்ளது என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- ❖ சாலை விபத்துக்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 12.84 சதவீதமும், காயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 22.84 சதவீதமும் குறைந்துள்ளது.

- 2020 ஆம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் நிகழ்ந்த அதிக எண்ணிக்கையிலான சாலை விபத்துகள் தமிழ்நாட்டில் தான் நிகழ்ந்துள்ளன.
- அதிகச் சாலை விபத்துகள் பதிவான முதல் 3 மாநிலங்கள்: தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், கர்நாடகா ஆகியனவாகும்.




## ஐஎன்எஸ் கோமதி கப்பல் கடற்படையிலிருந்து ஓய்வு

- இந்தியக் கடற்படையானது, 34 ஆண்டுகாலச் சேவைக்குப் பிறகு ஐஎன்எஸ் கோமதி கப்பலை கடற்படையிலிருந்து ஓய்வு பெறச் செய்துள்ளது.
- இந்தப் போர்க்கப்பல் ஆனது 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் தேதியன்று படையில் இணைக்கப்பட்டது.
- இந்தக் கப்பல் கோதாவரி ரக வழிகாட்டு ஏவுகணை எதிர்ப்புக் கப்பல்களின் வரிசையில் உருவாக்கப்பட்ட மூன்றாவது கப்பலும், மேற்கத்தியக் கடற்படையின் ஒரு பழமையான போர்க் கப்பலும் ஆகும்.
- ஐஎன்எஸ் கோமதி கப்பலுக்கு கோமதி நதியின் நினைவாக இப்பெயரிடப்பட்டது.
- இது கேக்டஸ் நடவடிக்கை, பராக்ரம் நடவடிக்கை மற்றும் இந்திரதனுஷ் உட்பட பல நடவடிக்கைகளிலும், மேலும் பல இருதரப்பு மற்றும் பன்னாட்டுக் கடற்படைப் பயிற்சிகளிலும் பங்கேற்றுள்ளது.
- ஐஎன்எஸ் கோமதி கப்பலுக்கு 2007-08 ஆம் ஆண்டில் ஒரு முறையும், 2019-20 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு முறையும் என இரண்டு முறை மதிப்புமிக்க யூனிட் சிட்டேஷன் என்ற விருதானது வழங்கப்பட்டது.
- ஐஎன்எஸ் கோமதி கப்பலானது, லக்னோவில் உள்ள கோமதி ஆற்றின் அழகிய நதிக் கரையில் உள்ள திறந்தவெளி அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்படும்.




## குழந்தைகளுக்கான PM CARES திட்டம்

- கோவிட்-19 தொற்றுநோயால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்குப் பலனளிக்கும் வகையில் குழந்தைகளுக்கான PM CARES திட்டத்தினைப் பிரதமர் அறிவித்தார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், அடிப்படைத் தேவைகளுக்கு மாதம் 4,000 ரூபாய் உதவித் தொகை, பள்ளிப் படிப்புக்கான நிதியுதவி, உயர்கல்விக்கான உதவித்தொகை மற்றும் ரூ. 5 லட்சம் வரையிலான இலவசச் சிகிச்சை போன்றவை அளிக்கப்படும்.
- கோவிட்-19 தொற்றுநோயால் பெற்றோரை இழந்த 18 முதல் 23 வயதுடைய இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படும்.
- அதோடு அவர்கள் 23 வயதினை எட்டும் போது அவர்களுக்கு ரூ.10 லட்சம் ரூபாய் உதவித் தொகையும் வழங்கப்படும்.
- 5 லட்சம் ரூபாய் வரையிலான சிகிச்சைக்கான இலவசச் சிகிச்சை வசதியைப் பெற, குழந்தைகளுக்கு 'குழந்தைகளுக்கான PM CARES திட்டத்தின்' மூலம் ஆயுஷ்மான் சுகாதார அட்டை வழங்கப்படும்.

## லோக்பால் தலைவர் பொறுப்பு

- குடியரசுத் தலைவர் அவர்கள் லோக்பால் தலைவர் பதவிக்கான கூடுதல் பொறுப்பினை நீதிபதி பிரதீப் குமார் மொகந்தியிடம் அளித்துள்ளார்.
- லோக்பால் தலைவராக இருந்த நீதிபதி பினாகி சந்திர கோசின் பதவிக் காலம் நிறைவடைந்ததையடுத்து இவர் இந்தப் பதவியை வகிக்க உள்ளார்.
- லோக்பால் ஒரு தலைவரையும் எட்டு உறுப்பினர்களையும் கொண்டதாகும்.
- தற்போது, லோக்பாலில் ஆறு உறுப்பினர்கள் உள்ளனர்.
- நீதித்துறை உறுப்பினர்களின் இரண்டு பதவிகள் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக காலியாக உள்ளன.
- லோக்பால் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகள் அல்லது 70 வயதை அடையும் வரை பதவி வகிப்பர்.

## ஜெனரல் நெக்ஸ்ட் மக்களாட்சிக் கட்டமைப்பு

- இந்தியக் கலாச்சார உறவுகளுக்கான சபையின் பத்து நாட்கள் அளவிலான ஒரு நிகழ்ச்சியான ஜெனரல் நெக்ஸ்ட் மக்களாட்சிக் கட்டமைப்பு நிகழ்ச்சி முடிவடைந்தது.
- பல்வேறு ஜனநாயக நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் ஜென் நெக்ஸ்ட் டெமாக்ரசி நெட்வொர்க் திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு வருகிறார்கள்.
- இதன் நிறைவு விழாவில், கானா, வங்காள தேசம், பெரு, நேபாளம், புரூனே மற்றும் நார்வே ஆகிய ஆறு நாடுகளைச் சேர்ந்த 27 பிரதிநிதிகள் இந்தியாவுக்கு வருகை தந்த அனுபவங்களைப் பற்றிப் பகிர்ந்து கொண்டனர்.
- சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரான மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களால் 1950 ஆம் ஆண்டில் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கீழ் இந்தியக் கலாச்சார உறவுகளுக்கான சபை நிறுவப் பட்டது.
- இது மற்ற நாடுகள் மற்றும் அவற்றின் மக்களுடனான கலாச்சாரப் பரிமாற்றம் மூலம் இந்தியாவின் உலகளாவியக் கலாச்சார உறவுகளில் இது செயலாற்றி வருகிறது.

## பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டம் நீட்டிப்பு

- பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டமானது (PMEGP) மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு 2026 ஆம் நிதி ஆண்டு வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.
- இரண்டு திட்டங்களை ஒன்றிணைத்து பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டம் எனப்படும் ஒரு புதிய கடன் வழங்கீட்டு மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்த இந்திய அரசு ஒப்புதல் அளித்தது.
- ஒன்றிணைக்கப்பட்ட அந்த இரண்டு திட்டங்கள் பிரதம மந்திரி ரோஜ்கர் யோஜனா (PMRY) மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டம் (REGP) ஆகியனவாகும்.

## சர்க்கரை உற்பத்தியில் முன்னணியிலுள்ள மாநிலங்கள்

- ஐந்தாண்டு கால இடைவெளிக்குப் பிறகு, உத்தரப் பிரதேச மாநிலத்தினைப் பின்னுக்குத் தள்ளி மகாராஷ்டிரா மாநிலம் இந்தியாவின் முன்னணிச் சர்க்கரை உற்பத்தியாளராக மீண்டும் தனது இடத்தை எட்டியுள்ளது.

- 2021-22 ஆம் ஆண்டிற்கான (அக்டோபர்-செப்டம்பர்) இந்த மாநிலத்தின் உற்பத்தி அளவு 138 லட்சம் டன்களாகும்.
- இது 2018-19 ஆம் ஆண்டில் பதிவான 107.21 லட்சம் டன்கள் என்ற உற்பத்தி அளவை விஞ்சி, இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமான உற்பத்தியை எட்டியுள்ளது.

**TOP SUGAR PRODUCING STATES**
(IN LAKH TONNES)

| YEAR (OCT-SEP) | MAHARASHTRA | UTTAR PRADESH | KARNATAKA | GUJARAT | ALL-INDIA |
|---|---|---|---|---|---|
| 2013-14 | 76.85 | 64.87 | 41.77 | 11.77 | 243.60 |
| 2014-15 | 105.07 | 71.01 | 49.35 | 11.54 | 283.13 |
| 2015-16 | 84.24 | 68.55 | 40.49 | 11.68 | 251.25 |
| 2016-17 | 42.38 | 87.73 | 21.44 | 8.85 | 202.62 |
| 2017-18 | 107.05 | 120.50 | 36.58 | 10.67 | 323.28 |
| 2018-19 | 107.21 | 118.22 | 44.29 | 11.23 | 331.62 |
| 2019-20 | 61.70 | 126.37 | 35.00 | 9.30 | 273.85 |
| 2020-21 | 106.30 | 110.59 | 44.65 | 10.50 | 311.20 |
| 2021-22* | 138.00 | 104.00 | 60.00 | 12.00 | 355.50 |

*Projected

## ஜல் ஜீவன் திட்டத்தின் பரவல்

- ஜல் ஜீவன் திட்டமானது, 50 சதவீத கிராமப்புறக் குடும்பங்கள் குழாய் நீர் இணைப்பு வசதிகளைப் பெற்றதன் மூலம் புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.
- 'ஹர் கர் ஜல்' திட்டமானது, ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழான ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டது.
- கோவா, தெலுங்கானா, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், தாத்ரா & நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ, புதுச்சேரி மற்றும் ஹரியானா ஆகியவை ஏற்கனவே 100 சதவீத அளவிலான குடிநீர் குழாய் இணைப்பு வசதிகளைப் பெற்றுள்ளன.
- பஞ்சாப், குஜராத், இமாச்சலப் பிரதேசம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமான வீடுகள் குடிநீர் குழாய் இணைப்பு வசதிகளைக் கொண்டு உள்ளன.




## தேசியக் கல்வி அமைச்சர்கள் மாநாடு

- குஜராத் மாநில அரசானது இரண்டு நாட்கள் அளவிலான தேசிய கல்வி அமைச்சர்கள் மாநாட்டினை நடத்தியது.
- இந்தக் கூட்டத்தில் மத்தியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மற்றும் மத்திய அமைச்சர்கள் மற்றும் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் கல்வி அமைச்சர்கள் பங்கேற்றனர்.
- இந்த மாநாட்டின் போது நாட்டின் கல்விச் சூழலை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த ஆலோசனைகள் நடைபெற்றன.

## காப்பீட்டுத் திட்டங்களின் தவணைத் தொகையில் திருத்தம்

- பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY) மற்றும் பிரதான் மந்திரி சுரக்சா பீமா யோஜனா (PMSBY) ஆகிய இரண்டு முக்கியச் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் தவணைக் கட்டணங்களை அரசாங்கம் திருத்தியுள்ளது.
- PMJJBY திட்டத்தின் தவணை விகிதங்கள் முந்தைய ஆண்டுக்கான 330 ரூபாயில் இருந்து 436 ரூபாயாக மாற்றப்பட்டுள்ளன.
- PMSBY திட்டத்தின் திருத்தப்பட்ட தவணைக் கட்டணமானது, ஆண்டுக்கு தற்போதுள்ள 12 ரூபாய்க்கு பதிலாக 20 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் இந்த இரண்டு திட்டங்களும் தொடங்கப்பட்டதிலிருந்து தவணைக் கட்டணங்களில் மேற்கொள்ளப்படும் முதல் திருத்தம் இதுவாகும்.




## ஹர் கர் தஸ்தக் 2.0 பிரச்சாரம்

- இந்தப் பிரச்சாரமானது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் முழுவதும் கோவிட் 19 தடுப்பூசி வழங்கீட்டின் வேகம் மற்றும் அதன் பரவலை விரைவு படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 'திட்டம் சார் செயல்முறையில்' செயல்படுத்தப்படும்.
- தகுதியுள்ள அனைத்துப் பயனாளிகளுக்கும் தடுப்பூசி வழங்குவதன் மூலம் முழு அளவிலான கோவிட் 19 தடுப்பூசிப் பரவல் என்ற இலக்கை நோக்கி நகர்வதற்கான ஒரு தீவிரமான உந்துதலை அளிக்குமாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசம் ஆகியவற்றிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வீரதீர விருதுகள் பட்டியல் 2022

- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், புது தில்லியில் 2022 ஆம் ஆண்டு பாதுகாப்புத் துறையின் உள்நுழைவு விழாவின் போது, வீரதீர விருதுகள் மற்றும் சிறப்புமிக்கச் சேவை விருதுகள் ஆகியவற்றை வழங்கினார்.
- இந்த வீரதீர விருதுகள் பரம் வீர் சக்ரா, அசோக சக்ரா, மகாவீர் சக்ரா, கீர்த்தி சக்ரா, வீர் சக்ரா மற்றும் சௌரியச் சக்ரா என்ற ஐந்து விருதுகளை உள்ளடக்கியது.
- மறைவிற்குப் பின் ஒரு கீர்த்தி சக்ரா மற்றும் மறைவிற்குப் பின்னான எட்டு விருதுகள் உள்ளிட்ட 14 சௌர்ய சக்ரா விருதுகள் ஆயுதப் படை வீரர்களுக்கு வழங்கப்பட்டது.
- 14 பரம் விசிஷ்ட் சேவா பதக்கங்கள் மற்றும் 29 அதி விஷிஷ்ட் சேவா பதக்கங்களும் வழங்கப் பட்டுள்ளன.
- இவை வீரர்களால் அளிக்கப் படும் அமைதிக் காலத்திற்கான மிகவும் ஒரு மகத்தானச் சேவையை அங்கீகரிப்பதற்காக வேண்டி அவர்களுக்கு வழங்கப்படும் ஒரு இராணுவ விருதுகள் ஆகும்.




## மிதாலி இரயில் சேவை

- இந்தியா மற்றும் வங்காளதேசத்தை இணைக்கும் ஒரு இரயில் பாதையான, புதிய ஜல்பைகுரி-டாக்கா இராணுவக் குடியிருப்புப் பகுதியில் இயங்க உள்ள 'மிதாலி இரயில் சேவை' துவக்கி வைக்கப்பட்டது.
- மேற்கு வங்கத்தில் உள்ள புதிய ஜல்பைகுரி மற்றும் வங்காளதேசத்தின் டாக்கா இராணுவக் குடியிருப்புப் பகுதி ஆகியவை இடையே சுமார் 513 கிமீ தூரத்திற்கு இந்த இரயில் இயக்கப்படும்.
- கொல்கத்தா நகரினை டாக்கா மற்றும் குல்னா ஆகியவற்றுடன் இணைக்கும் மற்ற இரயில்கள் மைத்ரீ மற்றும் பந்தன் விரைவு இரயில் ஆகியவை ஆகும்.

## புதிய விண்கலத் தயாரிப்புப் பிரிவு

- இஸ்ரோவின் தலைவர் சோமநாத், கர்நாடகாவில் அமைக்கப்பட்டுள்ள அனந்த் டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் விண்கலத் தயாரிப்புப் பிரிவைத் திறந்து வைத்தார்.

- இந்தப் புதிய அதிநவீன விண்கலத் தயாரிப்புப் பிரிவானது, ஒரே நேரத்தில் நான்கு பெரிய விண்கலங்களை ஒருங்கிணைத்து, அவற்றைச் சோதனை செய்யும் அளவிற்கு வசதி உடையதாகும்.
- இது 1992 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதிலிருந்து, இந்தியாவில் இது போன்ற பிரிவு தொடங்கப் படுவது இது முதல் முறையாகும்.

## இந்தியாவின் முதல் சுயச் சார்பு திருமணம்

- வடோதராவைச் சேர்ந்த க்ஷமா பிந்து என்ற 24 வயது இளம்பெண் தன்னைத் தானே திருமணம் செய்து கொண்டுள்ளார்.
- இது நாட்டின் முதல் 'சுயச் சார்பு திருமணம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சோலோகாமி அல்லது தன்னைத் தானே திருமணம் செய்து கொள்வது என்பது சுயச் சார்பு திருமணத்திற்கான ஒரு மாற்றுச் சொல் ஆகும்.

## மகிளா சுரக்சா நடவடிக்கை

- பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக "மகிளா சுரக்சா நடவடிக்கை" என்ற ஒரு அகில இந்திய நடவடிக்கையானது தொடங்கப்பட்டது.
- பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட பெட்டிகளில் பயணித்த 7000க்கும் மேற்பட்ட அனுமதி பெறாத பயணிகளை இரயில்வே பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.
- இந்த ஒரு மாத கால அளவிலான நடவடிக்கையின் போது 150 சிறுமிகள்/பெண்கள் ஆள் கடத்தலுக்கு ஆளாகாமல் காப்பாற்றப்பட்டனர்.




## இரண்டுக் கப்பல்களுக்குப் பிரியாவிடை

- இந்தியக் கடற்படையானது, அதன் இரண்டுக் கப்பல்களான ஐஎன்எஸ் நிஷாங்க் மற்றும் ஐஎன்எஸ் அக்சய் ஆகியவற்றிற்குப் பிரியாவிடை அளித்தது.
- இரண்டுக் கப்பல்களும் 32 ஆண்டுகாலச் சேவைக்குப் பிறகு, கடற்படை கப்பல் கட்டும் தளத்தில் படையிலிருந்து விலக்கப்படும்.
- அனைத்துக் கடற்படையினரும் தங்கள் கப்பல்களின் பெயர்களைத் தங்கள் சொந்த அடையாளமாக கொண்டுள்ளனர்.
- ஐஎன்எஸ் நிஷாங்க் என்பது வீர் ரக ஏவுகணைப் பாதுகாப்பு கப்பல் வரிசையில் உருவாக்கப் பட்ட நான்காவது கப்பல் ஆகும்.
- மேலும், 1971 ஆம் ஆண்டு போரில் வீரதீரச் செயலிற்குப் பெயர் பெற்ற கில்லர் படைப் பிரிவின் ஒருங்கிணைந்தப் பகுதியாக இது விளங்கியது.
- ஐஎன்எஸ் அக்சய் என்பது 23வது ரோந்துக் கப்பல் படையின் ஒரு பகுதியாகும்.
- இதன் முதன்மைப் பணி நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு மற்றும் கடலோர ரோந்து ஆகும்.

## முதல் திரவ கண்ணாடி தொலைநோக்கி

- நாட்டின் முதல் மற்றும் ஆசியாவிலேயே மிகப்பெரிய திரவக் கண்ணாடி தொலை நோக்கி உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள தேவஸ்தல் என்ற மலையில் அமைக்கப் பட்டுள்ளது.
- மீயொளிர் விண் முகில்கள், ஈர்ப்புக் குவியங்கள், விண்வெளிக் குப்பைகள் மற்றும் குறுங்கோள்கள் போன்ற நிலையற்ற அல்லது மாறக் கூடியப் பொருள்களை அடையாளம் காண்பதற்காக இது வானில் தற்போது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
- இந்தியத் திரவக் கண்ணாடி தொலைநோக்கி (ILMT) வானத்தை ஆய்வு செய்ய உதவும்.
- இது அண்டங்கள் மற்றும் பிற வானியல் வளங்களைக் கண்காணிப்பதைச் சாத்தியம் ஆக்குகிறது.



## அகமதாபாத் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் வேளாண் நில விலைக் குறியீடு

- ❖ அகமதாபாத்தின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனமானது வேளாண் நிலங்களின் விலைக் குறியீட்டை உருவாக்குவதற்காக வேளாண் நிலங்களுக்கான மின்-சந்தையான SfarmsIndia என்ற நிறுவனத்துடன் கை கோர்த்துள்ளது.
- ❖ இது இந்தத் தளத்தில் மேற்கொள்ளப்படும் கொள்முதல் மற்றும் விற்பனையை அடிப்படையாகக் கொண்டது.
- ❖ இந்தியாவில் வேளாண் நிலங்களின் விலை மீதான தரக் கட்டுப்பாடு சார்ந்த தரவைப் பதிவு செய்து வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இந்தக் குறியீடானது வடிவமைக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தக் குறியீடு, சந்தையில் (SfarmsIndia) விலை மாற்றங்களைக் கண்காணிப்பதோடு, மாதாந்திர அடிப்படையிலான ஒரு கலப்பு விலை நிர்ணய வழிமுறையையும் உருவாக்கும்.
- ❖ இது ஆண்டிற்கு இருமுறை புதுப்பிக்கப்படும்.
- ❖ இதற்கு அகமதாபாத்தின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் மற்றும் SFarmsIndia நில விலைக் குறியீடு (ISALPI) என்று பெயரிடப்படும்.
- ❖ கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் இது சோதனை அடிப்படையில் தொடங்கப் பட்டு உள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டத்துடன் இ-சஞ்சீவனி திட்டம் ஒருங்கிணைப்பு

- ❖ தேசிய சுகாதார ஆணையமானது, மத்திய அரசின் ‘இ-சஞ்சீவனி’ தொலைதூர மருந்து வழங்கீட்டுச் சேவையானது ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டம் என்ற திட்டத்துடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதாக அறிவித்தது.
- ❖ இந்த ஒருங்கிணைப்பானது இ-சஞ்சீவனி பயனாளிகள் தமது ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்குகளை எளிதாக உருவாக்க உதவும்.
- ❖ பயனாளிகள் தங்களின் தற்போதையச் சுகாதாரப் பதிவுகளை ஒன்றோடொன்று இணைக்கவும் அவற்றை முறையாக நிர்வகிக்கவும் இதைப் பயன்படுத்த முடியும்.
- ❖ பயனாளிகள் தங்கள் உடல்நலப் பதிவுகளை இ-சஞ்சீவனி என்ற சேவை மூலம் மருத்துவர்களுடன் பகிர்ந்து கொள்ள இது வழி வகுக்கும்.
- ❖ இது மருத்துவம் சார்ந்த சிறப்பான முடிவினை மேற்கொள்ளவும், மருத்துவச் சிகிச்சை வழங்கீட்டின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கும் உதவும்.
- ❖ ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டமானது, இந்தியாவில் தற்போதுள்ள டிஜிட்டல் சுகாதாரத் தீர்வுகள் மற்றும் பங்குதார நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள இடைவெளிகளைக் குறைக்கும் முயற்சியில் டிஜிட்டல் கட்டமைப்புகளை உருவாக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்திய விமானப்படைப் பாரம்பரிய மையம்

❖ பல்வேறு போர்களில் இந்திய விமானப் படையின் பங்கு மற்றும் அதன் ஒட்டுமொத்தச் செயல்பாட்டை வெளிப்படுத்தும் பாரம்பரிய மையம் சண்டிகரில் நிறுவப்பட உள்ளது.

❖ இந்திய விமானப் படை மற்றும் சண்டிகர் அரசு நிர்வாகம் ஆகியவற்றினால் இணைந்து 'இந்திய விமானப்படைப் பாரம்பரிய மையமானது' நிறுவப்படும்.

❖ இந்தப் பாரம்பரிய மையத்தில் இந்திய விமானப் படையின் பல்வேறு அம்சங்களை முன்னிலைப் படுத்தும் கலைப்பொருட்கள், மாதிரிகள் மற்றும் ஊடாடும் அமைப்புகள் இடம் பெறும்.


## புனீத் சாகர் அபியான்

❖ தேசிய மாணவர் படையானது 'புனீத் சாகர் அபியான்' என்ற நாடு தழுவிய முதன்மைப் பிரச்சாரத்தின் சமீபத்தியக் கட்டத்தினைத் தொடங்கியுள்ளது.

❖ இது கடற்கரைகள், ஆறுகள் மற்றும் ஏரிகள் உள்ளிட்ட பிற நீர்நிலைகளிலிருந்து நெகிழிப் பொருட்கள் மற்றும் பிற கழிவுகளைச் சுத்தம் செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ மேலும், கடற்கரைகள் மற்றும் ஆற்றின் முகப்புகளைச் சுத்தமாக வைத்திருப்பதன் முக்கியத்துவம் குறித்து உள்ளூர் மக்களிடையே ஒரு விழிப்புணர்வை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும்.

## சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்கள் குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு



- நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி, தேசியப் பூங்கா மற்றும் வனவிலங்குச் சரணாலயம் ஆகியவை அவற்றின் வரையறுக்கப்பட்ட எல்லையில் இருந்து தொடங்கி குறைந்தபட்சம் ஒரு கிலோ மீட்டர் வரையில் சுற்றுச் சூழல் தாங்கு மண்டலங்களைக் கட்டாயமாக கொண்டிருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- இது பாதுகாக்கப்பட்டப் பகுதிகளுக்கு ஒருவித "தாங்கு மண்டலத்தினை" உருவாக்கச் செய்வதற்கானதாகும்.
- இந்த மண்டலங்கள் உயர் பாதுகாப்பு உடைய பகுதிகளிலிருந்து குறைந்தப் பாதுகாப்பு உள்ள பகுதிகள் வரையிலான பகுதிகளுக்கு மாற்று நிலை மண்டலமாக செயல்படும்.
- மத்திய அரசானது 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்கள் குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டது.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் ஏற்புத் தன்மையின் அடிப்படையில் இதற்காக 10 கிலோமீட்டர் எல்லையை அது பரிந்துரைத்தது.
- 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தில், "சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்கள்" என்ற வார்த்தை குறிப்பிடப் படவில்லை.
- 2002 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்பு உத்தியில் வழங்கப்பட்டுள்ளபடி ஒரு சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்கள் என்பவை ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியைச் சுற்றி 10 கிலோமீட்டர்கள் வரையிலான வரம்பினைக் கொண்டிருக்கும்.

## ஜன் சமர்த் தளம்

- பிரதமர் கடன் வழங்கீட்டு அரசுத் திட்டங்களுக்கான தேசியத் தளம் ஒன்றைத் துவக்கி வைத்தார்.
- இது புது தில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நிதி அமைச்சகம் மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் 'நினைவு வாரக் கொண்டாட்டங்களின்' போது தொடங்கப் பட்டது.
- ஜூன் 6 முதல் ஜூன் 11 வரையிலான இந்த நிகழ்வானது, 'சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின்' ஒரு பகுதியாக கொண்டாடப்படுகிறது.
- ஜன் சமர்த் தளம் என்பது அரசாங்கக் கடன் திட்டங்களை ஒருங்கிணைக்கும் ஒற்றைச் சாளர டிஜிட்டல் தளம் ஆகும்.
- பயனாளிகளை நேரடியாக கடன் வழங்கும் நிறுவனங்களுடன் இணைக்கும் வகையில் இது முதல் தளமாகும்.

## புதிய நாணயங்கள்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சிறப்பு நாணயத் தொடரான ரூ.1, ரூ.2, ரூ.5, ரூ.10 மற்றும் ரூ.20 மதிப்புடைய நாணயங்களை வெளியிட்டார்.
- இந்தச் சிறப்பு நாணயங்கள் சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா குறித்தச் சின்னங்களைக் கொண்டுள்ளன.
- இந்த நாணயங்களைப் பார்வையற்றவர்களாலும் எளிதில் அடையாளம் காண முடியும்.



### mRube

- ❖ இது இரப்பர் வாரியத்தால் ஊக்குவிக்கப்படும் ஒரு மின்னணு வர்த்தகத் தளமாகும்.
- ❖ இரப்பர் வாரியமானது, 1947 ஆம் ஆண்டு இரப்பர் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப் பூர்வ அமைப்பாகும்.
- ❖ இது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- ❖ இதன் தலைமை அலுவலகம் கேரளாவின் கோட்டயத்தில் உள்ளது.

### தேசிய உணவு ஆய்வகம்

- ❖ பீகாரில் உள்ள ரக்செளல் என்ற இடத்தில், மத்தியச் சுகாதாரம் & குடும்ப நலம் மற்றும் இரசாயனங்கள் & உரங்கள் ஆகிய துறைகளுக்கான அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, FSSAI அமைப்பின் தேசிய உணவு ஆய்வகத்தைத் திறந்து வைத்தார்.
- ❖ இந்தியா-நேபாளம் இடையேயான இருதரப்பு ஒப்பந்தத்தின் கீழ், நேபாளத்தில் இருந்து ரக்செளலுக்கு இறக்குமதி செய்யப்படும் உணவு மாதிரிகளின் சோதனை நேரத்தைக் குறைக்க இந்த ஆய்வகம் நிறுவப்பட்டது.
- ❖ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) என்பது இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப் பூர்வ அமைப்பாகும்.
- ❖ FSSAI ஆனது உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம், 2006 என்பதின் கீழ் நிறுவப் பட்டது.

### சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை (LiFE) இயக்கம்

- ❖ இந்த உலகளாவிய முயற்சியைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- ❖ நமது கோளுக்கு தீங்கு விளைவிக்காது அதனுடன் ஒத்துப் போகும் ஒரு வாழ்க்கை முறையை வாழ்வதே இதன் நோக்கமாகும்.

### ஹார்பிங்கர் 2021

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது தனது முதல் உலகளாவிய "ஹார்பிங்கர் 2021 - மாற்றத்திற்கான கண்டுபிடிப்பு" எனும் ஹேக்கத்தானை அறிமுகப்படுத்தியது.

- இதன் கருத்துரு 'Smarter Digital Payments' என்பதாகும்.
- பின்தங்கியப் பிரிவினருக்கு டிஜிட்டல் முறையில் பணவழங்கீடுகளை அணுகக் கூடிய வகையில் தீர்வுகள் மற்றும்/அல்லது வணிக மாதிரிகளைக் கண்டறிந்து அவற்றைச் செயல்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சம்ப்ரிதி-எக்ஸ் போர்ப் பயிற்சி

- இது இந்தியா-வங்காளதேச இருதரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான ஒரு கூட்டு ராணுவப் பயிற்சியாகும்.
- இது வங்கதேசத்தில் உள்ள ஜஷோர் ராணுவ நிலையத்தில் நடத்தப்பட்டு வருகிறது.
- ஐ.நா ஆணையத்தின் கீழ் பயங்கரவாத எதிர்ப்பு, மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் மற்றும் ஐ.நா அமைதிப் படை போன்ற பல உருவகப் படுத்தப் பட்ட காட்சிகளில் இரு நாடுகளும் தமது நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளும்.

## My Pad My Right திட்டம்

- வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி (நபார்டு வங்கி) லடாக்கின் லே என்ற பகுதியில் " My Pad My Right எனும் திட்டத்தை" தொடங்கியுள்ளது.
- ஏழரை லட்சம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் மற்றும் பொருட்களுடன் நபார்டின் நாப் பவுண்டேஷன் மூலம் இது தொடங்கப்பட்டது.
- இந்தத் தனித்துவமான திட்டத்தின் கீழ், விருது பெற்ற துப்புரவு துணிகள் தயாரிக்கும் இயந்திரங்கள் சுய உதவிக் குழுக்களின் அமைப்பு மூலம் நிறுவப்படும்.
- மாதவிடாய்ச் சுகாதாரம் மூலம் கிராமப்புறப் பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக இந்த முயற்சிகள் நடந்து வருகின்றன.

## 4வது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீடு 2021-2022

- ❖ சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) மேற்கொள்ளும் ஒரு குறியீட்டை வெளியிட்டது.
- ❖ 2018-19 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இது, இந்தியாவின் உணவுப் பாதுகாப்புச் சுற்றுச்சூழல் அமைப்பில் ஒரு போட்டி மற்றும் நேர்மறையான மாற்றத்தை உருவாக்கும் முயற்சியில் உள்ளது.
- ❖ மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீடு, மனித வளங்கள் மற்றும் நிறுவனத் தரவுகள், இணக்கம், உணவுப் பரிசோதனை உள்கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் ஆகிய ஐந்து அளவுருக்களில் மாநிலங்களின் செயல்திறனை அளவிடுகிறது.
- ❖ நாடு முழுவதும் மொத்தம் 150 மாவட்டங்கள் இந்தச் சவாலில் பங்கேற்றன.
- ❖ மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீடு 2021-2022 ஆம் ஆண்டில் பெரிய மாநிலங்களின் பிரிவில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- ❖ சிறிய மாநிலங்கள் பிரிவில், கோவா முதல் இடத்தைப் பிடித்துள்ள நிலையில், அதைத் தொடர்ந்து மணிப்பூர் மற்றும் சிக்கிம் ஆகியவையும் உள்ளன.
- ❖ ஒன்றியப் பிரதேசங்களில், ஜம்மு & காஷ்மீர் முதலிடத்திலும், டெல்லி மற்றும் சண்டிகர் அடுத்தடுத்த இடத்திலும் உள்ளன.
- ❖ திருவள்ளூர், காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், சென்னை, திருநெல்வேலி, ஈரோடு, மதுரை, தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்கள், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் நடத்திய 'ஈட் ரைட் சேலஞ்ச்' என்ற நிகழ்ச்சியில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக விருது பெற்றன.




## புகையிலைக் கட்டுப்பாட்டுக்கான ஆதார மையம்

- ❖ சண்டிகரில் உள்ள முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (PGIMER) உள்ள சமூக மருத்துவம் மற்றும் பொது சுகாதாரப் பள்ளியின் புகையிலை கட்டுப்பாட்டுக்கான ஆதார மையத்தை உலக சுகாதார அமைப்பு வழங்கியுள்ளது.

- இது இந்தியாவில் புகையிலைக் கட்டுப்பாடு தொடர்பான சுற்றறிக்கைகள் மற்றும் உத்தரவுகள், கொள்கைகள் மற்றும் சட்டங்கள், பல்துறை வெளியீடுகள் அடங்கிய தகவல்களை வழங்குகிறது.

## ஆயுர்வேத ஆஹார்

- 'ஆயுர்வேத ஆஹார்' சின்னத்தை மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்.
- இது ஆங்கிலத்திலும் தேவநாகரியிலும் ஆயுர்வேதம் மற்றும் ஆஹார் என்ற வார்த்தைகளின் முதல் எழுத்துக்களைக் கொண்டுள்ளது.
- இந்தச் சின்னத்தில், இந்தி எழுத்து Aa மற்றும் ஆங்கில எழுத்து 'A' ஆகியவை இணைக்கப் பட்டுள்ளன.
- இது வானம், நீர், காற்று, நெருப்பு மற்றும் பூமி ஆகிய ஐந்து கூறுகளைக் குறிக்கும் 5 குறியீட்டு இலைகளைக் கொண்டுள்ளது.
- பச்சை நிறம் என்பது இயற்கை, உயிரியல், ஆரோக்கியமானது, முழுமையானது கரிமம் மற்றும் மூலிகையைக் குறிக்கிறது.
- இந்த சின்னம் ஆயுர்வேதப் பொருட்களின் தரத்தையும் வலுப்படுத்தும்.

## காரீஃப் பயிர்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை

- 2022-23 ஆம் ஆண்டிற்கான அனைத்து 14 காரீஃப் (கோடைக்கால) பயிர்களுக்கும் குறைந்த பட்ச ஆதரவு விலையை அதிகரிக்க மத்திய அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.
- பொது ரக நெல்லுக்கு முந்தைய ஆண்டு 1,940 ஆக இருந்த விலை ஒரு குவிண்டாலுக்கு 2,040 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டிற்கான அனைத்து 14 பயிர்களின் விலையானது 2014-15 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 46-131% அதிகமாக உள்ளது.

**HIKE FOR ALL CROPS**

New MSP of kharif crops in 2022-23

| Crop | New MSP* | | % hike over 2021-22 |
|---|---|---|---|
| Soybean | 4,300 | ₹350 (Absolute*) | 8.8 |
| Jowar | 2,970 | ₹232 | 8.4 |
| Sesamum | 7,830 | ₹523 | 7.1 |
| Moong | 7,755 | ₹480 | 6.5 |
| Sunflower Seed | 6,400 | ₹385 | 6.4 |
| Cotton | 6,080 | ₹354 | 6.1 |
| Ragi | 3,578 | ₹201 | 5.9 |
| Groundnut | 5,850 | ₹300 | 5.4 |
| Niger Seed | 7,287 | ₹357 | 5.1 |
| Paddy | 2,040 | ₹100 | 5.1 |
| Maize | 1,962 | ₹92 | 4.9 |
| Tur | 6,600 | ₹300 | 4.7 |
| Urad | 6,600 | ₹300 | 4.7 |
| Bajra | 2,350 | ₹100 | 4.4 |

*Rs per quintal; Paddy (Common); Jowar (Hybrid); Cotton (Medium Staple)

## தேசியப் பழங்குடி ஆராய்ச்சி நிறுவனம்

- புது தில்லியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள தேசியப் பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனத்தை மத்திய உள்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.
- இது ஒரு முதன்மையான தேசிய அளவிலான கல்வி நிறுவனமாக இருக்கும்.
- பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனம் (TRI) என்பது மாநில அளவில் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தின் ஒரு ஆராய்ச்சி அமைப்பாகும்.

## அக்னி-4 ஏவுகணை

- இரண்டு நிலைகள் கொண்ட அக்னி-4 ஏவுகணை, ஒடிசா கடற்கரையில் உள்ள டாக்டர் APJ அப்துல் கலாம் தீவில் இருந்து சோதனை செய்யப் பட்டது.
- இது உத்திசார் படைப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.
- இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் உருவாக்கப்பட்டுள்ளது.
- இது 4,000 கி.மீ. தொலைவு வரை சென்று தாக்கக் கூடியது.
- இது முன்னதாக அக்னி II பிரைம் என்று அழைக்கப்பட்டது.
- அக்னி-4 மற்றும் அக்னி-5 ஆகியவை முதன்மையாக சீனாவுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக உருவாக்கப் பட்டவை ஆகும்.
- இந்தியாவில் உள்ள குறுகிய தூர வரம்புடைய ஏவுகணைகள் பாகிஸ்தானுக்காக வடிவமைக்கப் பட்டுள்ளன.




## 16வது குடியரசுத் தலைவர் தேர்தல்

- குடியரசுத் தலைவர் தேர்தல் ஆனது, ஜூலை 18 ஆம் தேதி நடைபெறும் என்று இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் அறிவித்தார்.
- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பதவிக் காலம் ஜூலை 24 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

- ஜம்மு மற்றும் காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமாக மாறிய பிறகு நடக்கும் முதல் தேர்தல் இதுவாகும்.
- இருப்பினும், ஜம்மு மற்றும் காஷ்மீரின் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தத் தேர்தல் குழுவின் ஒரு பகுதியாக பங்கேற்க இயலாது.
- 2022 ஆம் ஆண்டு தேர்தலுக்கான தேர்தல் குழுவில் 4,809 உறுப்பினர்கள் அடங்குவர் - இதில் 233 மாநிலங்களவை உறுப்பினர்கள், 543 மக்களவை உறுப்பினர்கள் (776 நாடாளுமன்ற உறுப்பினர்கள்) மற்றும் 4,033 மாநிலச் சட்டசபைகளின் உறுப்பினர்கள் மற்றும் டெல்லி மற்றும் புதுச்சேரி ஒன்றியப் பிரதேசங்களின் சட்டசபைகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்குவர்.
- 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த வாக்குகளின் மதிப்பு 10,86,431 ஆக இருக்கும் (1971 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 5,43,200 அல்லது தலா 700 வாக்குகள் மற்றும் சட்டசபை உறுப்பினர்களுக்கு 5,43,231 வாக்குகள் ஆகும்).
- 2017 ஆம் ஆண்டில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையானது 4,896 ஆக இருந்தது.
- 2017 ஆம் ஆண்டில், 1971 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் 709 வாக்குகளையும், சட்டசபை உறுப்பினர்கள் மொத்தம் 5,49,495 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.
- இந்தத் தேர்தலுக்கான தேர்தல் அதிகாரியாக மாநிலங்களவைப் பொதுச்செயலாளர் அறிவிக்கப் பட்டுள்ளார்.
- வழக்கமாக தேர்தல் ஆணையம் வழங்கிய பேனாவைப் பயன்படுத்தி வாக்காளர்கள் வாக்களிப்பது ஒரு வழக்கமாகும்.

**Schedule for Election**

Under sub-section (1) of Section (4) of the Presidential and Vice-Presidential Elections Act 1952, the schedule for the election of the President of India is given below

| | |
|---|---|
| Issue of Election Commission's notification calling the election | 15.06.2022 (Wednesday) |
| Last date for making nominations | 29.06.2022 (Wednesday) |
| Date for the scrutiny of nominations | 30.06.2022 (Thursday) |
| Last date for the withdrawal of candidatures | 02.07.2022 (Saturday) |
| Date on which a poll shall, if necessary, be taken | 18.07.2022 (Monday) |
| Date on which counting, if required, shall be taken | 21.07.2022 (Thursday) |

## தேசிய வான்வழி விளையாட்டுத் துறைக் கொள்கை 2022

- 2023 ஆம் ஆண்டிற்குள் இந்திய நாட்டினைச் சிறந்த விளையாட்டு நாடுகளில் ஒன்றாக மாற்றுவதற்கான 2022 ஆம் ஆண்டின் தேசிய வான்வழி விளையாட்டுத் துறைக் கொள்கையானது வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் பாதுகாப்பான, மலிவான, அணுகக்கூடிய, மகிழ்ச்சிகரமான மற்றும் நிலையான வான்வழி விளையாட்டுகளை வழங்குவதை இந்தக் கொள்கை உறுதி செய்கிறது.

- வான்வழி விளையாட்டுகள் என்பது காற்று ஊடகத்தில் நடைபெறுகின்ற பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளை உள்ளடக்கியது ஆகும்.




## பாலிவர்சிட்டி

- இன்பர்மேஷன் டேட்டா சிஸ்டம்ஸ் நிறுவனமானது பாரத் தொடர்சங்கிலி கட்டமைப்பு (அகாடமிக் பிளாக்செயின் கன்சோர்டியம்) & பாலிவர்சிட்டி (கல்வி சார் முப்பரிமாணக் கட்டமைப்பு) ஆகியவற்றை வெளியிட்டது.
- பாலிவர்சிட்டி என்பது இந்தியாவின் மிகப்பெரிய ஒரு கல்வி சார் முப்பரிமாணக் கட்டமைப்பாகும்.
- 100க்கும் மேற்பட்டக் கல்வி நிறுவனங்கள் கல்வியை அணுகக் கூடியதாகவும், அதி வேகமாகவும், அர்த்தமுள்ளதாகவும் மாற்றுவதற்காக மெய்நிகர் வளாகங்களை நிறுவுகின்றன.

## ரக்த் சந்திரன் நடவடிக்கை

- வருவாய்ப் புலனாய்வு இயக்குனரகமானது, ரக்த் சந்திரன் நடவடிக்கையின் கீழ் 840 சிவப்பு சந்தனம் அல்லது செம்மரக் கட்டைகளைப் பறிமுதல் செய்தது.
- இது 1962 ஆம் ஆண்டு சுங்கச் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.
- நாட்டின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின்படி இந்த மரக்கட்டைகளின் ஏற்றுமதி தடை செய்யப் பட்டுள்ளது.

## முதலாவது மையப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட இரயில்வே முனையம்

- நாட்டின் முதலாவது மையப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட முனையமானது, கர்நாடகாவின் பெங்களூரு நகரில் சமீபத்தில் திறக்கப்பட்டது.
- இந்த இரயில் நிலையத்திற்குப் பாரத ரத்னா விருது பெற்ற இந்தியக் கட்டிடப் பொறியாளர் சர் M. விஸ்வேஸ்வரய்யா அவர்களின் பெயர் சூட்டப் பட்டுள்ளது.

## சுற்றுலா இரயில் மூலம் நாடுகளை இணைத்தல்

- இந்திய இரயில்வே நிர்வாகத்தின் பாரத் கௌரவ் திட்டத்தின் கீழ் சுற்றுலா இரயில் மூலம் இரு நாடுகளை இணைக்கும் இந்தியாவின் முதல் நிறுவனமாக இந்திய இரயில்வே சமையல் சேவை மற்றும் சுற்றுலாக் கழகமானது விளங்கும்.
- புது டெல்லியிலிருந்து ஸ்ரீ ராமாயண யாத்திரைச் சுற்றில் இந்த இரயில் இயக்கப்படும்.
- சப்தர்ஜங் இரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் இரயில் இந்தியா மற்றும் நேபாளம் இடையே சுமார் 8,000 கி.மீ. தொலைவு பயணிக்கும்.
- ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட ராமாயண யாத்திரை சுற்றுப் பாதையில் இந்த ரயில் இயக்கப்படும்.

## ஊடுருவலைக் கண்டறிவதற்கான அமைப்பு

- இந்தியாவில் உள்ள அதிகளவுத் தாக்குதல்களுக்கு உள்ளாகும் நிலையில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலும் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் சுற்றுப்புற ஊடுருவல் கண்டறிதல் அமைப்பை நிறுவப்படும்.
- இந்த அமைப்பானது, விமான நிலையத்தின் எல்லைச் சுவர்கள் வழியாக எந்த வகையிலும் நிகழும் ஊடுருவல் குறித்துப் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு எச்சரிக்கை செய்ய உதவும் ஒரு உணர்வி ஆகும்.
- பிணைய அமைப்பில் நிகழும் சந்தேகத்திற்கிடமானச் செயல்பாடுகளை இந்தக் அமைப்பு கண்காணிக்கிறது மற்றும் அத்தகையச் செயல்பாடுகள் கண்டறியப்படும் போது எச்சரிக்கவும் செய்கிறது.

## சாகர்மாலா இளம் நிபுணத்துவத் திட்டம்

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சகமானது, “சாகர்மாலா இளம் நிபுணத்துவத் திட்டம்” என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- அமைச்சகத்தின் பல்வேறு பிரிவுகளில் திறமையான, திறன்மிக்க மற்றும் ஒரு முற்போக்குச் சிந்தனையுள்ள இளம் தொழில் வல்லுநர்களை ஈடுபடுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பொதுவானப் பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும், நீண்ட காலத் தீர்வுகளைக் கண்டறிவதற்கான கூட்டுத் தீர்மானத்தை மேம்படுத்தவும் உதவும்.



## புவியிடச் சுய-சான்றளிப்புத் தளம்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது, "புவியிடச் சுய-சான்றளிப்புத் தளத்தினை" தொடங்கியது.
- தனிநபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆகியவை புவியிட வழிகாட்டுதல்களின் விதிமுறைகளைக் கடைபிடிக்கச் செய்வதை இது கண்காணிக்கும்.
- இந்தியாவில் புவிசார் தொழில்துறையைத் தாராளமயமாக்குவதற்கு இது ஒரு குறிப்பிடத் தக்க நடவடிக்கையாகும்.




## இராஷ்ட்ரிய புருஸ்கார் தளம்

- இந்திய அரசின் பல அமைச்சகங்கள் ஆனது, தங்கள் துறைகளில் சிறப்பானப் பங்களிப்பினை ஆற்றிய மற்றும் சிறந்து விளங்கும் நபர்களை அங்கீகரிப்பதற்காக, பல்வேறு குடிமை விருதுகளை நிறுவியுள்ளன.
- பல்வேறு விருதுகளுக்கான பரிந்துரைகளை பெறுவதற்காக, ஒரு பொதுவான 'ராஷ்ட்ரிய புரஸ்கார் தளத்தினை' அரசு உருவாக்கியுள்ளது.
- இது பல்வேறு அமைச்சகங்கள் அல்லது துறைகள் அல்லது முகமைகளின் விருதுகளுக்கான அனைத்துப் பரிந்துரைகளையும் ஒரே எண்ணிமத் தளத்தின் கீழ் கொண்டு வரும்.
- இந்தத் தளமானது வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுக் கூட்டாண்மையை உறுதி செய்ய உதவும் (ஜன் பகிதாரி).



## எல்லைகளுக்கிடையேயானப் பேருந்து சேவை

- வங்காளதேசம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையேயான எல்லைகளுக்கு இடைப்பட்ட ஒரு பேருந்து சேவையானது இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தொடங்கியது.
- கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக இந்தச் சேவையானது இடைநிறுத்தம் செய்யப் பட்டது.
- இந்தப் பேருந்து சேவைகள் பின்வரும் நகரங்களுக்கு இடையே இயக்கப் படுகிறது.
    - அகர்தலா-அகௌரா & ICP ஹரிதாஸ்பூர்- பெனாபோல்.
    - அகர்தலா-டாக்கா-கொல்கத்தா-அகர்தலா

## தேசிய சுங்க வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி அருங்காட்சியகம்

- மத்திய நிதியமைச்சர் கோவாவில் நிறுவப்பட்டுள்ள "தரோஹர்" எனப்படும் தேசிய சுங்க வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்தார்.
- தரோஹர் இந்தியாவில் உள்ள இம்மாதிரியிலான அருங்காட்சியகங்களில் ஒன்றாகும்.
- இது இந்திய சுங்கத் துறையினரால் கைப்பற்றப்பட்ட தொல்பொருட்களைக் காட்சிப் படுத்தச் செய்வதோடு மட்டுமல்லாமல், சுங்கத் துறையின் பல்வேறு பணிகளையும் சித்தரிக்கிறது.

## இந்திய மக்களின் ஆயுட்காலம்

- 2015-2019 ஆம் ஆண்டில் இந்திய மக்களின் பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட் காலம் 69.7 ஆக உயர்ந்துள்ளது.
- இந்தியாவில் 1970-75 ஆம் ஆண்டில் 49.7 ஆக இருந்த பிறப்பு ஆயுட்காலம் ஆனது 20 ஆண்டுகள் கழித்து, 2015-2019 ஆம் ஆண்டில் 69.7 ஆக உள்ளது.
- இருப்பினும், இது இன்னும் 72.6 என்ற உலக சராசரி மதிப்பிற்குக் கீழே தான் உள்ளது.
- மாதிரிப் பதிவு அமைப்பு மூலம் இந்தத் தரவானது வெளியிடப்பட்டது.
- இது உள்துறை அமைச்சகத்தின் பொதுப் பதிவாளர் மற்றும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆணையர் மூலம் வெளியிடப் பட்டது.
- பிறப்பின் போதான ஆயுட்காலம் மற்றும் ஒரு வருடம் அல்லது ஐந்து வருடங்களின் போதான ஆயுட்காலம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைவெளி மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் அதிகமாக உள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் குழந்தை இறப்பு விகிதம் அதிக அளவாக 43 உள்ளது.
- உத்தரப் பிரதேசமானது 38 என்ற குழந்தை இறப்பு விகிதத்துடன் இதில் இரண்டாவது இடத்தில் உள்ளது
- ஒடிசாவில் 45.7 ஆக இருந்த பிறப்பு ஆயுட்காலம் ஆனது 69.8 ஆக உயர்ந்துள்ளது.
- ஒடிசாவைத் தொடர்ந்து தமிழகத்தில் 49.6 ஆக இருந்த பிறப்பு ஆயுட்காலம் ஆனது 72.6 ஆக அதிகரித்துள்ளது.

- உத்தரப் பிரதேசம், 65.6 ஆண்டுகள் என்ற பிறப்பு ஆயுட்காலத்துடன் 2வது மிகக் குறைந்த ஆயுட்காலத்தினைக் கொண்டுள்ளது.
- சத்தீஸ்கர் மாநிலத்தில் பிறப்பின் போதான ஆயுட்காலம் ஆனது 65.3 ஆக உள்ளது.
- பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இருபாலர் பிரிவிலும் நகர்ப்புறத்தை விட கிராமப் புறத்தில் பிறப்பின் போதான ஆயுட்காலமானது அதிகமாக உள்ள ஒரே மாநிலம் கேரளாவாகும்.
- நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் பெண்களை விட ஆண்களின் ஆயுட்காலம் அதிகமாக இருக்கும் மாநிலங்கள் பீகார் மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவை மட்டுமே ஆகும்.

**C'GARH HAS LOWEST LIFE EXPECTANCY**

| | Male | Female | Total (in %) |
|---|---|---|---|
| Delhi | 74.3 | 77.5 | 75.9 |
| Kerala | 72.3 | 78 | 75.2 |
| J&K | 72.6 | 76.1 | 74.2 |
| Himachal Pradesh | 69.9 | 77.1 | 73.1 |
| Punjab | 71.1 | 74.7 | 72.8 |
| Maharashtra | 71.6 | 74 | 72.7 |
| Tamil Nadu | 70.6 | 74.9 | 72.6 |
| West Bengal | 71 | 73.2 | 72.1 |
| Uttarakhand | 67.6 | 73.9 | 70.6 |
| Andhra Pradesh | 68.9 | 71.8 | 70.3 |
| Gujarat | 67.9 | 72.8 | 70.2 |
| Haryana | 67.7 | 72.6 | 69.9 |
| Odisha | 68.5 | 71.1 | 69.8 |
| Karnataka | 67.9 | 71.3 | 69.5 |
| Jharkhand | 70.2 | 68.8 | 69.4 |
| Bihar | 69.6 | 68.8 | 69.2 |
| Rajasthan | 66.8 | 71.3 | 69 |
| Assam | 66.8 | 68.3 | 67.5 |
| Madhya Pradesh | 65.2 | 69.1 | 67 |
| Uttar Pradesh | 65 | 66.2 | 65.6 |
| Chhattisgarh | 63.7 | 66.9 | 65.3 |
| **India** | **68.4** | **71.1** | **69.7** |

Source: SRS abridged life tables 2015-19

## திரைக் கட்டுருவாக்க அலகு

- இந்தியாவின் முதல் திரைக் கட்டுருவாக்க அலகானது ஹைதராபாத் நகரில் நிறுவப் பட உள்ளது.
- இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் இந்திய குறைக் கடத்திகள் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட உள்ளது.
- வரைபட்டிகை கணினிகள், திறன்பேசிகள் மற்றும் மடிக்கணினிகளுக்கான அடுத்தத் தலைமுறை சார்ந்தத் தொழில்நுட்பத்தினைக் கொண்ட திரைகளைத் தயாரிக்கச் செய்வதற்காக 6வது தலைமுறைத் தொழில்நுட்ப AMOLED என்ற திரைத் தயாரிப்பு அலகானது ஹைதராபாத் நகரில் அமைக்கப்பட உள்ளது.

## அக்னிபாத் திட்டம்

- அக்னிபாத் என்பது இந்திய ஆயுதப் படைகளுக்கான புதிய ஆட்சேர்ப்புத் திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ், இளைஞர்கள் ஆயுதப்படைகளில் "அக்னிவீரர்கள்" என்ற பிரிவில் பணியாற்ற வாய்ப்பு வழங்கப்படும்.
- 17.5 வயது முதல் 21 வயது வரை உள்ளவர்கள் 4 ஆண்டுகளுக்கு அக்னிவீரர்கள் என்ற பிரிவில் ஆயுதப் படையில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.
- நான்கு ஆண்டுப் பதவிக் காலத்தினை நிறைவு செய்த பிறகு, சுமார் 25 சதவீத அக்னி வீரர்கள் குறைந்தபட்சம் 15 ஆண்டுகளுக்கு வழக்கமானப் பணியாளர்களாக ஆயுதப் படைகளில் பதிவு செய்யப் படுவார்கள்.
- அக்னிவீரர்கள் படைப் பிரிவிலிருந்து வெளியேறும் போது ₹ 11.71 லட்சம் சேவா நிதி தொகுப்பாக வழங்கப்படும்.
- இதற்கு வருமான வரியில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.
- எனினும், இதில் ஓய்வூதியப் பலன்கள் கிடைக்கப் பெறாது.




## கிராந்தி கதா

- 'கிராந்தி கதா' என்பது மும்பை நகரில் நிலத்தடியில் அமைந்துள்ள, பிரிட்டிஷ் காலத்தியப் பதுங்கு குழிக்குள் புதிதாக உருவாக்கப்பட்ட இந்தியப் புரட்சியாளர்கள் குறித்த ஒரு கலைக் காட்சிக் கூட்டமாகும்.
- 2016 ஆம் ஆண்டில் ராஜ்பவனுக்கு கீழே கண்டுபிடிக்கப்பட்ட பதுங்கு குழியில் இந்தியப் புரட்சியாளர்கள் குறித்த கலைக் காட்சிக் கூட்டமானது உருவாக்கப்பட்டது.
- இது இந்திய விடுதலை இயக்கத்தின் அறியப்பட்ட மற்றும் அறியப்படாதப் புரட்சியாளர்களுக்குக் கௌரமளிக்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளது.

## ஒற்றைச் சாளர அனுமதி வழங்கீட்டு வசதி

- நிலக்கரி அமைச்சகமானது அதன் ஒற்றைச் சாளர அனுமதி வழங்கீட்டு வசதியின் திட்டத் தகவல் மற்றும் மேலாண்மை தொகுதியை அறிமுகப்படுத்தியது.
- இந்திய நாட்டில் நிலக்கரிச் சுரங்கங்களைச் செயல்படுத்துவதற்கான பல்வேறு அனுமதிகளைப் பெறுவதற்கான ஒரு தளத்தை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தொல்லியல் துறைக்கான மத்திய ஆலோசனைக் குழு கூட்டம்

- தொல்லியல் துறைக்கான மத்திய ஆலோசனை வாரியம் ஆனது ஏறக்குறைய எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்க உள்ளதாக இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.
- மத்திய சுற்றுலா & கலாச்சாரத் துறை அமைச்சர் கிசன் ரெட்டி தலைமையில் இந்தச் சந்திப்பானது நடைபெற உள்ளது.
- நியமனம் செய்யப்பட்ட அரசு சாரா நிபுணர்கள் மற்றும் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்த்து மூன்று வருடக் காலத்திற்கு செயல்படும் வகையில் இது மறுசீரமைக்கப்பட்டது.
- அகழ்வாராய்ச்சிகளுக்கான முன்மொழிவுகள் குறித்து இந்தியத் தொல்லியல் துறைக்குப் பரிந்துரைகளை வழங்க தொல்லியல் துறைக்கான மத்திய ஆலோசனைக் குழுவின் நிலைக்குழுச் சந்திப்பானது ஆண்டுக்கு ஒருமுறை நடைபெற்று வந்தது.
- இந்தியத் தொல்லியல் துறையானது 1861 ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் கன்னிங்ஹாம் என்பவரால் நிறுவப்பட்டது.
- இவர் அதன் முதல் தலைமை இயக்குநராகவும் பொறுப்பேற்றார்.

## நிர்வாக எல்லைகள் முடக்கம்

- மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியானது, 2023-24 ஆம் ஆண்டிற்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.
- இது முதலில் 2022 ஆம் ஆண்டில் நடைபெறத் திட்டமிடப்பட்டது.
- இந்தியத் தலைமை பதிவு அலுவலகம் ஆனது நிர்வாக எல்லைகளை முடக்குவதற்கான காலக் கெடுவை 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று வரை நீட்டித்துள்ளது.

## தேசிய மின் ஆளுமை சேவை வழங்கல் மதிப்பீடு 2021

- 2021 ஆம் ஆண்டின் தேசிய மின் ஆளுமை சேவை வழங்கல் மதிப்பீடு (NeSDA) என்ற அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையில், ஜம்மு காஷ்மீர் முதல் முறையாக மதிப்பிடப்பட்டது.
- மேலும் ஒன்றியப் பிரதேசங்களில் இது முதலாவது இடத்தில் உள்ளது.
- இது தேசிய மின்-ஆளுமை சேவை வழங்கல் மதிப்பீட்டில் ஒட்டு மொத்தமாக 90 சதவிகித இணக்கத்தைக் கொண்டுள்ளது.

- ஒட்டு மொத்தமாக, அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் மத்தியில் கேரளா அதிக அளவிலான இணக்கத்தைக் கொண்டுள்ளது.
- மேகாலயா மற்றும் நாகாலாந்து ஆகியவை ஒட்டு மொத்தமாக இணக்கத்துடன் 90 சதவீதத்திற்கும் மேலான மதிப்புடன் சேவை தளத்தில் முதலிடத்தில் உள்ளன.
- வடகிழக்கு மற்றும் மலைப்பாங்கான மாநிலங்களுக்கான சேவைகள் இணைய தளங்களில், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகியவை முதல் இடங்களைப் பெற்றுள்ளன.
- சேவைகள் இணைய தளங்களுக்கான அளவுருக்களில் 75 சதவீதத்திற்கும் அதிகமான இணக்கத்துடன் பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகியவை முன்னணி மாநிலங்களாக உள்ளன.

Ranking of State / UT Portals is as follows:

| Rank | North-East and Hill States | Remaining States – Group A | Remaining States Group B | Union Territories |
|---|---|---|---|---|
| 1 | Nagaland | Kerala | Odisha | Jammu & Kashmir |
| 2 | Meghalaya | Tamil Nadu | Uttar Pradesh | Andaman & Nicobar Islands |
| 3 | Assam | Punjab | Bihar | Puducherry |
| 4 | Sikkim | Karnataka | Jharkhand | Delhi |
| 5 | Tripura | Telangana | West Bengal | Chandigarh |
| 6 | Himachal Pradesh | Goa | Madhya Pradesh | Ladakh |
| 7 | Uttarakhand | Haryana | Chhattisgarh | |
| 8 | Mizoram | Andhra Pradesh | Rajasthan | |
| 9 | Arunachal Pradesh | Maharashtra | | |
| 10 | Manipur | Gujarat | | |

## உலகின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் சூழலமைவு


- அதானி குழுமம் மற்றும் டோட்டல்எனர்ஜிஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து உலகின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் சூழலமைவினை உருவாக்க உள்ளன.
- இந்தியா, உலகிலேயே அதிகளவில் கரியமில வாயுவை வெளியேற்றும் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.
- 2070 ஆம் ஆண்டிற்குள் சுழிய உமிழ்வு நாடாக மாறுவதற்கு உதவும் வகையில், 2030 ஆம் ஆண்டிற்குள் 5 மில்லியன் டன் அளவு பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்யத் திட்டம் இட்டுள்ளது.
- டோட்டல்எனர்ஜிஸ் என்ற நிறுவனமானது, உலகின் மிகப்பெரிய எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றாகும்.

## முதல் பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் நிலையம்

- அமர ராஜா பவர் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனமானது தேசிய அனல் மின் கழகத்திற்காக நாட்டின் முதல் பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் நிலையத்தை அமைக்க உள்ளது.
- இது லடாக்கில் உள்ள லே நகரில் கட்டப்படும்.

## இந்தியப் புலம்பெயர்வு அறிக்கை 2020-21

- 2020-21 ஆம் ஆண்டின் இந்தியப் புலம்பெயர்வு அறிக்கையானது சமீபத்தில் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டது.
- பெருந்தொற்றானது நகர்ப்புற இந்தியாவில் இருந்து 51.6 சதவீத ஆண்களைக் கிராமப் புறத்தில் உள்ள தங்களது வீடுகளுக்கு இடம்பெயர கட்டாயப்படுத்தியுள்ளன.
- கிராமத்திலிருந்துக் கிராமத்திற்குப் புலம்பெயரும் ஆண்களின் இடம்பெயர்வு அளவு என்பது 44.6 சதவீதமாக உள்ளது.
- திருமணத்திற்குப் பிறகு பெண்கள் தங்கள் கணவர் வீட்டிற்கு இடம் பெயர்வதால் கிராமப் புறங்களில் இருந்து கிராமப்புறங்களுக்கு புலம்பெயரும் பெண்களின் இடம் பெயர்வு அளவானது 88.8 சதவீதமாக உள்ளது.
- மற்ற நாடுகளில் இருந்து கிராமப்புறங்களுக்குப் புலம்பெயரும் ஆண்களின் எண்ணிக்கையானது நகர்ப்புறங்களில் உள்ள 2.3 சதவீதத்திற்கு மாற்றாக 3.9% ஆக இருந்தது.
- கிராமப்புற இடம்பெயர்வு விகிதம் ஆனது 6.5 சதவீதமாகவும், நகர்ப்புற இடம்பெயர்வு விகிதம் ஆனது 34.9 சதவீதமாகவும் உள்ளது.
- மொத்த இடம்பெயர்வு விகிதம் 28.9 சதவீதம் ஆகும்.




## உடான் திட்டத்தின் 5வது ஆண்டுவிழா

- 2022 ஆம் ஆண்டானது உதே தேஷ் கா ஆம் நாக்ரிக் (UDAN) என்ற திட்டத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- உடான் முன்னெடுப்பானது, பிராந்திய இணைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியான பிராந்திய விமான நிலைய மேம்பாட்டுத் திட்டமாகும்.
- 415க்கும் மேற்பட்ட உடான் வழித் தடங்கள், ஹெலிகாப்டர் தளங்கள் மற்றும் நீர்வழி விமான ஏவுதளங்கள் உள்ளிட்ட 66 குறைவான/சேவை செய்யப்படாத விமான நிலையங்களை இணைக்கின்றன.

## தொழில்துறையில் முதல் கடன் வரிச் சேவை

- CASHe என்ற நிறுவனமானது, புலனத்தில் செயற்கை நுண்ணறிவினால் இயங்கும் உரையாடுதல் வசதியைப் பயன்படுத்தித் தொழில்துறையில் முதல் கடன் சேவையை அறிமுகப் படுத்தியுள்ளது.

- வாடிக்கையாளர்கள் தங்களது பெயரைத் தட்டச்சு செய்வதன் மூலம் உடனடிக் கடன் வசதியை அணுகுவதற்கான விரைவான, தடையற்ற மற்றும் ஏதுவான ஒரு வழியை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தொழில்துறை கார்பன் நீக்க உச்சிமாநாடு 2022

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர், "2022 ஆம் ஆண்டு தொழில்துறை கார்பன் நீக்க உச்சி மாநாடு" - கார்பன் நடுநிலைமைக்கான செயற் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இது கார்பன் நீக்கம், கொள்கை சிக்கல்கள், நிலைத்தன்மை, அவற்றின் மேலாண்மை உள்ளிட்ட பருவநிலை மாற்றம் தொடர்பான பல்வேறு ஆராய்ச்சி பிரிவுகளில் கவனம் செலுத்துகிறது.

## மிட்டிகூல் குளிர்சாதனப் பெட்டிக்கான சான்றிதழ்

- "இந்தியத் தரநிலை வாரியமானது" சமீபத்தில் "களிமண்ணால் செய்யப்பட்ட மின்சாரமின்றி இயங்கும் குளிரூட்டும் கலனான அல்லது "மிட்டிகூல் குளிர்சாதனப் பெட்டிக்கான" இந்தியத் தரநிலையை உருவாக்கியது.
- இதற்காக உருவாக்கப்பட்ட தரநிலையானது, "IS 17693: 2022" என்பது ஆகும்.
- குஜராத்தைச் சேர்ந்த மன்சுக் பாய் பிரஜாபதி என்பவரால் மிட்டிகூல் குளிர்சாதனப் பெட்டியானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- மிட்டிகூல் என்பது பழங்கள், காய்கறிகள், பால் மற்றும் குளிர்ச்சியான நீர் ஆகிய பொருட்களைச் சேமிப்பதற்கான களிமண்ணாலான ஒரு இயற்கை குளிர்சாதனப் பெட்டியாகும்.
- இதைப் பயன்படுத்திச் சேமிக்கப்பட்ட உணவுப் பொருட்களை மின்சாரத்தைப் பயன்படுத்தாமல் இயற்கையான முறையில் குளிர்ச்சியாக வைத்திருக்கலாம்.



## அக்னி வீரர்களுக்கு 10% ஒதுக்கீடு

- மத்திய ஆயுதக் காவற்படைகள் மற்றும் அசாம் ரைபிள்ஸ் படைப் பிரிவு ஆகியவற்றிற்கான ஆட்சேர்ப்புகளில் அக்னி வீரர்களுக்கு 10% இடஒதுக்கீடு வழங்கப் படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

- 17.5 முதல் 21 வயதுக்குட்பட்ட மத்திய ஆயுதக் காவற்படைகள் மற்றும் அசாம் ரைபிள்ஸ் படைப் பிரிவுகளில் உள்ள அக்னி வீரர்களுக்கு மூன்று ஆண்டுகள் வரையில் வயது வரம்பில் தளர்வு வழங்கவும் உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- ஆட்சேர்ப்பின் ஆரம்ப வகுப்பினருக்கு விதிக்கப் பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பில் ஐந்து ஆண்டுகள் நீட்டிப்பு அவர்களுக்கு வழங்கப்படும்.
- மத்திய அரசானது, இத்திட்டத்திற்கான அதிகபட்ச வயது வரம்பை ஒருமுறையிலான வாய்ப்பாக 21 என்ற வயதிலிருந்து 23 ஆக உயர்த்தியது.




## தேசிய யோகா போட்டிகள் 2022

- 2022 ஆம் ஆண்டின் தேசிய யோகா போட்டிகளை மத்திய கல்வி & திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சர் தர்மேந்திர பிரதான் தொடங்கி வைத்தார்.
- இதனைக் கல்வித் துறை அமைச்சகம் மற்றும் தேசியக் கல்வி ஆராய்ச்சித் துறை மற்றும் பயிற்சிக் கழகம் ஆகியவை (NCERT) ஏற்பாடு செய்துள்ளது.
- தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகமானது தேசிய யோகா போட்டியினை 2016 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- இந்த ஆண்டிற்கான தேசிய யோகா போட்டிகளுக்கான தினத்தின் கருத்துரு, "மனித குலத்திற்காக யோகா" ஆகும்.

## மன்னர் ஹமத் பின் இசா அல்-கலிஃபா பரிசு

- மத்தியக் கல்வித் துறை அமைச்சகமானது "பிரதம மந்திரி இ-வித்யா திட்டத்தில் தகவல் தொடர்புதொழில் நுட்பத்தின் பயன்பாட்டிற்காக" கிங் ஹமத் பின் இசா அல்-கலிஃபா பரிசு என்று அழைக்கப்படும் யுனெஸ்கோவின் அங்கீகாரத்தை வென்றது.
- இந்தத் திட்டமானது எண்ணிம முறையிலான, வானொலி வாயிலான, இணையவழிக் கல்வி தொடர்பான அனைத்து முயற்சிகளையும் ஒருங்கிணைக்கிறது.
- கற்றல் இழப்புகளைக் குறைப்பதற்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கல்வியை வழங்குவதற்கு என்று பன்முறை அணுகலைச் செயல்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மத்தியக் கல்வித் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (CIET) 2021 ஆம் ஆண்டிற்கான கிங் ஹமத் பின் இசா அல்-கலிஃபா பரிசானது வழங்கப்பட்டுள்ளது.

## சங்கல்ப் நடவடிக்கை

- இந்தியக் கடற்படையானது வளைகுடா பிராந்தியத்தில் சங்கல்ப் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.
- சங்கல்ப் நடவடிக்கையில் INS தல்வார் என்ற கப்பல் ஈடுபடுத்தப்படுகிறது.
- ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியக் கொடியேந்தியக் கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதை உறுதி செய்வதற்காக இது தொடங்கப்பட்டது.





## கடற்கரையைத் தூய்மைப்படுத்துவதற்கான இயக்கம்

- 2022 ஆம் ஆண்டில் 75 கடற்கரைகளைச் சுத்தப்படுத்தும் முன்னெடுப்பினை மத்திய அரசு அறிவித்தது.
- கடற்கரையைத் தூய்மைப்படுத்துவதற்கான இயக்கமானது 2022 ஆம் ஆண்டு ஜூலை 03 ஆம் தேதியன்று தொடங்கி செப்டம்பர் 17 ஆம் தேதியன்று முடிவடையும்.
- இந்த ஆண்டு, செப்டம்பர் 17 ஆம் தேதியானது ‘சர்வதேசக் கடற்கரையைத் தூய்மைப் படுத்தும் தினமாக’ அனுசரிக்கப்பட உள்ளது.

## முக்கியத் தகவல் உள்கட்டமைப்பு

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது, ICICI வங்கி, HDFC வங்கி மற்றும் ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகத்தினை நிர்வகிக்கும் நிறுவனமான NPCI ஆகியவற்றின் தகவல் தொழில்நுட்ப வளங்களை ‘முக்கியத் தகவல் உள்கட்டமைப்பு’ என்று அறிவித்துள்ளது.
- இவற்றிற்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது தேசியப் பாதுகாப்பில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை இது குறிக்கிறது.
- இந்த வளங்களை அங்கீகாரமின்றி அணுகும் எந்தவொரு நபருக்கும் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

- 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ், எந்தவொரு தரவு, தரவுத் தளம், தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு அல்லது தகவல் தொடர்பு உள்கட்டமைப்பு ஆகிய டிஜிட்டல் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக அவற்றினை முக்கியத் தகவல் உள்கட்டமைப்பாக அறிவிக்கும் அதிகாரம் மத்திய அரசிற்கு உள்ளது.




## வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் NIPUN முன்னெடுப்பு

- "நிர்மாண் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்தச் செய்வதற்கான தேசிய முன்னெடுப்பு (NIPUN)" என்ற புதுமையான திட்டத்தினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது தொடங்கியுள்ளது.
- 100,000 கட்டுமானத் தொழிலாளர்களின் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக இந்த முன்னெடுப்பானது தொடங்கப்பட்டது.
- இது "தீனதயாள் அந்த்யோதயா-யோஜனா தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின்" (DAY - NULM) கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், புதிய திறன் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.
- நிபுன் திட்டமானது தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்படும்.

## 111 அரசியல் கட்சிகள் நீக்கம்

- "நடப்பில் செயல்பாட்டில் இல்லாத அரசியல் கட்சிகளை" கண்டறிந்து, அதில் 111 பதிவு செய்யப் பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை நீக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
- "கடுமையான நிதி முறைகேடு" தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக மூன்று கட்சிகள் குறித்த ஒரு அறிக்கையினை வருவாய்த் துறைக்குத் தேர்தல் ஆணையம் அனுப்பி உள்ளது.
- 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமானது, அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கும் அவற்றின் பதிவை நீக்குவதற்குமான ஒரு அதிகாரத்தைத் தேர்தல் ஆணையத்திற்கு வழங்குகிறது.
- பதிவு செய்யப்பட்டக் கட்சிகள், 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதித்துவச் சட்டத்தினை மீறும் ஒரு நடவடிக்கையானது கண்டறியப்பட்டு அவற்றிற்கு எதிராக ஒரு நடவடிக்கை எடுக்கப் படுவது இது இரண்டாவது முறையாகும்.

## ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டை

- ❖ ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டை திட்டத்தை அமல்படுத்திய 36வது மாநிலமாக அசாம் மாறியது.
- ❖ இதன் மூலம், இந்தத் திட்டமானது 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறது.
- ❖ இத்திட்டமானது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் செயல்படுத்தப் படுகிறது.
- ❖ இது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.
- ❖ இது ஆதார் தகவல் உள்ளீடு எனப்படும் செயல்முறையின் மூலம் பயனாளியின் குடும்ப அட்டையினைத் தேசியமயமாக்கும் ஒரு திட்டமாகும்.
- ❖ பயனாளிகள் நாட்டின் எந்தவொரு நியாய விலைக் கடையிலிருந்தும் தாங்கள் பெற தகுதியான உணவுத் தானியங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை ஆதார் தகவல் உள்ளீடு உறுதி செய்கிறது.

## பிரதம மந்திரி யோகா விருது

- ❖ சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, 2022 ஆம் ஆண்டிற்கான 'யோகாவின் வளர்ச்சி மற்றும் ஊக்குவிப்புக்கான சிறந்த பங்களிப்பிற்கான பிரதம மந்திரி விருதை' வழங்க உள்ளதாக ஆயுஷ் அமைச்சகம் அறிவித்துள்ளது.
- ❖ லடாக்கைச் சேர்ந்த பிக்கு சங்கசேனா, பிரேசிலைச் சேர்ந்த மார்கஸ் வினிசியஸ் ரோஜோ ரோட்ரிக்ஸ் ஆகிய இரு தனி நபர்கள் மற்றும் உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த "தி டிவைன் லைஃப் சொசைட்டி" என்ற அமைப்பு மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தினைச் சேர்ந்த பிரிட்டிஷ் வீல் ஆஃப் யோகா ஆகிய இரண்டு நிறுவனங்கள் இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.



## திரௌபதி முர்மு

- இவர் இந்தியாவின் முதல் பழங்குடியின மற்றும் இரண்டாவது பெண் குடியரசுத் தலைவராக மாற உள்ளார்.
- முர்முவின் வேட்பு மனுவைப் பாஜக தலைவர் ஜேபி நட்டா அறிவித்தார்
- இவர் ஒடிசாவைச் சேர்ந்த சந்தால் இனப் பெண் ஆவார்.
- இவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆதரவுப் பெற்ற நபரான பிரதிபா பாட்டீலைத் தொடர்ந்து (2007-12) குடியரசுத் தலைவர் பதவியை வகிக்க உள்ள இரண்டாவது பெண் முர்மு ஆவார்.

## யஷ்வந்த் சின்ஹா

- நடைபெறவுள்ள 2022 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளராக யஷ்வந்த் சின்ஹாவின் பெயர் இறுதி செய்யப்பட்டுள்ளது.
- இவர் 1960 ஆம் ஆண்டில் இந்திய ஆட்சிப் பணியில் இணைந்தார்.
- அரசியலில் சேருவதற்காக 1984 ஆம் ஆண்டு இவர் பணியில் இருந்து விலகினார்.
- சின்ஹா பாரதிய ஜனதா கட்சியின் மூத்தத் தலைவராக இருந்தார்.
- ஆனால் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கட்சியை விட்டு விலகி திரிணாமுல் காங்கிரஸில் சேர்ந்தார்.

## டெல்லி விமான நிலையம்




- முழுக்க முழுக்க நீர்மின் ஆற்றல் மற்றும் சூரிய சக்தியினால் இயங்கும் நாட்டின் முதல் விமான நிலையம் என்ற பெருமையை டெல்லி விமான நிலையம் பெற்றுள்ளது.

- இது 2030 ஆம் ஆண்டிற்குள் நிகர சுழியக் கார்பன் உமிழ்வு நிலையைப் பெற்ற ஒரு விமான நிலையமாக மாறும் உயர் லட்சிய இலக்கை அடைவதற்கான முக்கியப் படி நிலையாகும்.
- டெல்லி விமான நிலையத்திற்கு 2036 ஆம் ஆண்டு வரை நீர்மின் ஆற்றல் மூலம் மின்சாரம் வழங்குவதற்காக இமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த நீர்மின் உற்பத்தி நிறுவனத்துடன் ஒரு நீண்ட கால மின் கொள்முதல் ஒப்பந்தத்தில் டெல்லி விமான நிலையம் கையெழுத்திட்டுள்ளது.
- டெல்லி சர்வதேச விமான நிலைய லிமிடெட் (DIAL) என்பது GMR உள்கட்டமைப்பு நிறுவனத்தின் தலைமையிலான ஒரு கூட்டமைப்பு ஆகும்.

## தேசியப் புலனாய்வு அமைப்பு

- பஞ்சாப்பின் முன்னாள் தலைமை காவல் இயக்குநர் தீன்கர் குப்தா தேசியப் புலனாய்வு அமைப்பின் புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தேசியப் புலனாய்வு அமைப்பு என்பது இந்தியாவின் ஒரு முதன்மையான தீவிரவாத எதிர்ப்புப் பணிக்குழு ஆகும்.
- உள்துறை அமைச்சகத்தின் ஒரு எழுத்துப்பூர்வ அறிவிப்பின் கீழ், மாநிலங்களின் எந்தவொரு சிறப்பு அனுமதியும் பெறாமல், பயங்கரவாதம் தொடர்பான குற்றங்களை இது விசாரிக்கிறது.
- இது 2008 ஆம் ஆண்டு தேசியப் புலனாய்வு முகமைச் சட்டத்தின் மூலம் 2008 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது மும்பையில் நிகழ்ந்த 26/11 தீவிரவாதத் தாக்குதலின் விளைவாக உருவாக்கப் பட்டது.

## பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு 2022

- வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் உத்தரகாண்டில் உள்ள மத்தியப் பல்கலைக் கழகங்களுக்கு 2022 ஆம் ஆண்டு பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு விதி முறைகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.
- இதற்கான முக்கியக் காரணங்கள் புவியியல் அமைப்புகள், மலைப்பாங்கான நிலப் பரப்பு, தொலைதூர இடம், வரையறுக்கப்பட்ட டிஜிட்டல் (எண்ணிம) இணைப்பு, உள்கட்டமைப்பு ஆகியனவாகும்.
- அனைத்து மையப் பல்கலைக்கழகங்களும் 2022-23 ஆம் கல்வியாண்டிற்கான சேர்க்கைக்குப் பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வின் மதிப்பெண்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை அரசாங்கம் கட்டாயமாக்கியுள்ளது.
- இது தனியார் மற்றும் அரசு உதவி பெறும் பல்கலைக்கழகங்கள் என இரண்டிற்கும் பொருந்தும்.




## தேசிய தினைகள் மாநாடு

- மத்திய உணவு பதப்படுத்தல் தொழில்துறை இணை அமைச்சர் பிரஹலாத் சிங் படேல் தேசிய தினைகள் மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.
- புதுதில்லியில் நடைபெற்ற இந்த மாநாட்டின் கருத்துரு, 'இந்தியாவுக்கான சிறந்த எதிர் கால உணவு வகை' என்பதாகும்.
- இது உணவு பதப்படுத்தல் தொழில்துறை அமைச்சகத்தின் ஆதரவுடன் ASSOCHAM என்ற தொழில்துறை அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- உலகளவிலான தினை ஏற்றுமதியில் இந்தியா தற்போது 5வது இடத்தில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டானது சர்வதேச தினை ஆண்டாகும்.

## தேசிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் விருது 2022

- இத்துறையின் சிறந்த மேம்பாட்டிற்கான முதல் பரிசை ஒடிசா வென்றது.
- 2022 ஆம் ஆண்டு தேசிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் விருது விழாவில், காலாஹந்தி மாவட்டத்திற்கு உயர்லட்சிய மாவட்டங்களுக்கான 2022 ஆம் ஆண்டு தேசிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பிரிவில் மூன்றாவது பரிசு வழங்கப் பட்டுள்ளது.

## எல்லைச் சாலை அமைப்பின் சிற்றுண்டியகம்

- எல்லைச் சாலை அமைப்பின் சிற்றுண்டியகம் என்ற பெயரில் 12 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் பல்வேறு வழித்தடப் பிரிவுகளில் 75 விற்பனை நிலையங்களை எல்லைச் சாலைகள் அமைப்பு உருவாக்கவுள்ளது.
- இவை பார்வையாளர்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் வசதிகளை வழங்கவும், எல்லைப் பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிக்கவும், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- எல்லைச் சாலைகள் அமைப்பு பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.

## போதை மருந்துகள் மற்றும் மனநோய் சார்ந்தப் பொருள்கள் சட்டத்திற்கான அதிகார வரம்பு இடமாற்றம்

- 1985 ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மனநோய் சார்ந்தப் பொருள்கள் (NDPS) சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் போதைப் பொருள் மற்றும் மனநோய் சார்ந்தப் பொருள்களை சட்டவிரோதமாக கடத்துதல் தடுப்புச் சட்டம் ஆகியவை தற்போது நிதி அமைச்சகத்தின் வருவாய்த் துறை (DoR) மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.
- போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியமானது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.
- தற்போது மத்திய அரசு, போதைப்பொருள் தொடர்பான அனைத்து விஷயங்களையும் உள்துறை அமைச்சகத்தின் ஒரு துறையின் கீழ் கொண்டு வர திட்டமிட்டுள்ளது.
- இந்தச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ், போதைப்பொருள்க் கட்டுப்பாட்டு வாரியம் என்பது சட்டவிரோதமான போதைப்பொருள்களின் பயன்பாடு மற்றும் கடத்தலைத் தடுக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள ஒரு முக்கியச் சட்ட அமலாக்க மற்றும் உளவுத் துறை அமைப்பாகும்.

## சூர்யா நூதன்

- இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் என்ற நிறுவனமானது அதன் காப்புரிமைப் பெற்ற, உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட சூர்யா நூதன் எனப்படுகின்ற சூரியசக்தியினால் இயங்கும் ஒரு சமையல் அடுப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தின் (IOC) ஃபரிதாபாத் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தினால் சூர்யா நூதன் உருவாக்கப்பட்டது.
- சூரியசக்தியினால் இயங்கும் இந்தச் சமையல் அடுப்பானது இந்தியாவில் கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வை வெகுவாகக் குறைக்க உதவும்.
- இது சர்வதேச அளவில் நிலவும் அதிக புதைபடிவ எரிபொருள் விலையில் இருந்து தனது குடிமக்களைக் காக்கிறது.
- இது ஒரு மறு மின்னேற்றம் செய்யக்கூடிய, நிலையான மற்றும் சமையலறையுடன் இணைக்கப் பட்ட வீட்டிற்குள் பயன்படுத்தக் கூடிய ஒரு சூரிய சமையல் அமைப்பு ஆகும்.
- சூரியசக்தியினால் இயங்கும் சமையல் அடுப்பானது கலப்பு முறையில் இயங்குகிறது.
- எனவே, இது ஒரே நேரத்தில் சூரிய ஆற்றல் மூலமும், பிற துணை ஆற்றல் மூலங்களின் மூலமும் இயங்கச் செய்யும்.

## வணிஜ்யா பவன் மற்றும் நிர்யாட் இணையதளம்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "வணிஜ்ய பவனை" திறந்து வைத்தார்.
- இது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்திற்கான புதிய அலுவலக வளாகம் ஆகும்.
- NIRYAT என்ற இணையத் தளத்தினையும் அவர் தொடங்கி வைத்தார்.
- இது "வர்த்தகத் தளத்தின் வருடாந்திரப் பகுப்பாய்வுக்கான ஒரு தேசிய இறக்குமதி-ஏற்றுமதிப் பதிவு" என்பதைக் குறிக்கிறது.

- இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான சில அவசியமானத் தகவல்களை பங்குதாரர்களுக்கு வழங்குவதற்கான ஒற்றைத் தளமாக இந்த தளம் உருவாக்கப் பட்டு உள்ளது.

## ஒடிசாவின் மோ பேருந்து

- மோ பேருந்து என்பது ஒடிசாவின் தலைநகர் மண்டல நகர்ப்புறப் போக்குவரத்து (CRUT) ஆணையத்தின் பேருந்துச் சேவையாகும்.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரப் பொதுச் சேவை விருதுகளைப் பெற்ற 10 உலக சேவைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- மோ பேருந்துச் சேவையானது நேரடிக் கண்காணிப்பு, பயணத் திட்டமிடல் மற்றும் இணைய வழிப் பயணச் சீட்டு போன்ற பல்வேறு நிகழ்நேரத் தொழில்நுட்பங்களை இதில் இணைத்து உள்ளது.
- மேலும், தொலைதூரப் போக்குவரத்துச் சேவையாக 'மோ இ-ரைடு' என்ற இணையவழி ரிக்சா அமைப்பு இதில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


## நிதி ஆயோக் அமைப்பின் புதிய தலைமை நிர்வாக அதிகாரி

- உத்தரப் பிரதேச மாநிலத்தினைச் சேர்ந்த 1981 ஆம் ஆண்டு பணிப் பிரிவினைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான பரமேஸ்வரன் ஐயர், நிதி ஆயோக் அமைப்பின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஜூன் 30 ஆம் தேதியன்று அமிதாப் காந்த் அவர்களின் பதவிக் காலம் நிறைவு அடைந்ததையடுத்து அவருக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்
- இவர் குறைந்தது இரண்டு ஆண்டுகள் வரை இப்பதவியில் இருப்பார்.
- இவர் ஸ்வச் பாரத் அபியான் திட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- தற்போது, இவர் நீர் வளப் பாதுகாப்புக்காக உலக வங்கியினால் மேற்கொள்ளப்படும் தளமான 2030 ஆம் ஆண்டு நீர்வளக் குழுமத்தின் திட்ட மேலாளராகச் செயல்படுகிறார்.
- செயலாளர் பதவியில் இருக்கும் ஒருவரை இதன் தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) பிரதமர் அவர்கள் நியமிக்கிறார்.
- அமைச்சரவையின் நியமனக் குழு இவரை இப்பதவிக்கு நியமிப்பதற்கு அனுமதி வழங்கியது.

## சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு வீத வரி நீட்டிப்பு

- மத்திய அரசானது சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு வீத வரியினை விதிக்கச் செய்வதற்கான காலக் கெடுவினை 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.
- இந்த வீத வரி விதிப்பு முறையானது 2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதியோடு முடிவடையத் திட்டமிடப் பட்டது.
- இருப்பினும், சரக்கு மற்றும் சேவை வரிச் சபையானது இதனை மேலும் நீட்டிக்க முடிவு செய்தது.

- சரக்கு மற்றும் சேவை வரியானது இந்தியாவில் 2017 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.
- சரக்கு மற்றும் சேவை வரியினை அமல்படுத்திய 5 ஆண்டுகளுக்குப் பிறகு, மாநிலங்களுக்கு ஏதேனும் வருவாய் இழப்பு ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு வழங்கப் படும் என உறுதி அளிக்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டு சரக்கு மற்றும் சேவை வரி (மாநிலங்களுக்கு இழப்பீடு) சட்டத்தின் கீழ் இழப்பீட்டு வீத வரி வழங்கும் விதிமுறை உருவாக்கப்பட்டது.
- ஒவ்வொரு மாநிலத்தின் சரக்கு மற்றும் சேவை வரி வருவாயில், 2015-16 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட தொகையில் இருந்து 14 சதவீதம் உயர்வு ஏற்படும் என்று இந்தச் சட்டம் கருதுகிறது.
- எந்தவொரு ஆண்டிலும் ஒரு மாநிலம் 14 சதவீதத்திற்கும் குறைவாக வரி வசூலித்து இருந்தால், அந்தப் பற்றாக்குறை அளவிற்கு வரியிழப்பு ஈடு செய்யப்படும் என்று இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டது.
- இந்தத் தொகையானது, தற்காலிகக் கணக்குகளின் அடிப்படையில், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை செலுத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.
- இழப்பீட்டு வீத வரி நிதி என்பது மாநிலங்களுக்கு ஏதேனும் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டால் அதைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டது.


NOW TILL 2026

- Cess is levied along with GST on 'sin' items like cars, tobacco. Initially imposed for 5-year period ending this month to ensure states' revenues grew 14% annually
- Several states demanded extension of the cess as pandemic had dented revenues
- Consumers of these items will now have to bear the extra burden till March 2026

## இந்தியப் பொதுத் துறை நிறுவனங்களின் தந்தை

- V. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சமீபத்தில் தனது 97வது வயதில் சென்னையில் காலம் ஆனார்.
- இவர் இந்திய எஃகு ஆணைய நிறுவனம் மற்றும் மாருதி உத்யோக் லிமிடெட் (தற்போது மாருதி சுசுகி) ஆகியவற்றின் முன்னாள் தலைவர் ஆவார்.
- மாருதி 800 வாகனத்தின் உருவாக்கத்தில் இவர் முக்கியப் பங்காற்றினார்.

## ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவின் புதிய தலைவர்

- உளவுத்துறை அமைப்பின் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவின் (RAW) செயலாளராக விளங்கும் சமந்த் குமார் கோயலின் பணி ஒப்பந்தமானது மத்திய அரசினால் மேலும் ஒரு ஆண்டிற்கு நீட்டிக்கப்பட்டது.
- ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு என்பது வெளிநாட்டிலிருந்து வருகின்ற ஆபத்துகளைக் கண்காணிக்கும் ஒரு வெளிப்புற உளவு அமைப்பாகும்.
- அண்டை நாடுகளின் செயல்பாடுகள் பற்றிய இரகசியத் தகவல்களை இந்தப் பிரிவு சேகரிக்கிறது.
- ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவானது நேரடியாக இந்தியப் பிரதமர் அலுவலகத்தின் கீழ் செயல்படுகிறது.

## வரைவுப் பொதுச் சட்ட விதிகள் (GSR) அறிவிப்பு

- பாரத் NCAP என்ற திட்டத்தினை (புதிய மகிழுந்து மதிப்பீட்டுத் திட்டம்) அறிமுகப் படுத்துவதற்கான வரைவுப் பொதுச் சட்ட விதிகளை அறிவிப்பதற்கு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி ஒப்புதல் அளித்துள்ளார்.
- இதன்படி, இந்தியாவில் உள்ள வாகனங்களுக்கு விபத்துச் சோதனைகளில், அவற்றின் செயல்திறன் அடிப்படையில் நட்சத்திர மதிப்பீடுகள் வழங்கப் படும்.
- பாரத்-NCAP என்ற திட்டமானது, வாடிக்கையாளர்கள் மகிழுந்துகளின் நட்சத்திர மதிப்பீடுகளின் அடிப்படையில் பாதுகாப்பான மகிழுந்துகளைத் தேர்வு செய்ய வழி வகை செய்யும் வகையில் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய ஒரு தளமாகச் செயல்படும்.
- இது இந்தியாவில் பாதுகாப்பான வாகனங்களைத் தயாரிப்பதில் நல்ல முறையிலான ஒரு போட்டியை ஊக்குவிக்கும்.

## மின்சார வாகனங்களின் மின்கலன்களுக்கானத் தரநிலைகள்

- இந்தியத் தர நிர்ணய வாரியமானது, மின்சார வாகனத்திற்கான லித்தியம்-அயனி (லி-அயனி) இழுவை மின்கலத் தொகுப்புகள் மற்றும் அமைப்புகளுக்கானச் சோதனை விதிமுறைகளை (செயல்திறன் சோதனை) வெளியிட்டது.
- இந்த மின்கலத் தொகுப்புகள் மற்றும் அமைப்புகளுக்கான தரநிலையான IS 17855:2022 என்பது, ISO 12405-4: 2018 என்ற நிலையுடன் இணக்கமாக உள்ளது.
- இந்தியத் தர நிர்ணய வாரியம் என்பது நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகத்தின் நுகர்வோர் விவகாரங்கள் துறையின் கீழ் செயல்படும் இந்தியாவின் தேசியத் தரநிலை அமைப்பாகும்.
- இது 2016 ஆம் ஆண்டு இந்தியத் தர நிர்ணயச் சட்டத்தினால் நிறுவப்பட்டது
- இது தரப்படுத்துதல், குறியிடுதல் மற்றும் பொருட்களின் தரச் சான்றிதழ் ஆகிய சில செயல்பாடுகளின் இணக்கமான வளர்ச்சிக்காக உருவாக்கப் பட்டு உள்ளது.
- இது சான்றிதழ், தரக்குறியீடு (தங்க நகைகள்), சுற்றுச்சூழல் குறியீடு (சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள்), கட்டாயப் பதிவு (மின்னணு பொருட்களுக்கு) மற்றும் ஆய்வகச் சேவைகளை உள்ளடக்கியது.

# சர்வதேசச் செய்திகள்

## பிரெஞ்சு ரிவியரா திரைப்பட விருது விழா

- பாலிவுட் நடிகர், நவாசுதீன் சித்திக், சினிமாத் துறைக்கு அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக சர்வதேச விருதினைப் பெற்றுள்ளார்.
- மதிப்புமிக்க பிரெஞ்சு ரிவியரா திரைப்பட விருது விழாவில், எம்மி விருது பெற்ற அமெரிக்க நடிகர் வின்செண்ட் டி பால், சித்திக்கிற்கு இந்த விருதினை வழங்கினார்.
- நவாசுதீன் விருதுகளைப் பெறுவது இது முதல் முறை அல்ல.
- முன்னதாக, கேன்ஸ் திரைப்பட விருது விழாவில் இந்தியாவின் சார்பாக விருதுகள் பெறும் நபர்களும் ஒருவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## உலகின் மிகப்பெரிய பெட்ரோலிய ஆராய்ச்சி மையம்


- உலகின் ஒரு மிகப்பெரிய பெட்ரோலிய ஆராய்ச்சி மையத்தினை நிறுவுவதற்கானப் பணிகளைத் தொடங்க குவைத் அரசுத் திட்டமிட்டுள்ளது.
- குவைத் நகரின் தெற்கே உள்ள அல்-அஹ்மதி என்னுமிடத்தில் கட்டப்படும் இந்த மையமானது 28 ஆய்வகங்களைக் கொண்டிருக்கும்.
- கனரக கச்சா எரிபொருள் மற்றும் அதனோடு தொடர்புடைய பிற வாயுக்களைப் பிரித்தெடுப்பது உட்பட பல்வேறு பயன்பாடுகளுக்கு தொழில்துறையால் பயன்படுத்தக் கூடிய மேம்படுத்தப் பட்ட உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு நுட்பங்களை உருவாக்க இது முயல்கிறது.

## முதலாவது அரேபிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

- ஐக்கிய அரபு அமீரகம் போன்ற அரபு நாட்டுடனான தனது முதல் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இஸ்ரேல் கையெழுத்திட்டுள்ளது.
- இது இரு நாடுகளுக்கு இடையில் நடைபெறும் 96% வர்த்தகத்தில் உணவு, விவசாயம், அழகுசாதனப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் மற்றும் பல பொருட்கள் மீதான சுங்க வரிக்கு விலக்கு அளிக்கிறது.

## அதிக நபர்களுக்கு கோவிட் தடுப்பூசிகளை வழங்கிய நாடு

- 11.7 கோடிக்கும் அதிகமான தனிநபர்கள் அல்லது வங்காளதேசத்தின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 69 சதவீதம் பேர் இரண்டு தவணை தடுப்பூசியைப் பெற்று உள்ளனர்.
- வங்காளதேசத்தில் வழங்கப்படும் தவணைகளில் 62 சதவீதத்திற்கும் அதிகமானவை கோவாக்ஸ் மூலம் வழங்கப்படுகிறது.
- கோவாக்ஸ் வசதியானது, தொற்றுநோய்க்கான தயார்நிலை கண்டுபிடிப்புக்கான கூட்டணி, கவி என்ற அமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப் பட்ட ஒரு உலகளாவிய முயற்சியாகும்.




## பிட்காயினை அதிகாரப்பூர்வ நாணயமாக ஏற்றுக் கொண்ட நாடு

- பிட்காயினை அதிகாரப்பூர்வ நாணயமாக ஏற்றுக் கொண்ட உலகின் இரண்டாவது நாடு மத்திய ஆப்பிரிக்கக் குடியரசாகும்.
- பிட்காயினை அதிகாரப்பூர்வ நாணயமாக ஏற்றுக் கொண்ட முதல் ஆப்பிரிக்க நாடும் இதுவாகும்.
- மத்திய ஆப்பிரிக்கப் பிராங்க் என்பது மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு உள்ளிட்ட 6 நாடுகளின் அதிகாரப்பூர்வ நாணயம் ஆகும்.
- எல் சால்வடார் பிட்காயினை அதிகாரப்பூர்வ நாணயமாக ஏற்றுக் கொண்ட முதல் நாடாகும்.

## இந்திய துரம் ரக கோதுமை நிராகரிப்பு

- துருக்கிய வேளாண் மற்றும் வனத்துறை அமைச்சகமானது, இந்தியக் கோதுமைச் சரக்குப் பெட்டகத்தினை நிராகரித்தது.
- அந்தச் சரக்குகளில் இந்திய ரூபெல்லா என்ற நோய் கண்டறியப்பட்டது
- ரூபெல்லா என்பது வைரஸால் ஏற்படும் ஒரு விதத் தொற்று நோயாகும்.
- தொற்று உள்ள ஒரு நபர் இருமினாலோ அல்லது தும்மினாலோ, கிருமிகள் நிறைந்த சிறு துளிகள் காற்றிலும் பிற பரப்புகளிலும் பரவுகிறது.
- 1960 ஆண்டு வரையில், ரூபெல்லா ஒரு பொதுவான குழந்தைப் பருவ நோய்த் தொற்றாகவே இருந்தது.
- ஆனால் MMR தடுப்பூசியானது சந்தையில் பயன்பாட்டிற்கு வந்த பிறகு, 2004 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் அந்த வைரஸ் பரவல் முற்றிலுமாக ஒழிந்தது.

## ஈராக்கின் பழமையான நகரம்

- ஈராக் நாட்டின் கெமுனேவின் குர்திஸ்தான் என்ற பகுதியில் ஒரு பழமையான ஈராக் நகரம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

- இது சுமார் 3,400 ஆண்டுகள் பழமையான வெண்கலக் காலத்தினைச் சேர்ந்தது என கணிக்கப் பட்டுள்ளது.
- ஈராக்கின் மிகப்பெரிய நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் குறைய காரணமான வறட்சி தான் இந்த நகரம் திடீரென தென்படுவதற்கான ஒரு காரணமாகும்.
- கி..மு 1550 முதல் கி.மு. 1350 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த மிட்டானிப் பேரரசின் ஆட்சியின் போது இந்தப் பண்டைய நகரம் ஒரு முக்கிய மையமாக இருந்ததாக தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழு கூறியுள்ளது.

## ஏமனில் இருந்து எகிப்துக்கு வணிக விமானம்

- முதல் வணிக விமானம் ஏமனின் சனா விமான நிலையத்திலிருந்து எகிப்தின் கெய்ரோ நகரத்திற்கு இயக்கப்பட்டது
- ஐக்கிய நாடுகள் சபையினால் நடுவாண்மை வகிக்கப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இயக்கப்பட்ட ஏழாவது விமானம் இதுவாகும்.
- 2014 ஆம் ஆண்டில், நாட்டின் தலைநகரான சனாவை ஹூதி அமைப்பினர் கைப்பற்றிய பின்னர், ஏமன் நாட்டில் உள்நாட்டுப் போர் வெடித்தது.
- 2015 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், அரசாங்கத்தை மீட்டெடுக்கும் முயற்சியில் சவூதி தலைமையிலான கூட்டணி போரினைத் தொடங்கியது.

## துருக்கியின் பெயர் மாற்றம்

- இனி, ஐக்கிய நாடுகள் சபையில் துருக்கி என்ற பெயர் துர்க்கியே என்று அழைக்கப் படும்.
- உள்நாட்டில், குடிமக்கள் அந்நாட்டினை துர்க்கியே என்றே குறிப்பிடுகிறார்கள்.
- ஆனால் அதன் ஆங்கில வடிவமான 'துருக்கி' என்ற பெயரே சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 1923 ஆம் ஆண்டில் இந்த நாடு சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து 'துருக்கி' என்ற பெயர் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

### *பெயர் மாற்றப்பட்ட பிற நாடுகள்*

- நெதர்லாந்து நாடானது அதன் முந்தையப் பெயரான ஹாலந்து என்பதிலிருந்து பெயர் மாற்றம் பெற்றது.
- மாசிடோனியா கிரீஸ் நாட்டுடனான அரசியல் தகராறுகளால் வடக்கு மாசிடோனியா எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- ஈரான் 1935 ஆம் ஆண்டில் பெர்சியா என்ற அதன் பெயரை மாற்றியது.
- சியாம் அதன் பெயரைத் தாய்லாந்து என மாற்றியது
- ரோடீசியா அதன் காலனித்துவப் பாரம்பரியத்தை மாற்றுவதற்காக ஜிம்பாப்வே என மாற்றப் பட்டது.




## இரண்டாம் எலிசபெத் மகாராணியின் 70 ஆம் ஆண்டுகால ஆட்சி நிறைவு விழா

- இரண்டாம் எலிசபெத் மகாராணியின் 70 ஆம் ஆண்டுகால நிறைவு விழா 2022 ஆம் ஆண்டில் ஐக்கியப் பேரரசு மற்றும் காமன்வெல்த் நாடுகளில் கொண்டாடப்படுகிறது.
- இது இராணி பதவியேற்ற 70வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இரண்டாம் எலிசபெத் மகாராணி 1952 ஆம் ஆண்டு பிப்ரவரி 06 ஆம் தேதியன்று அவரது தந்தையான மன்னர் ஆறாம் ஜார்ஜ் இறந்ததையடுத்து அந்த நாட்டின் ராணியாகப் பொறுப்பேற்றார்.
- எலிசபெத்தின் முறையான முடிசூட்டு விழா 1953 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- இந்த நிலையை முதலில் எட்டியவர் இராணி இரண்டாம் எலிசபெத் ஆவார்.

## விண்வெளி நிலையத்திற்கு மனிதர்களை அனுப்புவதற்கான 3வது விண்கலம்



- சீனா தனது புதிய விண்வெளி நிலையத்திற்கு மனிதர்களை அனுப்புவதற்கான விண்கலத்தினை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- சீன விண்வெளி வீரர்கள் ஷென்சோ-14 விண்கலம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.
- மங்கோலியாவின் கோபி பாலைவனத்தில் அமைந்துள்ள ஜியுகுவான் ஒரு செயற்கைக் கோள் ஏவுதள மையத்திலிருந்து லாங் மார்ச் 2F என்ற ராக்கெட் மூலம் இது விண்ணில் ஏவப் பட்டது.
- டியாங்காங் விண்வெளி நிலையத்தின் தியான்ஹே எனும் மையப் பெட்டகத்தில் தங்கி அவர்கள் தங்களது பணிகளைச் செய்வார்கள்.

## ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் பட்டியல் 2022

- ரிலையன்ஸ் குழுமத் தலைவர் முகேஷ் அம்பானி மீண்டும் இந்தியா மற்றும் ஆசியாவின் பணக்காரர் என்ற இடத்தைப் பிடித்துள்ளார்.
- அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானியின் முதலிடத்தை இவர் பிடித்து உள்ளார்.
- அதானி தற்பொழுது ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.
- டெஸ்லா நிறுவனத் தலைவர் எலான் மஸ்க் உலகின் மிகப் பெரியப் பணக்காரராக உள்ளார்.
- அமேசானின் தலைவர் ஜெஃப் பெசோஸ் இரண்டாவது பெரியப் பணக்காரர் ஆவார்.

**BLOOMBERG BILLIONAIRES INDEX**

| | RANK | NETWORTH (USD BN) |
|---|---|---|
| Elon Musk | 1 | 227.5 |
| Jeff Bezos | 2 | 149.4 |
| Bernard Arnault | 3 | 138.3 |
| Bill Gates | 4 | 123.6 |
| Warren Buffett | 5 | 114.1 |
| Larry Page | 6 | 106.4 |
| Sergey Brin | 7 | 101.9 |
| Mukesh Ambani | 8 | 99.7 |
| Gautam Adani | 9 | 98.7 |
| Steve Ballmer | 10 | 96.8 |

## சர்வதேச நெகிழிக் கண்ணோட்டம் : 2060 ஆம் ஆண்டிற்கான கொள்கை நிலைகள்

- இது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை ஆகும்.
- 2060 ஆம் ஆண்டுக்குள் உலகளவில் உற்பத்தியாகும் நெகிழிக் கழிவுகளின் அளவு மூன்று மடங்காக உயரும் என்று இதில் கண்டறியப்பட்டுள்ளது.
- இதில் சுமார் பாதி நிலப்பரப்பில் குவிக்கப்படும் என்றும் இதில் ஐந்தில் ஒரு பங்கிற்கும் குறைவாகவே மறு சுழற்சி செய்யப்படும் என்றும் மதிப்பிடப் படுகிறது.
- 2060 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு நெகிழிக் கழிவுகள் பையகப் படுத்துதல், குறைந்த விலைப் பொருட்கள் மற்றும் ஜவுளிகள் போன்ற குறுகிய கால உபயோகப் பொருட்களிலிருந்து உருவாகியிருக்கும்.

- ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் வளரும் மற்றும் வளர்ந்து வரும் நாடுகளில், இந்த வளர்ச்சி மிக வேகமாக இருக்கும்.
- இருப்பினும், 2060 ஆம் ஆண்டில் OECD அல்லாத நாடுகளை விட (77 கிலோ) OECD நாடுகள் தனி நபர் வீதத்தில் அதிக நெகிழிக் கழிவுகளை (வருடத்திற்கு சராசரியாக 238 கிலோ) உற்பத்தி செய்யும் என்று இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.
- பெரும்பாலான மாசுபாடுகள் மேக்ரோபிளாஸ்டிக்ஸ் எனப்படும் பெரிய அளவிலான குப்பை வகைகளிலிருந்து வருகிறது.
- ஆனால் தொழில்துறை நெகிழித் துகள்கள், ஜவுளிகள் மற்றும் டயர் துண்டுகள் போன்ற பொருட்களிலிருந்து மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் வகை (5 மிமீ விட்டம் கொண்ட செயற்கைப் பாலிமர்கள்) கசிவதும் ஒரு தீவிர கவலையாக உள்ளது.

## பிம்ஸ்டெக் அமைப்பின் 25வது ஆண்டு விழா

- டாக்காவில் உள்ள வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (பிம்ஸ்டெக்) செயலகம் ஜூன் 6, 2022 அன்று தமது 25வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.
- இது 1996 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் தேதி பாங்காக் பிரகடனத்தில் கையெழுத்து இட்டதன் மூலம் உருவானது.
- பிம்ஸ்டெக் சாசனத்தின் கையொப்பம் மார்ச் 30, 2022 அன்று கொழும்பில் நடைபெற்ற ஐந்தாவது உச்சி மாநாட்டின் போது செய்யப் பட்டது.
- இதன் தலைமையகம் பங்களாதேஷின் டாக்காவில் அமைந்துள்ளது.
- வங்காள தேசம், பூடான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியவை பிம்ஸ்டெக் அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன.

## கலாச்சாரப் பருவம்

- இசை மேதை ஏ.ஆர். ரஹ்மான் கலாச்சாரப் பருவத்தின் (தி சீசன் ஆஃப் கல்ச்சர்) தூதராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இது இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- கலை, ஆங்கிலம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் இந்தியா-ஐக்கியப் பேரரசு ஆகியவற்றுக்கு இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை கலாச்சாரப் பருவம் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2023

- QS (Quacquarelli Symonds) சர்வதேசப் பல்கலைக்கழக தரவரிசையின் 19வதுப் பதிப்பை வெளியிட்டுள்ளது.
- QS என்பது லண்டனைத் தளமாகக் கொண்ட உலகளாவிய உயர்கல்வி தரவரிசை ஆகும்.
- சர்வதேச தரவரிசை நிபுணர் குழுவின் (IREG) அங்கீகாரத்தைப் பெற்ற ஒரே சர்வதேச தரவரிசை இதுவாகும்.
- சமீபத்தியப் பதிப்பில் 41 இந்தியப் பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன.

- ஜிண்டால் குளோபல் யுனிவர்சிட்டி இந்தியாவின் முன்னணி தரவரிசையில் உள்ள ஒரு தனியார் நிறுவனமாகும்.
- தரவரிசையில் அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (எம்ஐடி) முதலிடத்தையும், அதனைத் தொடர்ந்து ஐக்கியப் பேரரசில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் (யுகே) மற்றும் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் (அமெரிக்கா) ஆகியவையும் உள்ளன.

| National rank | Name of university | Global rank/bracket |
|---|---|---|
| 1 | IISc Bangalore | 155 |
| 2 | IIT Bombay | 172 |
| 3 | IIT Delhi | 174 |
| 4 | IIT Madras | 250 |
| 5 | IIT Kanpur | 264 |
| 6 | IIT Kharagpur | 270 |
| 7 | IIT Roorkee | 369 |
| 8 | IIT Guwahati | 384 |
| 9 | IIT Indore | 396 |
| 10 | University of Delhi | 521-30 |

## இலங்கைக்கு மனிதாபிமான உதவி

- ஐக்கிய நாடுகள் சபையானது இலங்கைக்கு நான்கு மாதக் காலத்திற்கு சுமார் 48 மில்லியன் டாலர் தொகையை மனிதாபிமான உதவியாக வழங்கத் திட்டமிட்டுள்ளது
- உணவு, எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்காக ஜனவரி மாதம் முதல் 3 பில்லியன் டாலர் மதிப்பிலான நிதி உதவியை இந்தியா வழங்கி வருகிறது.
- இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் 51 பில்லியன் டாலர் ஆகும்.

## ஆஸ்திரேலியா-இந்தியா நீர்வளப் பாதுகாப்பு முன்னெடுப்பு

- ஆஸ்திரேலியா-இந்தியா நீர்ப் பாதுகாப்பு முன்னெடுப்பிற்கான ஒரு தொழில்நுட்ப ஒத்துழைப்புக்காக மேற்கொள்ளப்பட்ட இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு இடையேயான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது ஒருங்கிணைந்த நீர்ச் சுழற்சியின் முழுமையான நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்ட நீர்வளப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ள நகரத்தினை மேம்படுத்துதல் என்ற இலக்கை நோக்கிப் பணியாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, இந்தியாவின் நீர்வள நிர்வாகத்தை வலுப்படுத்துவதோடு, கீழ்க்காண்பவற்றினை வழங்கும் முதலீடுகளையும் இது மேற்கொள்ளும்.

- நகர்ப்புற நீர்ச் சேவைகள்,
- நம்பகமான, பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரச் சேவைகளை அணுக பின்தங்கியச் சமூகங்களுக்கு ஆதரவு வழங்குதல்.

## அமெரிக்க உச்சி மாநாடு 2022

- ஒன்பதாவது அமெரிக்க உச்சி மாநாடு (2022) சமீபத்தில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடத்தப் பட்டது.
- இந்த உச்சி மாநாட்டின் கருத்துருவானது, "ஒரு நிலையான, நெகிழ்திறன்மிக்க மற்றும் சமமான எதிர்காலத்தை உருவாக்குதல்" என்பதாகும்.
- அமெரிக்கா இந்த உச்சி மாநாடு நடைபெறுவதற்கான இடத்தையும் அதன் பங்கேற்பாளர்களையும் ஒரு புரவலராக தேர்ந்தெடுக்கிறது.
- இந்த ஆண்டின் உச்சி மாநாட்டிற்கு, கியூபா, நிகரகுவா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளை அமெரிக்கா அழைக்கவில்லை.
- ஏனெனில், இந்த நாடுகளில் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் தேர்ந்து எடுக்கப் பட்ட தலைவர்கள் இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## குடியரசு அமைச்சர்

- ஆஸ்திரேலிய நாடானது, “குடியரசுக்கான துணை அமைச்சரை” நியமித்தது.
- இது இரண்டாம் எலிசபெத் மகாராணியின் தலைமைத்துவத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எனவே, பிரித்தானிய மன்னர் இனி அரசின் தலைவராகக் கருதப்படமாட்டார்.
- ஆஸ்திரேலியாவின் முடியாட்சி என்பது ஆஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்படும் ஒரு வகை அரசாட்சியாகும்.
- இது ஆஸ்திரேலிய இறையாண்மை மற்றும் அரசத் தலைவரால் உருவகப் படுத்தப் படுகிறது.
- இரண்டாம் எலிசபெத் ஆஸ்திரேலியாவின் தற்போதைய அரசின் தலைவர் மற்றும் இராணி ஆவார்.
- ஆஸ்திரேலிய அரசியலமைப்பின்படி, ஆஸ்திரேலியாவில் இவரின் சார்பாக தலைமை ஆளுநர் பொறுப்பேற்று அரசினை நடத்துவார்.
- தலைமை ஆளுநர்கள் மற்றும் ஆளுநர்கள் ஆகியோர் முறையே மாநில மற்றும் மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் அரசியால் நியமிக்கப்படுகிறார்கள்.

## பன்மொழித் தன்மை மீதான தீர்மானம்

- இந்தி மொழியை உள்ளடக்கிக் குறிப்பிடுகின்ற பன்மொழித் தன்மை குறித்த இந்தியா முன் வைத்த ஒரு தீர்மானத்தினை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது முதன் முறையாக ஏற்றுக் கொண்டது.

- இந்தத் தீர்மானமானது, இந்தி உள்ளிட்ட அதிகாரப்பூர்வ மற்றும் அதிகாரப்பூர்வமற்ற மொழிகளில் முக்கியமான தகவல்தொடர்புகள் மற்றும் செய்திகளைத் தொடர்ந்துப் பரப்புவதற்கு ஐக்கிய நாடுகள் சபையினை வலியுறுத்துகிறது.
- ஐக்கிய நாடுகளின் தீர்மானமானது, உருது மற்றும் வங்காளம் ஆகிய மொழிகளையும் முதன்முறையாக குறிப்பிடுகிறது.

## உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மாநாடு

- உலக வர்த்தக அமைப்பின் 12வது அமைச்சர்கள் மாநாடானது சமீபத்தில் தொடங்கியது.
- இது உலக வர்த்தக அமைப்பின் தலைமையகமான சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடத்தப் பட்டது.
- இது 2021 ஆம் ஆண்டில் நடைபெற இருந்தது.
- ஆனால் கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக இது ஒத்தி வைக்கப்பட்டது.
- தடுப்பூசி விநியோகம், வர்த்தக வசதி, ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகள் மற்றும் மருத்துவ விநியோகச் தொடரில் மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை பற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.
- இந்த மாநாடானது பொதுவாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.

## ஷங்ரி-லா பேச்சு வார்த்தை

- 19வது ஷாங்க்ரி-லா பேச்சுவார்த்தையானது இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு சிங்கப்பூரில் நடத்தப்பட்டது.
- ஆசியாவின் முதன்மையான இந்தப் பாதுகாப்பு உச்சி மாநாடானது கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக நிறுத்தப் பட்டது.
- இது சர்வதேச உத்திசார் ஆய்வுகள் நிறுவனத்தால் (IISS) நடத்தப்படுகிறது.
- இது ஆண்டுதோறும் நடத்தப் பட்டாலும் 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் இதனை நடத்த முடியவில்லை.
- ஷங்ரி-லா பேச்சுவார்த்தையானது அதிகாரப்பூர்வமாக ஆசியப் பாதுகாப்பு உச்சி மாநாடு என்று அழைக்கப்படுகிறது.

## பால்டிக் கடலில் கடற்படைப் பயிற்சிகள்

- பால்டிக் கடலில் அமெரிக்காவின் தலைமையில் 16 நாடுகளுடனான ஒரு கடற்படைப் பயிற்சி தொடங்கியது.
- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகளான பின்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய இரண்டு நாடுகளும் இதில் அடங்கும்.
- 1972 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பாலடாப்ஸ் எனப்படும் இந்த வருடாந்திரக் கடற்படைப் பயிற்சியானது, எந்தவொருக் குறிப்பிட்ட ஆபத்துக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கும் வகையில் மேற்கொள்ளப் படவில்லை.

## எக்ஸ் கான் குவெஸ்ட் 2022

- ❖ "எக்ஸ் கான் குவெஸ்ட் 2022" எனப்படும் பன்னாட்டு அமைதி காப்புப் பயிற்சியானது மங்கோலியாவில் தொடங்கியது.
- ❖ இதில் 16 நாடுகளைச் சேர்ந்த இராணுவப் படைகள் பங்கேற்றன.
- ❖ கான் குவெஸ்ட் 2022 என்பது மங்கோலியாவில் நடத்தப்படும் ஒரு பன்னாட்டு அமைதி காப்பு நடவடிக்கைப் பயிற்சியாகும்.

## கஞ்சா உபயோகத்தினைச் சட்டப்பூர்வமாக்குதல்

- ❖ ஆசியாவில் கஞ்சா உபயோகத்தினைச் சட்டப்பூர்வமாக்கிய முதல் நாடு தாய்லாந்து ஆகும்.
- ❖ இருப்பினும், இதனை போதைப் பொருளாக பயன்படுத்துபவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் இன்னும் விதிக்கப்படுகின்றன.
- ❖ தாய்லாந்து நாடானது மருத்துவ நோக்கங்களுக்காக மட்டும் கஞ்சா உபயோகத்தினை ஊக்குவிக்க உள்ளது.

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்கள்

- ❖ ஈக்வடார், ஜப்பான், மால்டா, மொசாம்பிக் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு 2023-2024 ஆம் ஆண்டுக் காலத்திற்கான நிரந்தரமற்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- ❖ ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினராக இந்தியாவின் இரண்டாண்டு கால பதவிக் காலம் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறைவடைய உள்ளது.
- ❖ இது ஒரே நேரத்தில் அதிகாரம் வாய்ந்த இந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமைப் பதவியையும் வகிக்கிறது.



## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான குறை தீர்ப்பாளர்

- N.J. ஓஜா என்பவர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான குறைதீர்ப்பாளராக இரண்டு வருடக் காலத்திற்கு நியமிக்கப் பட்டு உள்ளார்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களிடமிருந்துப் புகார்களைப் பெற இவருக்கு அதிகாரம் உள்ளது.
- இவர் அத்தகையப் புகார்களைப் பரிசீலித்து, புகார் பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அதற்கானத் தீர்வுகளை வழங்குவார்.
- மேலும், நேரில் விசாரணை நடத்துவதற்கான வழிகாட்டுதலையும் இவர் வழங்குவார்.
- தாமதமாக ஊதியம் வழங்குவது அல்லது வேலையின்மைக்கான உதவித் தொகையை வழங்காதது தொடர்பான பிரச்சனைகள் உட்பட ஏதேனும் குறைகள் இருந்தால் இவர், 'தாமாகவே' முன்வந்து அதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கலாம்.

## இந்திய-இந்தோனேசிய ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சி

- 38வது கார்பாட் என்பது பெருந்தொற்றிற்குப் பிறகு இரு நாடுகளுக்கு இடையே நடைபெறும் முதல் ஒருங்கிணைந்த ரோந்து (CORPAT) பயிற்சி ஆகும்.
- இதில், போர்ட் பிளேயரில் உள்ள அந்தமான் & நிக்கோபார் படைப் பிரிவிற்கு இந்தோனேசியக் கடற்படைப் பிரிவுகள் வருகை தந்தன.
- இரு நாட்டுக் கடற்படைகளும் 2002 ஆம் ஆண்டு முதல் தங்கள் சர்வதேச கடல் எல்லைக் கோட்டுப் பகுதியில் கார்பாட் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றன.


## இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான முதல் பாதுகாப்பு ஆலோசனைகள்

- இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான முதல் பாதுகாப்பு ஆலோசனைகள் பிரசெல்ஸ் நகரில் நடைபெற்றது.
- 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்திய-ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டில் மேற்கொள்ளப் பட்ட முடிவின்படி இந்த ஆலோசனைகள் நடைபெற்றன.
- ஐரோப்பா, இந்தோ-பசிபிக் மற்றும் இந்தியாவின் அண்டை நாடுகள் ஆகிய பகுதிகளில் உருவாகி வரும் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து இதில் விவாதிக்கப் பட்டது.

## BIMSTEC தொழில்நுட்பப் பரிமாற்ற மையம்

- BIMSTEC தொழில்நுட்பப் பரிமாற்ற மையத்தினை நிறுவுவதற்காக இந்தியா மேற் கொண்ட இணைப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மையம் ஆனது இலங்கையில் உள்ள கொழும்பில் நிறுவப்படும்.
- இந்த மையத்தால் வழங்கப்படும் வசதிகள்
    - BIMSTEC நாடுகளில் கிடைக்கும் தொழில்நுட்பங்களின் தரவு வங்கி,

- BIMSTEC நாடுகளிடையேத் தொழில்நுட்பங்களைப் பரிமாற்றம் செய்தல் மற்றும் பயன்படுத்துதல்.




## மேற்கு ஆசிய நாற்கர (குவாட்) பேச்சுவார்த்தை

- அமெரிக்க நாடானது, "மேற்கு ஆசிய குவாட் பேச்சுவார்த்தை" என்ற புதிய நான்கு நாடுகளின் பேச்சுவார்த்தையினைத் தொடங்க உள்ளது.
- இதில் அமெரிக்கா, இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இஸ்ரேல் ஆகியவை அடங்கும்.




- மேற்கு ஆசிய குவாட் பேச்சுவார்த்தையானது I2U2 என்றும் அழைக்கப்படும்.
- I2 என்பது இந்தியா மற்றும் இஸ்ரேல் ஆகியவற்றிற்கும், U2 என்பது அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவற்றிற்கும் வழங்கப் படுகிறது.

- இது மேற்கு ஆசியப் பகுதி குறித்து கவனம் செலுத்தும்.
- இது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கப்பட்டது.

## 12வது உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மாநாடு – ஜெனீவா


- இந்த மாநாடு ஆனது பொதுவாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.
- இதில் மீன்வள மானியங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைக்கான ஒரு குழுவானது அமைச்சர்களால் முன்வைக்கப்பட்ட வரைவை இறுதி செய்துள்ளது.
- குறிப்பிடப் படாத எரிபொருள் மானியங்களை நிறுத்த வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கைக்கு ஏற்ப இது இணங்கவில்லை.
- இந்தியாவின் முன்மொழிவான 25க்கு எதிராக, வளர்ந்து வரும் நாடுகள் சில வளரும் நாடுகளுக்கு மானியக் குறைப்புகளிலிருந்து விலக்கு அளிப்பதற்கான ஏழு ஆண்டுப் பரிமாற்றக் காலத்தினைக் குறிப்பிடுகிறது.
- பரிமாற்றக் காலம் குறித்து சமீபத்தில் உறுப்பினர் நாடுகளால் ஒரு பேச்சுவார்த்தை நடத்தப் பட்டது.

## ஆண்டின் சிறந்த நாடு

- ஐரோப்பாவின் மிகப்பெரியத் தொடக்க நிறுவன மாநாடான 2020 ஆம் ஆண்டு விவா டெக் என்ற மாநாடு இந்தியாவை "ஆண்டின் சிறந்த நாடு" என்று அங்கீகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் "விவாடெக் நிகழ்விற்கான ஆண்டின் சிறந்த நாடாக இந்தியா அங்கீகரிக்கப்பட்டது இந்திய நாட்டிற்கு ஒரு மிகப்பெரியக் கௌரவமாகும்.
- உலக அளவில் இந்தியத் தொடக்க நிறுவனங்கள் ஆற்றியப் பங்களிப்பே இதற்குக் காரணமாகும்.


## இந்திய நொய் அரிசியை இறக்குமதி செய்யும் நாடு

- இந்தியாவில் இருந்து உடைந்த (நொய்) அரிசியை அதிக அளவில் இறக்குமதி செய்யும் அல்லது வாங்கும் நாடாக சீனா உருவெடுத்துள்ளது.
- இந்தியாவிலிருந்து உடைந்த அரிசியை அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடுகளாகத் திகழ்ந்த ஆப்பிரிக்க நாடுகளைத் தற்போது சீனா விஞ்சியுள்ளது.
- பெருந்தொற்றுக் காலத்தில், இந்தியாவிலிருந்து உடைந்த அரிசியை அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடாக சீனா முன்னிலை வகித்தது.
- 16.34 லட்சம் மெட்ரிக் டன்கள், அதாவது 7.7 சதவீதம் அளவிலான நொய் அரிசி சீனாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
- 2021-2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதி 212.10 லட்சம் மெட்ரிக் டன்களாகப் பதிவாகியுள்ளது.




## 2021 ஆம் ஆண்டில் மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சேர்க்கை

- இந்தியா 2021 ஆம் ஆண்டில் 15.4 ஜிகாவாட் அளவிலான புதுப்பிக்கத் தக்க ஆற்றல் திறனைத் தனது மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொகுப்பில் சேர்த்தது.
- இதில் சீனா (136 GW) மற்றும் அமெரிக்கா (43 GW) ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டு மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனில் சீனா உலகளவில் முன்னணியில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து அமெரிக்கா (398 GW), பிரேசில் (160 GW), இந்தியா (158 GW) மற்றும் ஜெர்மனி (139 GW) ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.




## மிகப்பெரிய விமானந் தாங்கிக் கப்பல்

- இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் தனது கடற்படையின் வரம்பை விரிவுபடுத்தும் முயற்சியில் சீனா "புஜியன்" என்ற தனது மூன்றாவது விமானந் தாங்கிக் கப்பலை அறிமுகப் படுத்தியுள்ளது.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விமானந் தாங்கிக் கப்பலானது, மிகவும் மேம்படுத்தப் பட்ட மற்றும் "முழுமையாக உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட முதல் கடற்படைக் கப்பல் ஆகும்.
- இது உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்பட்ட முதல் உந்துவிசை விமானந் தாங்கிக் கப்பல் ஆகும்.
- சீனாவின் முதல் விமானந் தாங்கிக் கப்பல் ஆனது லியோனிங் ஆகும்.
- சீன நாடானது உள்நாட்டிலேயே ‘ஷாண்டோங்’ என்ற 2வது விமானந் தாங்கிக் கப்பலை உருவாக்கியது.



## ஒற்றுமை - 2023

- இந்தியாவும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) மற்ற உறுப்பினர் நாடுகளும் இணைந்து சீனாவின் இந்த முன்னெடுப்பிற்கு ஆதரவளித்தன.
- இந்த முன்னெடுப்பானது, உறுப்பினர் நாடுகளின் எல்லைப் பாதுகாப்பு நிறுவனங்களுக்காக அடுத்த ஆண்டில் 'Solidarity (ஒற்றுமை) - 2023' என்ற கூட்டு எல்லை சார் நடவடிக்கையினை ஏற்பாடு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையத்தின் உலகப் போக்குகள் அறிக்கை

- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையமானது, "2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர உலகப் போக்குகள் அறிக்கையை" சமீபத்தில் வெளியிட்டது .

### *சிறப்பம்சங்கள்*


- உக்ரைனில் நடைபெற்ற வன்முறை மற்றும் போர் காரணமாக 2021 ஆம் ஆண்டில் 100 மில்லியன் மக்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- பேரழிவுகள் காரணமாக உலகம் முழுவதும் 23.7 மில்லியன் புதிய உள்நாட்டு இடப் பெயர்வுகள் ஏற்பட்டன.
- இது கடந்த ஆண்டை விட ஏழு மில்லியன் அல்லது 23 சதவீதம் குறைந்துள்ளது.
- பூமியில் வாழும் ஒவ்வொரு 78 நபர்களுள் ஒருவர் தற்போது இடம் பெயர்ந்துள்ளனர்.
- பேரழிவுகள் காரணமாக 2021 ஆம் ஆண்டில் சீனாவில் 6 மில்லியன் அளவிலான மிகப் பெரிய இடப் பெயர்வு ஏற்பட்டது.
- இதைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸ் (5.7 மில்லியன்) மற்றும் இந்தியா (4.9 மில்லியன்) ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தியாவில், 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பேரழிவுகள் மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாக சுமார் ஐந்து மில்லியன் மக்கள் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்துள்ளனர்.




## ஹான்ஸ் தீவு & நரேஸ் ஜலசந்தி

- ஹான்ஸ் தீவின் மீதான 50 ஆண்டுகாலப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர டென்மார்க்கும் கனடாவும் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளன.

- இது ஆர்க்டிக் பெருங்கடலில் உள்ள ஒரு தரிசுத் தீவாகும்.
- இது நரேஸ் ஜலசந்தியில் உள்ள கென்னடி கால்வாயின் மையத்தில் கனடா மற்றும் கிரீன்லாந்து ஆகிய நாடுகளுக்கு இடையே அமைந்துள்ளது.
- வாஷிங்டன் லேண்ட் கடற்கரையில் உள்ள கென்னடி கால்வாயில் உள்ள மூன்று தீவுகளில் இது மிகச் சிறியதாகும்.
- நரேஸ் ஜலசந்தி என்பது எல்லெஸ்மியர் தீவுக்கும் கிரீன்லாந்திற்கும் இடையே உள்ள ஒரு நீர்வழியாகும்.
- இது அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள பாஃபின் விரிகுடாவின் வடக்குப் பகுதியை ஆர்க்டிக் பெருங்கடலில் உள்ள லிங்கன் கடலுடன் இணைக்கிறது.




## ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர் அந்தஸ்து

- ஐரோப்பிய ஆணையம் உக்ரைன் மற்றும் மால்டோவா ஆகிய நாடுகளுக்கு உறுப்பினர் அந்தஸ்தினை' வழங்கியது.
- இது ஓர் முதல்நிலை அங்கீகாரப் படியாகும்.
- ஆனால் இரு நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியத்தில் முழு அளவிலான உறுப்பினர்களாக மாறுவதற்கு நீண்ட காலச் செயல்முறைக்கு உள்ளாக வேண்டும்.

## நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் 'சாம்பல் நிறப் பட்டியல்'

- நிதியியல் நடவடிக்கை பணிக்குழுவின் (FATF) அதிகபட்சக் கண்காணிப்பில் உள்ள நாடுகளின் "சாம்பல் நிறப் பட்டியலில்" பாகிஸ்தான் தொடர்ந்து இடம் பெற்றிருக்கும்.
- பாரீஸ் நகரில் அமைந்துள்ள நிதியியல் நடவடிக்கை பணிக்குழுவின் சாம்பல் நிறப் பட்டியலில் பாகிஸ்தான் 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இடம் பெற்றுள்ளது.
- பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்ய வழிவகுத்த பணமோசடியைத் தடுக்கத் தவறியதாலும், 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் அதை முடிவுக்கு கொண்டு வருவதற்கான செயற்திட்டத்தை நிறைவேற்றாததாலும் இது தொடர்கிறது.

## இலங்கை அரசியலமைப்புத் திருத்தம்

- இலங்கை அரசானது குடியரசுத் தலைவரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அதன் அரசியலமைப்பில் 21வது திருத்தத்தினை நிறைவேற்றியுள்ளது.
- இது முன்பு இருந்ததை விட அதிக அதிகாரங்களைப் பாராளுமன்றத்திற்கு வழங்கச் செய்கிறது.
- இது பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிப்பது மட்டுமன்றி குடியரசுத் தலைவரின் நடவடிக்கைகளுக்கு அவர் பதில் கூறும் ஒரு பொறுப்பினையும் வழங்குகிறது.

## மாம்பழத் திருவிழா – பெல்ஜியம்

- மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், பிரஸ்ஸல்ஸ் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாம்பழத் திருவிழாவைத் தொடங்கி வைத்தார்.
- பெல்ஜியத்தில் இத்திருவிழா நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ஐரோப்பியர்கள் மத்தியில் இந்திய மாம்பழங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதும், இந்திய மாம்பழங்களுக்கான சந்தையை ஐரோப்பாவில் உருவாக்குவதும் இதன் நோக்கமாகும்.
- இந்தியா உலகின் பிற பகுதிகளுக்கு மாம்பழங்களை ஏற்றுமதி செய்வதில் பெரும் பங்கு வகிக்கிறது.
- ஆனால் பெரும்பாலான மாம்பழங்கள் ஐரோப்பாவை சென்றடைவதை விட மத்தியக் கிழக்கு நாடுகளையே அதிகம் சென்றடைகின்றன.

## ஆப்கானிஸ்தான் நிலநடுக்கம் 2022

- ஜூன் 22 ஆம் தேதியன்று ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கம் ஆனது 2002 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கம் ஆகும்.
- பாகிஸ்தானின் எல்லையை ஒட்டிய தென்கிழக்கு நகரமான கோஸ்ட் நகரிலிருந்து 44 கிலோமீட்டர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.



## டைம்ஸ் உயர் கல்வி என்ற இதழின் ஆசியப் பல்கலைக்கழக தரவரிசை 2022

- டைம்ஸ் உயர் கல்வி என்ற இதழின் 2022 ஆம் ஆண்டு ஆசியப் பல்கலைக்கழக தர வரிசையானது டைம்ஸ் உயர் கல்வி இதழினால் (THE) வெளியிடப்பட்டது.
- இந்த ஆண்டு இத்தரவரிசையில் இடம்பெற்ற 118 நிறுவனங்களுள் ஜப்பான் பல்கலைக் கழகங்கள் அதிகளவில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன.
- ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- ஒரு பாலஸ்தீனிய பல்கலைக்கழகம் முதல் முறையாக இந்தத் தரவரிசையில் இடம் பெற்றுள்ளது.
- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது இந்தியாவின் சிறந்த கல்வி நிறுவனமாகத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.
- இது 42வது இடத்தில் உள்ளது.
- மைசூரிலுள்ள JSS உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகமானது 65வது இடத்திலும், ரோபர் நகரிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் 68வது இடத்திலும், இந்தூர் நகரிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் 87வது இடத்திலும் உள்ளன.



## ஆற்றல் மற்றும் பருவநிலை பற்றிய மாபெரும் பொருளாதார மன்றம்

- ❖ மத்தியச் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சர் பூபேந்தர் யாதவ் இந்த மன்றத்தில் இந்தியா சார்பாக கலந்து கொண்டார்.
- ❖ காணொளி வாயிலாக நடைபெற்ற இந்த மன்றத்தினை அமெரிக்க அதிபர் ஜோசப் பிடன் தொகுத்து வழங்கினார்.
- ❖ இந்த மன்றமானது எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், பருவநிலை மீதான நெருக்கடியைச் சமாளிப்பதற்கும், அதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் எகிப்தில் சரம் எல் ஷேக்கில் நடைபெற உள்ள 27வது உறுப்பினர்களின் மாநாட்டிற்கான ஒரு செயல் திட்டத்தினை உருவாக்குவதற்குமான நடவடிக்கைகளை மேம்படுத்தச் செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டது.
- ❖ உலகெங்கிலும் இருந்து 23 நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பினுடைய 8வது சந்திப்பு

- ❖ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பினுடைய உறுப்பினர் நாடுகளின் தகுதி வாய்ந்த அதிகாரிகளின் எல்லைப் பணிகளின் தலைவர்களின் 8வது சந்திப்பினை இந்தியா புது தில்லியில் நடத்தியது.
- ❖ இந்தச் சந்திப்பில் இந்தியா உட்பட, அந்த அமைப்பின் மற்ற 7 உறுப்பினர்கள் மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்தியப் பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் நிர்வாகக் குழு ஆகியவை கலந்து கொண்டது.
- ❖ இதில் "நட்புறவு எல்லை - 2022" என்ற இந்த ஆண்டிற்கான ஒரு கூட்டு எல்லைசார் நடவடிக்கையின் தயார்நிலை மற்றும் ஏற்பாடுகளுக்கான திட்டமானது மதிப்பாய்வு செய்யப் பட்டு அங்கீகரிக்கப்பட்டது.
- ❖ சீனாவின் ஒரு கூட்டு எல்லை நடவடிக்கை முன்மொழிவான "ஒற்றுமை - 2023" இதில் அங்கீகரிக்கப் பட்டது.

## G20 மற்றும் இந்தியா

- ❖ G20 அமைப்பின் 2023 ஆம் ஆண்டிற்கான சந்திப்புகளை ஜம்மு காஷ்மீர் நடத்த உள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 01 முதல் G20 அமைப்பின் தலைமைப் பொறுப்பினை வகிக்க இந்தியா உள்ளது.
- ❖ மேலும் இந்தியா 2023 ஆம் ஆண்டு முதல் G20 நாடுகளினுடைய தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்த உள்ளது.
- ❖ வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், G20 அமைப்பிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் இந்தியாவின் சார்பான அரசுமுறை அதிகாரியாக 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நியமிக்கப்பட்டார்.

## பாரத் கௌரவ் சுற்றுலா இரயில்

- ❖ இந்தியா முதல் நேபாளம் வரை இயக்கப்படும் முதலாவது பாரத் கௌரவ் சுற்றுலா இரயில் கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டது.

- இது இந்தியா மற்றும் நேபாளத்தில் உள்ள ராமாயண வட்டாரப் பகுதிகளுடன் தொடர்புடைய இடங்களை இணைக்கும் வகையில் இணைக்கப்படும்.
- இது புது டெல்லியில் உள்ள சப்தர்ஜங் இரயில் நிலையத்தில் இருந்து கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டது.

## 14வது பிரிக்ஸ் உச்சிமாநாடு 2022

- இது இணையவழி மூலமாக நடத்தப் பட்டது.
- இது சீனாவின் ஆதரவுடன் நடத்தப் பட்டது.
- இது "உயர்தரமான பிரிக்ஸ் கூட்டாண்மையை மேம்படுத்துவது, உலகளாவிய மேம்பாட்டிற்கான புதிய சகாப்தத்தின் தொடக்கம்" என்ற கருத்துருவுடன் நடத்தப் பட்ட.
- இதில் பெய்ஜிங் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.
- பிரிக்ஸ் அமைப்பானது ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு இடையேயானப் பேச்சு வார்த்தையை ஆதரிக்கிறது.

## காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மாநாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர்களின் முழுநீளக் கூட்டம் 2022

- வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் S. ஜெய்சங்கர், "காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மாநாட்டின் (CHOGM) வெளியுறவுத் துறை அமைச்சர்களின் ஒரு முழுநீளக் கூட்டத்தில்" உரையாற்றினார்.
- இது ருவாண்டாவில் "ஜனநாயகம், அமைதி மற்றும் ஆட்சி" என்ற ஒரு கருத்துருவுடன் நடத்தப் பட்டது.
- இது அனைத்து காமன்வெல்த் நாடுகளின் நடப்புக் காலத் தலைவர்கள் பங்கேற்கின்ற, இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உச்சி மாநாடாகும்.

## உலகளாவிய வாழத் தகுந்த நகரங்கள் குறியீடு 2022

- இது பொருளாதார நுண்ணறிவு அலகு என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- தனுபே ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னா, உலகிலேயே மிகவும் வாழத் தகுந்த நகரமாகும்.
- இரண்டாவது இடத்தில் டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹேகன் உள்ளது.
- ஒட்டு மொத்த வெற்றியாளரின் அடிப்படையில் கனடா முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- இதில் புது டெல்லி 112வது இடத்திலும், மும்பை 117வது இடத்திலும் உள்ளது.
- சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ், வாழத் தகுந்த வாய்ப்புகளை மிகவும் குறைவாகக் கொண்டுள்ள 10 நகரங்களில் கடைசி இடத்தில் உள்ளது.
- இந்த ஆண்டு, இந்த அறிக்கை உலகம் முழுவதும் உள்ள 173 நகரங்களை ஆய்வு செய்கிறது.
- உறுதித் தன்மை, சுகாதாரம், கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல், கல்வி மற்றும் உள் கட்டமைப்பு ஆகிய ஐந்து முக்கியப் பிரிவுகள் இதில் கருத்தில் கொள்ளப்பட்டன.

**Top ten positions**

| City | Location | Rank | Index | Stability | Healthcare | Culture & Environment | Education | Infrastructure |
|---|---|---|---|---|---|---|---|---|
| Vienna | Austria | 1 | 99.1 | 100.0 | 100.0 | 96.3 | 100.0 | 100.0 |
| Copenhagen | Denmark | 2 | 98.0 | 100.0 | 95.8 | 95.4 | 100.0 | 100.0 |
| Zurich | Switzerland | 3 | 96.3 | 95.0 | 100.0 | 96.3 | 91.7 | 96.4 |
| Calgary | Canada | 3 | 96.3 | 95.0 | 100.0 | 90.0 | 100.0 | 100.0 |
| Vancouver | Canada | 5 | 96.1 | 90.0 | 100.0 | 100.0 | 100.0 | 92.9 |
| Geneva | Switzerland | 6 | 95.9 | 95.0 | 100.0 | 94.9 | 91.7 | 96.4 |
| Frankfurt | Germany | 7 | 95.7 | 90.0 | 100.0 | 96.3 | 91.7 | 100.0 |
| Toronto | Canada | 8 | 95.4 | 95.0 | 100.0 | 95.4 | 100.0 | 89.3 |
| Amsterdam | Netherlands | 9 | 95.3 | 90.0 | 100.0 | 97.2 | 91.7 | 96.4 |
| Osaka | Japan | 10 | 95.1 | 100.0 | 100.0 | 83.1 | 100.0 | 96.4 |
| Melbourne | Australia | 10 | 95.1 | 95.0 | 83.3 | 98.6 | 100.0 | 100.0 |

Source: EIU.

## கருக்கலைப்பிற்கான சட்டமுறைப் பாதுகாப்பு ரத்து – அமெரிக்கா

- அமெரிக்க உச்ச நீதிமன்றம் அங்கு சுமார் 50 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த கருக்கலைப்பிற்கான அரசியலமைப்புப் பாதுகாப்பை ரத்து செய்துள்ளது.
- அமெரிக்கப் பெண்களின் அரசியலமைப்பு உரிமைகளை மாற்றுவதற்காக 1973 ஆம் ஆண்டின் ரோ vs வேட் வழக்கின் தீர்ப்பைத் தற்போது அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் பெரும்பான்மைத் தீர்ப்பானது ரத்து செய்துள்ளது.
- அந்த நாட்டிலுள்ள ஏறக்குறைய பாதியளவு மாநிலங்களில் கருக்கலைப்புத் தடைகள் விதிக்கப்பட இது வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 1973 ஆம் ஆண்டு வழக்கானது அமெரிக்காவில் கருக்கலைப்பிற்கான அரசியலமைப்பு உரிமையை நிறுவ வழி வகுத்தது.

## SS-26 ஸ்டோன்

- ரஷ்யா "இஸ்கந்தர்-M என்ற ஏவுகணை அமைப்பை" பெலாரஸ் நாட்டிற்கு வழங்கச் செய்வதாக அறிவித்துள்ளது.
- இந்த ஏவுகணை அமைப்பு உந்துவிசை அல்லது சீர்வேக ஏவுகணைகளை அவற்றின் அணுசக்தி மற்றும் வழக்கமான வகை ஆயுதங்களில் பயன்படுத்தலாம்.
- இது வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பினால் "SS-26 ஸ்டோன்" என்று பெயரிடப்பட்ட, தொலைவிலிருந்து இயக்கக் கூடிய ஒரு வழிகாட்டு ஏவுகணை அமைப்பாகும்.

## பத்மா பாலம்

- வங்காளதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா 6.15 கிமீ நீளம் கொண்ட பத்மா பாலத்தைத் திறந்து வைத்தார்.
- இது வங்காளதேசத்தின் மிக நீளமானப் பாலமாகும்.
- இது வங்காளதேசத்தில் பாயும் பத்மா நதியின் குறுக்கே அமைக்கப்பட்ட ஒரு பல் பயன்பாட்டுச் சாலை மற்றும் இரயில்பாதை கொண்ட பாலமாகும்.

- இது தலைநகர் டாக்காவை அந்நாட்டின் வளர்ச்சியடையாத வடமேற்குப் பகுதியுடன் இணைக்கும்.
- இந்தப் பாலத்தின் மீது அமைக்கப்பட்ட இரயில் பாதை திறக்கப்பட்டதும், கொல்கத்தாவில் இருந்து மூன்றரை மணி நேரத்திற்குள் டாக்கா வந்தடைய முடியும்.

### உலகளாவிய உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டிற்கான கூட்டாண்மை (PGII) திட்டம்

- அமெரிக்க அதிபர் பிடன் மற்றும் G7 நாட்டின் தலைவர்கள், உலகளாவிய உள் கட்டமைப்பு மற்றும் முதலீட்டிற்கான ஒரு கூட்டாண்மையை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கினர்.
- இது சீனாவின் மண்டலம் மற்றும் சாலைத் திட்டத்திற்கு எதிரான நடவடிக்கையாக, வளர்ந்து வரும் நாடுகளுக்கு 600 பில்லியன் டாலர் நிதி திரட்டும் ஒரு திட்டமாகும்.
- இந்த உள்கட்டமைப்புத் திட்டமானது முதன்முதலில் 2021 ஆம் ஆண்டில் பிரிட்டனில் நடைபெற்ற G7 உச்சி மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- அப்போது சிறப்பான உலகை மீண்டும் கட்டமைத்தல் என்று அழைக்கப்பட்ட இந்தத் திட்டமானது 2022 உச்சி மாநாட்டில் புது வடிவம் பெறுவதற்கு முன்பு உலகளாவிய உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டிற்கான கூட்டாண்மைத் திட்டம் என மறுபெயரிடப் பட்டது.

## பொருளாதாரச் செய்திகள்

### இந்தியாவின் முன்னணி வர்த்தகப் பங்குதாரர்

- இருதரப்பு வர்த்தகத்தில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதார நாடாக அமெரிக்கா சீனாவை விஞ்சியுள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் 80.51 பில்லியன் டாலராக இருந்த அமெரிக்காவுடனான வர்த்தகமானது 2021-22 ஆம் ஆண்டில் 119.42 பில்லியன் டாலராக இருந்தது.
- சீனாவுடனான வருடாந்திர இருவழி வர்த்தகமானது, 2020-21 ஆம் ஆண்டில் 86.4 பில்லியன் டாலராக இருந்த நிலையில் 2021-22 ஆம் ஆண்டில் இது 115.42 பில்லியன் டாலராக இருந்தது.




## நுகர்வோர் மத்தியில் பணத்தாள் மதிப்பீடு குறித்த கணக்கெடுப்பு

- இந்திய ரிசர்வ் வங்கியானது நுகர்வோர் மத்தியில் பணத்தாள் மதிப்பீடு குறித்த ஒரு கணக்கெடுப்பை வெளியிட்டது.
- ரூபாய் நோட்டுகளில், 100 ரூபாய் மிகவும் விரும்பப்பட்டதாகவும், 2,000 ரூபாய் குறைந்த அளவே விரும்பப் படுவதாகவும் உள்ளது.
- புழக்கத்தில் உள்ள மொத்த பணத்தாள்களில் 2000 ரூபாய் நோட்டுகளின் மொத்த எண்ணிக்கை 214 கோடிகள் அல்லது 1.6 சதவீதம் மட்டுமே என்று ரிசர்வ் வங்கியின் இந்த கணக்கெடுப்பு கண்டறிந்துள்ளது.

## இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை 2021-22

- தற்போதைய நிலையில் உலகளாவிய இடர்கள் இருந்த போதிலும் இந்தியப் பொருளாதாரம் பெரும்பாலும் மீண்டும் எழுச்சி பெறும் என்று மத்திய வங்கி எடுத்துக் காட்டியுள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில், கள்ள நோட்டுகளின் புழக்கம் சரிவைக் கண்டன.
- ஆனால் 2021-22 ஆம் ஆண்டில் கள்ள நோட்டுகளின் புழக்கம் 10.7 சதவீதம் அதிகரித்து உள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் ரூ.500 மதிப்புள்ள போலிப் பணத் தாளின் புழக்கம் 102 சதவீதம் உயர்ந்துள்ளது.
- மேலும், போலி ரூ.2,000 பணத் தாளின் புழக்கம் 55 சதவீதம் அதிகரித்துள்ளது.
- ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கையானது, 2022-23 ஆம் ஆண்டிற்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி இலக்கினை 7.2 சதவீதமாக மாற்றியுள்ளது.




## 100 யூனிகார்ன் நிறுவனங்கள்

- இந்தியாவின் தொடக்க நிறுவனங்கள் பிரிவில் 100 யூனிகார்ன் நிறுவனங்கள் என்ற புதிய மைல்கல் எண்ணிக்கையை இந்தியா எட்டியுள்ளது.
- யுனிகார்ன் நிறுவனங்கள் என்பவை தனியாரால் நடத்தப்பட்டு, 1 பில்லியன் டாலர் மதிப்பை எட்டிய துணிகர-மூலதன ஆதரவுடன் இயங்கும் தொடக்க நிறுவனங்கள் ஆகும்.
- 2013 ஆம் ஆண்டில், இந்த வார்த்தையை உருவாக்கியப் பெருமை அமெரிக்க துணிகர முதலீட்டாளர் ஐலீன் லீக் என்பவரைச் சாரும்.
- 2018 ஆம் ஆண்டில் இருந்த 17 யூனிகார்ன் நிறுவனங்களின் எண்ணிக்கையானது, 2020 ஆம் ஆண்டில் 38 ஆக உயர்ந்ததோடு, 2021 ஆம் ஆண்டில் 71 ஆக அதிகரித்து உள்ளது.




## உள்நாட்டு கச்சா எண்ணெய் உற்பத்தி – இந்தியா




- 2014-15 நிதியாண்டில் இருந்து உள்நாட்டு கச்சா எண்ணெய் உற்பத்தியானது சரிவைச் சந்தித்து வருகிறது.
- இது 2022 ஆம் நிதியாண்டில் வெறும் 28.4 மில்லியன் டன்களாக (MT) குறைந்துள்ளது.
- இது 1994 ஆம் நிதியாண்டிற்குப் பிறகு பதிவான மிகக் குறைவான அளவாகும்.
- 2021-22 ஆம் ஆண்டில் பதிவான உற்பத்தியானது 1995 ஆம் நிதியாண்டில் பதிவான 32.2 மெட்ரிக் டன்னில் இருந்து 11.8 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளதைக் குறிக்கிறது.

## 2021-22 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி

- இந்தியா ஆடை மற்றும் ஜவுளி ஏற்றுமதியில் இதுவரை இல்லாத அளவிற்கு 44.4 பில்லியன் அமெரிக்க டாலர்களாக தனது ஏற்றுமதியினைப் பதிவு செய்துள்ளது.
- இந்திய நாட்டின் ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதியில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- இது அனைத்து ஆடைகள் மற்றும் ஜவுளி ஏற்றுமதியில் 27 சதவீதமாகும்.
- மொத்த ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதியில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு மேற்கொள்ளப் படும் ஏற்றுமதியானது 18 சதவீதமாக இருந்தது.
- மொத்த ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதியில் வங்காள தேசத்திற்கு மேற்கொள்ளப்படும் ஏற்றுமதியானது 12 சதவீதமாக இருந்தது.
- மொத்த ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதியில் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு மேற்கொள்ளப் படும் ஏற்றுமதியானது 6 சதவீதமாக இருந்தது.


## சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு நிலுவை



- மத்திய அரசானது, சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்காக மாநில அரசுகளுக்கு ரூ.86,912 கோடியை வழங்கியுள்ளது.
- 2017 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து, அரசாங்கம் ஆண்டுக்கு 14% வருவாய் வளர்ச்சியை எதிர் நோக்கியது.
- மாநிலங்கள் இழந்த வருவாயை ஈடு செய்வதற்காக, பல்வேறு ஆடம்பரப் பொருட்கள் மீது நிதி திரட்டுவதற்காக தீங்கு தரும் பொருட்கள் என்று அழைக்கப்படும் பொருட்கள் மீதும் செஸ் (வீத வரி) விதிக்கப் பட்டது.

## ஊழியர் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதம்

- 2021-22 ஆம் ஆண்டிற்கான ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கான வைப்புத் தொகை மீதான வட்டி விகிதத்தினை 8.1 சதவீத அளவில் அரசு அங்கீகரித்துள்ளது.
- ஓய்வூதிய நிதி அமைப்பான ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் சுமார் ஐந்து கோடி சந்தாதாரர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வரும் வட்டி விகிதத்தில் இது நாற்பது ஆண்டுகளில் இல்லாத அளவு குறைவாக உள்ளது.
- இந்த ஆண்டு மார்ச் மாதத் தொடக்கத்தில், 2021-22 ஆம் ஆண்டிற்கான வருங்கால வைப்பு நிதிக்கான வட்டியை 2020-21 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 8.5 சதவீதம் என்ற அளவிலிருந்து 8.1 சதவீதம் என்ற அளவாகக் குறைப்பதற்கு ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு முடிவு செய்திருந்தது.




## இந்தியாவில் டிஜிட்டல் பணவழங்கீடுகள்

- இந்த அறிக்கையானது 'இந்தியாவில் டிஜிட்டல் பணவழங்கீடுகள்: $10 டிரில்லியன் வாய்ப்புகள்' என்று தலைப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தும் சந்தை மதிப்பானது வரும் நான்கு ஆண்டுகளில், 2026 ஆம் ஆண்டில் தற்போதைய மூன்று டிரில்லியன் டாலர்களிலிருந்து பத்து டிரில்லியன் டாலர்களாக மூன்று மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- Boston Consulting Group என்ற அமைப்புடனான ஒரு இணைப்பிற்குப் பிறகு PhonePe என்ற அமைப்பு வெளியிட்ட ஒரு அறிக்கையால் இது உறுதிப்படுத்தப் பட்டது.





## இந்தியாவின் முதல் வங்கி மெட்டாவேர்ஸ் கியாவர்ஸ்


- கியாவர்ஸ் இந்தியாவின் முதல் மெய்நிகர் உலக வங்கி ஆகும்.
- உலகளவில் நிதி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களுக்குச் சேவை வழங்கும் டிஜிட்டல் தீர்வுகள் வழங்குநரான Kiya.ai என்ற நிறுவனம் இதை அறிவித்தது.
- அவதார் (மெய்நிகர் மனித உருவம்) அடிப்படையிலான ஊடாடல்கள் மூலம் நிஜ உலக வங்கியை மெய்நிகர் உலக வங்கியுடன் இணைப்பதற்கான நிகழ்வுகளை கியாவர்ஸ் பயன்படுத்துகின்றது.
- மெய்நிகர் வழித் தொடர்புகளைச் செயல்படுத்த வங்கிகள் மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்களால் (NBFCs) இது பயன்படுத்தப்படும்.

## RBI வழங்கும் வட்டி விகிதம்

- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு ரெப்போ விகிதத்தை 50 அடிப்படை புள்ளிகள் அதிகரித்து 4.90% ஆக உயர்த்த ஒரு மனதாக வாக்களித்தது.
- 2022 ஆம் ஆண்டின் மே மாதத்தில், ரிசர்வ் வங்கி ரெப்போ ரேட் அல்லது குறுகிய கால கடன் விகிதத்தை 40 அடிப்படை புள்ளிகள் அதிகரித்தது.
- ரிசர்வ் வங்கியின் இந்த நடவடிக்கை, கார்கள் மற்றும் வீடுகளை வாங்குவதற்குக் கடன் பெறுபவர்களுக்கும், மூலதனத்தைத் திரட்ட விரும்பும் MSME நிறுவனங்களுக்கும் கடன் வாங்கும் செலவுகளை அதிகரிக்கும்.
- கோவிட்-19 மூலம் பாதிப்படைந்தப் பொருளாதாரத்தை ஆதரிப்பதற்காக வழங்கப் பட்ட வசதிகளைத் திரும்பப் பெறுவதில் கவனம் செலுத்தவும் இது முடிவு செய்துள்ளது.
- வளர்ச்சியை ஆதரிக்கும் அதே வேளையில், பணவீக்கம் மேற்கொண்டுக் குறிப்பிட்ட இலக்கிற்குள் இருப்பதை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது
- நிதிக் கொள்கைக் குழு இந்தியாவில் வட்டி விகித இலக்குகளை நிர்ணயிக்கிறது.
- இந்தக் குழு ஆண்டுக்கு 4 முறையாவது கூடுகிறது.
- ரிசர்வ் வங்கியின் ஆளுநர் இக்குழுவின் தலைவராகச் செயல்படுகிறார்.




## உலக முதலீட்டு அறிக்கை




- ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு (UNCTAD) இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் அன்னிய நேரடி முதலீட்டை அதிகம் பெறுபவர்களில் இந்தியா ஒரு இடம் முன்னேறி 7வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2020 ஆம் ஆண்டில் ல் 64 பில்லியன் டாலர்களாக இருந்த இந்தியாவுக்கான அந்நிய நேரடி முதலீடு 2021 ஆம் ஆண்டில் 45 பில்லியன் டாலராக குறைந்துள்ளது.
- அன்னிய நேரடி முதலீட்டில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

- அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக சீனா மற்றும் ஹாங்காங் இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன.
- முதல் 10 பொருளாதாரங்களில், இந்தியா மட்டுமே அதன் முதலீட்டு வரத்தில் சரிவினைக் கண்டுள்ளது.

## கிரிப்டோ ரூபாய் குறியீடு

- இது CoinSwitch (CRE8) என்ற நிறுவனத்தால் தொடங்கப்பட்டது.
- இது இந்திய ரூபாய் அடிப்படையிலான கிரிப்டோ துறையின் செயல்திறனை அளவிடுவதற்கான இந்தியாவின் முதல் இலக்குக் குறியீடு ஆகும்.
- CRE8 எட்டு கிரிப்டோ சொத்துக்களின் செயல்திறனைக் கண்காணிக்கிறது (பிட் காயின், ஈத்தேரியம், ரிப்பிள், பைனான்ஸ் காயின் மற்றும் கார்டானோ).
- இவை இந்திய ரூபாயில் வர்த்தகம் செய்யப்படும் கிரிப்டோ சொத்துக்களின் மொத்தச் சந்தை மூலதனத்தில் 85%க்கும் அதிகமாகும்.

## உயிரித் தொழில்நுட்ப தொடக்க நிறுவனக் கண்காட்சி 2022

- 2022 ஆம் ஆண்டின் உயிரித் தொழில்நுட்ப தொடக்க நிறுவனக் கண்காட்சியினைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இது நாட்டில் உயிரித் தொழில்நுட்பத் துறையின் விரிவான வளர்ச்சியின் மீதான ஒரு பிரதிபலிப்பாகும்.
- உயிரித் தொழில்நுட்பத் துறை மற்றும் உயிரித் தொழில்நுட்பத் தொழில்துறை ஆராய்ச்சி உதவிக் குழு ஆகியவற்றினால் உயிரித் தொழில்நுட்பத் தொழில்துறை ஆராய்ச்சி உதவி அமைப்பின் பத்து ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் இந்த கண்காட்சியானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இதற்கான கருத்துரு: 'உயிரித் தொழில்நுட்ப தொடக்க நிறுவனப் புத்தாக்கங்கள்: ஆத்மநிர்பர் பாரதத்தை நோக்கியப் பயணம்' என்பதாகும்.



## ஆம்னிகார்டு

- ஆம்னிகார்டு என்பது நாடு முழுவதும் பணம் எடுப்பதற்கான முதலாவது இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்ற PPI (முன்கட்டண வழங்கீட்டுக் கருவி) ஆக மாறியது.
- உரிமம் பெற்ற வங்கி சாராத நிறுவனங்களுக்கு டிஜிட்டல் கோப்புகளிலிருந்துப் பணம் எடுப்பதற்கு ரிசர்வ் வங்கி அனுமதி வழங்கியதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது.

## ஏர் ஏசியா இந்தியா நிறுவனக் கையகப்படுத்துதல்


- ஏர் ஏசியா இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் முழுப் பங்குகளையும் ஏர் இந்தியா லிமிடெட் நிறுவனம் கையகப்படுத்த இந்தியப் போட்டி ஆணையம் ஒப்புதல் அளித்து உள்ளது.
- ஏர் இந்தியா லிமிடெட் என்பது டாடா சன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு மறைமுகமான முறையில் முழுவதும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாகும்.
- இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் ஆகிய நிறுவனங்களை டாடா நிறுவனம் கைப்பற்றியது.

## இந்திய திவால்நிலை மற்றும் நொடித்தல் நிலை வாரியத்தின் விதிமுறைகளில் திருத்தங்கள்

- இந்திய திவால்நிலை மற்றும் நொடித்தல் நிலை வாரியமானது அதன் திவால் விதி முறைகளைத் திருத்தியுள்ளது.
- திருத்தப்பட்ட திவால் விதிமுறைகள் ஆனது தற்போது, பெருநிறுவனங்களின் திவால் செயல்முறையின் போது, கடன் வழங்குநர்கள் தங்களது பெருநிறுவனக் கடனாளிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றியத் தகவல்களையும், அது தொடர்பான பிற நிதித் தகவல்களையும் தாக்கல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறது.
- 2016 ஆம் ஆண்டு திவால்நிலை மற்றும் நொடித்தல் நிலைக் குறியீடுகள் தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கான திவால் மற்றும் நொடித்தல் நிலை நடவடிக்கைகளை நிர்வகிக்கும் ஒரு ஒருங்கிணைந்தக் கட்டமைப்பை உருவாக்குகிறது.


## மொத்த விலைப் பணவீக்கம்

- மொத்த விலை அடிப்படையிலானப் பணவீக்கம் மே மாதத்தில் உயர்ந்த அளவான 15.88 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- இது 2012 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட தற்போதையத் தொடரில் மிக உயர்ந்த அளவைக் குறிக்கிறது
- இது கனிம எண்ணெய்கள், கச்சா பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, உணவுப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள், உணவு அல்லாத பொருட்கள், இரசாயனங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களின் விலை உயர்வே ஒரு முதன்மையான காரணமாகும்.




## இரண்டாவது பெரிய எண்ணெய் வழங்கீட்டு நாடு

- ❖ சவுதி அரேபியாவைப் பின்னுக்குத் தள்ளி இந்தியாவின் இரண்டாவது பெரிய எண்ணெய் விநியோக நாடாக ரஷ்யா மாறியுள்ளது.
- ❖ இப்பட்டியலில் ஈராக் முதலிடத்தில் உள்ளது.
- ❖ அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக, உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் நுகர்வோர் நாடாக இந்தியா திகழ்கிறது.




## அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதம்

- ❖ அமெரிக்க மத்திய வங்கி நிறுவனமானது 75 அடிப்படைப் புள்ளிகள் அல்லது 0.75 சதவீதப் புள்ளிகள் என்ற அளவில் வட்டி விகிதங்களை உயர்த்தியது.
- ❖ பணவீக்கத்தின் எழுச்சியைத் தடுக்கவும், மந்தமானப் பொருளாதாரத்தைச் சரி செய்யவும் வேண்டி மேற்கொள்ளப்படும் இது 28 ஆண்டுகளில் இல்லாத மிகப்பெரிய உயர்வாகும்.

## 'பசுமைக் கடன்' குறியீடு


- அதானி டிரான்ஸ்மிஷன் லிமிடெட் நிறுவனத்தின், 700 மில்லியன் டாலர் சுற்றுக் கடன் வசதியினை, சஸ்டைனலிடிக்ஸ் நிறுவனம் 'பசுமைக் கடன்' எனக் குறிப்பிட்டுள்ளது.
- இது சுற்றுக் கடன் வசதிக்கான பசுமைக் கடன் கட்டமைப்பை உறுதி செய்கிறது.

## பெண்களுக்கான தொழில் தொடக்க ஊக்குவிப்புத் திட்டம்

- பெண் நிறுவனர்களுக்கான ஒரு தொழில் தொடக்க ஊக்குவிப்புத் திட்டத்தை கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது.
- நிதி திரட்டுதல் மற்றும் பணியமர்த்தல் போன்ற சவால்களை எதிர்கொள்ள இந்தத் திட்டம் அவர்களுக்கு உதவும்.
- பெண் நிறுவனர்களுக்கான தொடக்க நிறுவன ஊக்குவிப்புத் திட்டமானது ஜூலை-2022 முதல் செப்டம்பர்-2022 வரை செயலில் இருக்கும்.

## சுவிஸ் வங்கிகளில் இந்திய நிதிகள்

- சுவிஸ் வங்கிகளில் இந்திய நாட்டினைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றால் வைக்கப்பட்டுள்ள நிதியானது, 2020 ஆம் ஆண்டில் 2.55 பில்லியன் சுவிஸ் பிராங்குகளாக (ரூ. 20,700 கோடிக்கு மேல்) உயர்ந்துள்ளது.
- இது இந்தியாவைச் சேர்ந்த கிளை நிறுவனங்கள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் மூலம் வைக்கப்பட்ட நிதிகளை உள்ளடக்கியதாகும்.
- 2019 ஆம் ஆண்டின் இறுதியில் சுவிஸ் வங்கிகளில் 899 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் (ரூ. 6,625 கோடி) என்ற அளவில் வைக்கப்பட்டிருந்த இந்திய வாடிக்கையாளர்களின் மொத்த நிதியானது தற்போதைய அளவிற்கு அதிகரித்துள்ளது.
- இது இரண்டு ஆண்டுகளாக நடப்பில் இருந்த சரிவு நிலைப் போக்கை மாற்றியமைத்து, 13 ஆண்டுகளில் இல்லாத அளவிலான உயர்விற்குக் கொண்டு சென்றுள்ளது.



## பணவழங்கீட்டுக் கொள்கை 2025

- இந்திய ரிசர்வ் வங்கியானது, பணவழங்கீட்டு முறைகளுக்கான ஒரு ஆவணத்தில் டிஜிட்டல் (எண்ணிம) நிதிக் கட்டமைப்புக் கொள்கையை வெளியிட்டது.
- ஒவ்வொருப் பயனாளருக்கும் பாதுகாப்பான மற்றும் மலிவான இணையவழிப் பண வழங்கீட்டு வசதிகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆவணமானதுப் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:
    - பண வழங்கீட்டு வசதிகளை வழங்கும் பெரியத் தொழில்நுட்பம் மற்றும் நிதித் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான விதிமுறைகள்
    - தவணை முறைச் சேவைகளுடன் கூடிய பண வழங்கீட்டு வசதிகளுக்கான வழி காட்டுதல்கள்
    - மத்திய வங்கியின் டிஜிட்டல் (எண்ணிம) நாணயத்தை அறிமுகப்படுத்துதல்
    - வங்கியின் கடன் அட்டைகளையும் வங்கியின் பிற கடன் வழங்கீட்டு வசதிகளையும் ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுக வசதியுடன் (UPI) இணைத்தல்.

## உலக வர்த்தக அமைப்பு - உலகளாவிய வர்த்தக ஒப்பந்தங்கள்

- உலக வர்த்தக அமைப்பின் 12வது அமைச்சர்கள் மாநாடானது, மீன்பிடித்தல் குறித்த உறுதிப்பாடுகள், கோவிட்-19 தடுப்பூசிகளுக்கான அறிவுசார் சொத்துரிமைகளில் (IP) பகுதியளவு தள்ளுபடி மற்றும் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு குறித்த உறுதி மொழிகள் உள்ளிட்ட வர்த்தக ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளித்தது.
- அதிகளவு மற்றும் அதிகபட்ச மீன்பிடிப்புக்குப் பங்களிக்கும் சில வகையான மீன்பிடி மானியங்கள் தடை செய்யப் பட்டுள்ளன.
- மேலும் இது சட்டவிரோதமான, தகவல் அளிக்கப் படாத, ஒழுங்குமுறை இல்லாத மீன் பிடிப்புக்குப் பங்களிக்கும் மானியங்களையும் நீக்குகிறது.
- இது கோவிட் தடுப்பூசிகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதற்கு வளர்ந்து வரும் நாடுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

## வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் உச்சி மாநாட்டில் ஜப்பான் பங்கேற்பு

- இந்த மாதத்தில் ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நடைபெற உள்ள வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் உச்சி மாநாட்டில் ஜப்பானியப் பிரதமர் ஃபுமியோ கிஷிடா பங்கேற்க உள்ளார்.
- அட்லாண்டிக் எல்லைக்கு அப்பாற்பட்ட நாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டணியின் உயர்மட்டக் கூட்டத்தில் பங்கேற்ற முதல் ஜப்பானியத் தலைவர் இவர் ஆவார்.
- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில் சேர விண்ணப்பித்த ஸ்வீடன் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் இந்த உச்சி மாநாட்டிற்குத் தங்களதுப் பிரதிநிதிகளை அனுப்புகின்றன.
- தென் கொரியாவின் புதிய அதிபர் யூன் சுக்-யோல் தென் கொரிய நாட்டிலிருந்து இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் முதல் தலைவர் ஆவார்.

## பரிவர்த்தனைகளுக்கான இணைய வழி ஆணைகளின் வரம்பு

- இந்திய ரிசர்வ் வங்கியானது, கூடுதல் அங்கீகாரக் கூறுகளுக்கான வரம்பினை ஒரு பரிவர்த்தனைக்கு 5,000 ரூபாயில் இருந்து 15,000 ரூபாயாக உயர்த்தியுள்ளது.
- கடன் அட்டைகள், முன்பண வழங்கீட்டு கருவிகள் மற்றும் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் ஆகியவற்றின் மீதான இணையவழி ஆணைகளுக்கு இது பொருந்தும்.
- ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.15,000 செலுத்துவதற்கு கூடுதல் அங்கீகாரம் தேவையில்லை என்பதை இது குறிக்கிறது.

## மிகவும் மதிப்புமிக்க உலகளாவியத் தயாரிப்புகள்

- கந்தார் பிராண்ட்ஸ் மதிப்பீட்டு நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டு மிகவும் மதிப்புமிக்க உலகளாவியத் தயாரிப்புகள் தரவரிசையில் ஆப்பிள் நிறுவனம் முதலிடத்தைப் பிடித்தது.
- கூகுள் நிறுவனம் இரண்டாம் இடத்திற்கு முன்னேறி, இந்தத் தரவரிசையில் வேகமாக உயர்ந்து வருகிறது.
- இதில் அமேசான் நிறுவனம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

**Kantar BrandZ Top 10 Most Valuable Global Brands 2022**

| Rank 2022 | Rank change | Brand | Country of Origin | Brand Value 2022 ($M) | Brand Value 2021 ($M) | % Brand Value Change 2022 vs 2021 |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | Apple | US | 947,062 | 611,997 | 55% |
| 2 | 1 | Google | US | 819,573 | 457,998 | 79% |
| 3 | -2 | Amazon | US | 705,646 | 683,852 | 3% |
| 4 | 0 | Microsoft | US | 611,460 | 410,271 | 49% |
| 5 | 0 | Tencent | China | 214,023 | 240,931 | -11% |
| 6 | 3 | McDonald's | US | 196,526 | 154,921 | 27% |
| 7 | 1 | Visa | US | 191,032 | 191,285 | 0% |
| 8 | -2 | Facebook | US | 186,421 | 226,744 | -18% |
| 9 | -2 | Alibaba | China | 169,966 | 196,912 | -14% |
| 10 | 11 | Louis Vuitton | France | 124,273 | 75,730 | 64% |

## இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதார நாடு

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் சமீபத்தியத் தரவுகளின் படி, அமெரிக்க நாடானது இந்தியாவின் மிகப்பெரிய ஒரு வர்த்தகப் பங்குதார நாடாக மாறி உள்ளது.
- அமெரிக்காவுடனான இந்தியாவின் இருதரப்பு வர்த்தக அளவானது 119.42 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற மதிப்பினை எட்டியுள்ளது.
- இது சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகத்தை விட அதிகமாக உள்ளது.
- சீன நாடானது 2013-2014 முதல் 2017-2018 வரையிலும், 2020-2021 வரையிலும் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதார நாடாகத் திகழ்ந்தது.

## வங்கி நோட்டுகளின் விற்பனை விலை

- 2022 ஆம் நிதியாண்டில் ₹20, ₹50, ₹100 மற்றும் ₹200 ஆகிய மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளின் விற்பனை விலையானது உயர்ந்துள்ளது.

- இருப்பினும், ₹500 மதிப்பிலான நோட்டுகளின் விலை மாறாமல் உள்ளது.
- 2016-17 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிகப் பெரிய உயர்விற்குப் பிறகு 2022 ஆம் நிதி ஆண்டில் நாணயத்தை அச்சிடுவதற்கு ஆகும் ஒட்டு மொத்தச் செலவானது இரண்டாவது மிக உயர்ந்ததாகும்.
- 1,000 எண்ணிக்கையிலான 50 ரூபாய் நோட்டுகளின் விற்பனை விலையானது 2021 ஆம் நிதியாண்டை விட 2022 ஆம் நிதியாண்டில் அதிகபட்சமாக 23 சதவீதம் அதிகரித்து உள்ளது.
- 20 ரூபாய் நோட்டுகளின் விற்பனை விலையானது குறைந்த அளவான 1 சதவீதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது.


**Selling price of bank notes** *(in ₹/1,000 pieces)*

| Denomiantion | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| ₹10 | 700 | 750 | 760 | 990 | 960 |
| ₹20 | 850 | NA | 770 | 940 | 950 |
| ₹50 | 830 | 820 | 910 | 920 | 1,130 |
| ₹100 | 1,500 | 1,340 | 1,380 | 1,640 | 1,770 |
| ₹200 | 2,240 | 2,150 | 2,130 | 2,220 | 2,370 |
| ₹500 | 2,390 | 2,130 | 2,150 | 2,290 | 2,290 |
| ₹2,000 | 4,180 | 3,530 | NA | NA | NA |

Source: BRBNML

## பிளாக் ஷ்வான் நிகழ்வு

- ஒரு பிளாக் ஷ்வான் நிகழ்வு என்பது ஒரு அசாதாரணமான, எதிர்பாராத, மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்குகிற நிகழ்வாகும்.
- இது சமூகம் மற்றும் முழு உலகின் மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.




- நிதியியல் பேராசிரியரான நாசிம் நிக்கோலஸ் தலேப், 2001 ஆம் ஆண்டில் கருப்பு அன்னம் (பிளாக் ஷ்வான் நிகழ்வு) என்ற ஒரு கருப்பொருளை முன்மொழிந்தார்.

- இந்த நிகழ்வுகள் வியத்தகு முறையில் அரிதானவை, கணிக்கமுடியாதவை மற்றும் எதிர்பாராதவை ஆகிய மூன்று தனித்துவமானப் பண்புகளைக் கொண்டிருப்பதாக நம்பப் படுகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் மதிப்பீட்டு அறிக்கையின் படி குறிப்பிடத்தக்க உலகளாவிய இடர் சூழ்நிலை அல்லது "பிளாக் ஷ்வான் நிகழ்வு" ஏற்பட்டால், இந்திய நாடு ரூ.7,80,000 கோடி வரை மூலதன இழப்பினை எதிர்கொள்ள நேரிடும்.

### உலகளவில் தங்க மறுசுழற்சிச் செயல்முறை

- உலகிலேயே அதிகளவில் தங்கத்தை மறுசுழற்சி செய்யும் நான்காவது பெரிய நாடாக இந்தியா மாறியுள்ளது.
- இந்தியாவில் 2021 ஆம் ஆண்டில் 75 டன் தங்கம் மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையை உலகத் தங்கச் சபையானது வெளியிட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 168 டன் தங்கத்தினை மறுசுழற்சி செய்து உலக அளவில் சீனா முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- இதைத் தொடர்ந்து இத்தாலி இரண்டாவது இடத்திலும் (80 டன்) அமெரிக்கா மூன்றாவது இடத்திலும் (78 டன்) உள்ளன.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### காசநோய்த் தொற்றிற்கான தோல்வழிப் பரிசோதனை

- இந்தியா 'c-TB' எனப்படும் புதிதாக அங்கீகரிக்கப்பட்ட "இந்தியாவிலேயே தயாரிக்கப் பட்ட" காசநோய்த் தொற்றிற்கான தோல்வழிப் பரிசோதனைக் கருவியை அறிமுகப் படுத்த உள்ளது.
- இந்தச் செலவு குறைந்த கருவியானது மற்ற அதிக நோய்ச் சுமையைக் கொண்ட நாடுகளுக்கும் மகத்தானப் பயன்களைத் தரும்.
- "காசநோய் உள்ளவர்களைத் தத்தெடுத்தல்" என்ற ஒரு புதிய முன்னெடுப்பானது இந்த ஆண்டில் தொடங்கப்பட உள்ளது.

### முதலாவது மூவர்ஸ் கூட்டணி

- இந்தியா சமீபத்தில் முதலாவது மூவர்ஸ் கூட்டணி என்ற உலகளாவிய பொது-தனியார் கூட்டு முயற்சியில் இணைந்தது.
- இந்த முன்னெடுப்பானது, அமெரிக்க அதிபர் ஜோ பிடன் மற்றும் உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆகியவற்றால் 26வது பங்குதாரர்கள் மாநாட்டில் தொடக்கி வைக்கப் பட்டது.
- இதில் 50 புதியப் பெருநிறுவன உறுப்பினர்கள் இணைந்தனர்.

## பூசா மென்மை ரக கோதுமை 1

- பூசா மென்மை ரக கோதுமை 1 (HD 3443) என்பது இந்தியாவின் முதலாவது மென்மை ரக கோதுமை வகையாகும்.
- இது தாவர வகைகளின் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைகள் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இது அனைத்து மாநிலங்களிலும் வளர ஏற்றது.
- இது 11.5% புரதச் சத்து மற்றும் 8.9% பசையம் என்ற அளவில், ஹெக்டேருக்கு 5 டன்களுக்கு மேல் உற்பத்தித் திறன் கொண்ட கோதுமை வகை ஆகும்.

## முதல் மித அதிவேக சரக்கு ரயில்


- ‘கதி சக்தி’ எனப்படும் நாட்டின் முதல் மித அதிவேக சரக்கு இரயிலை 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இந்தியாவில் அறிமுகப்படுத்த இரயில்வே நிர்வாகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- மித அதிவேக சரக்கு இரயிலானது மணிக்கு 160 கி.மீ வேகத்தில் செல்லக் கூடியதாகும்.
- தற்போது சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையில் இது போன்ற 25 இரயில்களை உருவாக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

## பரம் அனந்தா மீத்திறன் கணினி

- பரம் அனந்தா என்பது தேசிய மீத்திறன் கணினித் திட்டத்தின் (NSM) கீழ் அறிமுகப் படுத்தப் பட்ட குஜராத்தின் காந்தி நகரில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஒரு அதிநவீன மீத்திறன் கணினி ஆகும்.
- இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் அறிவியல் & தொழில் நுட்பத் துறையின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- இந்த உள்நாட்டு மென்பொருள் அடுக்கு (கணினி) அமைப்பானது C-DAC என்ற ஒரு அமைப்பினால் உருவாக்கப்பட்டது.
- இது இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சி ஆகும்.
- இது 838 டெரா ஃப்ளாப்ஸ் கணினி இயக்கத் திறன் கொண்டதாகும்.

## கோள்களின் அணிவகுப்பு

- புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய கோள்கள் ஜூன் மாதத்தின் விடியற் காலை வானத்தில் ஓர் அரிய வானியல் நிகழ்வாக ஒரே நேர்க்கோட்டில் வர உள்ளன.
- புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகியவை கடைசியாக இதே போன்று ஒரே நேர்க் கோட்டில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வந்தன.
- முன்னதாக 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரத்தில் வெள்ளி, வியாழன், செவ்வாய் மற்றும் சனி ஆகிய நான்கு கிரகங்கள் 1,000 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரே நேர்க் கோட்டில் வந்தன.




## உலகின் மிகவும் சக்தி வாய்ந்த மீத்திறன் கணினி


- உலகின் சக்தி வாய்ந்த முதல் 500 மீத்திறன் கணினிகளின் மீதான 59வது பட்டியலினை ஜெர்மனி வெளியிட்டுள்ளது.
- ஹெவ்லெட் பேக்கார்ட் எண்டர்பிரைஸ் நிறுவனத்தின் கட்டமைப்பைப் பயன்படுத்தி உருவாக்கப் பட்ட அமெரிக்காவைச் சேர்ந்த ORNL என்ற நிறுவனத்தின் ஒரு மீத்திறன் கணினியான ஃபிரான்டியர் முதல் இடத்தினைப் பெற்றது.
- எனவே, இது ஜப்பானின் ஃபுகாகுவை விஞ்சி உள்ளது.
- இது உலகின் சக்தி வாய்ந்த மீத்திறன் கணினியாக மாறியது.

## அஸ்திரா Mk-1

- பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஹைதராபாத்தைச் சேர்ந்த ஒரு பொதுத் துறை நிறுவனமான பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன் அஸ்ட்ரா மார்க்-1 என்ற ஏவுகணையை வழங்குவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- அஸ்திரா Mk-1 என்பது கண்ணுக்குப் புலப்படும் எல்லைக்கு அப்பாற்பட்ட தொலைவு வரம்புடைய வான்வழியே பாயக்கூடிய ஏவுகணையாகும்.
- கண்ணுக்குப் புலப்படும் எல்லைக்கு அப்பாற்பட்ட தொலைவு வரம்புடைய ஏவுகணைகள் 20 கடல் மைல்கள் அல்லது 37 கிலோமீட்டர் தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டவை ஆகும்.
- அஸ்ட்ரா Mk-1 ஏவுகணையின் வரம்பு சுமார் 110 கி.மீ. ஆகும்.
- 150 கிமீக்கு மேல் வரம்புடைய Mk-2 ஏவுகணை உருவாக்கப்பட்டு வருகிறது.
- நீண்ட தூர வரம்புடைய Mk-3 திட்ட உருவாக்க நிலையில் உள்ளது.

## வேகமான ரேடியோ அலை வெடிப்பு

- ஒரு வேகமான ரேடியோ அலை வெடிப்பு சமீபத்தில் நிகழ்ந்துள்ளதாக வானியல் அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.
- அதன் பண்புகள் முன்பு கண்டறியப்பட்ட ஒன்றைத் தவிர மற்ற எல்லா வெடிப்புகளிலிருந்தும் வேறுபட்டவை ஆகும்.
- சமீபத்திய வெடிப்பு (FRB 20190520B என்று பெயரிடப்பட்டது) அடிக்கடி மற்றும், மீண்டும் மீண்டும் ரேடியோ அலைகளை வெளியிடுகிறது.
- இவை ஒரு சில மில்லி விநாடிகள் தோன்றிப் பின்னர் மறைந்துவிடும் ஒளியின் பிரகாசமான ஒளிப் பிழம்புகள் ஆகும்.
- முதல் வெடிப்பு 2007 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
- அதன் பிறகு, ஜூன் 2021 வரை மேலும் 140 வெடிப்புகள் கண்டுபிடிக்கப் பட்டது.




## டாவின்சி திட்டம்

- நாசா டாவின்சி என்ற திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- DAVINCI என்பது "Deep Atmosphere Venus Investigation of Noble gases, Chemistry and Imaging Mission" என்பதன் சுருக்கமாகும்.
- இந்த விண்கலம் 2029 ஆம் ஆண்டில் வெள்ளிக் கோளுக்குச் சென்று அதன் கடுமையான வளிமண்டலத்தை ஆராயும்.
- பிரத்தியேகமாக அனுப்பப்பட்டு அங்கு சென்று தரையிறங்கி வெள்ளியை ஆய்வு செய்யும் முதல் விண்கலம் இதுவாகும்.
- இது 2031 ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் வெள்ளியின் மேற்பரப்பை அடையும்.

## நிலவின் விரிவான விளக்க வரைபடம்

- நிலவின் ஒரு புதிய புவியியல் வரைபடத்தைச் சீனா வெளியிட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் அமெரிக்காவினால் வெளியிடப்பட்ட வரைபடம் மற்றும், இன்று


வரையில் வெளியான இதரவற்றையும் விட நிலவின் மேற்பரப்பின் மிக நுணுக்கமான விவரங்களைப் பதிவு செய்து வெளியிட்ட மிகவும் விரிவான வரைபடம் இதுவாகும்.

- இதற்கு முன் கண்டறியப்படாத பள்ளங்கள் மற்றும் கட்டமைப்புகளின் அனைத்து விவரங்களைக் கொண்ட இந்தப் புதிய வரைபடமானது, நிலவினைக் குறித்த எதிர்கால ஆராய்ச்சிக்கு உதவும்.
- அறிவியல் ஆராய்ச்சி, ஆய்வு மற்றும் நிலவில் தரை இறங்கும் தளத் தேர்வுக்கு இது உதவும்.

## சுற்றுப்பாதையில் உள்ள 10 தகவல் தொடர்பு செயற்கைக் கோள்கள்

- சுற்றுப்பாதையில் உள்ள பத்து தகவல் தொடர்பு செயற்கைக்கோள்களை பொதுத் துறை வணிக நிறுவனமான NSIL நிறுவனத்திடம் வழங்கச் செய்வதற்கு மத்திய அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.
- இந்தச் சொத்துக்களை NSIL நிறுவனத்திற்கு மாற்றும் நடவடிக்கையானது, மூலதனம் சார்ந்த திட்டங்கள்/திட்டங்களைச் செயல்படுத்த நிறுவனத்திற்குத் தேவையான நிதிச் சுயாட்சியை வழங்கும்.
- ஒரு ஒற்றைச் சாளர இயங்கு நிறுவனமான NSIL நிறுவனத்தின் பங்கு விண்வெளித் துறையில் வணிகத்தை எளிதாக்கும்.
- 2022 ஆம் ஆண்டில் ஸ்ரீஹரிக் கோட்டாவிலிருந்து அமேசானியா-1 மற்றும் 18 இதர செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியபோது இந்த வணிக நிறுவனமானது அதன் முதல் பணியைத் தொடங்கியது.

## விண்வெளியில் சூரியசக்தி ஆலை




- விண்வெளியில் சூரிய மின் உற்பத்தி நிலையத்தைத் தொடங்கும் திட்டத்தைச் சீனா முன்மொழிந்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் விண்வெளியில் 1 மெகாவாட் திறன் கொண்ட சூரியசக்தி மின் நிலையத்தை நிறுவ சீனா திட்டமிட்டிருந்தது.
- இந்த செயற்கைக்கோள் ஆனது 400 கி.மீ. உயரத்தில், விண்வெளியில் இருந்து தரைக்கு கம்பியில்லா மின் பரிமாற்றத் தொழில்நுட்பத்தைப் பரிசோதிக்கும்.

- இது சூரிய ஆற்றலை நுண் அலை அல்லது லேசர் கற்றையாக மாற்றும்
- லேசர்களைப் பயன்படுத்தி, இயக்கத்தில் உள்ள செயற்கைக்கோள்கள் மற்றும் பூமியில் உள்ள நிலையான இடங்கள் உட்பட பல்வேறு இலக்குகளுக்கு ஆற்றல் கற்றைகள் செலுத்தப்படும்.

## விலங்குகளுக்கான COVID-19 தடுப்பூசி

- வேளாண்துறை அமைச்சகமானது, விலங்குகளுக்கான இந்தியாவின் முதல் கோவிட்-19 தடுப்பூசியான "அனோகோவாக்ஸ்" என்ற தடுப்பூசியினை வெளியிட்டது.
- ஹரியானாவின் ஹிசார் என்னுமிடத்தில் அமைந்துள்ள தேசிய குதிரைகள் ஆராய்ச்சி மையத்தால் தடுப்பூசி உருவாக்கப்பட்டுள்ளது.
- இது கொரோனா வைரஸின் டெல்டா மற்றும் ஓமிக்ரான் ஆகிய திரிபுகளுக்கு எதிராக விலங்குகளைப் பாதுகாக்கும்.
- இந்தத் தடுப்பூசியை நாய்கள், சிறுத்தைகள், எலிகள், சிங்கங்கள் மற்றும் முயல்களுக்குப் பயன்படுத்தலாம்.
- இது டெல்டா வகை திரிபின் தொற்று பகுதியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள ஒரு செயலிழந்த நச்சு வகை தடுப்பூசியாகும்.
- இந்தியாவில் விலங்குகளுக்காக உருவாக்கப்பட்ட முதல் கோவிட்-19 தடுப்பூசி இது ஆகும்.

## புற்றுநோய் மருந்திற்கான சோதனை – தோஸ்தர்லிமாப்



- ❖ புற்றுநோய் சிகிச்சைக்கான மருந்தின் சோதனையானது, கட்டிகளை அகற்றுவதிலும், நோயாளிகளுக்கு புற்றுநோய் மீண்டும் வருவதைத் தடுப்பதிலும் 100% வெற்றியைத் தந்துள்ளது.
- ❖ இந்தச் சோதனையானது அமெரிக்காவின் மன்ஹாட்டனில் நடத்தப் பட்டது
- ❖ புற்றுநோய் செல்களின் மேற்பரப்பினைப் பற்றி அறிவதையும் அதனை வெளிக் கொணர்வதையும் நோக்கமாகக் கொண்ட இந்த மருந்தானது, உடலின் நோயெதிர்ப்பு அமைப்பு அவற்றை இயற்கையாகவே அடையாளம் கண்டு அழிக்க வழி வகை செய்கிறது.
- ❖ இத்தகைய மருந்துகள், 'செக்பாயிண்ட் இன்ஹிபிட்டர்கள்' (ஒரு குறிப்பிட்டப் பகுதியில் இயங்கும் வினைத் தடுப்பிகள்) என்று அழைக்கப்படுகின்றன.

## புதிய தொலைநோக்கியைத் தாக்கிய நுண்ணிய விண்கல்

- ❖ ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியானது விண்வெளியில் உள்ள நுண்ணிய விண்கற்களால் தாக்கப்பட்டது.
- ❖ இது நாசாவின் அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பம் கொண்ட ஒரு தொலை நோக்கியாகும்.
- ❖ இது பேரண்டத்தினைப் பற்றி மேலும் ஆராய்வதற்காகவும், பெருவெடிப்பு ஏற்பட்ட போது உருவான நட்சத்திரங்கள் மற்றும் விண்மீன் திரள்களைக் காண்பதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஸ்ட்ராபெரி சூப்பர்மூன் 2022

- ❖ 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வரும் முழு நிலவானது நான்கு தொடர்ச்சியான சூப்பர் மூன்களில் இரண்டாவதாகும்.
- ❖ சூப்பர் மூன் என்பது பூமியிலிருந்து வெகு தொலைவில் இருக்கும் போது முழு நிலவை விட சற்றுப் பெரியதாக தோன்றும்.
- ❖ ஜூன் மாதத்தில் வரும் முழு நிலவானது பொதுவாக 'ஸ்ட்ராபெரி மூன்' என்று அழைக்கப் படுகிறது.
- ❖ இந்தப் பெயரானது பூர்வீக அமெரிக்கர்களால் உருவாக்கப்பட்டது.
- ❖ இந்தியாவில் இது வட் பூர்ணிமா என்றும் அழைக்கப்படுகிறது.




## பிருத்வி-II ஏவுகணை சோதனை

- இந்திய நாடானது, அணுசக்தித் திறன் கொண்ட மற்றும் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட பிரித்வி-II ஏவுகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- பிருத்வி-II ஏவுகணையானது பரிசோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்ட அமைப்பு மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஆகும்.
- இது அதிக அளவு துல்லியத்துடன் இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது.
- இந்த ஏவுகணையானது திரவ எரிபொருளில் இயங்கக்கூடிய ஒற்றை-நிலை ஏவுகணை ஆகும்.
- மேலும் இது 350 கி.மீ தூர வரம்புடையது.





## டரான்டுலா நெபுலா

- வானியலாளர்கள் டரான்டுலா நெபுலாவினை ஆராய்ந்ததன் மூலம் ஒரு நட்சத்திர உருவாக்கத்தின் இயக்கவியல் பற்றிய ஒரு புதியப் புரிதலைப் பெற்றுள்ளனர்.
- டரான்டுலா நெபுலா மாபெரும் மாகெல்லானிக் கிளவுட் என்று அழைக்கப்படும் பால்வெளி அண்டத்தில் அமைந்துள்ளது.
- இது 600 ஒளியாண்டுகள் தொலைவிலான விட்டம் கொண்ட வாயு மற்றும் தூசிகளால் ஆன நட்சத்திரங்கள் ஆகும்.
- இது பூமியிலிருந்து சுமார் 1,70,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இதற்கு முறையாக 30 டோராடஸ் என்று பெயரிடப்பட்டது.
- இது டோராடோ விண்மீன் மண்டலத்தின் திசையில் உள்ள விண்வெளிக் கூறுகளின் பட்டியல் எண்ணைக் குறிக்கிறது.




## கையா விண்வெளி ஆய்வுத் திட்டம்

- ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் கையா விண்வெளி ஆய்வகமானது, சமீபத்தில் பல "நட்சத்திர அதிர்வுகளை" கண்டறிந்தது.
- அவை சுனாமி போன்ற அதிர்வுகளைப் போலவே இருந்தன.
- நட்சத்திர அதிர்வுகள் என்பது நட்சத்திரங்களின் வடிவங்களை மாற்றுகின்ற நட்சத்திர மேற்பரப்பில் ஏற்படும் சிறிய இயக்கங்கள் ஆகும்.
- 2013 ஆம் ஆண்டு கையா விண்வெளி ஆய்வுத் திட்டமானது தொடங்கப்பட்டது.
- இது பால்வெளி அண்டத்தினைப் பற்றி ஆய்வு செய்கிறது.
- இந்த ஆய்வுத் திட்டமானது அண்டத்தின் வரைபடத்தை உருவாக்கியுள்ளது.
- இது நட்சத்திரங்கள் பற்றியும், நட்சத்திரங்களின் நிறம், வெப்பநிலை, வயது மற்றும் பிரகாச அளவு உள்ளிட்ட அவற்றின் வேதியியல் பண்புகள் பற்றிய பல புதியத் தகவல்களையும் வெளிப்படுத்தியுள்ளது.



## இந்தியாவின் முதல் புவியீர்ப்பு எதிர்விசை கொண்ட கவச உடை

- டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவக் கல்வி நிறுவனமானது உலகின் முதல் புவியீர்ப்பு எதிர்விசை கொண்ட கவச உடையை உருவாக்கியுள்ளது.
- இது விண்வெளி வீரர்களின் உடல் தசைகளை வலுப்படுத்தவும், எலும்புகளில் உள்ள தாதுக்களின் இழப்பைத் தடுக்கவும் உதவும்.
- இது விண்வெளியில், விண்வெளி வீரர்களின் எடையை 70 சதவீதத்திற்கு மேல் அதிகரித்து அவர்கள் அங்கு மிதக்காமல் தடுக்கும்.

## ஜிசாட்-24

- நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் நிறுவனமானது GSAT-24 என்ற செயற்கைக்கோளினை விண்ணில் ஏவியது.
- முழு செயற்கைக்கோளின் திறனையும் நேரடியாக ஒளிபரப்பு (DTH) சேவை வழங்கும் ஒரு நிறுவமான டாட்டா பிளே என்ற நிறுவனத்திடம் குத்தகைக்கு வழங்குவது போன்ற விண்வெளி சார்ந்த சீர்திருத்தங்களைத் தொடர்ந்து இது ஏவப் பட்டது.
- இது அந்நிறுவனத்தின் முதல் "தேவையின் பேரில் உருவாக்கப்பட்டு ஏவப்பட்ட" தகவல் தொடர்பு செயற்கைக் கோள் ஆகும்.
- இந்தச் செயற்கைக்கோளானது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்காக உருவாக்கப்பட்ட செயற்கைக் கோள் ஆகும்.
- இது பிரெஞ்ச் கயானாவில் உள்ள கௌரோவ் எனுமிடத்திலிருந்து ஏரியன் 5 ராக்கெட் (தென் அமெரிக்கா) மூலம் புவிநிலைச் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக ஏவப்பட்டது.

## ஒக்லா நிறுவனத்தின் உலகளாவிய செயல்வேகச் சோதனைக் குறியீடு

- வலையமைப்பு நுண்ணறிவு மற்றும் இணைப்பு நுண்ணறிவுச் சேவை வழங்கும் நிறுவனமான ஒக்லா என்ற ஒரு நிறுவனம், உலகளாவிய செயல்வேகச் சோதனைக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் கடந்த மே மாதத்தில் 14.28 Mbps என்ற அளவில் சராசரி கைபேசிப் பதிவிறக்க வேகம் பதிவாகியுள்ளதாக இந்தக் குறியீடு குறிப்பிடுகிறது.
- இதன் மூலம், இந்த உலகளாவியத் தரவரிசையில் இந்தியா மூன்று இடங்கள் முன்னேறி 115வது இடத்தில் உள்ளது.
- உலகளாவியக் கைபேசி செயல்வேகத்தில் நார்வே மற்றும் சிங்கப்பூர் ஆகியவை முதலிடத்தில் உள்ளன.

## VL-SRSAM ஏவுகணைச் சோதனை

- ஒடிசாவின் சந்திப்பூர் கடற்கரையில், இந்தியக் கடற்படைக் கப்பலில் (INS) இருந்து செங்குத்தாக ஏவப்படக் கூடிய குறுகிய தூர வரம்புடைய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையினை (VL-SARAM) இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

- இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (DRDO) சோதிக்கப் பட்டது.
- இது விமானத்தின் அமைப்பினை ஒத்த ஒரு அதிவேக வான் இலக்குக்கு எதிராக பரிசாதிக்கப் பட்டது.
- VL-SRSAM என்பது கப்பலில் ஏவக்கூடிய ஒரு ஆயுத அமைப்பாகும்.
- இது கடல் அலையின் அருகில் வரையிலான உள்ள இலக்குகள் உள்ளிட்ட நெருங்கிய எல்லைகளில் உள்ள பல்வேறு வான்வழி அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான ஒரு ஏவுகணையாகும்.

## குரங்கு அம்மை நோய்ப் பரவல்

- உலக சுகாதார வலையமைப்பானது (WHN) குரங்கு அம்மை நோய்ப் பரவலைப் பொது சுகாதார அவசரநிலையாக அறிவித்துள்ளது.
- இந்தப் பெருந்தொற்றானது ஒரு நாடு அல்லது பிராந்தியத்திற்கு உள்ளே மட்டும் பரவ வில்லை என்பதையும், இந்தச் சமூகப் பரவலைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் தேவை என்பதையும் இது குறிக்கிறது.
- உலக சுகாதார வலையமைப்பு என்பது கோவிட்-19 பெருந்தொற்றின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட அறிவியலாளர்களை உள்ளடக்கிய ஒரு சுயாதீனமானக் கூட்டணியாகும்.
- பொது சுகாதார அவசரநிலைப் பிரகடனம் என்பது உலகளாவிய எச்சரிக்கையின் மிக உயர்ந்த நிலையாகும்.
- தற்போது இது கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் போலியோவிற்கு மட்டுமே பொருந்தும்.

## பூச்சி உண்ணும் தாவரம்




- உத்தரகாண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்தில் உள்ள மண்டல் பள்ளத்தாக்கில் பூச்சிகளை உண்ணும் ஒரு அரிய தாவரம் ஆனது கண்டறியப்பட்டுள்ளது.
- உத்தரகாண்ட் மற்றும் ஒட்டு மொத்த மேற்கு இமயமலைப் பகுதிகளில் முதன்முதலில் இந்தத் தாவரம் தென்பட்டுள்ளது.

- பிடி போன்ற மூடியினுள் தன் இரையை இழுக்க ஒரு வெற்றிடம் அல்லது எதிர்மறை அழுத்தப் பகுதியை இந்தத் தாவரம் உருவாக்குகிறது.
- பூச்சி உண்ணும் தாவரமானது அதன் இரையைச் சிக்க வைப்பதற்கு மிகவும் அதி நவீனமான மற்றும் மேம்பட்டத் தாவர அமைப்புகளில் ஒன்றைப் பயன்படுத்துகிறது.
- இதன் இரையானது, புரோட்டோசோவா முதல் பூச்சிகள், கொசுவின் லார்வாக்கள் மற்றும் இளம் டாட்போல்கள் (தலைப்பிரட்டைகள்) வரை ஆகும்.

## ஒரே நேர்கோட்டில் 5 கோள்கள்


- நமது சூரியக் குடும்பத்தில் உள்ள ஐந்து பெரிய கோள்கள் ஒரே நேர்கோட்டில் வெகு பிரகாசமாகக் காட்சியளிக்கின்றன.
- புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய 5 கோள்கள் ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளன.
- வானம் மேகங்களின்றித் தெளிவாக இருந்தால், இந்த அமைப்பினை வெறும் வெற்றுக் கண்களாலேயேப் பார்க்க இயலும்.
- புதன் கோள் பொதுவாக சூரியனின் பிரகாசமான ஒளியால் நமது பார்வையில் இருந்து மறைக்கப் படும் என்பதால் இது ஒரு அரிய நிகழ்வாகும்.
- கடைசியாக 2004 ஆம் ஆண்டில் 5 கோள்களும் ஒரே நேர்கோட்டில் வந்தன.
- மேலும் இந்த நிகழ்வு 2040 ஆம் ஆண்டு வரை மீண்டும் நிகழாது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## சமூக வன வள உரிமைகளை அங்கீகரித்தல்

- தேசியப் பூங்காவிற்குள் சமூக வன வள உரிமைகளை (CFR) அங்கீகரித்த இரண்டாவது மாநிலமாக சத்தீஸ்கர் மாறி உள்ளது.
- பஸ்தர் மாவட்டத்தில் உள்ள கங்கேர்காட்டி தேசியப் பூங்காவில் அமைந்துள்ள குடியாபதார் மற்றும் நாகல்சர் கிராமங்களின் சமூக வன வள உரிமை கோரல்களுக்கு மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தேசியப் பூங்காவில் சமூக வன வள உரிமைகளை (CFR) அங்கீகரித்த முதல் மாநிலம் ஒடிசா ஆகும்.
- இது வனவாசிகளுக்கு முடிவெடுக்கும் அதிகாரம் மற்றும் வன நிர்வாகத்தின் மீதான அதிகாரம் ஆகியவற்றினை அளிக்கிறது.



**Forest Rights Act**

Enacted in 2006, the Forest Rights Act came into effect in 2008. Considered a landmark piece of legislation as it attempts to correct historical injustices against forest dwellers in the colonial era and in independent India, it recognises forest dwellers' individual rights over their land and a village's rights to manage and conserve the forest:

**Individual Forest Rights:** Any person belonging to a scheduled tribe can claim rights to live in and cultivate up to 4 ha if he occupied it and depended on it as of December 13, 2005. A non-tribal, in addition, will have to prove his family's residence in the vicinity of the forest for 75 years prior to December 2005

**Community Forest Rights:** The Act recognises the rights of a gram sabha over forest land within the village boundaries or seasonal use of landscape for pastoral communities. This allows the villagers to own and collect, use and dispose of minor forest produce besides timber, including the right to use grazing land and water bodies and the right to protect and regenerate any community resource, among others

## தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு சிறுத்தைகள் இடமாற்றம்

- தென்னாப்பிரிக்கா மற்றும் நமீபியா ஆகிய நாடுகளிலிருந்து சிறுத்தைகளை இடம் மாற்றம் செய்வதற்கான ஒப்பந்தங்களை இந்தியா உறுதி செய்துள்ளது
- இது சிறுத்தைகளை கண்டம் தாண்டிய இடமாற்றம் என்ற இந்தியாவின் ஒரு லட்சிய நோக்குத் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறது.
- தொடக்கத்தில், தென்னாப்பிரிக்காவிலிருந்து 12 சிறுத்தைகளும் நமீபியாவிலிருந்து எட்டு சிறுத்தைகளும் இடம் மாற்றப்படும்.

- ❖ இந்திய அரசு அந்தச் சிறுத்தைகளை மத்தியப் பிரதேசத்தின் ஷியோபூர் மாவட்டத்தில் உள்ள குனோ பால்பூரின் காடுகளுக்கு அனுப்பி வைக்க உள்ளது.




## ஸ்டாக்ஹோம் மாநாட்டின் 50வது ஆண்டு நிறைவு

- ❖ 1972 ஆம் ஆண்டு ஜூன் 05 முதல் ஜூன் 16 வரையில் ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் நகரில் மனித சுற்றுச்சூழல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு நடைபெற்றது.
- ❖ 122 நாடுகள் இந்த மாநாட்டில் பங்கேற்றன.
- ❖ 'ஒரே ஒரு பூமி' என்ற கருத்துருவுடன், புவியின் சுற்றுச்சூழல் தொடர்பாக உலக நாடுகள் இது போன்று ஒன்று கூடுவது இதுவே முதல் முறையாகும்.
- ❖ 122 பங்கேற்பாளர்களில் 70 வளர்ந்து வரும் மற்றும் ஏழை நாடுகள் ஸ்டாக்ஹோம் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டன.

***முக்கியத்துவம்***

- ❖ 1972 ஆம் ஆண்டு வரை எந்த நாட்டிலும் சுற்றுச்சூழல் அமைச்சகம் இல்லை.
- ❖ முதலில், நார்வே மற்றும் ஸ்வீடன் நாடுகளே சுற்றுச்சூழலுக்கான அமைச்சகங்களை நிறுவின.
- ❖ இந்தியா தனது சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தை 1985 ஆம் ஆண்டில் நிறுவியது.



## உலகின் முதல் மீன்பிடிப் பூனைக் கணக்கெடுப்பு

- உலகின் முதல் மீன்பிடிப் பூனைக் கணக்கெடுப்பானது, ஒடிசாவில் உள்ள சிலிக்கா ஏரியில் மேற்கொள்ளப் பட்டது.
- இது உலகின் முதல் மீன்பிடிப் பூனைக் கணக்கெடுப்பினை வழங்கியது.
- இந்த ஏரியில் 176 மீன்பிடிப் பூனைகள் உள்ளன.
- சிலிக்கா ஏரியானது ஒடிசாவில் உள்ள ஆசியாவின் மிகப்பெரிய உவர் நீர் ஏரி ஆகும்.
- மேற்கு வங்காள மாநிலமானது 2012 ஆம் ஆண்டில், மீன்பிடிப் பூனைகளை தனது மாநில விலங்காக அறிவித்தது.
- சிலிக்கா அதிகாரிகள் 2020 ஆம் ஆண்டில் மீன்பிடிப் பூனைகளை அந்த ஏரியின் தூதர் என்று அறிவித்தனர்.
- மீன்பிடிப் பூனைகள் உலகம் முழுவதும் அருகி வரும் இனமாக உள்ளன.
- அவை வாழும் நாடுகளின் எல்லைக்குள், அவை சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) ஆபத்தான நிலையில் உள்ள உயிரினங்கள் அடங்கிய சிவப்புப் பட்டியலில் பாதிக்கப்படக் கூடிய இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- மீன்பிடிப் பூனை என்பது 1972 ஆம் ஆண்டின் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான முதல் அட்டவணையில் இடம் பெற்றுள்ள ஒரு இனமாகும்.




## சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு

- இது அமெரிக்காவின் யேல் மற்றும் கொலம்பியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் ஒரு வருடாந்திரப் பகுப்பாய்வு ஆகும்.
- இது உலகெங்கிலும் உள்ள நீடித்தத் தன்மையின் நிலை பற்றியத் தரவு சார்ந்த ஒரு மதிப்பீட்டை வழங்குகிறது.
- 180 நாடுகளை தரவரிசைப் படுத்திடுவதற்காக, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பொது சுகாதாரம் மற்றும் பல்லுயிர்த் தன்மை ஆகியவை இதில் பயன்படுத்தப்படும் 40 செயல்திறன் காரணிகளில் அடங்கும்.

- டென்மார்க் மற்றும் ஐக்கியப் பேரரசு போன்ற சில நாடுகள் மட்டுமே 2050 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய உமிழ்வு நோக்கங்களை எட்டும் பாதையில் உள்ளன.
- உலகின் மிகவும் நீடித்தத் தன்மையுடைய நாடாக டென்மார்க் முதலிடத்தில் உள்ளது.
- இதில் 180 நாடுகளில் இந்தியா கடைசி இடத்தில் உள்ளது.
- இதன்படி, சீனா, இந்தியா, அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நான்கு நாடுகள், தற்போதையப் போக்குகளில் தொடர்ந்தால், 2050 ஆம் ஆண்டில் உலகளாவிய எஞ்சியப் பசுமைக் குடில் வாயு உமிழ்வில் பாதிக்கும் மேலானதாக இவற்றின் பங்களிப்பு இருக்கும்.

**ENVIRONMENT PERFORMANCE INDEX**

NEIGHBOURHOOD: WHERE INDIA STANDS

| | | | |
|---|---|---|---|
| Afghanistan | 81 | Pakistan | 176 |
| Sri Lanka | 132 | Bangladesh | 177 |
| China | 160 | India | 180 |
| Nepal | 162 | | |



TOP 5: Denmark, UK, Finland, Malta, Sweden

SOME KEY INDICATORS, AND INDIA

| | | | |
|---|---|---|---|
| Biodiversity | 179 | Green House Gas emissions | 171 |
| Protected Areas | 177 | Biodiversity habitat index | 170 |
| Species Protection Index | 175 | PM 2.5 | 174 |
| Air Quality | 179 | Waste management | 151 |
| Climate Policy | 165 | | |
| Ecosystem vitality | 178 | | |

## எத்தனால் கலப்பதில் இந்தியாவின் சாதனை

**On India Achieving Its Target Of 10% Ethanol Blending**

- Ethanol blending target was achieved 5 months before deadline
- High Ethanol blending in petrol saved Rs 410 bn fx reserves
- India's efforts to protect environment is multi-dimensional and its role in climate change is negligible

- சமீபத்தில், நிர்ணயித்த இலக்கு தேதிக்கு ஐந்து மாதங்களுக்கு முன்பே, பெட்ரோலில் 10 சதவீத அளவில் எத்தனால் கலப்படத்தை இந்தியா அடைந்துள்ளது.

- 10 சதவீதம் எத்தனால் கலப்பதால் கார்பன் வெளியேற்றம் 27 லட்சம் டன்கள் குறைந்து உள்ளது.
- இதன் மூலம், எண்ணெய் இறக்குமதியில், அன்னியச் செலாவணி செலவில், இந்தியாவுக்கு ரூ41,000 கோடி சேமிக்கப்பட்டுள்ளது.


## புதிய வளங்காப்பகங்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள்

- மகாராஷ்டிரா மாநில வனவிலங்கு வாரியம் ஆனது, சமீபத்தில் 12 புதிய வளங் காப்பகங்கள் மற்றும் 3 வனவிலங்கு சரணாலயங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதுவரை, மகாராஷ்டிராவில் 15 வளங்காப்பகங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- புதிய சேர்க்கைகளுடன், இந்த எண்ணிக்கை ஆனது 27 ஆக உயரும்.
- 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்ட விதிகளின்படி, மாநிலத்தில் புதிதாக ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதிகளை அறிவிப்பதற்கு வனவிலங்கு வாரியத்தின் ஒப்புதல் தேவை ஆகும்.
- இந்த ஒப்புதலுடன், மாநிலத்தில் 3 புதிய வனவிலங்கு சரணாலயங்கள் அமைய உள்ளன.
  - லோனார் வனவிலங்கு சரணாலயத்தின் விரிவாக்கம்
  - கட்சிரோலியில் உள்ள கோலமார்கா
  - ஜல்கானில் உள்ள முக்தாய் பவானி
- கட்சிரோலியில் உள்ள கோலமார்கா இடதுசாரி தீவிரவாதிகளின் நடமாட்டத்தால் பாதிக்கப் பட்டுள்ளது.
- இது ஆபத்து நிலையில் ஆசியக் காட்டு எருமைகளை கொண்டுள்ளது.

| Approval was given for notification of following conservation reserves |
|---|
| Chivatibavari and Alaldari in Dhule |
| Kalwan, Muragad, Triambakeshwar and Igatpuri in Nashik |
| Raigad and Roha in Raigad district |
| Bhor in Pune |
| Dare Khurd (Mahadare) in Satara |
| Masai plateau in Kolhapur and |
| Mogarkasa in Nagpur |

## யாங்க்டி குடி பள்ளத்தாக்கு


- 52 ஆயிரம் ஆண்டுகளாக யாங்க்டி குடி பள்ளத்தாக்கில் பல பனிப்பாறை உருவாக்க நிகழ்வுகள் காணப் படுகின்றன.
- அவை பருவநிலை மாறுபாட்டுடன் ஒத்திசைகின்றன.
- குடி பள்ளத்தாக்கு என்பது இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தின் குமாவோன் பிரிவில் உள்ள பித்தோராகர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு இமயமலைப் பள்ளத் தாக்கு ஆகும்.




## பசுமை ஆற்றல் தடையற்ற அணுகல் விதிகள் 2022

- மத்திய அரசானது 2022 ஆம் ஆண்டின் பசுமை ஆற்றல் தடையற்ற அணுகல் விதிகளை அறிவித்துள்ளது.
- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை இது துரிதப்படுத்தும்.
- கழிவிலிருந்து ஆற்றல் உற்பத்தி செய்யும் ஆலைகள் மூலம் உருவாக்கப்படும் ஆற்றல் உள்ளிட்ட பசுமை ஆற்றலின் உற்பத்தி, கொள்முதல் மற்றும் நுகர்வு ஆகியவற்றை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பசுமை மின்சாரத்திற்கான தடையற்ற அணுகலுக்கான ஒரு எளிமையான நடைமுறையையும் இந்த விதிகள் செயல்படுத்துகின்றன.

## இராட்சத ஆமை இனம்




- 2019 ஆம் ஆண்டில் உயிருடன் கண்டறியப்பட்ட ஒரு மாபெரும் ஆமை இனமானது, கலபகோஸ் இனத்தைச் சேர்ந்தது என தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.
- கலபகோஸ் தீவுகள் ஈகுவடார் குடியரசின் ஒரு பகுதியாகும்.
- இந்த இனமானது நீண்டக் காலத்திற்கு முன்பே அழிந்து விட்டதாக நம்பப்பட்டது.

- ஃபெர்னாண்டினா தீவானது இந்த உயிரினங்களின் தாயகமாக இருப்பதால், இந்த இராட்சத இனத்திற்குப் பெர்னாண்டா என்று பெயரிடப்பட்டது.

## கனடா கார்பன் உமிழ்வுச் சந்தை

- கார்பன் மாசுபாட்டினைக் குறைக்கும் முயற்சியில் கனடா அரசாங்கம் "கனடாவின் பசுமை இல்ல வாயு ஈட்டுக் கடன் முறையை" அறிமுகப்படுத்தியுள்ளது.
- கனடாவில் 7 சதவீத பசுமை இல்ல வாயு உமிழ்விற்குக் காரணமான கழிவுகளிலிருந்து பசுமை இல்ல வாயுக்களைக் குறைத்தல் என்பது இதன் நோக்கமாகும்.
- இது கனடாவின் உமிழ்வுக் குறைப்பு இலக்குகளை அடைவதற்கான முக்கிய அங்கம் ஆகும்.

## போகேஸ்வரா யானை

- ஆசியாவிலேயே மிக நீளமான தந்தங்களைக் கொண்ட போகேஸ்வரா என்ற யானை சமீபத்தில் கர்நாடகாவின் பந்திப்பூர் புலிகள் காப்பகத்தில் உள்ள குண்ட்ரே மலைத் தொடரில் உயிரிழந்தது.
- இந்தக் காட்டு யானையானது, மிஸ்டர் கபினி என்றும் அழைக்கப் படுகிறது.
- போகேஸ்வரின் தந்தங்கள் 2.54 மீட்டர் மற்றும் 2.34 மீட்டர் நீளம் கொண்டவையாகும்.



## மூழ்கும் நகரம் - மும்பை

- மும்பை ஓர் ஆண்டுக்குச் சராசரியாக 2 மி.மீ. வரை மூழ்கி வருவதாகச் சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.
- நிலத்தடியில் இருந்து நீர் எடுத்தல், சுரங்கம், இயற்கை ஈரநிலங்களைச் சீரமைத்தல், உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழல் சீர்குலைவுகள் போன்றவை "நிலம் மூழ்குவதற்கு" வழி வகுக்கிறது.
- சீனாவில் உள்ள டியான்ஜின் நகரமானது, ஆண்டுக்கு 5.2 செ.மீ என்ற விகிதத்தில் உலகிலேயே வேகமாக மூழ்கி வரும் கடற்கரை நகரமாக உள்ளது.




## ஹாப்லோப்டிச்சியஸ் சஹ்யாட்ரியென்சிஸ்

- இந்தியாவில் புதிதாகக் கண்டறியப்பட்ட நத்தைக்கு மேற்குத் தொடர்ச்சி மலையின் பெயரிடப் பட்டது
- மகாராஷ்டிராவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில், அறிவியல் உலகிற்கே புதிதான ஒரு மாமிச உண்ணியான நிலவாழ் நத்தை கண்டறியப் பட்டுள்ளது.
- மகாராஷ்டிராவின் கோலாப்பூர் மாவட்டத்தில் உள்ள விஷால்காட் வளங்காப்பகத்தில் ஹாப்லோப்டிச்சியஸ் சஹ்யாட்ரியென்சிஸ் இனமானது கண்டறியப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிராவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளின் வடக்குப் பகுதிகளிலிருந்து ஹாப்லோப்டிச்சியஸ் சஹ்யாட்ரியென்சிஸ் இனமானது கண்டறியப்பட்டது.
- இது ஹாப்லோப்டிச்சியஸ் இனத்தின் மூன்றாவது பிரிவாகும்.
- மற்ற இரண்டு பிரிவுகளான H. அண்டாமணிக்கஸ் மற்றும் H. பிபிஜபரி ஆகியவை 1860 ஆம் ஆண்டுகளில் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் கண்டறியப்பட்டன.



## அசாமில் காண்டாமிருகம் மீண்டும் அறிமுகம்

- 14வது அசாம் காண்டாமிருக மதிப்பீட்டின்படி, மனாஸ் தேசியப் பூங்காவில் உள்ள காண்டா மிருகங்கள் அதிக ஆயுட்காலம் கொண்டவையாக உள்ளன.
- இருப்பினும், அவற்றிற்கு இடமாற்ற வசதி மிகவும் அவசியமாகும்.
- காண்டாமிருகக் கணக்கெடுப்பு ஆனது 'மொத்த எண்ணிக்கை அல்லது நேரடி எண்ணிக்கை முறை' மூலம் மேற்கொள்ளப்பட்டது.
- பூடான் எல்லையில் உள்ள மனாஸ் தேசியப் பூங்காவின் மேற்குப் பகுதியில் உள்ள ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் அதிக ஆயுட்காலம் கொண்டவை.
- அதனால் அவற்றின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.
- ஆனால் இந்தியாவில் அமைந்துள்ள பூங்காவின் பகுதியில் எண்ணிக்கையைத் தக்க வைக்கும் அளவிற்கு இளம் வயது மற்றும் குட்டிகளின் எண்ணிக்கை இல்லை.
- எனவே, அவற்றிற்கு ஈடாக இடமாற்றம் தேவைப்படுகிறது.

## உலகின் மிகப்பெரிய தாவரம்

- மேற்கு ஆஸ்திரேலியாவின் கடலோரப் பகுதியில் உள்ள ஆழமற்றப் பகுதியில் உலகின் மிகப்பெரிய உயிர் வாழும் தாவரம் ஆனது அடையாளம் காணப்பட்டுள்ளது.
- பொசிடோனியா ஆஸ்ட்ராலிஸ் எனப்படும் இந்தப் பரந்து விரிந்து கிடக்கும் கடல் புல் ஒரு கடல் வாழினப் பூக்கும் தாவரமாகும்.
- இது ஒரு விதையிலிருந்து, குறைந்தது 4,500 ஆண்டுகளாக பெருமளவில் பரவியதாக நம்பப் படுகிறது.
- இது 112 மைல்களுக்கு (180 கிலோமீட்டர்) மேலான பரப்பளவில் விரிவடைந்து காணப் படுகிறது.
- இது ஒரு உலகப் பாரம்பரியத் தளமாக பாதுகாக்கப்பட்டப் பகுதியான சுறா (ஷார்க்) விரிகுடாவில் அமைந்துள்ளது.

## குவ்ஸ்குல் ஏரி தேசியப் பூங்கா




- மங்கோலியாவின் குவ்ஸ்குல் ஏரி தேசியப் பூங்காவானது சமீபத்தில் யுனெஸ்கோவின் உலக உயிர்க்கோளக் காப்பகங்களின் கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

- பிரான்சின் பாரீஸ் நகரில் நடைபெற்ற மனிதன் மற்றும் உயிர்க்கோளம் திட்டத்தின் சர்வதேச ஒருங்கிணைப்புச் சபையின் 34வது அமர்வின் போது இந்த முடிவானது எடுக்கப் பட்டது.
- குவ்ஸ்குல் ஏரி ரஷ்ய எல்லைக்கு அருகில் அமைந்துள்ள வடக்கு மங்கோலியாவில் அமைந்துள்ளது.
- மங்கோலியாவின் நன்னீரில் கிட்டத்தட்ட 70 சதவீதம் இந்த ஏரியில் உள்ளது.

## கிளிஸ்ரோபஸ் மேகலாயனஸ்

- மேகாலயாவில் கிளிஸ்ரோபஸ் மேகாலயானஸ் என்ற மூங்கிலில் வாழும் ஒரு புதிய வௌவால் இனமானது கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்தியாவில் மட்டுமின்றி தெற்காசியாவிலும் தடித்த கட்டைவிரல் கொண்ட இந்த வௌவால் இனமானது கண்டறியப்பட்டதினைப் பற்றி குறிப்பிட்ட முதல் அறிக்கை இதுவாகும்.
- இது அளவில் சிறியது மட்டுமல்லாமல் கந்தக மஞ்சள் நிற வயிறுடன் கூடிய அடர் பழுப்பு நிறம் கொண்டது ஆகும்.
- இந்தப் புதியக் கண்டுபிடிப்பின் மூலம் இந்தியாவில் இதுவரை அறியப்பட்ட வௌவால் இனங்களின் மொத்த எண்ணிக்கை 131 ஆக உயர்ந்துள்ளது.



## புவியில் உள்ள மிகவும் ஈரமான இடம்


- மேகாலயாவின் மௌசின்ராம் பகுதியில், 1966 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரே நாளில் அதிகபட்சமாக மழைப்பொழிவு பதிவாகி ஒரு புதிய சாதனை அளவை எட்டியுள்ளது .
- புவியில் அதிக ஈரப்பதம் உள்ள இடமாகத் திகழும் சிரபுஞ்சியின் சாதனையை இது முறியடித்தது.
- மௌசின்ராம் பகுதியில் 24 மணி நேரத்தில் 1003 மி.மீ. அளவு மழை பெய்துள்ளது.
- புவியின் மிக ஈரமான இடங்களில் ஒன்றாகத் திகழும் சிரபுஞ்சியில் பதிவான மழைப் பொழிவானது, 1995 ஆம் ஆண்டு முதல் ஜூன் மாதத்தில் அதிகபட்சமாகவும், 122 ஆண்டுகளாக மூன்றாவது அதிகபட்ச ஈரப்பதம் உள்ள இடமாகவும் இருந்தது.
- சிரபுஞ்சியானது மௌசின்ராமிலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

## 'ஒருமுறை மட்டுமே பயன்படும் நெகிழிக்குத்' தடை

- மத்திய அரசானது, 2022 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் 'ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய நெகிழிகளின்' பயன்பாட்டினைத் தடை செய்துள்ளது.
- ஒருமுறை பயன்படுத்தப்படும் நெகிழி என்பது ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப் பட்டுத் தூக்கி எறியப்படும் நெகிழிப் பொருட்களைக் குறிக்கிறது.
- 75 மைக்ரானுக்கு கீழ் உள்ள பாலித்தீன் (நெகிழி) பைகள் ஏற்கனவே 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தடை செய்யப் பட்டன.
- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல், 120 மைக்ரானுக்குக் குறைவான பாலித்தீன் (நெகிழி) பைகளும் தடை செய்யப்படும்.

## நான்கு புதிய பவளப்பாறைகள்


- இந்திய கடல் பகுதியிலிருந்து முதல் முறையாக நான்கு வகையான பவளப் பாறைகள் கண்டறியப்பட்டுள்ளன.
- இந்தப் புதிய வகையான அசோசாந்தெல்லட் பவளப்பாறைகள் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு அப்பால் உள்ள கடல் பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன.
- இவை சூசாந்தெல்லே என்ற மஞ்சள் பழுப்புநிறப் பாசியினைக் கொண்டிராத பவளப் பாறைகளின் ஒரு குழுவாகும்.
- இவை சூரியனிடமிருந்து அல்லாமல், அதற்கு மாற்றாக பல்வேறு வகையான மிதவை உயிரிகளிடமிருந்து ஊட்டச் சத்தினைப் பெருமளவில் கைப்பற்றுவதன் மூலம் ஊட்டச் சத்தைப் பெறுகின்றன.



## தியோமார்கரிட்டா மாக்னிஃபிகா

- கரீபியன் சதுப்புநிலப் பகுதியான குவாடலூப் என்ற தீவில் உலகின் மிகப்பெரியப் பாக்டீரியாவினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது கிட்டத்தட்ட மனித இமைகளின் அளவில், வெள்ளை நிற இழைகளின் வடிவத்தில் அமைந்துள்ளது.
- இது வெற்றுக் கண்களால் காணும் வகையிலான முதல் பாக்டீரியாவாகும்.

- பொதுவாக, பாக்டீரியாக்கள் மிகவும் சிறியவையாதலால் அவற்றை நுண்ணோக்கி மூலம் மட்டுமே பார்க்க முடியும்.
- இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய ஒற்றை செல் பாக்டீரியா இதுவாகும்.
- இது ஒரு பெரிய நுண்குமிழைக் கொண்டுள்ளது.
- அது சில செல் செயல்பாடுகளை செல் முழுவதும் அல்லாமல் ஒரு குறிப்பிட்டக் கட்டுப் பாட்டிற்குட்பட்ட சூழலில் நடக்க வழிவகை செய்கிறது.





## 2030 பருவநிலை இலக்குகள்

- 2030 ஆம் ஆண்டிற்கான காற்று மற்றும் சூரிய திறன் இலக்குகளை அடைய இந்தியா 223 பில்லியன் டாலர் வரை முதலீடு செய்ய வேண்டும்.
- ப்ளூம்பெர்க் NEF எனும் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டப் புதிய அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.
- இந்தியாவின் புதைபடிவமற்ற ஆற்றல் திறன் ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் 500 ஜிகா வாட் (GW) என்ற அளவினை எட்டும்.
- அதற்குள் நம் நாட்டின் எரிசக்தித் தேவைகளில் 50 சதவீதத்தினை இந்தியா பூர்த்தி செய்யும்.
- இந்தியா 2030 ஆம் ஆண்டிற்குள் அதன் மொத்த கரியமில வாயு வெளியேற்றத்தை ஒரு பில்லியன் டன்கள் வரை குறைக்கும்.
- இந்தியா 2030 ஆம் ஆண்டிற்குள் தனது நாட்டில் நிலவும் கார்பன் செறிவினை 2005 ஆம் ஆண்டின் அளவை விட 45% வரை குறைக்கும்.
- 2070 ஆம் ஆண்டிற்குள் இந்தியா நிகரச் சுழிய உமிழ்வு என்ற நிலையை அடையும்.
- இந்தியா ஏற்கனவே 2021 ஆம் ஆண்டிற்குள் 165 GW திறன் அளவிலான புதுப்பிக்கத் தக்க ஆற்றலை நிறுவியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட திறனில் இந்தியா நிலக்கரியைச் சார்ந்திருக்கும் அளவில் 53% என்ற அளவில் இருந்து 2030 ஆம் ஆண்டில் அது 33% ஆகக் குறையும்.
- 2021 ஆம் ஆண்டில் 23% ஆக இருந்த சூரிய சக்தி மற்றும் காற்று ஆற்றலின் அளவு 51% ஆக இருக்கும்.
- 2014 முதல் 2021 வரையிலான எட்டு ஆண்டுகளில், 165 ஜிகாவாட் திறன் உள்ள புதுப்பிக்கத் தக்க ஆற்றல் நிலையங்களை நிறுவுவதற்கு இந்தியா ஏற்கனவே சுமார் 75 பில்லியன் டாலர்களைப் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் முதலீடு செய்துள்ளது.

- 2030 ஆம் ஆண்டிற்குள், 500 ஜிகாவாட் இலக்கை எட்டுவதற்குத் தற்போது இந்தியா மூன்று மடங்காக 223 பில்லியன் டாலர்களை முதலீடு செய்ய வேண்டும்.

**Figure 1: India's financing needs for 2030 wind and solar targets**




*Source: BloombergNEF, Central Electricity Authority. Note: BloombergNEF, Central Electricity Authority. Note: Values are by year of financing, assuming financing happens one year before the projects are commissioned. Forecast investments are calculated based on CEA's projection of commissioned capacity by 2030. Assumes an inverter loading ratio of 1.4 for new solar projects.*

## உதய்ப்பூரின் 'பறவைகள் கிராமம்'

- இது ராஜஸ்தானின் புதிய ஈரநிலமாக அறிவிக்கப்பட உள்ளது.
- இது உதய்ப்பூர் மாவட்டத்தில் உள்ள மேனார் எனுமிடத்தில் அமைந்துள்ளது.
- இது "பறவைகள் கிராமம்" என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- தற்போது ராஜஸ்தானில் இரண்டு சதுப்பு நிலங்கள் ராம்சார் தளங்களாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- அவை பரத்பூர் மாவட்டத்தில் உள்ள கியோலாடியோ கானா மற்றும் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் உள்ள சாம்பார் உப்பு ஏரி ஆகியனவாகும்.

## கேரளாவில் உள்ள பறவைகளின் சிவப்புநிற பட்டியல்

- கேரளா விரைவில் பறவைகளின் மீதான ஒரு சிவப்புநிறப் பட்டியலை (அச்சுறுத்தல் நிலையில் உள்ள) தயாரிக்க உள்ளது.
- கேரள மாநில வேளாண் பல்கலைக் கழகம் மற்றும் இந்தியப் பறவைக் கணக்கெடுப்பு அமைப்பு தலைமையிலான கேரளப் பறவைக் கண்காணிப்புக் குழு ஆகிய இரண்டும் இணைந்து இந்தப் பிராந்தியச் சிவப்பு நிறப் பட்டியல் மதிப்பீட்டை நடத்த உள்ளது.
- இந்தப் பட்டியல் தயாரானதும், ஒரு பிராந்தியம் சார்ந்தப் பறவைகளின் சிவப்புநிறப் பட்டியலைக் கொண்ட முதல் மாநிலமாக கேரளா திகழும்.
- உலக அளவில் பொதுவாகக் காணப்படும் ஓர் இனம், பிராந்திய அளவில் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனமாக மட்டுமே இருக்கலாம்.
- உலகளாவிய IUCN சிவப்புநிறப் பட்டியலின் படி, கேரளாவில் 64 பறவை இனங்கள் அழிந்து வரும் நிலையில் உள்ளன.
- அவற்றுள், சிவப்புத் தலைக் கொண்ட கழுகு மற்றும் வெண்முதுகுக் கழுகுகள் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளன.

## கம்பளித் தோல் கொண்ட இராட்சத யானை

- தோல் மற்றும் முடியுடன் கூடிய தோல் கொண்ட இராட்சத யானையின் பதப்படுத்தப் பட்ட நிலையிலான உடல் கனடாவின் வடக்குப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது பெண் யானை என்றும், சுமார் 30,000 ஆண்டுகளுக்கு முன்பு பனி யுகத்தின் போது இறந்திருக்கக் கூடும் என்றும் நம்பப்படுகிறது.
- இந்தக் கண்டுபிடிப்பானது வடக்கு அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட, முதல் முழுமையான மற்றும் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட நிலையிலான கம்பளித் தோல் கொண்ட இராட்சத யானையைக் குறிக்கிறது.
- கம்பளித் தோல் கொண்ட இந்தஇராட்சத யானையானது ஹோலோசீன் சகாப்தத்தில் முழுதாக அழியும் வரையில் ப்ளீஸ்டோசீன் காலத்தில் வாழ்ந்தது.
- இந்தக் கண்டுபிடிப்புகள் 'அழகான மற்றும் உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் நம்ப முடியாத பதப்படுத்தப்பட்ட நிலையிலான பனியுக விலங்குகளில் ஒன்று' என்று அழைக்கப்பட்டது.



## யானை எச்சரிக்கை ஒலிக் கருவி திட்டம் - ஒடிசா

- ஒடிசாவில் உள்ள தென்கனல் வனத்துறையானது, தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் தானியங்கு எச்சரிக்கை ஒலிக் கருவிகளைப் பொருத்த திட்டமிட்டுள்ளது.
- விபத்துகளில் இருந்து யானைகளைப் பாதுகாப்பது மற்றும் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே நிகழும் மோதலை முடிவுக்குக் கொண்டு வருவது இதன் நோக்கமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், யானைகள் அதிகம் உள்ள பகுதிகளில் எச்சரிக்கை ஒலிக்கருவி பொருத்தப்பட்ட கோபுரம் அமைக்கப்படும்.
- இந்த எச்சரிக்கை ஒலிக்கருவி பொருத்தப்பட்ட கோபுரம் ஆனது தென்கனல்-அனுகுல் தேசிய நெடுஞ்சாலை 55 என்ற ஒரு நெடுஞ்சாலையினை ஒட்டி, சோதனைமுறை அடிப்படையில் அமைக்கப் படும்.
- இந்த நுண்ணுணர்வுக் கருவிகள் அடிப்படையிலான எச்சரிக்கை ஒலிக்கருவிகள், யானைகள் சாலையைக் கடக்கும் போது அங்கிருந்து 1 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வாகன ஓட்டுநர்களை எச்சரிப்பதற்காக ஒலிக்கத் தொடங்கும்.
- யானைகள் அதன் அருகில் வந்தவுடன் எச்சரிக்கை ஒலிக்கருவி ஒலித்து சிவப்பு விளக்கு எரியும்.

- கபிலாஸ் மலைத்தொடரின் அடிவாரத்தில் யானை கடந்து செல்லும் பாதைத் திட்டமும் இதன்படி செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

## ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிக்குத் தடை

- 2022 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பயன்பாட்டைத் தடை செய்ய மத்திய அரசு தயாராக உள்ளது.
- ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழித் தடையை மீறுபவர்கள் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவார்கள்.
- இதில் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், ரூ.1 லட்சம் வரை அபராதமும் அல்லது இரண்டுமே விதிக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது.
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகம் 2021 ஆம் ஆண்டு நெகிழிக் கழிவு மேலாண்மை திருத்த விதிகளை அறிவித்தது.
- இந்த விதிகளானது, 2022 ஆம் ஆண்டிற்குள் "அதிக குப்பைகளாக குவியும் வாய்ப்புள்ள மற்றும் குறைந்த பயன்பாடு கொண்ட" குறிப்பிட்ட ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய நெகிழிப் பொருட்களைத் தடை செய்வதற்காக அறிவிக்கப்பட்டது.
- இந்த விதிகளின்படி, குறிப்பிட்ட ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருட்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், இருப்பு வைத்தல், விநியோகம் செய்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துதல் தடை செய்யப்படும்.
- இதில் பாலிஸ்டிரீன் மற்றும் விரிவாக்கப்பட்ட பாலிஸ்டிரீன் ஆகியவை அடங்கும்.
- மக்கும் நெகிழியினால் செய்யப்பட்ட பொருட்களுக்கு இந்தத் தடை பொருந்தாது.
- 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி முதல் நெகிழிப் பைகளின் அனுமதிக்கப் பட்ட தடிமன் அளவு 50 மைக்ரானில் இருந்து 75 மைக்ரானாகவும், 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி முதல் 120 மைக்ரானாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டு நெகிழிக் கழிவு மேலாண்மை விதிகளின்படி, குட்கா, புகையிலை மற்றும் பான் மசாலாவைச் சேமித்து வைப்பதற்கும், பொதிகள் செய்வதற்கும் அல்லது விற்பனை செய்வதற்கும் கூட பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு ஒரு முழுமையான தடை உள்ளது.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாநில மாசுக் கட்டுப்பாட்டு அமைப்புகள் ஆகியவை இதற்கானக் கண்காணிப்பு ஆணையமாகும்.
- இவை தடையைக் கண்காணித்து, விதிமீறல்களைக் கண்டறிந்து, 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள அபராதங்களை விதிக்கும்.
- இந்தியாவில், ஒவ்வொரு ஆண்டும் 9.46 மில்லியன் டன் நெகிழிக் கழிவுகள் உற்பத்தி ஆகின்றன.
- அதில் 43% ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருட்கள் ஆகும்.
- 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, உலகளவில் உற்பத்தி செய்யப் படும் நெகிழிகளில் மூன்றில் ஒரு பங்கு ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருட்களாக உள்ளது.
- அதில் 98% நெகிழிப் பொருட்கள் புதைபடிவ எரிபொருட்களிலிருந்துத் தயாரிக்கப் படுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## தபால் விநியோகத்திற்கான ஆளில்லா விமானச் சேவை

- ❖ இந்திய நாட்டிலேயே முதன்முறையாக, குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் தொடங்கப் பட்ட மாதிரித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியாவின் அஞ்சல் துறை ஒரு ஆளில்லா விமானத்தைப் பயன்படுத்தி அஞ்சல்களை வழங்கியது.
- ❖ ஆளில்லா விமானத்தைப் பயன்படுத்திப் புஜ் தாலுகாவில் உள்ள ஹபே கிராமத்தில் இருந்து அனுப்பப்பட்ட அஞ்சலானது, கட்ச் மாவட்டத்தின் பச்சாவ் தாலுகாவில் உள்ள நெர் கிராமத்திற்கு அனுப்பப்பட்டது.
- ❖ இந்த ஆளில்லா விமானமானது 46 கிலோ மீட்டர்களை 25 நிமிடங்களில் கடந்து சென்றது.




## புகையிலைக் கட்டுப்பாட்டிற்கான உலக சுகாதார அமைப்பின் விருது

- ❖ புகையிலை நுகர்வைக் கட்டுப்படுத்தும் தனது சீரிய முயற்சிகளுக்காக ஜார்க்கண்ட் மாநிலமானது 2022 ஆம் ஆண்டிற்கான உலகப் புகையிலை எதிர்ப்புத் தின விருதிற்கு உலக சுகாதார அமைப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ❖ ஜார்கண்ட் மாநில சுகாதாரத் துறையின் மாநிலப் புகையிலைக் கட்டுப்பாட்டுப் பிரிவானது, உலகப் புகையிலை எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு புதுதில்லியில் நடைபெறும் விழாவில் இந்த விருதைப் பெற உள்ளது.
- ❖ தேசியப் புகையிலைக் கட்டுப்பாட்டு திட்டமானது ஜார்க்கண்ட் மாநிலத்தில் 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ❖ இந்த மாநிலத்தில் புகையிலை உபயோகத்தின் பரவல் விகிதம் சுமார் 51.1 சதவீதமாக இருந்தது.
- ❖ இதில் 48 சதவீதத்தினர் புகை பிடிக்காதவர்கள் ஆவர்.
- ❖ 2018 ஆம் ஆண்டிற்கான ஒரு அறிக்கையின்படி, இந்த மாநிலத்தில் புகையிலையைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 38.9 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- ❖ இதில் 35.4 சதவீதத்தினர் புகை பிடிக்காதவர்கள் ஆவர்.

## கிராமப்புற பழங்குடியினருக்கான முதல் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டம்

- மத்தியப் பிரதேச அரசானது, கிராமப்புறப் பழங்குடியினருக்கான நாட்டின் முதலாவது தொழில்நுட்பப் பயிற்சியைப் போபால் நகரில் தொடங்கியது.
- இது பழங்குடியின இளைஞர்களுக்கான 'பாராளுமன்ற வளாகத் திட்டத்தின்' கீழ் நிறுவப் பட்டது.
- 'பாராளுமன்ற வளாகத் திட்டத்தில்', கிராமப்புறப் பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்படும்.
- இந்தப் பயிற்சித் திட்டமானது முதலில் மத்தியப் பிரதேசத்தில் ஒரு சோதனைத் திட்டமாகத் தொடங்கப் பட்டுள்ளது.

## ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது – ராஜஸ்தான்

- ராஜஸ்தான் மாநிலத்தில் பல்வேறு விளையாட்டு வீரர்களுக்கு ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும் என்று அந்த மாநிலத்தின் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.
- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதியன்று, ராஜீவ் காந்தி கிராமப்புற ஒலிம்பிக் போட்டிகள் அங்கு தொடங்க உள்ளன.

## சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பு – பீகார்

- பீகார் மாநிலத்தில் சாதி அடிப்படையிலான ஒரு கணக்கெடுப்பினைத் தொடங்கச் செய்வதற்கான ஒரு முன்மொழிவிற்கு பீகார் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பானது மாநில அளவில் பொது நிர்வாகத் துறை மூலம் மேற்கொள்ளப்படும்.
- மாவட்ட நீதிபதிகள் முனைய அதிகாரிகளாகச் செயல்படுவதோடு அவர்கள் தத்தமது மாவட்டங்களில் உள்ள பணியாளர்களை இதற்கானக் கணக்காளர்களாக இந்தப் பணியில் ஈடுபடுத்துவர்.

## ACB 14400 செயலி

- ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் அவர்கள் “ACB 14400” என்ற ஒரு செயலியை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் ஊழலைத் தடுப்பதற்காக வேண்டி இந்தச் செயலியானது தொடங்கப்பட்டது.
- இந்தச் செயலியை ஊழல் தடுப்புப் பணியகம் உருவாக்கியுள்ளது.
- இதற்கு முன், 14400 என்ற இலவச எண்ணில் மக்கள் புகார் அளிக்கலாம்.
- ஆனால் அவர்கள் அந்தப் புகார்களுடன் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க இயலவில்லை.

## இணையப் பத்திரங்கள் வசதி

- பஞ்சாப் அரசானது காகிதம் சார்ந்தப் பத்திரத் தாள்களை ரத்து செய்துள்ளது.
- இது அதிக செயல்திறனைக் கொண்டு வருவதையும், அரசிற்கான வருவாய் மீதான திருட்டைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் பிறகு, அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பத்திர விற்பனை நபர்களிடமிருந்து எந்தவொரு மதிப்பினையும் உடைய பத்திரத் தாள்களையும் இணையப் பத்திரங்கள் (கணினிமயமாக்கப்பட்ட நகல்) வசதி மூலம் தற்போது பெற இயலும்.
- இம்மாநிலத்தில் இணையப் பத்திரங்கள் வசதியானது முன்னதாக 20,000 ரூபாய்க்கு மேல் உள்ள மதிப்புகளுக்கு மட்டுமே பொருந்தும்.
- புதிய விதிகளின்படி, ஒரு ரூபாய் முதல் அனைத்து மதிப்புகளுக்கும் இந்த வசதி விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

## உலகின் முதல் திரவ நுண் யூரியா ஆலை




- குஜராத்தின் கலோல் நகரில் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் முதல் திரவ நுண் யூரியா ஆலையைப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

- இது நுண் துகள் வடிவில் உள்ள யூரியா ஆகும்.
- திரவ நுண் யூரியாவை நேரடியாக இலைகளில் தெளிப்பதால் அது நேரடியாகச் செடியால் உறிஞ்சப் படும்.
- யூரியா ஒரு இரசாயன நைட்ரஜன் உரமாகும்.
- இது தாவரங்களுக்கு மிகவும் தேவையான ஒரு முக்கிய ஊட்டமான நைட்ரஜனைச் செயற்கையாக வழங்குகிறது.
- உலகிலேயே அதிகளவில் யூரியாவினைப் பயன்படுத்தும் இரண்டாவது பெரிய நாடு இந்தியா ஆகும்.
- ஆனால் யூரியா உற்பத்தியில் மூன்றாவது இடத்திலேயே உள்ளது.

## நேரடித் தொடர்பற்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள்

- மகாராஷ்டிரா அரசானது முழுவதும் நேரடித் தொடர்பற்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களைத் தொடங்கியுள்ளது.
- அம்மாநிலத்தின் குடிமக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் நேரடியாகச் செல்ல வேண்டியதற்கான அவசியமின்றி, ஓட்டுநர் உரிமம் போன்ற பல வசதிகளைப் பெற உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போது, மகாராஷ்டிராவின் போக்குவரத்துத் துறை 118 வகையான சேவைகளை வழங்குகிறது.
- அவற்றில் 80 சேவைகள் இணைய வழியில் கிடைக்கப் பெறுவதோடு, மேலும் 6 சேவைகள் இந்தப் புதிய முன்னெடுப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

## சிக்கிம் மாநில வண்ணத்துப்பூச்சி

- சிக்கிம் மாநில முதல்வர் பி.எஸ்.கோலே, ப்ளூ டியூக் என்ற ஒரு பட்டாம்பூச்சியை "சிக்கிமின் மாநிலப் பட்டாம்பூச்சி" ஆக அறிவித்துள்ளார்.
- ப்ளூ டியூக் என்பது சிக்கிமைத் தாயகமாகக் கொண்ட ஒரு பட்டாம்பூச்சி இனமாகும்.
- இது சிக்கிமை அதன் இரண்டு தனித்துவமான வண்ணங்களுடன் பிரதிபலிக்கிறது.
- இதில் நீல நிறம் வானத்தைக் குறிப்பதோடு, வெள்ளை நிறம் இமயமலையின் பனி மூடிய மலைகளைச் சித்தரிக்கிறது.



- ப்ளூ டியூக் என்பது பஸ்சரோனா துர்கா என்றும் அழைக்கப்படுகிறது,
- இது சிக்கிம் மற்றும் கிழக்கு இமயமலைக்குப் பிரத்தியேகமானது.
- இது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972 என்ற சட்டத்தின் கீழான அட்டவணை-II என்பதில் பட்டியலிடப் பட்டுள்ளது.
- இது இமயமலைப் பகுதியில் மிகவும் பாதுகாக்கப்பட்ட ஒரு பட்டாம்பூச்சி இனமாகும்.

## பைகோ திருவிழா

- இது அசாம் மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது.
- இது இந்தியாவின் ரபா என்ற பழங்குடியினரால் கொண்டாடப்படுகிறது.
- ரபா என்பது ஒரு திபெத்திய-பர்மன் சமூக இனக்குழு ஆகும்.
- இவர்கள் மேற்கு வங்கத்தின் காரோ மலைகள் மற்றும் கீழ் பகுதி அஸ்ஸாமின் தூர் பகுதி ஆகிய இடங்களில் வசிக்கின்றனர்.




## மாநிலத்தின் முதல் ஆளில்லா விமானக் கொள்கை

- 'இமாச்சல பிரதேச ஆளில்லா விமானக் கொள்கை 2022' என்ற கொள்கைக்கு அம்மாநில முதல்வர் ஜெய் ராம் தாக்கூர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- ஆளில்லா விமானங்களுக்கான கொள்கையை அங்கீகரித்த முதல் இந்திய மாநிலம் இதுவாகும்.
- ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி ஆளுமை மற்றும் சீர்திருத்தங்கள் (GARUD) என்ற அடித்தளத்தின் அடிப்படையில் ஒரு முழுமையான ஆளில்லா விமானங்களுக்கு என்று சுற்றுச்சூழலை உருவாக்குவதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## பீகார் மகாத்மா காந்தி பாலம்

- மகாத்மா காந்தி சேதுவுக்கான மேற்கட்டுமான மாற்றீட்டுப் பாலமானது சமீபத்தில் திறக்கப் பட்டது.
- இந்தப் புதிய வகைப் பணியானது முதன்முறையாக இந்தியாவில் செயல் படுத்தப் பட்டது.
- இது பாட்னா வழியே பாயும் கங்கை ஆற்றின் மீது கட்டப்பட்ட நான்கு வழிப் பாலம் ஆகும்.
- இது 1980 ஆம் ஆண்டுகளில் பீகார் அரசால் கட்டப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே மாதத்தில் திறக்கப் பட்டது.
- இது 1982 முதல் 2017 வரை இந்தியாவின் மிக நீளமான ஆற்றுப் பாலமாக திகழ்ந்தது.



## சுரக்சா-மித்ரா திட்டம்

- கேரள மாநிலத்தில் சுரக்சா-மித்ரா திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.
- சுரக்சா-மித்ரா திட்டம் ஒரு வாகனக் கண்காணிப்பு அமைப்பாகும்.
- ஏதேனும் விபத்து ஏற்பட்டால் இந்த அமைப்பு அது குறித்த செய்திகளை அனுப்புகிறது.
- மோட்டார் வாகனத் துறையானது நிர்பயா என்ற திட்டத்தின் கீழ் இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- பயணத்தின் போது ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால், இந்த அமைப்பு உரிமையாளர்களின் கைபேசிகளுக்கு அது குறித்தச் செய்தியை அனுப்பும்.

## புற்றுநோய் ஆராய்ச்சி மையம்

- புற்றுநோய்க் கண்டறிதல் மற்றும் ஆராய்ச்சி மையத்தை கேரள முதல்வர் அவர்கள் கொச்சியில் திறந்து வைத்தார்.
- இது விரிவான நிலையில் புற்றுநோய்க் கண்டறியும் சேவைகளுக்கான நாட்டின் முதல் புற்றுநோயியல் ஆய்வகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

## FRUITS’ மென்பொருள்

- கர்நாடக அரசானது, ‘உழவர் பதிவு மற்றும் ஒருங்கிணைந்தப் பயனாளிகள் தகவல் அமைப்பு’ அல்லது FRUITS என்ற செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது திட்டங்களுக்கான ஆதார் எண் அடிப்படையிலான, ஒற்றைச் சாளரப் பதிவுக்கான மென்பொருள் ஆகும்.
- இது ஆதார் அட்டை மற்றும் கர்நாடகாவின் பூமி டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நிலப் பதிவேடு எனும் முறையைப் பயன்படுத்தி உரிமையை அங்கீகரிக்கும் ஒரு ஒற்றைப் பதிவு முறையை எளிதாக்கும்.

## துக்காராம் கோவில்

- மகாராஷ்டிராவில் உள்ள தேஹு நகரில் 17 ஆம் நூற்றாண்டின் துறவியான துக்காராம் அவர்களுக்கான கோவில் ஆனது திறக்கப் பட்டது.
- இவர் ஒரு வர்காரி துறவி மற்றும் கவிஞர் ஆவார்.
- இவர் பக்தி இயக்கத்தில் ஒரு முக்கிய நபராகத் திகழ்ந்தார்.
- இவர் ‘அபாங்க’ பக்திக் கவிதைகளுக்குப் புகழ் பெற்றவர் ஆவார்.
- கீர்த்தனைகள் எனப்படும் ஆன்மீகப் பாடல்கள் மூலம் சமூகம் சார்ந்த வழிபாட்டிற்கு அவர் பிரபலமாக அறியப் படுகிறார்.
- இவர் கடவுள் வித்தோபா மீது மிகுந்த பற்றுக் கொண்ட வர்காரி சம்பிரதாயத்தின் ஒரு துறவி ஆவார்.



## பாலிகா பஞ்சாயத்து முன்னெடுப்பு

- குஜராத்தில் உள்ள கட்ச் மாவட்டத்தின் பல கிராமங்களில் இந்தியாவின் முதல் பெண் பஞ்சாயத்து என்ற, "பாலிகா பஞ்சாயத்து" என்பது தொடங்கப்பட்டது.
- இது பெண்களின் சமூக மற்றும் அரசியல் மேம்பாட்டினை ஊக்குவிப்பதோடு, அரசியலில் பெண்களின் தீவிரப் பங்களிப்பை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ‘பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ’ என்ற பிரச்சாரத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- "பாலிகா பஞ்சாயத்து" என்பது 11 முதல் 21 வயதுடையவர்களால் நிர்வகிக்கப் படுகிறது.
- கிராமப் பஞ்சாயத்து போலவே பாலிகா பஞ்சாயத்து உறுப்பினர்களும் நியமனம் செய்யப் படுகின்றனர்.

## சர்வதேச இலக்கிய விழா

- சிம்லாவில் உள்ள கெய்ட்டி திரையரங்கில் "உன்மேஷா" என்றழைக்கப்படும் மூன்று நாட்கள் அளவிலான சர்வதேச இலக்கிய விழா நடைபெற்றது.
- இந்த விழாவானது, இன்று வரையில் இந்தியாவின் மிகப்பெரிய சர்வதேச இலக்கிய விழாவாகும்.

## கேரள இடம்பெயர்வு கணக்கெடுப்பு

- கேரள மாநிலமானது "2022-23 ஆம் ஆண்டிற்கான கேரள இடம்பெயர்வு கணக்கெடுப்பு" நடத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- உலகெங்கிலும் உள்ள நாடுகளில் வாழும் மலையாள மொழி இனத்தவரைப் பற்றிய தரவு வங்கியைத் தயாரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக "மலையாளி பிரவாசி தளமானது" தொடங்கப் படும்.
- வெளிநாட்டினருக்கான காப்பீடு மற்றும் பிற நலத்திட்டங்களை இணைப்பதற்கு இந்த தளமானது பயன்படுத்தப்படும்.
- இந்தத் தரவுத்தளத்தைத் தயாரிப்பதற்காக விரிவான உலகளாவியப் பதிவு இயக்கமும் நடத்தப்பட உள்ளது.
- 1998 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முதல் கணக்கெடுப்பானது, அந்தக் காலக் கட்டத்தில் சுமார் 1.5 மில்லியன் கேரள மக்கள் இந்தியாவிற்கு வெளியே வெளி நாடுகளில் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டது.
- 2018 ஆம் ஆண்டில், உலகம் முழுவதும் உள்ள நாடுகளுக்கு கேரளாவிலிருந்து 2.12 மில்லியன் மக்கள் புலம்பெயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஸ்பைனி ஹார்ன்டெயில்



- ஸ்பைனி ஹார்ன்டெயில் என்பது ஒரு தும்பி (தட்டான்) இனமாகும்.
- இந்த இனமானது இதுவரை கேரளாவில் காணப்படவில்லை.
- இந்த இனமானது மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டுமே காணப்படுகின்றது
- இது இந்த ஆண்டின் தொடக்கத்தில் மகாராஷ்டிராவில் கண்டுபிடிக்கப்பட்டது.

- இந்த இனம், பக்கவாட்டு மார்பில் உள்ள அடையாளங்கள் மற்றும் குத இணைப்புகளின் விசித்திரமான வடிவத்தால் மற்ற பர்மகோம்பஸ் இனங்களிலிருந்து வேறுபடுகிறது.

## கடன் நிலைகளை நிலைப்படுத்துவதற்கான செயற்முறைகள்

- 2020-21 ஆம் ஆண்டில் கடன்-மற்றும் மொத்த உள்மாநில உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையிலான விகிதத்தின் அடிப்படையில், பத்து மாநிலங்கள் அதிக கடன் சுமையைக் கொண்டிருக்கின்றன.
- பீகார், கேரளா, பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய ஐந்து மாநிலங்கள் நிதி ரீதியாக மிகவும் கடன் சுமையைக் கொண்டுள்ள மாநிலங்கள் ஆகும்.
- பஞ்சாப் மாநிலத்தின் கடன் மற்றும் மொத்த உள்மாநில உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையிலான ஒரு விகிதமானது 2026-27 ஆம் ஆண்டில் 45 சதவீதத்தை மிஞ்சும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- ராஜஸ்தான், கேரளா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் 2026-27 ஆம் ஆண்டில் கடன் மற்றும் மொத்த உள்மாநில உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையிலான விகிதமானது 35 சதவீதத்தை மிஞ்சும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## கெம்பேகவுடா சர்வதேச விருது

- கர்நாடகாவின் முன்னாள் முதல்வர் S.M.கிருஷ்ணா, இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் மூத்த தொழிலதிபர் N.R. நாராயண மூர்த்தி மற்றும் முன்னாள் பேட்மிண்டன் வீரர் பிரகாஷ் படுகோனே ஆகியோர் 2022 ஆம் ஆண்டு கெம்பேகவுடா சர்வதேச விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
- கெம்பே கவுடா பெங்களூரு நகரினை வடிவமைத்தக் கட்டிடக் கலைஞர் ஆவார்.
- கெம்பேகவுடா விருதானது நடப்பிரபு கெம்பேகவுடா விருது என்றும் அழைக்கப் படுகிறது.
- இது பிருஹத் பெங்களூரு மகாநகர பலிகே என்ற அமைப்பினால் ஆண்டுதோறும் வழங்கப் படும் ஒரு குடிமை விருது ஆகும்.
- விஜயநகரப் பேரரசின் மன்னர் நடப்பிரபு ஹிரியா கெம்பே கவுடாவின் நினைவாக இந்த விருதிற்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- இவர் 1537 ஆம் ஆண்டில் பெங்களூரு நகரைக் கட்டமைத்தார்.

## ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பைகளைத் திருப்பி வாங்கும் திட்டம்

- இமாச்சலப் பிரதேச அரசானது, "ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பைகளைத் திருப்பி வாங்கும் திட்டத்தை" அறிமுகப் படுத்தியுள்ளது.
- இமாச்சலப் பிரதேச அரசானது பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடமிருந்து ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருட்களைத் திருப்பி வாங்கும்.
- இதற்காக, அம்மாநில அரசானது பள்ளி மாணவர்களுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.75 வரை செலுத்தும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இந்திப் புனைவுக் கதைக்குப் புக்கர் பரிசு

- எழுத்தாளர் கீதாஞ்சலி ஸ்ரீயின் இந்திப் புனைவுக் கதையான 'Tomb of Sand', மதிப்புமிக்க சர்வதேசப் புக்கர் பரிசை வென்றது.
- மதிப்புமிக்க இந்தப் பரிசை வென்ற முதல் இந்திய மொழிப் புத்தகம் இதுவாகும்.
- எழுத்தாளர்களுக்கு அங்கீகாரம் அளிப்பதற்காக 2004 ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது.
- இது முன்னதாக சர்வதேச மேன் புக்கர் பரிசு என்று அழைக்கப்பட்டது.
- இது ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அல்லது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு படைப்பிற்காக எந்தவொரு நாட்டினைச் சேர்ந்தச் சமகால எழுத்தாளருக்கும் வழங்கப் பட்டது.
- 2016 ஆம் ஆண்டிலிருந்து, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ஐக்கியப் பேரரசு அல்லது அயர்லாந்தில் வெளியிடப்பட்டப் புத்தகத்திற்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப் படுகிறது.

## நோய்த்தடுப்பு சாம்பியன் விருது

- தெற்கு காஷ்மீரைச் சேர்ந்த வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளரான உமர் நிசார் (RJ உமர்) UNICEF அமைப்பினால் வழங்கப் படும் நம்பர் ஒன் சிறந்த உள்ளடக்க விருது மற்றும் நோய்த் தடுப்பு சாம்பியன் விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.
- பெருந்தொற்றின் போது தனது நிகழ்ச்சியின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் வதந்திகள் அவர்களை சென்றடையாமல் தடுத்தல் போன்ற அவரது பணிக்காக உமருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- ரேடியோ4சைல்ட் என்ற அமைப்பானது, கோவிட்-19 பெருந்தொற்றின் போதும், தடுப்பூசி வழங்கீட்டின் போதும் அவர்களின் பாராட்டத்தக்கப் பணிக்காக நாடு முழுவதும் உள்ள தனியார் வானொலி நிலையங்கள் மற்றும் அனைத்திந்திய வானொலி நிலையத்தின் நிபுணர்களைப் பாராட்டியது.

## கப்பல் மனிதர் ஹேமச்சந்திர ராவ்

- அஞ்சல் தலை சேகரிப்பாளர் , T. ஹேமச்சந்திர ராவ் சமீபத்தில் காலமானார்.
- அவர் "கலங்கரை விளக்க மனிதர்" என்று அழைக்கப்படுகிறார்,
- மேலும் இவர் பக்கிங்காம் கால்வாயில் அதிகாரியாக இருந்தார்.
- இவர் தனது வீட்டை ஒரு கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகமாக மாற்றினார்.
- சென்னைத் தின நிகழ்வுகளின் ஒரு பகுதியாக இருக்க ஆர்வமாக இருந்த இவர் அன்றைய தினம் சில சிறப்பு அறிக்கைகளையும் தயார் செய்தார்.

## சிறந்தத் திட்டத்திற்கான விருது

- மேகாலயா அரசாங்கத்தின் ஒரு முன்னெடுப்பானது, "மேம்பாட்டில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதில் அரசாங்கங்களின் பங்கு" என்ற ஒரு பிரிவில் சிறந்தத் திட்டத்திற்கான விருதைப் பெற்றது.
- இந்த முன்னெடுப்பின் பெயர் மேகாலயா பெருநிறுவன உள்கட்டமைப்பு ஆகும்.
- தகவல் சமூக மன்றம் குறித்த 2022 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் உலக உச்சி மாநாட்டில் இந்த விருதானது வழங்கப்பட்டது.
- இந்த விருதினைப் பெறும் ஒரே இந்தியத் திட்டம் மேகாலயா பெருநிறுவன உள் கட்டமைப்பு (MeghEA) திட்டம் மட்டுமே ஆகும்.

## மண்வளப் பாதுகாப்பிற்கான ஒப்பந்தம்

- குஜராத்தின் பருவநிலை மாற்றத் துறையானது உலகளாவிய 'மண் வளங்காப்பு' முன்னெடுப்பில் இணைவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளது.
- ஈஷா அவுட்ரீச் என்ற நிறுவனத்தின் நிறுவனரான சத்குரு மற்றும் குஜராத் மாநில முதல்வர் பூபேந்திர படேல் ஆகியோர் அகமதாபாத் நகரில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

## சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை பொன்னுசாமி

- காலனித்துவப் பிரித்தானியாவிடம் இருந்து இந்தியா சுதந்திரம் பெறுவதற்காகப் போராடிய சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை பொன்னுசாமி சமீபத்தில் காலமானார்.
- இவர் தனது 21 வயதில், இந்தியத் தேசிய இராணுவத்தின் மகளிர் படைப் பிரிவான ஜான்சி ராணி படைப்பிரிவில் சேர்ந்தார்.




## சிதாரா-இ-பாகிஸ்தான் விருது

- மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் டேரன் சமிக்கு பாகிஸ்தானுக்கு அவர் வழங்கியச் சேவைக்காக சித்தாரா-இ-பாகிஸ்தான் விருது வழங்கப் பட்டுள்ளது.

- 38 வயதான ஆல்-ரவுண்டரான இவர் சர்வதேச கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணியின் பங்கேற்பை மீண்டும் கொண்டு வர உதவுவதில் அவர் ஆற்றியப் பங்கிற்காக இந்த விருதானது வழங்கப் பட்டது.
- இது பாகிஸ்தான் அரசினால் வழங்கப்படும் மூன்றாவது உயரியக் குடிமை விருது ஆகும்.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், பாகிஸ்தானின் மிக உயரியக் குடிமை விருதான நிஷான்-இ-பாகிஸ்தான் என்ற விருதினைப் பெற்றார்.
- பாகிஸ்தான் அதிபரால் இவருக்குக் கௌரவப் பாகிஸ்தான் குடியுரிமையும் வழங்கப் பட்டது.

## டைம்ஸ் இதழின் வணிக விருது 2022

- ருச்சி ஃபுட்லைன் என்ற நிறுவனத்தின் இயக்குனர் ரஷ்மி சாஹூவுக்கு 2022 ஆம் ஆண்டிற்கான டைம்ஸ் இதழின் வணிக விருது வழங்கப்பட்டுள்ளது.
- கிழக்கு இந்தியாவின் ஒரு முன்னணி உடனடி உணவுத் தயாரிப்புப் பிரிவில் இந்த விருதானது வழங்கப் பட்டது.

## மும்பை சர்வதேசத் திரைப்பட விழா (MIFF)

டச்சு நாட்டின் ஆவணப் படமான "டர்ன் யுவர் பாடி டு தி சன்" MIFF 2022 ஆம் ஆண்டில் சிறந்த ஆவணப்படத்திற்கான மதிப்புமிக்க தங்கச் சங்கு விருதை வென்றுள்ளது.

- இந்த விருது பழம்பெரும் திரைப்படத் தயாரிப்பாளர் வி சாந்தராம் என்பவரின் நினைவாக நிறுவப் பட்டது
- புனைவு குறும்படப் பிரிவில், மலையாளத் திரைப்படமான 'சாக்சத்காரம்' வெள்ளிச் சங்கு விருதை டென்மார்க்கின் ஃபரோ தீவுகளின் குட்மண்ட் ஹெல்ம்சலின் 'பிரதர் ட்ரோல்' என்ற திரைப்படத்துடன் பகிர்ந்து கொண்டது.
- வங்காள தேசத்தின் 50 ஆம் ஆண்டு சுதந்திரத்தை நினைவு கூரும் வகையில் அது இந்த ஆண்டின் 'கவனம் செலுத்தும் நாடாக' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- மும்பை சர்வதேசத் திரைப்பட விழாவானது தெற்காசியாவில் முழு நீளம் கொண்டு இல்லாத திரைப்படங்களுக்கான மிகப் பழமையான மற்றும் மிகப்பெரியத் திரைப்பட விழாவாகும்.

## சர்வதேச இந்தியத் திரைப்பட அகாடமி விருதுகள் (IIFA)

- இது ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரான அபுதாபியில் நடத்தப் பட்டது.
- இந்த ஆண்டு IIFA 2022 நிகழ்வை சல்மான் கான், மணீஷ் பால் மற்றும் ரித்தேஷ் தேஷ்முக் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.
- சித்தார்த் மல்ஹோத்ராவின் ஷெர்ஷா படம் ஐந்து பிரிவுகளில் வென்று இந்த ஆண்டின் விருதுகளில் ஆதிக்கம் செலுத்தியது.

**List of the winners of IIFA 2022**

**Best Actor (Male): Vicky Kaushal (Sardar Udham)**

**Best Actor (Female): Kriti Sanon (Mimi)**

**Best Director: Vishnuvaradhan (Shershaah)**

**Best Film: Shershaah**

**Best Playback Singer Female: Asees Kaur for 'Raataan Lambiyan', (Shershaah)**

**Best Playback Singer Male: Jubin Nautiyal for song 'Raataan Lambiyan', (Shershaah)**

**Best Lyrics: Kausar Munir for 'Lehra Do', 83**

**Best Music Direction: A R Rahman for Atrangi Re and Jasleen Royal, Javed-Mohsin, Vikram Montrose, B Praak, Jaani for Shershaah**

**Best Male Debut: Ahan Shetty (Tadap)**

**Best Female Debut: Sharvari Wagh (Bunty Aur Babli 2)**

**Best Story Adapted: Kabir Khan, Sanjay Puran Singh Chauhan for 83**

**Best Original Story: Ludo by Anurag Basu**

**Best Supporting Actor Female: Sai Tamhankar (Mimi)**

**Best Supporting Actor Male: Pankaj Tripathi (Ludo)**

## மிதாலி ராஜ்

- இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி வீராங்கனையான மிதாலி ராஜ் அனைத்து வகையான சர்வதேசக் கிரிக்கெட் விளையாட்டுகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- இவர் சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் அதிக ரன் குவித்தவர் ஆவார்.
- இவர் 2005 ஆம் ஆண்டு முதல் இந்தியப் பெண்கள் கிரிக்கெட் அணியின் கேப்டனாக இருந்து வருகிறார்.
- 2005 முதல் 2017 வரையிலான ஆண்டுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட ICC ஒருநாள் சர்வதேச உலகக் கோப்பைக் கிரிக்கெட் இறுதிப் போட்டிகளுக்குக் கேப்டனாக இருந்த ஒரே பெண் கிரிக்கெட் வீராங்கனை இவர் ஆவார்.
- 2019 ஆம் ஆண்டில் சர்வதேசக் கிரிக்கெட்டில் 20 ஆண்டுகளை நிறைவு செய்த முதல் பெண் என்றப் பெருமையையும் இவர் பெற்றார்.
- மகளிர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 7,000 ரன்களைக் கடந்த ஒரே பெண் கிரிக்கெட் வீராங்கனை இவரேயாவார்.
- இவர் அனைத்துக் கிரிக்கெட் வடிவங்களிலும் 10,000 சர்வதேச ரன்களைக் கடந்த முதல் இந்தியப் பெண் கிரிக்கெட் வீராங்கனை என்றப் பெருமையினையும் பெற்றார்.




## ராமகிருஷ்ணா முக்கவில்லி

- ஐக்கிய நாடுகளின் உலக ஒப்பந்த அமைப்பானது பத்து புதிய நிலையான மேம்பாட்டு இலக்கு முன்னோடிகளை அறிவித்துள்ளது.
- இவர்கள் நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) முன்னேற்றுவதில் சிறந்து விளங்கும் பெருநிறுவனத் தலைவர்கள் ஆவர்.
- உலகிலேயே முதன்முறையாக ராமகிருஷ்ணா முக்கவில்லி என்ற இந்தியர் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- இவர் உலகளாவிய நீர்வளப் பணிக்கான நிலையான மேம்பாட்டு இலக்கு (SDG) முன்னோடியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மாவட்டத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் விருதுகள்

- சமீபத்தில், 2வது "2022ஆம் ஆண்டில் மாவட்டத் திறன் மேம்பாட்டுத் திட்டமிடலில் சிறந்து விளங்குவதற்கான விருதுகள்" வழங்கும் ஒரு விழாவானது ஏற்பாடு செய்யப் பட்டது.
- திறன் மேம்பாட்டில் கொண்டு வரப்பட்ட புதுமையான சிறந்த நடைமுறைகளுக்காக, முதல் 30 மாவட்டங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.
- ராஜ்கோட் (குஜராத்), கச்சார் (அசாம்) மற்றும் சதாரா (மகாராஷ்டிரா) ஆகியவை முறையே முதல் மூன்று மாவட்டங்களாக இடம் பெற்றுள்ளன.
- இந்த விருதுகள் சங்கல்ப் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் நிறுவப் பட்டன.
- SANKALP என்பதன் விரிவாக்கம், "வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் கையகப் படுத்துதல் மற்றும் அறிவுசார் விழிப்புணர்வு" என்பதாகும்.

## மார்ட்டின் என்னல்ஸ் விருது 2022

- ❖ இந்தியச் சமூக ஆர்வலர் பாதிரியார் ஸ்டான் சுவாமிக்கு அவரது மரணத்திற்குப் பின்னதாக மார்ட்டின் என்னல்ஸ் என்ற விருது வழங்கப்பட்டது.
- ❖ சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ள மார்ட்டின் என்னல்ஸ் அறக்கட்டளை ஆனது இந்த விருதினை வழங்குகிறது.
- ❖ இது மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான நோபல் பரிசாகக் கருதப்படுகிறது.
- ❖ பாதிரியார் சுவாமி ஒரு கிறித்துவப் பாதிரியார் மற்றும் சமூக ஆர்வலர் ஆவார்.
- ❖ இவர் ஜார்க்கண்டில் ஆதிவாசிகளின் உரிமைகளை மேம்படுத்துவதற்காக வேண்டி பல அமைப்புகளை நிறுவினார்.
- ❖ 2018 ஆம் ஆண்டு பீமா கோரேகான் வன்முறையுடன் தொடர்புடையதாகக் கூறப்பட்டு, சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் இவர் கைது செய்யப்பட்டார்.
- ❖ இந்த விருதினைப் பெற்ற மற்ற நபர்கள்
  - பாம் தோவன் ட்ராங் - முன்னணிப் பத்திரிகையாளர்
  - டாக்டர். தாவுடா டியல்லோ - மருந்தாளுநர்
  - அப்துல்-ஹாதி அல்-கவாஜா

## நீண்ட காலம் ஆட்சி செய்த 2வது அரசி

- ❖ பிரிட்டனின் இராணி இரண்டாம் எலிசபெத், பிரான்சின் பதினான்காம் லூயிஸ் அவர்களுக்குப் பிறகு, வரலாற்றில் உலகிலேயே மிக நீண்ட காலம் ஆட்சி செய்த இரண்டாவது அரசி என்ற பெருமையைப் பெற்றார்.
- ❖ தற்போது இவர் சுமார் 70 ஆண்டுகள் ஆட்சி செய்த தாய்லாந்தின் மன்னர் பூமிபோல் அதுல்யதேஜ் அவர்களின் சாதனையை முந்தியுள்ளார்.
- ❖ 1643 முதல் 1715 வரையில் 72 ஆண்டுகள் மற்றும் 110 நாள் ஆட்சி செய்து, பிரான்சின் பதினான்காம் லூயிஸ் நீண்ட காலம் ஆட்சி செய்த ஒரு மன்னராக வரலாற்றில் திகழ்கிறார்.



## அதிபரின் அறிவியல் ஆலோசகர்

- அமெரிக்க அதிபர் ஜோ பிடன், வெள்ளை மாளிகை அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கை அலுவலகத்தின் தலைவராக ஆரத்தி பிரபாகரை நியமிப்பார் என்று எதிர் பார்க்கப் படுகிறது.
- அவர் அமெரிக்க அதிபரின் அறிவியல் ஆலோசகராக பணியாற்ற உள்ள முதல் பெண் மற்றும் முதல் கறுப்பினப் பெண் ஆவார்.
- பில் கிளிண்டன் மற்றும் பராக் ஒபாமா ஆகியோர் அதிபராக இருந்தப் பதவிக் காலங்களிலும் ஆரத்தி முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றினார்.

## இந்தியப் பத்திரிக்கைச் சபையின் தலைவர்

- ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் இந்தியப் பத்திரிக்கை சபையின் முதல் பெண் தலைவர் ஆனார்.
- ஜம்மு மற்றும் காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தின் சட்டமன்றத் தொகுதிகளை மறு வரையறை செய்வதற்காக சமீபத்தில் அமைக்கப்பட்ட ஜம்மு மற்றும் காஷ்மீர் மீதான எல்லை நிர்ணய ஆணையத்திற்கு இவர் தலைமை தாங்கினார்.

***இந்தியப் பத்திரிக்கைச் சபை***


- 1978 ஆம் ஆண்டு இந்தியப் பத்திரிக்கைச் சபைச் சட்டத்தின் கீழ் இந்தியப் பத்திரிக்கைச் சபையானது நிறுவப்பட்டது.
- இது ஒரு தலைவர் மற்றும் 28 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- இந்தியப் பத்திரிக்கைச் சபையானது அச்சு ஊடகத்தின் செயல்பாட்டை மட்டுமே கண்காணிக்கிறது.
- வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணைய ஊடகம் போன்ற மின்னணு ஊடகங்களின் செயல்பாட்டை மறுபரிசீலனை செய்யும் அதிகாரம் இதற்கு இல்லை.

## இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உலக மாநாடு

- பருவநிலை மாற்றத்திற்குத் தீர்வு காணும் வகையில், எகிப்தில் உள்ள ஷர்ம் எல் ஷேக் என்னுமிடத்தில் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எட்டாவது உலக மாநாடு தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த இரண்டு நாட்கள் அளவிலான மாநாட்டினைப் பிரதிநிதிகள் சபை மற்றும் நாடுகளுக்கு இடையிலானப் பாராளுமன்ற ஒன்றியம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.
- மாநிலங்களவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாகாலாந்தின் முதல் நாடாளுமன்ற பெண் உறுப்பினரான S.பாங்கோன் கொன்யாக் இந்த மாநாட்டில் இந்திய நாட்டின் சார்பாகப் பங்கேற்கிறார்.
- இந்த மாநாட்டில் ‘பருவநிலை நடவடிக்கைகளுக்கான இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள்’ குறித்து அவர் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள உள்ளார்.

## ஸ்கல்சாங் ரிக்சின்

- இவர் ஆக்சிஜன் உதவியின்றி அன்னபூர்ணா மலையின் உச்சியில் ஏறிய இந்தியாவின் முதல் மலையேறும் வீரர் ஆவார்.
- ஸ்கல்சாங் ரிக்சின் ஆக்ஸிஜன் உதவியின்றி இரண்டு மலைச் சிகரங்களிலும் ஏறிச் சாதனை படைத்துள்ளார்.
- 16 நாட்கள் இடைவெளியில், ஏப்ரல் 28 அன்று அன்னபூர்ணா மலையில் ஏறியும் மே 14 அன்று லோட்சே மலையில் ஏறியும் இந்தச் சாதனையானது மேற்கொள்ளப்பட்டது.
- அன்னபூர்ணா என்பது வட-மத்திய நேபாளத்தின் கண்டகி மாகாணத்தின் அன்ன பூர்ணா மலைத் தொடரில் அமைந்துள்ள ஒரு மலையாகும்.
- இது கடல் மட்டத்திலிருந்து 8,091 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள உலகின் பத்தாவது உயரமான மலையாகும்.
- இந்த மலைச்சிகரத்தில் உயிரிழப்புகள் அதிகம் நிகழ்வதால் இது கில்லர் மவுண்டன் என்றும் அழைக்கப் படுகிறது.




## புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசு

- மதிப்புமிக்க இலக்கியப் பரிசானது "The Book of Form and Emptiness" என்ற நாவலுக்காக எழுத்தாளர் ரூத் ஓஸெக்கி என்பவருக்கு வழங்கப்பட்டது.
- இந்த விருதானது வழங்கத் தொடங்கப்பட்ட 27வது ஆண்டுகளில் முதல்முறையாக உலகில் உண்மையான கருத்துத் தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒரு ஆங்கில மொழியின் பெண் எழுத்தாளருக்கு புனைவுக் கதைக்கான மகளிர் பரிசு வழங்கப்படுகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி

- சர்வதேச குத்துச்சண்டைச் சங்கத்தின் (IBA) 12வது உலக மகளிர் குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியானது துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடத்தப் பட்டது.
- பெலாரஸ் மற்றும் ரஷ்ய நாட்டு குத்துச்சண்டை வீரர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப் படவில்லை.
- கடந்த நான்கு ஆண்டுகளில் முதல் முறையாக இந்திய அணி இதில் மொத்தம் 3 பதக்கங்களை வென்றுள்ளது.
- இதில் ஒரு தங்கம் மற்றும் இரண்டு வெண்கலம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

| Rank | Nation | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | Turkey | 5 | - | 2 | 7 |
| 2 | Ireland | 2 | - | - | 2 |
| 3 | Canada | 1 | 1 | 0 | 2 |
| 4 | India | 1 | - | 2 | 3 |

## மாற்றுத் திறனாளிகளுக்கான படகுப் பந்தய உலகக் கோப்பைப் போட்டி - மகளிருக்கான 200 மீட்டர் படகுப் பந்தயம்

- மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டி நாயகி பிரச்சி யாதவ், உலகக் கோப்பைப் பதக்கத்தினை வென்ற முதல் இந்தியப் படகோட்டும் வீராங்கனை என்ற வரலாற்றினைப் படைத்தார்.
- போலந்தின் போஸ்னான் நகரில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான படகுப் பந்தய உலகக் கோப்பைப் போட்டியில் VL2 மகளிருக்கான 200 மீட்டர் பந்தயத்தில் வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.
- கடந்த ஆண்டு டோக்கியோ நகரில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று, இறுதிப் போட்டி வரை சென்ற முதல் இந்திய வீராங்கனை பிரச்சி ஆவார்.

## IBSA ஜூடோ கிராண்ட் பிரிக்ஸ் போட்டி

- கஜகஸ்தான் நாட்டில் நூர் சுல்தான் நகரில் நடைபெற்ற IBSA ஜூடோ கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் இந்தியா தனது முதல் பதக்கத்தை வென்றது.
- இதில் போட்டியிட்ட 21 நாடுகளில் 18 நாடுகள் பதக்கங்களை வென்றன.
- ஈராக், சுவிட்சர்லாந்து மற்றும் இந்தியா உட்பட பல நாடுகள் IBSA கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் தனது முதல் பதக்கங்களைப் பெற்றன.

## ISSF உலகக் கோப்பைப் போட்டி 2022

- 2022 ISSF உலகக் கோப்பைப் போட்டிகளின் 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்திய மகளிர் துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனைகள் அணியானது இந்தியாவிற்கானத் தங்கப் பதக்கத்தினை வென்றது.
- அஸ்பெரிஜான் நாட்டின் பாகு நகரில் நடைபெற்று வரும் ISSF உலகக் கோப்பைப் போட்டிகளில் இந்தியா பெறும் முதல் பதக்கம் இதுவாகும்.
- இந்தியாவை சேர்ந்த இளவேனில் வாலறிவன், ஸ்ரேயா அகர்வால், ரமிதா ஆகிய மூவரும் டென்மார்க் அணியை வீழ்த்தினர்.

## பிரெஞ்சு ஓபன் போட்டி 2022

- பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெற்ற 14வது பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ரஃபேல் நடால் சாம்பியன் பட்டம் வென்றார்.
- இவர் நார்வே நாட்டைச் சேர்ந்த காஸ்பர் ரூட்டைத் தோற்கடித்தார்.
- இந்த வெற்றியின் மூலம், அவரது சாதனைப் பட்டியல் 22வது கிராண்ட்ஸ்லாம் பட்டமாக விரிவடைந்தது.
- இதில் ஒரு சாதனை அளவாக 14 பிரெஞ்ச் ஓபன் பட்டங்களும் அடங்கும்.
- இவர் பிரான்சின் ரோலண்ட் கரோஸில் நடந்த போட்டியின் மிகவும் வயதான ஆண் சாம்பியன் ஆனார்.
- பிரெஞ்ச் ஓபன் என்பது களிமண் தரையில் நடக்கும் ஒரேயொரு டென்னிஸ் சாம்பியன் ஷிப் போட்டி ஆகும்.

| Title | Winner | Runner up |
|---|---|---|
| **Men's Singles** | Rafael Nadal (Spain) | Casper Ruud (Norwegian) |
| **Women's Singles** | Iga Świątek (Poland) | Coco Gauff (US) |
| **Men's doubles** | Marcelo Arévalo (El Salvador), Jean-Julien Rojer (Netherlands) | Ivan Dodig (Croatian), Austin Krajicek (US) |
| **Women's doubles** | Caroline Garcia (French), Kristina Mladenovic (French) | Jessica Pegula (US), Coco Gauff (US) |
| **Mixed doubles** | Ena Shibahara (JAPAN), Wesley Koolh of (Netherlands) | Joran Vliegen (Belgium), Ulrikke Eikeri (Norway) |

## FIFA கோப்பை 2022

- 1958 ஆம் ஆண்டுக்குப் பிறகு வேல்ஸ் நாடு முதல் முறையாக FIFA உலகக் கோப்பையை எட்டியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் FIFA உலகக் கோப்பை FIFA உலகக் கோப்பைப் போட்டியின் 22வது தொடராக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இது கத்தாரில் முதன்முறையாக நடைபெற உள்ளது.

- அரபு நாடுகளில் நடைபெறும் முதல் உலகக் கோப்பை இதுவாகும்.
- 2002 ஆம் ஆண்டு தென் கொரியா மற்றும் ஜப்பானில் நடைபெற்ற போட்டிகளுக்குப் பிறகு, முழுமையாக ஆசியாவில் நடைபெறும் இரண்டாவது உலகக் கோப்பை இது ஆகும்.
- கூடுதலாக, 2026 ஆம் ஆண்டு அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடாவில் நடைபெறும் போட்டியில் 48 அணிகள் பங்கேற்கும் நிலையில், 32 அணிகள் பங்கேற்கும் கடைசிப் போட்டியாகவும் இது இருக்கும்.
- கத்தாரின் கடுமையானக் கோடை வெப்பம் காரணமாக, இந்த உலகக் கோப்பை நவம்பர் பிற்பகுதியில் இருந்து டிசம்பர் நடுப்பகுதி வரை நடைபெறவுள்ளது.
- இதனால் இதுவே மே, ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் நடைபெறாத முதல் போட்டி ஆகும்.

## போலட் டர்லிகானோவ் கோப்பை

- இது கஜகஸ்தானின் அல்மாட்டியில் நடைபெற்ற ஒரு மல்யுத்தப் போட்டியாகும்.
- ரியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற சாக்சி மாலிக் இந்தக் கோப்பையில் தனது முதல் சர்வதேசத் தங்கப் பதக்கத்தை வென்றார்.
- இந்தியா இந்த சர்வதேச மல்யுத்தத்தின் தரவரிசைத் தொடரை 12 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தில் முடித்தது.
- ஈரான் இதில் 14 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதல் இடத்தினைப் பிடித்தது.

## அயர்ன்மேன் டிரையத்லான்

- ஷ்ரேயாஸ் G. ஒசூர், ஜெர்மனியின் ஹாம்பர்க்கில் நடைபெற்ற கடினமான 'அயர்ன்மேன்' டிரையத்லான் போட்டியை நிறைவு செய்த இந்திய ரயில்வேயின் முதல் அதிகாரி என்ற பெருமையைப் பெற்றார்.
- இது உலகின் கடினமான ஒற்றை நாளில் நடைபெறும் விளையாட்டு போட்டியாகக் கருதப் படுகிறது.
- இந்த நிகழ்வில் 3.8 கிமீ நீச்சல், 180 கிமீ சைக்கிள் ஒட்டுதல் மற்றும் 42.2 கிமீ ஓட்டம் ஆகியவை அடங்கும்.

## ஒரு நாள் போட்டியில் 3 தொடர் சதங்கள்

- பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாம், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரானப் போட்டியில் சதம் அடித்து சாதனையினைப் படைத்துள்ளார்.
- இதன்மூலம், ஒரு நாள் போட்டிகளில் இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தொடர்ந்து மூன்று சதங்கள் அடித்த முதல் மட்டைப் பந்து வீரர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- ஒரு நாள் போட்டிகளில் பாபர் தொடர்ந்து மூன்று சதங்கள் அடிப்பது இது இரண்டாவது முறையாகும்.
- இவர் முன்னதாக, 2016 ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டித் தொடரில் 120, 123 மற்றும் 117 என்ற கணக்கில் அடுத்தடுத்த இன்னிங்ஸ்களில் மூன்று சதங்கள் அடித்து ரன்களைக் குவித்தார்.

## கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2021

- 2021 ஆம் ஆண்டின் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தப் போட்டியை நடத்திய ஹரியானா அணி 52 தங்கப் பதக்கங்களுடன் பட்டத்தினை வென்றது.
- ஹரியானா அணியானது 39 வெள்ளி மற்றும் 46 வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளது.
- மேலும் இதன் ஒட்டு மொத்தப் பதக்க எண்ணிக்கை 137 ஆகும்.
- மகாராஷ்டிரா அணி 45 தங்கம், 40 வெள்ளி, 40 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று 125 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- கர்நாடகா அணியானது, 22 தங்கம், 17 வெள்ளி, 28 வெண்கலம் என 67 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

## அதிக கோல் அடித்த ஐந்தாவது வீரர்

- இந்திய ஆடவர் கால்பந்து அணித் தலைவர் சுனில் சேத்ரி 84 கோல்கள் அடித்து சர்வதேசக் கால்பந்து வரலாற்றில் அதிக கோல்கள் அடித்த ஐந்தாவது வீரர் ஆக மாறினார்.
- தற்போது, சர்வதேசக் கால்பந்து வரலாற்றில் 117 கோல்களுடன் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற பெருமையை ரொனால்டோ பெற்றுள்ளார்.
- மெஸ்ஸி மொத்தம் 86 கோல்களுடன் நான்காவது இடத்தில் உள்ளார்.

## ஈட்டி எறிதலில் தேசியச் சாதனை

- நீரஜ் சோப்ரா, பின்லாந்தில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு பாவோ நூர்மி விளையாட்டுப் போட்டியில், 89.30 மீட்டர் ஈட்டி எறிந்ததன் மூலம் தனது சொந்தத் தேசியச் சாதனையை முறியடித்தார்.
- நீரஜ் சோப்ரா, 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மேற்கொண்ட, தனது சொந்தத் தேசியச் சாதனையான 88.07 மீ என்ற சாதனை அளவை விஞ்சியுள்ளார்.
- இது உலகில் இதுவரை நடைபெற்ற போட்டித் தொடர்களில் மேற்கொள்ளப்பட்ட ஐந்தாவது சிறந்த ஈட்டி எறிதல் சாதனையாகும்.

## FIFA உலகக் கோப்பை 2026

- 2026 ஆம் ஆண்டு உலகக் கோப்பைக்கான போட்டிகள் இந்தப் போட்டிகளை ஏற்பாடு செய்யும் அமெரிக்காவில் 11 நகரங்களிலும், மெக்ஸிகோவில் மூன்று இடங்களிலும், கனடாவில் இரண்டு இடங்களிலும் நடைபெற உள்ளன.
- 48 அணிகள் இப்போட்டியில் இடம் பெறுவது இதுவே முதல் முறையாகும்.
- கத்தாரில் நடைபெறவுள்ள 2022 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பைப் போட்டியில் போட்டியிடும் 32 அணிகளில் இருந்து இது 48 ஆக அதிகரிக்கவுள்ளது.
- மெக்சிகோ நகரமானது 1970 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் FIFA உலகக் கோப்பைப் போட்டிகளை நடத்தியது.
- இந்த சாம்பியன்ஷிப் பட்டமானது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப் படுகிறது.

## 44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டி

- 44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டிக்கான வரலாற்று சிறப்புமிக்க ஜோதியை ஏந்திய சுழல் ஓட்டத்தினைப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்த ஆண்டு, சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பானது, ஒலிம்பிக் பாரம்பரியத்தின் ஒரு அங்கமான சதுரங்க ஒலிம்பியாட் ஜோதியை முதல் முறையாக நிறுவியுள்ளது.
- சதுரங்க ஒலிம்பியாட் ஜோதியை ஏந்திய சுழல் ஓட்டத்தினைக் கொண்ட முதல் நாடு இந்தியாவாகும்.

## 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய சாம்பியன்ஷிப் போட்டி

- கிர்கிஸ்தானின் பிஷ்கெக் நகரில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய மகளிர் மல்யுத்த அணியானது வெற்றி பெற்று உள்ளது.
- இந்தியா எட்டு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்களுடன் இந்தப் போட்டியில் சாம்பியன் பட்டத்தினை வென்றது.
- ஜப்பான் அணி இரண்டாம் இடத்தையும், மங்கோலிய அணி மூன்றாவது இடத்தையும் பெற்றன.

## 20வது நாட்டுப்புறக் கண்காட்சி

- பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா, ஒடிஷாவின் பூரி நகரிலுள்ள சாரதாபாலி என்னுமிடத்தில் நடைபெற்ற 20வது நாட்டுப்புறக் கண்காட்சி (தேசியப் பழங்குடியினர் / நாட்டுப்புறப் பாடல் மற்றும் நடன விழா) மற்றும் 13வது கிரிஷி கண்காட்சி 2022 ஆகியவற்றினைத் தொடங்கி வைத்தார்.
- இந்த இரண்டுக் கண்காட்சிகளும் முறையே பழங்குடியினரின் கலாச்சாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் வேளாண்மையில் புதுமைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டதாகும்.
- வேளாண்மை தொடர்பான புதுமைகள், தயாரிப்புகள், தீர்வுகள் மற்றும் சேவைகளைக் கொண்ட அனைத்து அமைப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும் கிருஷி கண்காட்சி ஒரு தளமாகும்.

## இந்திய மகளிர் ஹாக்கி அணித்தலைவர்

- 2022 ஆம் ஆண்டு மகளிருக்கான ஹாக்கி உலகக் கோப்பை மற்றும் 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க உள்ள இந்திய மகளிர் ஹாக்கி அணிக்கு இந்திய கோல்கீப்பர் சவிதா புனியா அணித் தலைவராக பொறுப்பேற்க உள்ளார்.
- நீண்ட காலம் இந்திய அணித் தலைவராகப் பணியாற்றிய ராணி ராம்பால் இந்தப் போட்டிகளின் போது பங்கேற்கமாட்டார்.
- டீப் கிரேஸ் எக்கா இந்திய அணியின் துணைத் தலைவராக செயல்படுவார்.

- 2022 ஆம் ஆண்டுக்கான காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இங்கிலாந்தில் உள்ள பர்மிங்காம் நகரில் ஜூலை 28 ஆம் தேதி தொடங்க உள்ளது.
- 15வது FIH மகளிருக்கான ஹாக்கி உலகக் கோப்பை 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஸ்பெயின் மற்றும் நெதர்லாந்து ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது.
- இது சர்வதேச ஹாக்கிக் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

## 41வது ஆசியத் தடகள சைக்கிள் ஓட்ட சாம்பியன்ஷிப் போட்டி

- இந்நிகழ்ச்சியானது புது டெல்லியில் நடைபெற்றது.
- இது ஒரு UCI (உலக சைக்கிள் ஓட்டப் போட்டியின் ஆளுகை குழு) முதல்நிலைப் போட்டி ஆகும்.
- இந்தப் போட்டியானது தனிநபர்களை தரவரிசைப்படுத்தவும், சைக்கிள் ஓட்டும் வீரர்களை 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெறச் செய்யவும் உதவும்.
- இப்போட்டியில் ஜப்பான் முதலிடத்தையும், தென் கொரியா இரண்டாம் இடத்தையும் பெற்றன.
- இந்திய சைக்கிள் ஓட்டும் வீரர்கள் அணியானது 23 பதக்கங்களுடன் தனது பங்கேற்பினை நிறைவு செய்தது.
- இதில் இரண்டு தங்கம், ஆறு வெள்ளி மற்றும் 15 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.
- இந்தச் சாம்பியன்ஷிப் போட்டிகளில் இந்திய அணியின் மிகச்சிறந்த பங்கேற்பு இதுவே ஆகும்.
- ஆண்களுக்கான ஸ்பிரிண்ட் போட்டியில் இந்தியாவின் ரொனால்டோ சிங் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- இந்த ஆசிய அளவிலானப் போட்டியில் ஒரு தனிநபர் வென்ற இந்தியாவின் முதல் வெள்ளிப் பதக்கம் இதுவாகும்.

## ரஞ்சிக் கோப்பை 2022

- பெங்களூருவில் உள்ள M.சின்னசாமி மைதானத்தில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு ரஞ்சிக் கோப்பைப் போட்டியின் இறுதிப் போட்டியில் மத்தியப் பிரதேச அணி வெற்றி பெற்று வரலாறு படைத்தது.
- இந்த அணி மும்பை அணியை வீழ்த்தி தனது முதல் ரஞ்சிக் கோப்பையை வென்றது.
- மும்பை வீரர் சர்ஃபராஸ் கான் 'போட்டியின் நாயகனாக' அறிவிக்கப்பட்டார்.
- இந்தப் போட்டிகளில் 41 வெற்றிகளுடன் மும்பை அதிக முறை இந்தப் போட்டியை வென்றுள்ளது.

# முக்கிய தினங்கள்

## உலக பால் தினம் – ஜூன் 01

- இது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினால் நிறுவப்பட்டது.
- உலக பால் தினமானது 2001 ஆம் ஆண்டில் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- பால்பண்ணைத் துறையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் கவனத்தை ஈர்க்கச் செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.

## உலகப் பெற்றோர் தினம் - ஜூன் 01

- 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஜூன் 01 ஆம் தேதியினை உலகப் பெற்றோர் தினமாகக் கடைப்பிடிக்கச் செய்வதற்கான ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றியது.
- ஒரு குழந்தையின் வாழ்க்கையில் பெற்றோர் ஆற்றும் பங்களிப்பினைக் கௌரவிக்கச் செய்யும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- உலக அமைதிக் கூட்டமைப்பு என்ற அமைப்பானது, அவர்களின் வாழ்நாள் முழுவதும் தங்கள் குழந்தைகளை வளர்க்கச் செய்வதிலும் பாதுகாப்பதிலும் பராமரிப்பாளர்கள் / பெற்றோர்கள் ஆற்றும் முயற்சிகளை அங்கீகரிக்கிறது.

## தெலுங்கானா மாநில உருவாக்கத் தினம் - ஜூன் 02




- தெலுங்கானா மாநிலமானது 2014 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதியன்று முந்தைய ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து பிரிக்கப்பட்டது.
- ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகிய இரு மாநிலங்களும் ஐதராபாத் நகரத்தினை அடுத்த 10 ஆண்டுகளுக்குத் தத்தமது தலைநகராகப் பகிர்ந்து கொள்வது என முடிவு செய்யப் பட்டது.
- பின்னர், சீமாந்திரா தனது சொந்தத் தலைநகராக அமைக்கப்படும் என அறிவிக்கப் பட்டது.

- இருப்பினும், ஹைதராபாத்தின் வருவாய் தெலுங்கானா மாநிலத்திற்கு மட்டுமே சென்று சேரும்.
- மேலும், சீமாந்திராவுக்கு எந்த சிறப்பு அந்தஸ்தும் வழங்கப்படவில்லை.

## உலக மிதிவண்டி தினம் – ஜூன் 03

- மிதிவண்டியைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, இந்தத் தினமானது "மிதிவண்டியின் மீதான தனித்துவம், அதன் நீண்ட நாள் உழைக்கும் திறன் மற்றும் பல்வகை உபயோகம்" ஆகியவற்றை எடுத்துரைக்கிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் 72வது அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் 2018 ஆம் ஆண்டு முதல் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

## வன்முறையால் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - ஜூன் 04

- உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்பட்டக் குழந்தைகள் பற்றிய ஒரு விழிப்பு உணர்வினை ஏற்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கடுமையான தாக்குதலால் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகளுக்கான முதல் சர்வதேச தினமானது 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.
- அந்தச் சமயத்தில், லெபனான் போரில் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்டு இந்தத் தினம் அனுசரிக்கப்பட்டது.

## உலக சுற்றுச்சூழல் தினம் (WED) - ஜூன் 05

- இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பினால் (UNEP) ஏற்பாடு செய்யப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டின் இத்தினமானது, 50வது உலக சுற்றுச்சூழல் தினத்தினைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டு இத்தினத்தினை ஸ்வீடன் நடத்துவதோடு இதன் கருத்துரு, 'ஒரே ஒரு பூமி' என்பதாகும்.
- ஒரே ஒரு பூமி என்பது 1972 ஆம் ஆண்டு ஸ்டாக்ஹோம் மாநாட்டின் ஒரு முழக்கமாக இருந்தது.
- மனித சுற்றுச்சூழல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு அல்லது ஸ்டாக்ஹோம் மாநாடு 1972 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- சுற்றுச்சூழலை முக்கிய நிகழ்ச்சி நிரலாகக் கொண்ட முதல் உலக மாநாடு இதுவாகும்.
- இந்த மாநாடானது, "ஆரோக்கியமான சூழலில் வாழ்வதற்கான ஒரு உரிமையை" ஒரு "அடிப்படை மனித உரிமை" என்று அறிவித்தது.
- இதன் மூலம், உலக சுற்றுச்சூழல் தினம் என்ற கருத்தானது முறைப்படுத்தப்பட்டது.
- மாரிஸ் ஸ்ட்ராங்க் என்பவரால் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பினை உருவாக்கவும் இந்த மாநாடு வழி வகுத்தது.

## சட்டவிரோத, புகாரளிக்கப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடிப்பிற்கு எதிரான போராட்டத்திற்கான சர்வதேச தினம் - ஜூன் 05

- 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அதன் நிலையான மீன்பிடித் தீர்மானத்தில் இந்த நாளை அறிவித்தது.
- 14 நிலையான மேம்பாட்டு இலக்குகளில் 4வது இலக்கானது 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.




## ஐக்கிய நாடுகள் ரஷ்ய மொழி தினம் - ஜூன் 06

- இது 2010 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் நிறுவப்பட்டது.
- இது ரஷ்யக் கவிஞரான அலெக்சாண்டர் புஷ்கின் என்பவரின் பிறந்த நாளுடன் ஒத்துப் போகிறது.
- இவர் நவீன ரஷ்ய மொழியின் தந்தை என்று கருதப்படுகிறார்.
- இது ஐக்கிய நாடுகள் சபையால் பயன்படுத்தப்படும் ஆறு அதிகாரப் பூர்வ மொழிகளில் ஒன்றாகும்.
- அவை ஆங்கிலம், அரேபியம், ஸ்பானியம், சீனம், ரஷ்யம் மற்றும் பிரஞ்சு ஆகியவை ஆகும்.

## உலக உணவுப் பாதுகாப்புத் தினம் – ஜூன் 07

- உணவுப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் நிர்ணயிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பாதுகாப்பான உணவு, சிறந்த ஆரோக்கியம்" என்பதாகும்..
- உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆகியவை இணைந்து இந்தத் தினத்தை ஏற்பாடு செய்து உள்ளன.

## உலக மூளைக் கட்டி நோய் தினம் – ஜூன் 08

- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'ஒற்றுமையே வலிமை' என்பதாகும்.
- இத்தினமானது முதன்முதலில் 2000 ஆம் ஆண்டு ஜூன் 08 ஆம் தேதியன்று, மூளைக் கட்டி நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை ஆதரிப்பதற்காக ஜெர்மன் மூளைக் கட்டி நோய்ச் சங்கத்தால் அனுசரிக்கப்பட்டது.
- இரண்டு வகையான மூளைக் கட்டிகள் உள்ளன.
- அவை புற்றுநோய் அல்லாத வகை (தீங்கற்ற) மற்றும் புற்றுநோய் சார்ந்த வகை (தீங்குடைய) ஆகியவை ஆகும்.




## உலகப் பெருங்கடல் தினம் - ஜூன் 08

- மனித நடவடிக்கைகளின் எதிர்மறையான தாக்கத்தை முன்னிலைப்படுத்தச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 1992 ஆம் ஆண்டில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (UNCED) புவி உச்சி மாநாட்டில், கனடாவின் பெருங்கடல் கல்வி நிறுவனத்தினால் உலகளவில் பெருங்கடல் தினத்தினைக் கொண்டாடும் கருத்தானது முன் வைக்கப்பட்டது.
- 16 ஆண்டுகளுக்குப் பிறகு, 2008 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த தினத்தினை அனுசரிப்பதற்கான தீர்மானத்தினை நிறைவேற்றியது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "புத்துயிர்ப்பு: பெருங்கடலுக்கான கூட்டு நடவடிக்கை" என்பதாகும்.

## உலக அங்கீகார தினம் – ஜூன் 09

- இது சர்வதேச அங்கீகார மன்றம் (IAF) மற்றும் சர்வதேச ஆய்வக அங்கீகார ஒத்துழைப்பு அமைப்பு (ILAC) ஆகியவற்றின் கூட்டு முயற்சிகளால் நிறுவப்பட்டது.
- உலக அங்கீகார தினமானது முதன்முறையாக 2008 ஆம் ஆண்டு ஜூன் 09 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) செயல்படுத்துவதில் அங்கீகாரம் என்பது ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அங்கீகாரம்: பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழலில் நிலைத்தன்மை" என்பதாகும்.




## சர்வதேச இருப்புப் பாதை கடவு விழிப்புணர்வு தினம்- ஜூன் 09

- இது இருப்புப் பாதை கடவில் பாதுகாப்பிற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.
- இந்தப் பிரச்சாரமானது 2009 ஆம் ஆண்டில் சர்வதேச இரயில்வேச் சங்கத்தால் தொடங்கப் பட்டது.

## குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக தினம் - ஜூன் 12

- குழந்தைத் தொழிலாளர் மற்றும் மனிதர்களைக் கடத்துதல் ஆகியவை பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது 2002 ஆம் ஆண்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பால் அதிகாரப் பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டின் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக தினத்தின் கருத்துரு, "குழந்தைத் தொழிலாளர் முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான உலகளாவிய சமூகப் பாதுகாப்பு" என்பதாகும்.

## சர்வதேச அல்பினிசம் நோய் விழிப்புணர்வு தினம் - ஜூன் 13

- அல்பினிசம் (தோல் வெளிறல்) நோய் உள்ளவர்களின் மனித உரிமைகளின் முக்கியத்துவம் மற்றும் அவற்றைக் கொண்டாடுவதை இத்தினம் குறிக்கிறது
- 2022 ஆம் ஆண்டு சர்வதேச அல்பினிசம் விழிப்புணர்வு தினத்தின் கருத்துரு, "இந்த நோய் குறித்த விழிப்புணர்வினை அனைவரும் உணரும் விதமாக ஒன்றிணைந்துக் குரல் எழுப்புதல்" என்பதாகும்.

- 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2015 ஆம் ஆண்டு முதல் அமலுக்கு வரும் வகையில், இத்தினத்தினை அனுசரிப்பதை பிரகடனப்படுத்தும் தீர்மானத்தினை ஏற்றுக் கொண்டது.
- அல்பினிசம் என்பது பிறக்கும் போதே காணப்படும் ஒரு அரிய, தொற்றாத, மரபணு ரீதியாகப் பெறப்பட்ட ஒரு மரபணு மாறுபாட்டு நோயாகும்.

## உலக இரத்தத் தான தினம் – ஜூன் 14

- இது "பாதுகாப்பான இரத்தம் மற்றும் இரத்தமாற்றத்திற்கான இரத்தப் பிரிவுகளின்" அவசியம் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- 2022 ஆம் ஆண்டிற்கான முழக்கம் ஆனது "இரத்தத் தானம் செய்வது ஒற்றுமையைக் குறிக்கும் செயல்" என்பதாகும்.
- உலக இரத்தத் தான தினமானது கார்ல் லேண்ட்ஸ்டெய்னரின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- மனித இரத்தத்தை முதன்முதலில் ஏ, பி, ஏபி மற்றும் ஓ ஆகியக் குழுக்களாக பிரித்தெடுத்தவர் இவரே ஆவார்.
- இவர் 1930 ஆம் ஆண்டில் மருத்துவத்துக்கான நோபல் பரிசினைப் பெற்றார்.

## உலக காற்று தினம் - ஜூன் 15

- காற்றாலை மின்சாரத்தின் சாத்தியக் கூறுகளை கண்டறியும் நாளாக இது குறிக்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டின் உலக காற்று தினத்தின் கொண்டாட்டமானாது, காற்றாலை ஆற்றலின் பலன்களை அனுபவிப்பதற்காகவும், உலகை மாற்றும் காற்றின் ஆற்றல் மற்றும் திறன் குறித்து தனிநபர்களுக்குக் கல்வியை வழங்குவதை அடிப்படையாகவும் கொண்டது.
- முதல் காற்று தினம் ஆனது 2007 ஆம் ஆண்டில் ஐரோப்பிய காற்று ஆற்றல் சங்கத்தால் அனுசரிக்கப் பட்டது.

## உலக முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு தினம் – ஜூன் 15

- 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இத்தினம் நடைமுறைக்கு வந்தது.
- உலக முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு தினமானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் 2011 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.
- அனைத்து வயதினருக்கும் சமமான டிஜிட்டல் பங்கீடு என்பது 2022 ஆம் ஆண்டின் உலக முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு தினத்தின் கருத்துருவாகும்.

## குடும்ப உறுப்பினர்களுக்குப் பணம் அனுப்புதலுக்கான சர்வதேச தினம் - ஜூன் 16

- 800 மில்லியனுக்கும் அதிகமான குடும்ப உறுப்பினர்களுக்குப் பணம் அனுப்பும் 200 மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், பெண்கள் மற்றும் ஆண்களை இந்த நாள் கௌரவிக்கிறது.

- ஐக்கிய நாடுகள் சபையானது கடந்த ஆண்டிற்கான, குடும்ப உறுப்பினர்களுக்குப் பணம் அனுப்புதலுக்கான சர்வதேசத் தினத்திற்கான கருத்துருவான, டிஜிட்டல் மற்றும் நிதி உள்ளடக்கம் மூலம் மீட்பு மற்றும் தாங்குதிறன் என்றக் கருத்துருவினையே இந்த ஆண்டின் தினத்திற்கும் தொடர்கிறது.

## சர்வதேச ஆப்பிரிக்கக் குழந்தைகள் தினம் - ஜூன் 16

- இந்தத் தினமானது தென்னாப்பிரிக்காவின் சோவெட்டோ நகரில், 1976 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் தேதியன்று நடைபெற்ற மாணவர் எழுச்சியை நினைவு கூருகிறது.
- நிறவெறியால் தூண்டப்பட்டக் கல்வி முறைக்கு எதிர்ப்பு தெரிவித்த ஆப்பிரிக்க மாணவர்களால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டின் ஆப்பிரிக்கக் குழந்தைகள் தினத்தின் கருத்துரு, "குழந்தைகளைப் பாதிக்கும் தீங்கான நடைமுறைகளை நீக்குதல்: 2013 ஆம் ஆண்டு முதல் கொள்கை மற்றும் நடைமுறையில் முன்னேற்றம்" என்பதாகும்.

## உலகப் பாலைவனமாதல் மற்றும் வறட்சிக்கு எதிரான நடவடிக்கை தினம் – ஜூன் 17

- 1994 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இத்தினமானது பாழான நிலத்தை ஆரோக்கியமான நிலமாக மாற்றுவதில் கவனம் செலுத்துகிறது.
- இந்தத் தினத்தின் முக்கிய நோக்கமானது பாலைவனமாக்குதலை எதிர்த்துப் போராடுவதற்கான நிறைவு செய்யக் கூடிய தீர்வுகளைக் கண்டறிவதாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'வறட்சியில் இருந்து ஒன்றுபட்டு மீண்டு எழுவோம்' என்பதாகும்.

## உலகக் கடல் ஆமை தினம் - ஜூன் 16

- இத்தினமானது, நமது சுற்றுச்சூழல் அமைப்பில் கடல் ஆமைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து அவற்றைப் பற்றி எடுத்துரைத்து, அவற்றின் எண்ணிக்கைக் குறைந்து வருவது பற்றிய விழிப்புணர்வைப் பரப்புகிறது.
- இந்தத் தினமானது, கடல் ஆமை உயிரியலின் தந்தை மற்றும் கடல் ஆமை பாதுகாப்பு அமைப்பின் நிறுவனரான டாக்டர்.ஆர்ச்சி கார் என்பவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட தினமாகும்.

## நிலையான அறுசுவை உணவியல் தினம் - ஜூன் 18


- அறுசுவை உணவியல் (காஸ்ட்ரோனமி) என்பது சில நேரங்களில் உணவின் கலை என்றும் அழைக்கப் படுகிறது.
- இந்தத் தினத்தின் நோக்கம் நிலையான உணவு நுகர்வு முறையுடன், குறிப்பாக நாம் உண்ணும் உணவைச் சேகரிப்பது மற்றும் தயாரிப்பது பற்றிய ஒரு கலையுடன் தொடர்புடைய நடைமுறைகளை அங்கீகரிப்பதாகும்.
- இந்தத் தினமானது 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

## வெறுக்கத்தக்க பேச்சை எதிர்ப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 18

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், "மதங்களுக்கிடையிலான மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையிலான பேச்சு வார்த்தையினை ஊக்குவித்தல் மற்றும் வெறுப்பூட்டும் பேச்சை எதிர்ப்பதில் சகிப்புத் தன்மை" என்ற தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்தத் தீர்மானமானது ஜூன் 18 ஆம் தேதியினை வெறுக்கத்தக்க பேச்சை எதிர்ப்பதற்கான சர்வதேச தினமாக அறிவித்தது.
- இத்தினமானது 2022 ஆம் ஆண்டில் முதல் முறையாக அனுசரிக்கப்பட்டது.

## மன இறுக்க நோய் நினைவு தினம் - ஜூன் 18

- முதல் மன இறுக்க நோய் நினைவு தினம் ஆனது பிரேசில் நாட்டில் 2005 ஆம் ஆண்டில் முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- மன இறுக்க நோய் என்பது ஒரு நபர் சமூகத்தில் தொடர்பு கொள்வது தொடர்பான அவரது திறனைப் பாதிக்கின்ற ஒரு நரம்பியல் வளர்ச்சி நிலைக் குறைபாடு ஆகும்.




## உலக அரிவாள் வடிவ செல் விழிப்புணர்வு தினம் – ஜூன் 19

- இது அரிவாள் வடிவ செல் நோய் மற்றும் அதன் சிகிச்சைகள் பற்றிப் பொதுமக்களுக்கு உணர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது நோயாளிகள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைப் பற்றியும் எடுத்துரைக்கிறது.
- அரிவாள் செல் இரத்தசோகை என்பது சிவப்பு இரத்த அணுக்கள் சாதாரண இருபுறக் குழிவு வடிவத்திற்குப் பதிலாக அரிவாள் வடிவமாக மாறுகின்ற ஒரு வகையான மரபு வழிக் கோளாறாகும்.

## உலக மெது ஓட்டப் பயிற்சி தினம் - ஜூன் 19

- மெது ஓட்டப் பயிற்சியானது பிரபலமாக வளர்ந்து வருவதற்கு ஏற்ற வகையில் இந்தத் தினமானது முதன்முதலில் 1979 ஆம் ஆண்டில் W.T. ரபே என்பவரால் நிறுவப்பட்டது.
- இயற்கையின் அழகை ரசித்துக் கொண்டே மெதுவாக நடப்பதற்கு இது மக்களை ஊக்குவிக்கிறது.

## மோதலின் போது நிகழும் பாலியல் வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 19

- 15 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையானது 2008 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் தேதியன்று இந்தத் தினத்தினை உருவாக்குவதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்தத் தினமானது மோதலின் போது நிகழும் பாலியல் வன்முறை பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான கருத்துருவானது, 'தடுப்பதேப் பாதுகாத்தல்: மோதலின் போது நிகழும் பாலியல் வன்முறையின் அமைப்பு சார்ந்த மற்றும் ஒரு செயல்பாட்டு முறையிலானத் தடுப்பை மேம்படுத்துதல்' என்பதாகும்.

## தந்தையர் தினம் - ஜூன் 19

- தந்தையர் தினம் என்பது தந்தை மற்றும் தந்தைவழி பிணைப்புகளையும், சமூகத்தில் தந்தையின் செல்வாக்கையும் மதிக்கும் ஒரு விடுமுறை தினமாகும்.
- இத்தினமானது முதல் முறையாக 1910 ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமையன்று கொண்டாடப்பட்டது.

## தேசிய வாசிப்பு தினம் - ஜூன் 19

- இந்தத் தினமானது புதுவையில் நாராயண பணிக்கர் (PN பணிக்கர்) என்பவரைக் கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இவர் கேரளாவில் நூலகம் மற்றும் எழுத்தறிவு இயக்கத்தின் தந்தையாகக் கருதப் படுகிறார்.
- கேரள அரசானது PN பணிக்கர் அறக்கட்டளையுடன் இணைந்து 1996 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் தேதியன்று வாசிப்பு தினத்தினைத் தொடங்கியது.

## உலக அகதிகள் தினம் – ஜூன் 20

- அகதிகளின் நிலை தொடர்பான 1951 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 50வது ஆண்டு நிறைவை நினைவு கூறும் வகையில் இந்த தினம் முதன்முதலில் 2001 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தில் கருத்துரு, 'யாராக இருந்தாலும், எதுவாக இருந்தாலும், எப்போது வேண்டுமானாலும், பாதுகாப்பைத் தேடுவதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு' என்பதாகும்.

## உலக இசை தினம் - ஜூன் 21

- 2022 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "இணைப்புகளில் இசை" என்பது ஆகும்.
- இந்தத் தினமானது முதன்முதலில் 1982 ஆம் ஆண்டு பிரான்சில் கோடைக் கால சங்கிராந்தி (நீண்ட பகல் தினத்தன்று) அன்று கொண்டாடப்பட்டது.
- பிரான்சு நாட்டின் முன்னாள் கலை மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் ஜாக் லாங்கே, மொரிஸ் ஃப்ளூரெட்டுடன் இணைந்து பாரீஸில் ஃபேட் டி லா மியூசிக் என்ற நிகழ்வினைத் தொடங்கினார்.

## உலக நீர்நிலையியல் தினம் - ஜூன் 21

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது, ஒவ்வொரு ஆண்டின் ஜூன் 21 ஆம் தேதியும் உலக நீர்நிலையியல் தினத்தைக் கொண்டாடுவதற்கான ஒரு தீர்மானத்தை 2005 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டது.
- இது சர்வதேச நீர்நிலையியல் அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டானது சர்வதேச நீர்நிலையியல் அமைப்பு நிறுவப்பட்டதன் 101வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நீர்நிலையியல் - ஐக்கிய நாடுகளின் பெருங்கடல் சார்ந்த நடவடிக்கைகளின் தசாப்தத்திற்கான பங்களிப்பு" என்பதாகும்.

## 8வது சர்வதேச யோகா தினம் - ஜூன் 21

- 2014 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஜூன் 21 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- ஜூன் 21 என்பது வடக்கு அரைக்கோளத்தில் நிகழும் ஆண்டின் மிக நீண்ட நாள் ஆகும்.
- 2022 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'மனித குலத்திற்கான யோகா' என்பதாகும்.
- இந்த ஆண்டு பிரதமர் மோடி அவர்களின் தலைமையில் கர்நாடகாவில் உள்ள மைசூரு அரண்மனை மைதானத்தில் யோகா நிகழ்ச்சி நடைபெற்றது.

## சர்வதேச சங்கிராந்திக் கொண்டாட்டத் தினம் - ஜூன் 21

- இந்தத் தினமானது சங்கிராந்திகள் (நீண்ட பகல்) மற்றும் உத்தராயணங்கள் (சம இரவு பகல்) மற்றும் பல மதங்கள் மற்றும் இனங்கள் குறித்த கலாச்சாரங்களுக்கு அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிய ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வருகிறது.
- கோடைக் காலச் சங்கிராந்தி என்பது சூரியன் ஓர் ஆண்டில் வானத்தில் மிக உச்ச நிலையை அடையும் ஒரு நாளாகும்.
- கோடைக் காலச் சங்கிராந்தி என்பது தெற்கு அரைக் கோளத்தில் ஆண்டின் மிகக் குறுகிய நாள் மற்றும் வடக்கு அரைக் கோளத்தில் ஆண்டின் மிக நீண்ட நாளாகும்.
- இது தெற்கு அரைக் கோளத்தில் டிசம்பர் 20 முதல் டிசம்பர் 23 வரை நிகழ்கிறது.

## உலக மழைக்காடுகள் தினம் - ஜூன் 22

- இது 2017 ஆம் ஆண்டில் மழைக்காடுகள் கூட்டாண்மை மூலம் நிறுவப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'The Time is Now' என்பதாகும்.
- கார்பன் டை ஆக்சைடு உள்ளிட்டத் தீங்கு விளைவிக்கும் வாயுக்களை உறிஞ்சுவதால், மழைக் காடுகள் நன்னீர் மற்றும் சுத்தமானக் காற்று போன்ற பல வளங்களின் ஆதாரமாக உள்ளன.
- பூமியின் மேற்பரப்பில் வெறும் 6 சதவீதத்தை மட்டுமே அவை உள்ளடக்கியிருந்தாலும், பூமியில் காணப்படும் அனைத்து நிலவாழ்ப் பல்லுயிர்களில் சுமார் 50 சதவீதங்கள் மழைக் காடுகளில் காணப் படுகின்றன.

## சர்வதேச விதவைகள் தினம் - ஜூன் 23

- விதவைகளுக்கு ஆதரவைச் சேகரிப்பது மற்றும் அவர்களின் நிலைமை குறித்த விழிப்புணர்வைப் பரப்புவது இத்தினத்தின் நோக்கமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "விதவைகளின் நிதிச் சுதந்திரத்திற்கான நிலையான தீர்வுகள்" என்பதாகும்.
- விதவை விவகாரம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக லூம்பா என்ற அறக்கட்டளையினால் இந்த தினமானது நிறுவப்பட்டது.
- 1954 ஆம் ஆண்டின் இதே நாளில்தான் லூம்பா பிரபுவின் தாயார் புஷ்பாவதி லூம்பா விதவையானார்.
- இத்தினமானது ஐக்கிய நாடுகள் சபையால் 2011 ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப் படுகிறது.

## சர்வதேச ஒலிம்பிக் தினம் - ஜூன் 23

- இந்தத் தினமானது முதன்மையாக நவீன ஒலிம்பிக் விளையாட்டுகளின் தோற்றத்தினை நினைவு கூரும் வகையில் கொண்டாடப்படுகிறது.
- சர்வதேச ஒலிம்பிக் குழு தோற்றுவிக்கப்பட்ட நாளை இத்தினம் குறிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “அமைதியான உலகத்திற்காக ஒன்றுபடுங்கள்” என்பதாகும்.
- சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைமையகம் என்பது சுவிட்சர்லாந்தின் லுசானே நகரில் அமைந்துள்ளது.
- சர்வதேச ஒலிம்பிக் குழுவானது 1894 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் தேதியன்று பிரான்சின் பாரீஸ் நகரில் நிறுவப்பட்டது.
- முதலாவது ஒலிம்பிக் தினமானது 1948 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.
- இத்தினமானது, சுவிட்சர்லாந்தின் செயின்ட் மோரிட்ஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் குழுவின் 42வது அமர்வில் முதன்முதலில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## ஐக்கிய நாடுகளின் பொதுச் சேவை தினம் - ஜூன் 23

- உலகெங்கிலும் உள்ள அனைத்துத் துறைகளின் வளர்ச்சியிலும் பொதுச் சேவையின் பங்களிப்பு மற்றும் பங்கை இத்தினம் எடுத்துரைக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "COVID-19 பெருந்தொற்றில் இருந்து மீண்டும் சிறப்பாக உருவாக்குதல்: நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய புதுமையான கூட்டாண்மைகளை மேம்படுத்துதல்" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 2002 ஆம் ஆண்டில் இந்த நாளைத் தேர்ந்தெடுத்தது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2003 ஆம் ஆண்டில் பொதுச் சேவை விருதுகள் (UNPSA) திட்டத்தை நிறுவியது.

## சர்வதேச மாலுமிகள் தினம் - ஜூன் 25

- 1978 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸின் மணிலாவில் மாலுமிகளுக்கானப் பயிற்சி, சான்றிதழ் மற்றும் கண்காணிப்புத் தரநிலைகள் பற்றிய சர்வதேச மாநாடு நடைபெற்றது.
- 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்ற மாநாடானது மாலுமிகள் தினத்தை நிறுவிய தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- உலக வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்திற்குக் கடல் மாலுமிகள் ஆற்றும் முக்கியப் பங்களிப்பை கௌரவிப்பதற்காக இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உங்கள் பயணம் - அன்றும் இன்றும், உங்கள் சாகசத்தைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்" என்பதாகும்.

## போதைப் பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோதமான கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் - ஜூன் 26




- சீனாவின் குவாங்டாங்கில் லின் ஜெக்சு கஞ்சா வர்த்தகத்தை அகற்றியதை நினைவு கூரும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- சீனாவில் முதல் ஒபியம் (கஞ்சா) போருக்கு சற்று முன்பாக 1839 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் தேதியன்று இதன் வர்த்தகம் முடிவுக்கு வந்தது.

- "உடல்நலம் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளில் போதைப் பொருள் சவால்களை நிவர்த்தி செய்தல்" என்பது இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவாகும்.
- போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் மீதான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் (UNODC) முக்கியப் பணி இது பற்றிய ஒரு விழிப்புணர்வைப் பரப்புவதாகும்.
- 1987 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA) 93வது முழு அளவிலானக் கூட்டத்தின் போது, இது நிறைவேற்றப்பட்டது.

## சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஐக்கிய நாடுகளின் சர்வதேச தினம் - ஜூன் 26

- உலகம் முழுவதிலும் சித்திரவதைகளை முற்றிலும் ஒழிப்பதை ஐக்கிய நாடுகள் சபை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதலாவதாக, இரண்டாம் உலகப் போரின் மத்தியில் 1945 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் சாசனம் கையெழுத்தானது.
- மனித உரிமைகளை மதிக்கவும் அவற்றை ஊக்குவிக்கவும் ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின் உறுப்பினர்களைக் கட்டாயப்படுத்தும் முதல் சர்வதேச விதிமுறை இது ஆகும்.
- சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவான நடத்தைக்கு எதிரான இரண்டாவது உடன்படிக்கையானது 1987 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.
- 1997 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இது தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றியது.
- 1998 ஆம் ஆண்டானது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

## குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) தினம் – ஜூன் 27

- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் என்பது பொதுவாக 250 பணியாளர்களுக்கு மேல் பணியமர்த்தாத, ஆனால் உலகளவில் மூன்றில் இரண்டு பங்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு வல்ல நிறுவனங்களாகும்.
- இத்தினமானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் 2017 ஆம் ஆண்டில் அதன் 74வது முழு அளவிலானக் கூட்டத்தில் அனுசரிக்கப்பட்டது.
- சர்வதேச சிறு வணிகத்திற்கானச் சபையின் (ICSB) 2016 ஆம் ஆண்டு உலக மாநாட்டில், உலக மேம்பாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்கை அங்கீகரிக்க வேண்டிய அவசரத் தேவை குறித்தப் பிரகடனம் நிறைவேற்றப் பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, முறையான மற்றும் முறைசாரா குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மொத்த வேலைவாய்ப்பில் 70 சதவிகிதமும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 சதவிகிதமும் பங்காற்றுகின்றன.
- 2022 ஆம் ஆண்டின் இந்தத் தினத்திற்கான கருத்துரு, 'குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் - மீள்நிலைக் கூடிய மீட்சி' என்பதாகும்.




## உலக தோல் நிறமி இழத்தல் நோய் தினம் - ஜூன் 25

- இந்த அரிய தோல் கோளாறால் பாதிக்கப்பட்ட பிரபல இசைக் கலைஞர் மைக்கேல் ஜாக்சனின் (பாப் மன்னர்) நினைவாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- மேலும், லுகோடெர்மா என்றும் அழைக்கப் படும் இந்தத் தோல் நிறமி இழத்தல் நோய் ஆனது ஒரு நாள்பட்ட தோல்சார்ந்த தன்னுடல் தாக்க நிலையாகும்.
- தோல் நிறமி இழத்தல் நோயுடன் வாழ கற்றுக் கொள்வது என்பது 2022 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துருவாகும்.

## சர்வதேச வெப்ப மண்டலத் தினம் - ஜூன் 29

- இத்தினம் 2017 ஆம் ஆண்டில் முதல் முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டது.
- பரப்பளவில் உலகின் 95% சதுப்புநிலக் காடுகளும், 99% சதுப்புநில இனங்களும் வெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளன.
- உலகின் புதுப்பிக்கத்தக்க நீர்வள ஆதாரங்களில் 54 சதவிகிதம் வெப்ப மண்டலத்தில் உள்ளது.
- உலகின் மொத்த பரப்பளவில் 40 சதவீதத்தை வெப்ப மண்டலப் பகுதி கொண்டுள்ளது.
- இது உலகின் பல்லுயிர்ப் பெருக்கத்தில் தோராயமாக 80 சதவீதத்தையும், உலகின் பெரும்பாலான மொழி மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மையையும் கொண்டுள்ளது.

## தேசிய புள்ளியியல் நாள் - ஜூன் 29

- மஹாலனோபிஸ் அவர்களுடையப் பிறந்தநாளை இந்திய அரசு கொண்டாடுகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'ஒரு நிலையான மேம்பாட்டிற்கானத் தரவு' என்பதாகும்.
- இந்தத் தினமானது முதன்முதலில் 2007 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.

- சமூக-பொருளாதாரத் திட்டமிடல் மற்றும் கொள்கை உருவாக்கத்தில் புள்ளி விவரங்களின் பங்கு குறித்து இளைஞர்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது.
- பேராசிரியர் பிரசாந்த சந்திர மஹாலனோபிஸ் இந்தியப் புள்ளியியல் துறையின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
- தற்போது மஹாலனோபிஸ் தொலைவு என அழைக்கப்படும் இரண்டு தரவுத் தொகுப்புகளுக்கு இடையேயான ஒப்பீட்டு அளவை வகுத்தவர் இவரே ஆவார்.
- இவர் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக இரண்டு துறைகளுக்கான உள்ளீட்டு-வெளியீட்டு மாதிரியை வழங்கினார்.
- இது பின்னர் நேரு-மஹாலனோபிஸ் மாதிரி என அறியப்பட்டது.
- இவர் 1931 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், கொல்கத்தா நகரில் இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தை (ISI) நிறுவினார்.

## சர்வதேச குறுங்கோள் தினம் - ஜூன் 30

- 1908 ஆம் ஆண்டு ரஷ்யாவின் சைபீரியாவில், சுமார் 2,150 சதுர கிலோமீட்டர் (830 சதுர மைல்) காடுகளை ஒரு குறுங்கோள் அழித்த துங்குஸ்கா நிகழ்வின் ஆண்டு நிறைவு நாளில் இத்தினமானது அனுசரிக்கப்பட்டது.
- குறுங்கோள் தினமானது ஸ்டீபன் ஹாக்கிங் அவர்களால் இணைந்து நிறுவப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்தத் தினத்தினைக் கொண்டாடுவதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- விண்வெளி ஆய்வாளர்கள் சங்கத்தினர் முன்வைத்த, விண்வெளியின் அமைதியான பயன்பாடுகளுக்கான குழுவால் (COPUOS) அங்கீகரிக்கப்பட்ட, ஒரு முன்மொழிவின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "சிறியது அழகானது" என்பதாகும்.

## சர்வதேசப் பாராளுமன்ற முறை தினம் - ஜூன் 30

- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 1889 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு உலகளாவியப் பாராளுமன்ற அமைப்பான பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியத்தின் (IPU) உருவாக்கத்தையும் இந்தத் தினமானது அங்கீகரிக்கிறது.
- பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியமானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிரந்தரப் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்றுள்ளது.
- மேலும் இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியம் மற்றும் இதில் உறுப்பினராக உள்ள பாராளுமன்றங்கள் இந்தத் தினத்தினை 'நாடாளுமன்றப் பணியில் பொதுமக்களின் ஈடுபாடு' என்ற கருத்துருவுடன் அனுசரிக்கின்றன.

# இதரச் செய்திகள்

## எடைக்குறைப்பு வகை நீரிழிவு நோய்

- ஒரு புதிய ஆய்வில், குறைந்த BMI உள்ள நீரிழிவு நோயாளிகள் மற்ற நீரிழிவு நோயாளிகளுடன் ஒப்பிடும் போது தனித்துவமான வளர்சிதை மாற்ற அமைப்பினைக் கொண்டுள்ளனர்.
- மேலும் இது இன்னும் பல ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வழிவகுக்கக் கூடிய ஒரு தனித்துவமான நோயாகவும் இருக்கலாம் என்று தெரிய வந்துள்ளது.
- எடைக்குறைப்பு நீரிழிவு நோய் என்பது வகை 1 மற்றும் வகை 2 நீரிழிவு நோயின் "கலப்பின" வகையாக இருக்கலாம்.
- இதனால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் போதுமான இன்சுலின் தயாரிக்காமல் இருக்கலாம் அல்லது அதற்கு சரியான எதிர்வினையை வழங்காமல் இருக்கலாம்.
- நீரிழிவு நோய் ஆனது, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில், குறைந்த BMI உள்ள நபர்களிடையே 60 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு நோயாக நிலவுவதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



## இந்தியாவின் முதல் காற்று - சூரியசக்தி கலப்பு மின் நிலையம்

- அதானி ஹைப்ரிட் எனர்ஜி ஜெய்சால்மர் ஒன் லிமிடெட் நிறுவனமானது, ராஜஸ்தானின் ஜெய்சால்மர் நகரில் 390 மெகாவாட் திறனுள்ள காற்றாலை-சூரியசக்தி கலப்பு மின் நிலையம் தொடங்கியுள்ளது.
- இந்த ஆலை இந்தியாவின் முதல் கலப்பு காற்றாலை-சூரிய சக்தியை உற்பத்தி செய்யும் நிலையமாகும்.
- சூரிய ஆற்றல் மற்றும் காற்று ஆற்றல் உற்பத்தியை இணைக்கும் கலப்பு மின் உற்பத்தி நிலையமானது, மின் உற்பத்தி இடைநிலைத் தடையை நீக்கி, அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்ய மிகவும் நிலையான ஒரு வாய்ப்பினை வழங்குவதன் மூலம் புதுப்பிக்கத் தக்க ஆற்றலின் முழுத் திறனையும் வெளிக் கொணர்கிறது.

## 30 வயதுக்குட்பட்ட 30 ஆசிய நபர்கள் பட்டியல்

- ஃபோர்ப்ஸ் இதழானது, 7வது 30 வயதுக்குட்பட்ட 30 ஆசிய நபர்கள் பட்டியலை (2022) வெளியிட்டுள்ளது.
- 30 வயதுக்குட்பட்ட 30 நபர்களை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொன்றும் 10 பிரிவுகளைக் கொண்டுள்ளது.
- ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள 22 நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த நபர்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- 61 பதிவுகளுடன் இந்தியா முதலிடத்திலும், சிங்கப்பூர் (34), ஜப்பான் (33), ஆஸ்திரேலியா (32), இந்தோனேசியா (30) மற்றும் சீனா (28) ஆகிய நாடுகளும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன.




## டைம்ஸ் உயர் கல்வி இதழின் ஆசிய பல்கலைக்கழகத் தரவரிசை 2022

- டைம்ஸ் உயர் கல்வி (THE) இதழானது 2022 ஆம் ஆண்டிற்கான ஆசியப் பல்கலைக் கழகத் தர வரிசையினை வெளியிட்டது.
- இந்தத் தரவரிசையானது, 31 நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த 616 பல்கலைக் கழகங்களை உள்ளடக்கியது.
- 71 பல்கலைக் கழகங்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதையடுத்து, இந்தியா அதிக எண்ணிக்கையிலான பல்கலைக் கழகங்கள் இடம் பெற்ற மூன்றாவது நாடாக உள்ளது.
- பெங்களூரு நகரிலுள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது (IISc) 42வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- அது முதல் 50 இடங்களில் இடம் பிடித்த ஒரே நிறுவனமாக மாறியது.
- மைசூரு நகரிலுள்ள JSS என்ற உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமானது 65வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ரோபர் நகரிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகம் 68வது இடத்திலும், இந்தூர் நகரில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகம் 87வது இடத்திலும் உள்ளன.



THE ASIA UNIVERSITY RANKINGS

| TOP 5 UNIVERSITIES IN INDIA | 2022 | 2021 |
|---|---|---|
| IISc | 42 | 37 |
| JSS Academy of Higher Education and Research | 65 | Not Ranked |
| IIT Ropar | 68 | 55 |
| IIT Indore | 87 | 78 |
| IIT Gandhinagar | 120 | 137 |

| TOP 5 UNIVERSITIES IN ASIA | 2022 | 2021 |
|---|---|---|
| Tsinghua University (China) | 1 | 1 |
| Peking University (China) | 2 | 2 |
| National University of Singapore | 3 | 3 |
| University of Hong Kong | 4 | 4 |
| Nanyang Technological University, Singapore | 5 | 5 |

Source: Times Higher Education (THE) Asia University Rankings
*THE is a global education ranking agency based in UK

moneycontrol

## அசாதாரணமான டைனோசர் முட்டை

- ❖ ஒரு தனித்தன்மை வாய்ந்த, ஒரு முட்டைக்குள் மற்றொன்று அடைகாப்பது போன்ற வகையில் அமைந்தப் புதைபடிவ டைனோசர் முட்டைகள் சமீபத்தில் கண்டுபிடிக்கப் பட்டன.
- ❖ இது மத்தியப் பிரதேசத்தின் தார் மாவட்டத்தில் உள்ள தேசிய டைனோசர் படிமப் பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- ❖ ஒரு முட்டைக்குள் மற்றொரு முட்டைகள் இருப்பது ஒரு அரிதான நிகழ்வாகும்.
- ❖ இம்மாதிரியான அமைப்பானது, இதுவரை பறவைகளில் மட்டுமே காணப் படுவதோடு ஊர்வனவற்றில் இது போன்ற அமைப்புகள் இதுவரை கண்டறியப் படவில்லை.
- ❖ இந்த விலங்குகளின் படிமங்கள் குஜராத், மத்தியப் பிரதேசம் மற்றும் மேகாலயா ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.




## ஆற்றல் முன்னேற்ற அறிக்கை 2022

- ❖ 2022 ஆம் ஆண்டின் '7வது நிலையான மேம்பாட்டு இலக்கினைக் கண்காணித்தல்: ஆற்றல் முன்னேற்ற அறிக்கையானது' சமீபத்தில் வெளியிடப்பட்டது.

- 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் மலிவு விலையில் நவீன ஆற்றல் விநியோகத்தை உறுதி செய்யும் நிலையான மேம்பாட்டு இலக்கை (SDG 7) அடையச் செய்வதற்காக உலக நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகளை இது கண்காணிக்கிறது.
- இந்த ஆய்வானது 7வது நிலையான மேம்பாட்டு இலக்கின் பாதுகாவலர் முகமைகள் என அழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்கள் மற்றும் பங்குதார அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டது.
- உலகளவில் 733 மில்லியன் மக்கள் மின்சார வசதி இல்லாமல் உள்ளனர்.
- 2.4 பில்லியன் மக்கள் இன்னும் தங்கள் ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் எரிபொருளைப் பயன்படுத்தியே சமைக்கிறார்கள்.
- 568 மில்லியன் மக்கள் மின்சார வசதி பெறாத நிலையில், உலகில் மிகக் குறைந்த மின்சார வசதி பெற்றவர்களாக ஆப்பிரிக்கர்கள் உள்ளனர்.





## பாராலிதெரிசினோசொரஸ் ஜபோனிகஸ்

- மேலே கூறப்பட்ட இந்த உயிரினமானது 66 மில்லியன் ஆண்டுகள் முதல் 145 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஆசியாவின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்ததாக ஒரு புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது.
- இது இரு கால்கள் கொண்ட ஒரு டைனோசர் இனமாகும்.
- ஜப்பானின் வடக்குத் தீவான ஹொக்கைடோவில் கண்டுபிடிக்கப்பட்டப் புதை படிவங்களிலிருந்து இது அடையாளம் காணப்பட்டது.
- ஆசியாவில் முதன்முறையாக கடல் படிவுகளில் இருந்து கண்டறியப்பட்ட முதல் புதை படிவம் இதுவாகும்.
- இரு கால் மற்றும் முதன்மையாக தாவரங்களை உண்ணுகின்ற மூன்று விரல்கள் கொண்ட இந்த டைனோசர்கள் தெரிசினோசர்கள் எனப்படும் ஒரு குழுவைச் சேர்ந்தவையாகும்.
- இந்த இனத்தின் மிகவும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இவை வாள் போன்ற நகங்களைக் கொண்டிருந்தன என்பதேயாகும்.

## Web5 இயங்குதளம்

- ட்விட்டர் ஊடக நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி ஜாக் டோர்சி ட்விட்டரில் 'Web5 ' என்ற புதிய தளத்தை அறிவித்துள்ளார்.
- இது பிட்காயின் பிளாக்செயினில் கட்டமைக்கப்பட்ட Web3 மற்றும் Web 2.0 ஆகியவற்றின் கலவையாகும்.
- தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதில் உள்ள சிக்கலைச் சரி செய்வதாக இந்த இயங்கு தளம் உறுதியளிக்கிறது.
- Web5 ஆனது டோர்சியின் பிளாக் நிறுவனத்தில் (முன்பு ஸ்கொயர் எனப்பட்டது) உள்ள பிட்காயின் வணிகப் பிரிவுகளில் ஒன்றான தி பிளாக் ஹெட் (TBH) நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டது.





## மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இன்டர்நெட் எக்ஸ்புளோரர்

- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, அதன் 27 ஆண்டு கால இன்டர்நெட் எக்ஸ்புளோரரின் செயல்பாட்டினை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.
- அந்த நிறுவனத்தின் பழமையான இந்த உலாவி ஜூன் 15 முதல் முற்றிலும் நிறுத்தப் படும்.
- மைக்ரோசாப்ட் நிறுவனமானது 1995 ஆம் ஆண்டில் இன்டர்நெட் எக்ஸ்புளோரரின் முதல் பதிப்பை விண்டோஸ் 95 இயங்கு மென்பொருளுக்கான கூடுதல் தொகுப்பாக வெளியிட்டது.
- இணைய உலாவலின் பழமையான சகாப்தத்தில் முதன்முதலில் பரவலாக பிரபலமாக காணப்பட்ட நெட்ஸ்கேப் நேவிகேட்டர் என்ற உலாவியே ஆதிக்கம் செலுத்தியது.
- மைக்ரோசாப்ட் எட்ஜ் உலாவியானது 2016 ஆம் ஆண்டில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் உலாவியினை அந்நிறுவனத்தின் விருப்பமான உலாவியாக மாற்றியது.

## வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு

- 2020-21 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு ஆனது புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டது.
- 2019-20 ஆம் ஆண்டில் 4.8% என்று இருந்த வேலைவாய்ப்பின்மை விகிதமானது 0.6% குறைந்து 2020-21 ஆம் ஆண்டில் 4.2% ஆகக் குறைந்துள்ளது.
- கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்மை விகிதம் 3% ஆகவும், நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்பின்மை விகிதம் 6.7% ஆகவும் பதிவாகியுள்ளது.

- தேசியப் புள்ளியியல் அலுவலகம் ஆனது (NSO) நகர்ப்புறங்களில் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (LFPR), தொழிலாளர் எண்ணிக்கை விகிதம் (WPR) மற்றும் வேலை வாய்ப்பின்மை விகிதம் ஆகியவற்றை மதிப்பிடுவதற்கு நகர்ப்புறங்களில் "சுழற்சிக் குழு மாதிரி வடிவமைப்பை" பயன்படுத்துகிறது.
- மேலும், நகர்ப்புறங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில வீடுகளுக்கு நான்கு முறை என்ற அளவிலானக் கணக்கெடுப்பிற்கு வருகை தருகிறது.
- நகர்ப்புறங்களில் தொழிலாளர் பங்கேற்பு விகிதமானது, மொத்த மக்கள் தொகையில் தொழிலாளர் வளத்தில் உள்ள நபர்களின் சதவீதம் (அதாவது வேலை செய்யும் அல்லது வேலை தேடும் அல்லது வேலை செய்யக் கூடிய தரத்தில் உள்ள) 2020-21 ஆம் ஆண்டில் 6% ஆக இருந்தது.
- அதற்கு முந்தைய ஆண்டில் இது 40.1% ஆக இருந்தது.
- தொழிலாளர் எண்ணிக்கை விகிதமானது முந்தைய ஆண்டின் அளவான 38.2% என்ற அளவினை விட அதிகமாக 39.8% என்ற அளவாக இருந்தது.
- இதன் படி இடம்பெயர்வு விகிதம் ஆனது 28.9% ஆக இருந்தது.
- பெண்களின் இடம்பெயர்வு விகிதம் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் முறையே 48% மற்றும் 47.8% என்ற விகிதமாக இருந்தது.




## உலகளாவியத் தொடக்க நிறுவனச் சூழலமைவு தரவரிசை

- உலகத் தொடக்க நிறுவனச் சூழலமைவு அறிக்கையில், மலிவான திறன் கொண்ட நாடுகள் பிரிவில் ஆசியாவிலேயே கேரளா முதலிடம் பிடித்துள்ளது.
- இந்த அறிக்கையில் உலகளாவியத் தரவரிசையில் இந்த மாநிலம் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.
- இது கொள்கை ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனமான ஸ்டார்ட்அப் ஜீனோம் மற்றும் உலகத் தொழில்முனைவோர் கட்டமைப்பு ஆகியவற்றால் கூட்டாக இணைந்து வெளியிடப் பட்ட அறிக்கையாகும்.
- 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முதல் உலகத் தொடக்க நிறுவனச் சூழலமைவு அறிக்கையில், கேரளா ஆசியாவில் 5வது இடத்திலும், உலகளவில் 20வது இடத்திலும் இருந்தது.

❖ இந்த அறிக்கையில் பெங்களூரு 22வது இடத்திலும், டெல்லி 26வது இடத்திலும், மும்பை 36வது இடத்திலும் உள்ளன.




## உலகப் போட்டித்திறன் குறியீடு 2022

❖ மேலாண்மை மேம்பாட்டுக் கல்வி நிறுவனமானது, சமீபத்தில் வருடாந்திர உலகப் போட்டித் திறன் குறியீட்டைத் தொகுத்து வெளியிட்டது.

❖ இதில் இந்தியா ஆறு இடங்கள் முன்னேறி, 43வது இடத்தில் இருந்து 37வது இடத்திற்கு உயர்ந்துள்ளது.

❖ 63 நாடுகள் கொண்ட இந்தப் பட்டியலில் டென்மார்க் முதல் இடத்தில் உள்ளது.

❖ இதில் சுவிட்சர்லாந்து முதலிடத்தில் இருந்து இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது.

❖ அதைத் தொடர்ந்து, இதில் ஐந்தாவது இடத்தில் இருந்த சிங்கப்பூர் மூன்றாவது இடத்தில் உள்ளது.

❖ இதன்படி இந்தியாவின் தொழிலாளர் சந்தையானது, 15வது இடத்திலிருந்து 6வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.



## உலகளாவியத் திறன் அறிக்கை 2022

- ❖ கோர்ஸெரா என்ற நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான உலகளாவியத் திறன் அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- ❖ இந்தியாவின் ஒட்டு மொத்தத் திறன் வளர்ச்சியானது உலக அளவில் நான்கு இடங்கள் வரை சரிந்து, 68வது இடத்தில் உள்ளது.
- ❖ ஆசிய அளவில் இந்தியா 19வது இடத்தில் உள்ளது.
- ❖ இந்தியாவின் தொழில்நுட்பத் திறன் வளர்ச்சியானது ஆறு இடங்கள் முன்னேறியதன் மூலம் தனது நிலையை வலுப்படுத்தியுள்ளதையடுத்து அதன் அளவு 38 என்ற சதவீதத்திலிருந்து 46% ஆக உயர்ந்துள்ளது.
- ❖ 2021 ஆம் ஆண்டில் 38% ஆக இருந்த தரவு அறிவியல் வளர்ச்சியானது 2022 ஆம் ஆண்டில் 26% ஆகக் குறைந்துள்ளது.
- ❖ இதனால், இந்தப் பிரிவில் இந்தியா 12வது இடத்திற்குத் தள்ளப்படுவதற்கு இது வழி வகுத்தது.
- ❖ இந்திய மாநிலங்களில், திறன் வளர்ச்சிஅடிப்படையில் மேற்கு வங்காளம் முன்னிலை வகிக்கிறது.
- ❖ மேற்கு வங்காளம் மாநிலமானது மூன்று களங்களிலும் இடம் பெற்ற ஒரு மாநிலமாகத் தர வரிசையில் இடம் பெற்றுள்ளது.

## வீட்டுப் பணியாளர்கள் பற்றிய அறிக்கை

- ❖ இது சர்வதேச தொழிலாளர் அமைப்பால் வெளியிடப் பட்டது.
- ❖ உலகெங்கிலும் உள்ள வீட்டுப் பணியாளர்களில் 6% பேர் மட்டுமே விரிவான சமூகப் பாதுகாப்பு வசதியைப் பெறுகின்றனர்.
- ❖ மொத்த வீட்டுப் பணியாளர்களில் பெண்கள் 76.2% ஆக உள்ளனர்.
- ❖ மேலும் அவர்கள் போதுமான சமூக நல வசதிகள் இல்லாத நிலையில் குறிப்பாக மிகவும் அதிகளவில் பாதிக்கப் படுகின்றனர்.
- ❖ ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் உள்ள 57.3% வீட்டுப் பணியாளர்களுக்கு அனைத்துச் சலுகைகளும் சட்டப்பூர்வமாகக் காப்பீடு செய்யப் பட்டுள்ளன.
- ❖ அமெரிக்காவில் அந்த அளவை விட 10 சதவீதத்திற்கும் சற்றே அதிகமானோர் அத்தகைய உரிமையைக் கொண்டுள்ளனர்.
- ❖ அரபு நாடுகள், ஆசியா, பசிபிக் மற்றும் ஆப்பிரிக்காவில் ஏறக்குறைய எவருக்கும் முழுமையாகப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.


## கொள்ளை நோய்

- ❖ சமீபத்திய ஆய்வின்படி, கொள்ளை நோய் என்பது 1338-1339 ஆம் ஆண்டில் நவீனகால வடக்கு கிர்கிஸ்தானில் தோன்றியது.
- ❖ 1346 முதல் 1353 ஆம் ஆண்டு வரையில் மேற்கு ஆசியா, வடக்கு ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு மற்றும் ஐரோப்பாவில் பரவிய புபோனிக் பிளேக் நோயை கொள்ளை நோய் என்ற சொல் குறிக்கிறது.
- ❖ யெர்சினியா பெஸ்டிஸ் என்ற பாக்டீரியாவால் கொள்ளை நோய் ஏற்பட்டது.
- ❖ இது கொறித்துண்ணிகளால் பரப்பப்படும் உண்ணிகளால் பரவியது.




## பூமியின் கண்டத் தட்டுகளின் புதிய வரைபடம்

- சமீபத்தில், ஆஸ்திரேலிய நாட்டின் ஆராய்ச்சியாளர்கள் பூமியின் கண்டத் தட்டுகளின் புதுப்பிக்கப் பட்ட வரைபடத்தை உள்ளடக்கிய ஒரு புதிய ஆய்வை மேற்கொண்டனர்.
- வால்பரா என்பது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பிரிந்து மற்ற பெரும் கண்டங்களை உருவாக்கியது.
- அதில் கடைசியாக 335-65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவானது பாஞ்ஜியா ஆகும்.




- வால்பரா என்பது ஆர்க்கியன் காலத்தில் இருந்த பூமியின் முதல் பெரும் கண்டத்தின் பெயராகும்.

- இதில் 26 மலை உருவாக்கச் செயல்முறைகள் உள்ளன.
- இவற்றுள் பல பெரும் கண்டங்களின் உருவாக்கத்துடன் தொடர்புடையவையாகும்.
- மலை உருவாக்கச் செயல்முறை என்பது புவிக்குழிவுப் பகுதிகளில் நிகழும் ஒரு மலையை உருவாக்குகின்ற நிகழ்வு ஆகும்.

## உலகின் சிறந்த விமான நிலையம் 2022

- கத்தாரின் ஹமாத் சர்வதேச விமான நிலையமானது தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உலகின் சிறந்த விமான நிலையமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- பிரான்சின் பாரீஸ் நகரில் உள்ள பயணிகள் டெர்மினல் கண்காட்சியில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு ஸ்கைட்ராக்ஸ் உலக விமான நிலைய விருதுகளில் இந்த அறிவிப்பானது அறிவிக்கப் பட்டது.
- பெங்களூருவில் உள்ள கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையமானது, இந்தியா மற்றும் தெற்காசியாவின் சிறந்தப் பிராந்திய விமான நிலையமாக அறிவிக்கப் பட்டு உள்ளது.

## உலகின் மிகப்பெரிய நன்னீர்வாழ் மீன்


- கம்போடியாவில் உள்ள மீகாங் ஆற்றில் 300 கிலோ எடையுள்ள திருக்கை மீன் பிடிபட்டு உள்ளது.
- அது இதுவரையில் கண்டறியப்பட்ட மிகப்பெரிய நன்னீர்வாழ் மீனாகும்.
- 2005 ஆம் ஆண்டில் தாய்லாந்தில் பிடிபட்ட 293 கிலோ எடையுள்ள மீகாங் ராட்சதக் கெளுத்தி மீனால் பதிவு செய்யப்பட்ட சாதனையை இது முறியடித்தது.
- மீகாங் ஆற்றில் உலகிலேயே அதிகளவில் பல்வேறு மீன் வகைகளைக் கொண்டுள்ள மூன்றாவது ஆறாகும்.



## மனிதக் காதுகளின் மத்தியப் பகுதி

- மனிதக் காதுகளின் மத்தியப் பகுதியானது மீன்களின் செவுள்களில் இருந்து உருவானதாக சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.
- மனிதக் காதுகளின் மத்தியப் பகுதியானது மூன்று சிறிய, அதிர்வுறும் எலும்புகளால் ஆனது.
- இது ஒலி அதிர்வுகளை உள் காதுக்குள் கொண்டு செல்ல உதவுகிறது.

- புதைபடிவ மற்றும் கருச் சான்றுகள் என்பவை மனிதக் காதுகளின் மத்தியப் பகுதி என்பது மீன்களின் மூச்சுத் துளைகளிலிருந்து உருவானது என்பதை நிரூபிக்கின்றன.
- இருப்பினும், முதுகெலும்புகளின் மூச்சுத் துளையின் தோற்றமானது முதுகெலும்பு உயிரிகளின் பரிணாம வளர்ச்சியில் தீர்க்கப் படாத மர்மமாக உள்ளது.




## அரிதான பண்டைய கால மசூதி

- இஸ்ரேலியத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அந்நாட்டின் தெற்குப் பகுதியில் ஓர் அரிதான பண்டையக் கால மசூதியைக் கண்டறிந்துள்ளனர்.
- அந்த மசூதியின் சிதிலமடைந்தப் பகுதிகள் சுமார் 1,200 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததாகக் கருதப் படுகிறது.
- நெகேவ் என்ற பாலைவனத்தில் அமைந்துள்ள இந்த மசூதியில் "சதுர வடிவ அறையும் மெக்காவின் திசையை நோக்கியுள்ள ஒரு சுவரும்" உள்ளது.
- அந்தச் சுவரில் தெற்கு நோக்கியவாறு வரையப்பட்டுள்ள ஒரு அரை வட்டமும் உள்ளது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★